உ

கடவுள் துணை.

பதினெண்பெயர்கள் திருவாய்மலர்ந்தருளிய

# நாடி சாஸ்திரம்.

இவை,

மதுரை-புதுவை-சென்னை-இச்சங்கங்களில் தமிழ்த்

தலைமைப்புலமை நடாத்திய களத்தூர்

வேதகிரி முதலியார்

குமாரர்

ஆறுமுகமுதலியாரால்

பதிப்பித்தபதிப்புக்கிணங்க

---

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை:

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது-நெம்பர் வீடு.

உ

மகாகணபதி துணை.

நீதிநெறி நாடக உபாத்தியாயர்

## சங்கிலியா பிள்ளையவர்க ளியற்றிய

புதியவர்ணமெட்டுள்ள

நீதிநெறி

# அரிச்சந்திர நாடகம்.

## அச்சிட்டு வந்துவிட்டது.

இதற்குமுன் இப்பெரும் நாடகத்தை சில வர்ண மெட்டுகளி லமைத்து நீதிநெறி அரிச்சந்திர நாடகமெனப்பெயர் கொடுத்துப் பாடி வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ, சங்கிலியாபிள்ளை யவர்களால் இப் போது தற்கால நாகரீகத்துக்கேற்றவாறு - பாரீஸ், இந்துஸ்தான் திருப்புகழ் முதலிய பலவர்ணமெட்டுகளிற் புதிதாய் அமைத்து நீதி நெறிநாடக உபாத்தியாயர் சங்கிலியாபிள்ளை யியற்றிய புதிய வர்ண மெட்டுள்ள அரிச்சந்திர நாடகமெனப் பெயர்கொடுத்து ஷை உபா த்தியாயரைப்போல லெத்தகிராப்படமும் அத்துடன் ஷை புஸ்த கத்துக்கேற்ற ஐதிகப்படங்களும் சேர்த்துஉயர்ந்த கிளேஸ் காகிதத் தில் அச்சிட்டு நேர்த்தியான காலிக்கோ பயிண்டு செய்து விற்பனை க்கு தயாராயிருக்கிறது. ஷை புஸ்தகம் 1-க்கு விலை ரூ 1 4 0 பிரியமுள்ளவர்கள் நேரிலும், வி-பி-போஸ்டு மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு

பி. நா. சிதம்பரமுதலியார்.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு.

மதராஸ்.

கடவுள் துணை.

## இந்நூல் அச்சிட்டவர்கருத்து.

---

மாட்சிமை பொருந்திய சிநேகிதர்களே தெய்விகந் தன்மை பொருந்திய நாற்பத்தெண்பெயர் முனிவர்களும் நவகோடி சிஷிகளும் பதினெண்பெயர் சித்தர்களும ஜீவகாருண்ணியத்தினால் திருவாய்மலர்ந்தருளிய மூன்றிலட்சங் கிரந்தங்களில் என்னாற் கூடியவளவு ஆராய்ந்து நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகட்கு சாத்திய அசாத்தியங்களை எளிதிலுணரும்பொருட் டுநாடிக்கிரந்தங்களை தற்காலமானிடற் குபயோகமுள்ளவற்றை மாத்திரம் சேர்க்கப்பட்டும் விண்பிரயோசனமுள்ளவைகளைத் தள்ளப்பட்டும் தத்துவலட்சணங்கள் தூதலட்சணமிவைகளைக்கொள்ளப்பட்டும், பிரயோசனப்படும்படி அச்சிடலாயிற்று அன்றியும் (புராதனசங்கதியான முற்காலத்து தபோதனர்களா லியற்றிய சில நாடிக்கிரந்தங்களும் அதைச்சார்ந்த வயித்தியகிரந்தங்கள், இரண்டுலட்சமென்றும் வாதக்கிரந்தங்கள் ஒருலட்சமென்றும் கூறப்பட்டும் அவைகளை மகாமகத்துவம்பொருந்திய தன்வந்திரி அகத்தியமுனிவர் இன்னம் அநேகரிஷிகள் அச்சாத்திரக்கோர்வைகளை பொதிகையிலிருந்து திருப்பாற்கடலென்னும் தீவாந்திரத்தில் அலைவாரிதியில் ஏடுருவிசமுத்திரப் பிரவேசயாக்கிவிட்டார் அதில் சிலகிரந்தங்களில் கோர்வை தப்பிக் கோர்வையாகவே மிதந்துங்கிழிந்தும் சிதறியும் கையிற்கிட்டின சில சாஸ்திரமாத்திரம் முற்பெரியோர்களுக்கு மாத்திரம் கிடைத்ததென்றும் அச்சாத்திரக்கோர்வைமாத்திரம் கிட்டினதாகவும் அதுதான் தற்காலபிரயோசன வுதவியென்றும் கேழ்வியுற்றிருப்போமல்லவா, இப்படிபழமொழிவிளங்க இதுகளெல்லாம் நாம்கேள்வியுற் றிச்சாத்திரக்கோர்வையை சீர்திருத்தி பதினெண்பெயர் நாடிசாஸ்திரமென்றும் பெயர்வகித்து இத்தொகுப்பை அச்சிடத்துணிந்தேன்) மேலும் இதன்றி இனிமேல் எங்கேயாகிலும் இன்னம் கோர்வைகிடைத்தபோதும் பின்னால் அச்சிடப்படும் இதன்றி இச்சாத்திரக்கோர்வைகளில எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருட்குற்றம் இப்படிக்கேதிருப்பினும் பெரும்பாலும் பெரியோர்கள் அங்கிகரிப்பர் இந்நூல்திருத்தியவர் ஆயுள்வேதபாஸ்கரர் கந்தசாமிமுதலியார்.

சரித்திரவரலாறு-முற்றிற்று.

---

# அட்டவணை.


| பக்கம். | | தொகை. |
|---|---|---|
| க | அகஸ்தியர் இரத்தினச்சுருக்கநாடி | ௩௨ |
| ௬ | பரிபூரணநாடி | ௨௮ |
| ௧௨ | இரத்தினகிரிகடநாடி | ௩௯ |
| ௨௧ | திரட்டுநாடி | ௫௫ |
| ௨௮ | குணவாகடத்தின் வைத்தியசாரம் | ௩௬ |
| ௩௫ | ஷை ரோகயின்சாரம் | ௬௭ |
| ௪௪ | காவியத்தின்நாடி | ௯௫ |
| ௫௬ | வல்லாதியின்நாடி | ௪௧ |
| ௬௨ | வைத்தியசதகநாடி | ௱௨ |
| ௭௯ | குறியடையாளநாடி | ௱௧௩ |
| ௯௩ | குருநாடி | ௱௯ |
| ௱௭ | சூடாமணிகயறுசூஸ்திரம் | ௩௰ |
| ௱௧௨ | திருமூலநாயனார்நாடி | ௱௧ |
| ௱௨௩ | தன்வந்திரிபகவான்நாடி | ௱௭ |
| ௱௩௯ | ஷையார்காவியம்நாடி | ௩௭ |
| ௱௪௫ | சிவவாக்கியர்நாடி | ௩௧ |
| ௱௫௰ | வியாசபகவான்நாடி | ௨௰ |
| ௱௫௩ | ஷையார்சரீரசூத்திரம் | ௧௭ |
| ௱௫௯ | யூகிமுனிநாடி | ௩௯ |
| ௰௬௪ | ஷையார்தத்துவம் | ௯௬ |
| ௱௮௧ | தேரையர்நாடி | ௫௧ |
| ௱௮௮ | புண்ணாக்கீசர்நாடி | ௮ |
| ௱௯௧ | ரூத்ருமுனிநாடி | ௨௭ |
| ௱௯௪ | வால்மீகர்பூதநாடி | ௧௬ |
| ௱௯௭ | மச்சமுனிநாடி | ௧௭ |
| ௨௱ | புலிப்பாணிநாடி | ௪௨ |
| ௨௱௧ | சட்டமுனிநாடி | ௧௧ |
| ௨௱௩ | போகர்நாடி | ௧௧ |
| ௨௱௫ | வரரிஷிநாடி | ௯ |
| ௨௱௭ | இராமதேவர்நாடி | ௧௧ |
| ௨௱ | இடைக்காடர்நாடி | ௰ |
| ௨௱ | கொங்கணர்நாடி | ௪௫ |


அட்டவணை முற்றிற்று.

உ

கடவுள் துணை.

மகாமகத்துவம்பொருந்திய

# பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# நாடிசாஸ்திரம்.

## சித்தர்கள்பெயர் விருத்தம்.

### காப்பு.

பார்த்திடவேநந்திசர்மூலத்திசர்
பண்பான அகத்தீசர்சட்டைநாதர்
கார்த்திடவேஇடைக்காட்டர்ஜண்டிகேசர்
கனராமர்போகர்சிவவாக்கியசித்தர்
சேர்த்திடவேகோரக்கர்புண்ணாக்கீசர்
சிறப்பானமச்சமுனிபூனைக்கண்ணர்
வார்த்திடவேயோகிமுனிகொங்கணர்பாணி
வரரிஷியார்மலர்ப்பதம்காப்பாமே.

முதலாவது

## அகத்தியமுனிவர் நாடிகூறுகின்றார்

### விருத்தம்.

கரிமுகனடியைவாழ்த்திக்கைதனினாடிபார்க்கில்
பெருவிரலங்குலத்திற்பிடித்தடிநடுவேதொட்டால்
ஒருவிரலோடில்வாதமூமர்நடுவிரலிற்பித்தம்
திருவிரல்மூன்றிலோடிற்சேத்துமநாடியாமே. (க)

ஆகியநாடிமூன்றும்படபடென்றோடிற்சன்னி
வாகினில்லன்னங்கோழிமயிலெனநடக்கும்வாதம்
ஏகியவாமையட்டையினவையெனநடக்கும்பித்தம்
போகியேதவளைபாம்புபோலவுஞ்சேத்துமந்தானே. (உ)

சேத்துமமெழுந்திரிக்கிற்றித்திப்புநாவிலேறும்
ஏத்தியகசப்புமீறிலெழும்பிடும்பித்தமாகும்
மாத்தியபுளிப்புமீறில்வந்திடும்வாதமாகும்
சேத்துமந்தண்ணீர்பித்தந்தீக்காற்றுவாதமாமே. (௩)

வாதத்தில்வாதமாகில்வளர்ந்திடும்மன்னம்போல
நீதுற்றவுடலிசோர்ந்துநெகிழ்ச்சியாய்சுருங்கும்வாங்கும்
ஆதுற்றுப்பதறுமேனியசனமுமற்பமாகும்
ஏதுற்றதனத்தின்பின்னேயெண்ணியேயறிந்துசொல்லே. (௪)

வாதத்திற்பித்தமாகில்வயிறதுகுழறிப்பேசும்
பேதித்துக்குளிருங்காலில்வீக்கமும்பெருகவுண்டாம்
தாதுற்றபுத்திதானுந்தடைபடுந்தடங்கண்மாதே
கோதுற்றவயிறும்விம்மிக்குடல்தனைபுரட்டுந்தானே. (௫)

வாதத்தில்சேத்துமமாகில்வலியொடுவீக்கமுண்டாம்
பேதித்துத்தலையிடித்துப்பிணங்கியகுணங்கள்வேறாய்
தீதுற்றமெய்வெளுத்துத்திடமுடனசனஞ்செல்லாப்
பேதித்துநாவுபேசப்பெருகவேவீக்கமுண்டாம். (௬)

பித்தத்திற்பித்தமாகிற்பிதற்றிடுங்கிறுகிறுக்கும்
சத்தியுமதிகமாகுஞ்சரீரந்திளைப்புண்டாகும்
அத்தியாயுலருமேனியாகமும்வேறதாகும்
வத்தியேகொளுத்துகாயம்வரண்டுபின்வீக்கமுண்டாம் (௭)

பித்தத்தில்வாதமாகிற்பிடரியுங்காலுங்கையும்
குத்துபோலேயாகுங்குறுகிமெய்பதறும்பின்னே
அத்தியாயுலருமேனியாகமுஞ்சுரத்தால்நோவாம்
புத்தியுமடியுமிக்கப்பெருமைபோய்க்கோபமாமே. (௮)

பித்தத்திற்சேத்துமமாகிற்பிதற்றும்வாய்குழறுமிக்கச்
சத்தியும்வாய்நீர்தானுந்தானறியாமலோடும்

சுத்திடும்பேய்கள்போலச்சுழற்றியவயிற்றில்நோவாம்
பித்தமுமெடுத்துக்கொட்டிப்பிடரியில்நோவதாமே. (௯)

வாட்டிடும்சேத்துமத்தில்வந்திடும்வாதமாகில்
நாட்டியகால்கள்போலநரம்பெல்லாம்வலித்துநிற்கும்
கூட்டியபிடரிதானுங்குன்றவேவலிக்குமாகில்
நாட்டியவிழிபுமேலாய்நாக்குவாய்க்குழறுந்தானே. (௰)

சேத்துமபித்தமாகிற்றின்பதுகசப்புண்டாகும்
பார்பெறுநாவுதன்னிற்பலவிதம்புளிப்பினிப்பாம்
சேர்ப்பதுபேசுமாறுந்திடமில்லைக்கோழையாகும்
காப்பதுகண்ணும்பீளைச்சாறும்பின்சத்தம்வேறும். (௧௧)

சேத்துமத்திற்சேத்துமமாகிற்றிமிர்தமையறியுஞ்சொன்னோம்
ஆத்தமுநல்லதல்லவழிவதுமெய்கண்டாயே
கூற்றன்வந்திடுவதாகுங்குறுமுழிவட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்துசொன்னோம்யாத்திரைநாடிதானே. (௧௨)

நாடிபார்க்குங்காலம்.

காலமேசேத்துமநாடிகட்டுச்சிப்பித்தநாடி
மாலையில்வாதநாடிவகைதப்பிப்பதறிநின்றால்
ஏலவேயிவர்கட்கெல்லாமியம்பினரிதுதானென்று
நாளஞ்சில்மரணமென்றுநன்முனியருளிச்செய்தார். (௧௩)

நாடி இலக்கணம்.

போற்றியநாடிதானும்போத்துபோற்புறந்துடித்தால்
கீற்றுவில்நுதலேவாய்மிக்கக்கிஞ்சுகமானேகேளாய்
காத்திடுந்திங்களொன்றிற்கருதியேதீராவிட்டால
மாற்றியபாதம்பற்றில்மரணமென்றுரைக்கலாமே. (௧௪)

குறித்திடும்சேத்துமநாடிகுதிரைபோல்திமிர்ந்ததென்றால்
கறுத்திடுவிழியால்நல்லகாரிகையாளேகேளாய்
மறுத்திவைபேசவேண்டாம்வயதிவைமுடிந்ததென்று
பொறுப்பில்லைதிங்களொன்றில்புகன்றிடுமரணமாமே. (௧௫)

ஆதித்தன்சந்திரன்போலந்தித்தநாடிதானும்
பேதித்துநிற்குமாகிற்பெருக்கவேவகையினூடே
சோதித்துக்கண்டுநாடிசுரங்களிற்புக்குமாகில்
வாதத்தில்வாய்வுபீடைவந்துறாநிற்குந்தானே. (௧௬)

கடிந்ததோர்நாடிதன்னைக்கருதியேபார்க்கும்போது
விடிந்தபின்சேத்துமநாடிவிதறியேதுடர்ந்துநின்றால்
கடிந்ததுபித்தநாடிகட்டுச்சித்துடிக்குமாகில்
மடிந்ததுவாதநாடிமாலையில்மரணந்தானே. (கஎ)

சேத்துமநாடிதானுங்கியங்கியமஞ்சைபோல
நாட்டியவட்டைபோலநடுங்கியேபதறிநின்றால்
கூட்டவேவேண்டாமேழுநாளினில்மரணமென்று
நாட்டமாய்முனிவர்சொன்னார்நயம்படகுறித்துப்பாரே. (கஅ)

ஏற்றியதீபந்தன்னிலெரிசுடர்முனையைப்போல
தோற்றியநாடிதானுந்துயரநடக்குமாகில்
கூற்றனுங்கிட்டுமில்லைகுறைபடாமருந்துசெய்யில்
மாற்றியவாணாள்தானும்வளர்ந்திடுந்திண்ணந்தானே, (கசு)

கண்ணும்பல்லுந்தான்கறுத்தகருதுமூச்சுமாய்திறந்து
உண்ணும்வயிற்றில்சேத்துமமுமோடிமிகவேதானடங்கால்
பண்ணும்மருந்துபலியாதுபண்பாய்சுவாசமேல்வாங்கும்
மண்ணுவிண்ணுந்தானறிய மரணமாவார்கண்டீரே. (உ௰)

இடைதுடைமார்பின்கீழேயதிபடப்பதறிநாடில்
மூடுகிடவிங்குமாகில்மூவரிலொருவரோடில்
படரவேதாகமிஞ்சிப்பஞ்சிடுங்கண்ணும்வாயும்
அடரவிக்குணங்கள்கண்டாலறிந்துகொள்மரணமென்றே. (உக)

எடுக்கும்படுக்குமெழுந்திருக்குமிங்கேமூச்சதனைவாங்கும்
வடிக்கணைத்தவிழியிரண்டுமலரவிழிக்கும்வழிபார்க்கும்
தொடுக்குந்தொடுத்தசேத்துமமுந்தொண்டைதன்னையடைப்பிக்கும்
அடுத்தவருவதிதுகண்டாலறிவீர்மரணநிச்சயமே. (உஉ)

ஊசிபோல்முகமுநீண்டுவுடம்பெல்லாநரம்புதோன்றிப்
பாசிபோல்கண்பஞ்சிட்டுப்பரந்திருள்மூடுமாகில்
பேசுநாவரண்டுபேசிட்பித்ததுபிதற்றுமாகில்
காசினியறியச்சொன்னேன்கண்டுகொள்மரணமென்றே. (உங)

நாடியால்முன்னோர்சொன்னநற்குறிகுணங்களாலும்
நீடியவிழியினாலுநின்றநாள்குறிப்பினாலும்

வாடியமேனியானு மலமொடுநீரினாலுஞ்
சூடியவியாதிதன்னைச் சுகம்பெறவறிந்துசொல்லே. (௨௪)

சுகம்பெறவங்கமெல்லாஞ் சுருங்கியகுணங்களாய்ந்து
மூகங்குறிநாடிமூக்குச் செவிநுதனயனநாடி
அகந்துடியடிக்குநாடி யதுதிசைவிடுநாடி
உகந்துடியுந்நாடி யுண்மையாய்த்த[illegible]கள்பாரே. (௨௫)

பார்மனக்கவலையற்றுப் பலபலவிசாரம்விட்டுத்
தேர்மனந்தெளிந்தறியுஞ் செய்குணவழியிதென்று
ஊரகமுந்தின்னி லெளிபலவியாதிசெய்யும்
தீபனவுண்டியாலே சேர்ந்திடுநோய்சடானே. (௨௬)

சொல்லியவுந்திதன்னிற் சுழிக்கதோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடி எழுபத்திராயிரத்தில்
வல்லவர்புகலுநாடி பத்ததிலேழநீக்கி
நல்லதோர்நாடிமூன்று நயக்குநீயறிந்துபாரே. (௨௭)

தான்மிகக்குளிர்ச்சிகொள்ளி றங்கியநாடிவாதம்
மீன்முகில்குழலாய்நெய்யா விறைச்சிகளுண்டால்வாதந்
தின்மிகவருமேகோழி தின்னவர்நாடிபித்தம்
வானரற்கனிகடன்னை வாங்கினால்வாதமாமே. (௨௮)

வாதத்திலிலைநீர்தன்னை வாங்கினானடிவாதம்
போதவேகோபமுள்ளே பொருமினானடிபித்தம்
கோதைசேர்குழலார்தன்னைக் கூடினானடிபித்தம்
நீதிலாமுனிவர்சொன்னார் திறமுடனறிந்துதானே. (௨௯)

ஸ்திரீபுருடர்களுக்கு நாடிபார்க்கும்வகை.

தானெனவுலகத்துள்ளே தயங்கியநாடிபார்க்கில்
வானெனுமின்னேகேளாய் வரும்புலன்சொல்லக்கேளு
நானெனும்புருடற்கெல்லா நாடிதான்வலக்கையாகும்
தேனெனுமடவார்க்கெல்லாந் திட[illegible]றவிடக்கைசித்தே. (௩௰)

நாடிபார்க்கும் மாதவகை.

சித்திரைவைகாசிக்குச் செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி யைப்பசிகார்த்திகைக்கு
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதையுமாசி
வித்தகன்கதிரோன்மேற்கில் விழுகின்றநேரந்தானே. (௩௧)

தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்
மானமாம்புரட்டாசிக்கு மற்றைராத்திரியிற்பார்க்கத்
தேனென்றுமூன்றுநாடித் தெளிவாகக்காணுமென்று
கானமாமுனிவர்சொன்ன கருத்தைநீகண்டுபாரே. (௩௨)

வைத்தியரத்தினச்சுருக்கம்-நாடிநிதானம்-முற்றியது.

## பரிபூரண நாடி.

### புருஷநாடி.

அஞ்சாகிப்பத்தான தசநாடிக்குள்
அப்பனேரவிமதியுநெருப்புமாகி
மிஞ்சாதவாதபித்தஞ்சிலேத்மமாகி
வீராமன்மூன்றினிலேவியாதிகாண
நெஞ்சாரக்காணுதற்குவகையைக்கேளு
நேர்மையுள்ளதத்துவத்தைநினைவாய்ப்பார்த்து
செஞ்சாரைபோலப்பாநாடிதன்னைத்
திறமாகக்காணுதற்குவகையைக்கேளே. (க)

கேளப்பாபுருடருக்குவலதுகையைக்
கிருபையுடன்றான்பிடித்துநெட்டைவாங்கி
சூளப்பாபெருவிரலோரங்குலத்துக்கப்பாற்
சுகமாகமூவிரலாலழுத்திப்பாரு
வாளப்பாமுதல்விரலேவாதநாடி
வண்மையுடனடுவிரலேபித்தநாடி
தேளப்பாகடைவிரலேசேத்மநாடி
திறமாகநின்னறிவாற்றெளிந்துகாணே. (உ)

### புருடருக்கு நாடிகள்நடக்கும்விதப்.

காணவேபுருடருக்குவாதநாடி
கானகத்துமயில்போலும் அன்னம்போலுங்
தோணவேகோழிநடை நடக்குஞ்சொன்னேன்
துரியமென்றபித்தத்தினடிகேளு
ஏணவேபாமையுடனடையைப்போலும்
என்மகனே அட்டையைப்போனடக்கும்பாரு
வேணவேசேத்துமந்தான்பாம்புபோலும்
வேணபடிதவளைகுதிபோலாம்பாரே. (௩)

### பெண்களுக்கு நாடிநடக்கும்விதம்.

பார்க்கவேபெண்களுக்கிடதுபக்கம்
பதிவாகப்பார்த்திடவேபகாக்கேளும்
காக்கவேவாதமதுசர்ப்பம்போலாங்
கனமானபித்தமதுதவளைபோலாஞ்
சேர்க்கவேபையமென்றநாடிதானுஞ்
சிறுநடையாவன்னம்போற்செழிப்பாய்க்காணும்
ஆர்க்குமேதோன்றுமிந்தநாடிமூன்றும்
அனுதினமுநல்லறிவாலறிந்துதேரே. (௪)

## நாடிகள் மேமேலுமீறியோடும்விதம்.

தேறவேசந்திரனும்வாதநாடி
திறமானசூரியனும்பித்தநாடி
மீறவேயக்கினியுஞ்சேத்மநாடி
விளங்கவேவியாழமதிலங்கிமீறும்
கூறவேமந்தன்சேயிரவிமூன்றுங்
குணமானசூரியனுக்குமறியோடும்
ஏறவேதிங்கள்புதன்வெள்ளிதானு
மின்பமுள்ளசந்திரனுமோடுங்காணே. (௫)

## வியாதிகளறிய.

காணவேயிரவியிலேவாதமோடில்
கனமானசனியிருமலிரைப்புண்டாமே
நாணவேசெவ்வாயில்வாதமோடில்
நன்மையுள்ளசுரமதானணுகுஞ்சொன்னோர்
தோணவேமந்தனிலேவாதமோடில்
துணிந்ததொருசீதளமுஞ்சன்னியெய்தும்
வேணவேவியாழத்தில்வாதமோடில்
விலாவோடுதேகமெல்லாம்வலியுண்டாமே. (௬)

உண்டானதிங்களிலேபித்தமீறில்
உத்தமனேசலதோஷமுடனேகாணும்
பண்டானபுக்தியிலேபித்தமோடில்
பாரமுடனீரேற்றந்தலைக்குத்துண்டாம்
அண்டானவெள்ளியிலேபித்தமோடில்
அப்பனேகண்ணோயுங்காதுநோயாம்
தண்டானகுருவினிலேபித்தமோடில்
தண்மையுறுந்தாபசுரந்தலைநோக்காடே. (௭)

நோக்காட்டையறிந்துரைக்கவயித்தியற்கு
நுண்ணறிவாய்ச்சொல்லிவிட்டேனுணுக்கமெல்லாம்
பார்க்காட்டாற்றெரியாதுபழக்கமாகப்
பார்த்தறிந்தோர்தனையடுத்துப்பரிவாய்க்கேளு
கேட்காட்டாற்கிடையாதிவ்வுலகத்துள்ளே
கிருபையுடன்மனமுறுதியாகவேயும்
வாய்க்காட்டாவிந்நூலில்வாய்க்கும்பாரு
வண்மையுள்ளகுருநாடிவகையைப்பாரே. (௮)

## குருநாடியிருக்குமிடம்.

பாரப்பாகுருநாடியைந்துக்குநடுவாம்
பாரிலிற்கும்வரலாறுதன்னைக்கேளு

சிரப்பாபித்தத்தின்முன்னேநிற்குந்
தெசநாடிபத்துக்குந்திறமாய்நிற்கும்
ஏரப்பாவாதமென்றுசொல்வார்மூடர்
இருந்தியங்கேபார்ப்பளவில்வேறாய்நிற்குந்
தாரப்பாகொண்டகுருநாடிநேர்மை
தன்னையறிபவகையுனக்குச்சாற்றுவேனே. (௧)

பஞ்சநாடிகளிருக்குமிடம்.

சாற்றுவேன்பெருவிரலிற்பூதநாடி
சங்கையில்லாஆள்தூண்டிவாதமென்க
ஏற்றமுள்ளநடுவிரல்தான்பித்தமாகும்
இசைந்தவொருபவுத்திரமேயையமாகுந்
தோற்றுகின்றசிறுவிரல்தான்பூதநாடி
சுற்றமுள்ளகுருநாடியைந்துட்சேரும்
மாற்றுமேகுருநாடியைந்துட்சேர்ந்து
வளர்ந்துநிற்கும்பேர்பெரியவண்மைதானே. (௰)

பேர்பெரியகுருநாடிகுணமேதென்னிற்
பிரண்டுவரும்வாதத்திலட்டைபோல
சீரறியவாய்வுமிகுமிருமற்றொன்றுந்
தினவுசொரிமிகவுருந்தேகம்வாடுஞ்
சூரறியபித்தத்திலாமைபோலத்
தோன்றிடிலேசுரமிருக்குஞ்சுழற்றும்வாய்நீர்
கார்பெருகிமருகிவருமதுபோல்வியர்வுதோன்றுங்
கதித்திடில்நீர்கட்டுஞ்சிலேத்துமத்திற்போமே. (௰௧)

சிலேத்துமத்திற்குருநாடிசிங்கம்போலே
சீறிநிற்கிலதின்குணந்தான்சன்னிதோன்றும்
ஆற்பனத்தையூடுருவததமருமாகில்
அசாத்தியமாமரணகுறிகப்பாகப்பா
காற்பனவேகுருநாடிகுன்றிப்போகில்
கழியும்வயிர்கடுப்பெடுக்குங்கைகால்வீங்கும்
ஏற்பனவுமில்லையில்லைதிட்டஞ்சொன்னேன்
மிசைந்தகுருநாடிகலையிருத்திப்பாரே. (௰௨)

பாரப்பாகுருநாடிபக்கம்பாயில்
பாரித்தசிலேத்துமத்தானெதிரேமோதும்
கூரப்பாகுருநாடிநேரேநிற்கில்
குற்றமில்லைவாதபித்தமிரண்டுஞ்சேரும்

தாரப்பாகுருநாடிபின்னேவாங்கில்
தப்பாதேசத்தியங்கள்தானுண்டாகும்
காரப்பாஉடலுக்குளுயிராய்நின்ற
கருவானகுருநாடிகொன்றுகாணே. (௰௩)

ஒன்றுக்குமெட்டாதநாடிநேர்மை
யூடுருவித்தானிருக்குமுண்மைகேளீர்
வண்டுகள்தான்மதுவருந்துநேர்மைபோல
வாதபித்தசிலேத்துமத்தின்மதுவையுண்ணும்
என்றைக்கும்வாதபித்தநடுவேநிற்கும்
ஏறுவதுங்குறைவதுவுமில்லையப்பா
கன்றுக்குப்பாலிறங்கும்பசுவைப்போல
காத்திருக்குங்குருநாடிகாலைப்பாரே. (௰௪)

குருநாடிநிலையறியாக்குருடரெல்லாம்
கூட்டமிட்டுச்சாத்திரத்துக்குவமைசொல்வார
மருநாடிவாதபித்தசிலேத்மமூன்றின்
மத்தியமென்றிதையறிவார்வார்த்தைசொல்வார்
கருநாடிக்குருநாடியாகக்காணுங்
கைமமுறையாய்க்குருதொட்டுக்காட்டத்தோன்றும்
பெருநாடிசாத்திரத்தில்மயங்கிடாதே
புலத்தியாகுருநாடிப்பின்னல்பாரே. (௰௫)

பார்த்தப்பாவாதபித்தநடுவேபார்க்கில்
பண்டதுபோன்றதுவுண்ணுமத்தியத்தில்
போற்றப்பாமூவிரலுமுருவித்தாண்டிப்
பூரணமாய்மூலமுதலுருவிப்பாய்ந்து
சாற்றப்பாவிசைசரமபினூடேசேர்ந்து
சந்திரமண்டலமேவிச்சார்ந்துபின்னு
நாற்றமுற்றகுருநாடியெங்குஞ்சுத்தி
நடுவில்வருநேர்மைதனைநாடிப்பாரே. (௰௬)

பம்பரம்போற்குருநாடிகிறுகிறென்று
பற்றிநிற்கும்வாதபித்தநடுவிலேதான்
அம்பரம்போற்குமிறியெழும்வாதபித்த
மையமென்றநாடிமுதலாடியோடிக்
கம்பமுடன்மண்டலங்கண்மூன்றுஞ்சுற்றிக்
கத்திரிக்கோன்மாறலெனக்கட்டிச்சேர்ந்து
தம்பமுடன்வாதபித்தநடுவிலேதான்
தமரகம்போலாடிநிற்குங்குருவிதாமே. (௰௭)

குருநாடிவாதமதுநிற்கும்போது
கோழியுடன் அன்னமயில்குறியாமென்ன
வருநாடிபித்தத்தினிற்கும்போது
வளராமையட்டையெனவருக்கலாமே
திருநாடிசிலேத்துமத்தினிற்கும்போது
தெரித்துவிழுமவிட்டிலைப்போற்றெளிந்துகாணும்
பெருநாடிசாத்திரத்திலலையவேண்டாம்
பிராணகலைதனையறிந்துமரணம்பாரே. (௰௮)

(மரணநாடி.)

மரணமதையறிவதற்குக்குறியைக்கேளு
வழுவாதவிசைநரம்புகுளுந்துகாணும்
விரணமெனும்பொறிகளெல்லாங்களர்ந்துமெத்த
விசைநரம்புதான்றளர்ந்துவிரைந்துவாங்கி
ரணமெனப்பற்கடித்துமணியும்நட்டு
நாவுலர்ந்துமூச்சயர்ந்துநடுக்கமுண்டாய்த்
துரணமெனும்வாதபித்தசிலேத்துமமெல்லாம்
சோத்தியம்பார்விட்டிலைப்போற்றுடிக்கிற்சாவாம். (௰௯)

துடிகண்டசேத்துமந்தான்வெள்ளம்போலே
சுறுசுறுக்காய்மடமடெனவோடுமாகில்
அடிகண்டுமெற்றுநாள்மரணமாகும்
அப்பனேபித்தமதுசிதறியோடில்
முடிகொண்டமூன்றுநாள்சாவார்சொன்னேன்
முழுமையுமேவாதமதுசிதறியோடில்
இடிகொண்டவெட்டாநாள் மரணமாவா
ரின்பமாய்க்கண்டறிந்தேயிடைந்துநில்லே, (௨௰)

நில்லப்பாவாதபித்தமிரண்டுங்கூடி
நிலைதப்பிச்சிதறியதுவோடுமானால்
கொல்லுமப்பாபதினைந்துநாளிற்றானுங்
குணமாகவிதனுடனேஐயங்கூடில்
வெல்லுமப்பாமண்டலத்தின் ஆக்கைபாழாம்
விதமாகமூன்றுமேவொன்றாய்க்கூடி
அல்லப்பாஅரணைவால்துடியேகாணில்
அப்பனேயவர்பிழையாரறிந்துபாரே. (௨௧)

பிழைபாதவாதபித்தசேத்மங்கூடி
பிரண்டுவருந்தேன்கொடுக்குப்போலேயாடி

உளையாதவோடம்போலோடுமானால்
உத்தமனேதிரங்களிலே மரணமாவர்
குளையாதநாடியின்மெய்க்குறிகைகாணார்
கூட்டமிட்டுக்குருவெனவேபிரசங்கிப்பார்
வழியானகண்ணிரண்டுமேற்றகண்ணும்
விதியறிந்தார்சன்னியுமேவிலகும்பாரே. (௨௨)

சன்னியெழும்போலிருந்தநாடிமூன்றும்
சாதகமாய்சுழல்வண்டுதண்ணீர்மீதில்
உன்னியதுபராபரததேயோடுறுப்போல்
ஓடியெங்கும்வாதபித்தசேத்மமெல்லாம்
கன்னியதுசாதகமாய்வருமேயாகில்
கதிப்பாகும்வாதபித்தம்பம்பரம்போல்
பின்னியதுவிட்டிலைப்போற்கற்றறிந்துவீழிற்
பேச்சில்லைமரணமென்றுபிரித்துச்சொல்லே. (௨௩)

சொல்லப்பாவாய்வுக்குமந்தத்துக்குந்
துணையாகவமர்ந்துமெத்தத்தளர்வாயோடும்
அல்லப்பாசீதளமுந்தூங்கியோடும்
அப்பனேசன்னிதான்புழுப்போலோடும்
நில்லப்பாவயிற்றுவலிகண்டபேர்க்கு
கோரகவுள்ளுறவாய்வாங்கியோடும்
கல்லப்பாகிரந்தியென்றநோய்தனக்குங்
கரையுடைந்தவருவியைப்போற்காணுங்காணே. (௨௪)

கரணிதத்தில்வாதமென்றாற்சேத்மவாதம்
காணுமடாசூலையென்றார்சென்மபித்தம்
விரணமுடன்புண்புரைக்குவாதபித்தம்
விதியறியாப்பிணிசந்தான்பித்தசேத்மம்
தூரணமுடனீர்ப்பாடுகெர்ப்பப்பாடானாற்
சொல்லுகிறேனடியெல்லாஞ்சழன்றுகாணுங்
கிரணமென்றபாம்புவிஷந்தாதுவெல்லாங்
கெதிகெட்டுக்காணுதுசெற்பமாமே. (௨௫(

(வாய்வு-மந்த-கெர்ப்பிணிக்கும்-வியாதிநாடி.)

கெர்ப்பிணிக்குவாதபித்தங்கலங்கிக்காணுங்
கிராணி திசாரமென்றாற்றளந்துக்காணும்
உற்பவித்தகபமீளைகாசரோகம்
உற்றிடிலேசிலேத்துமந்தான்மீறிக்காணும்

பிற்பிடித்தவிஷநீருஞ்சோகைபாண்டும்
பிலமானுல்மேகனைப்போல்மீட்டும்பாரு
பற்பிடித்தமேகமென்றால்பித்திமீறும்
பாலகனேகரங்கைகொண்டேநீராப்பாரே. (உசு)

நீர்மேகமானவர்க்குநாடிதானும்
நிர்ணயமாய்நாடியெல்லாம்பிலமேகேட்டுக்
கார்மேகம்போலேவந்தளரியின்மேலே
காண்டுவிழும்புழுப்போலேபுரட்டிக்காணும்
சேர்மேகமானவர்க்குநாடிதானுஞ்
சிறிநிற்குங்குருநாடிதிறமாய்த்தானும்
பேர்மேகங்கடுத்திடுகில்வாதபித்தம்
பின்னியதுதுடித்துவரும்உற்றுப்பாரே. (உஎ)

உற்றதொருகெர்ப்பிணிக்குச்சேத்மபித்தம்
உறுகியெனும்விக்கலுக்குச்சேத்மவாதம்
மற்றதொருசுரந்தனக்குவாதபித்தம்
வகையானகணைக்காய்ச்சல்பித்தவாதம்
சித்தமுறுந்தலைபிடிக்குப்பித்தமாகுஞ்
சிராணகயரோகந்தனக்குப்பித்தம்
குற்றமில்லையிதின்குணங்கள்மருந்தாற்றீரும்
குருவானபூரணத்தின்குறிதான்பாரே. (உஅ)

பரிபூர்ணநாடி முற்றியது.

---

ஆக செய்யுள்-௰சு.

## இரத்தினசுருக்கம் ஐந்நூற்றில்.

நாடிப்பரிக்ஷை.

பூரணமாய்நிறைந்தாகுப்பதைகாள்போற்றிப்
புகலுகிறேன்வயித்தியரத்தினச்சுருக்கம்
வாரணமாமுகத்தோனைப் பணிந்துபோற்றி
வரிசையாய்ஐந்நூறு வகையாய்ச்சொன்னேன்
காரணமாய்செந்தூரம் பற்பம்லேகியம்
கலிக்கம்யெண்ணெய்மாத்திரையும் பிட்டுவேது
சூரணமும்தயிலம்ஒத்துச் சுரசம்பத்துத்
துலைமுறிச்சல்கிறலுடன் பொழுமையே. (க)

மைகடும்நசியமது கிருதம்வேது
மகாசேர்வைஆக்கிறுணம் சகலதாது

பையுடனேகுருநாடி தொகுப்புரோகம்
பரவசமாயந்நூற்றில் பார்க்கச்சொன்னேன்
பொய்யில்லாரத்தினமாம் கிரிகிடம்போல்
பொருமையாய்ச்சொல்லிவிட்டேன் சிவனுக்கொப்பாய்
வையகத்திலவயித்தியரே அறிந்துபார்த்து
மருந்துசெய்யரோகத்தின் வருப்பைக்கேளே. (௨)

(அகஸ்தியர் சுந்திரர்க்குச்சொன்னது.)

கேளப்பாவியாதியுடன் தொகுப்புச்சொல்வேன்
கெடியாகச்சுந்தரா சொல்லக்கேளு
நாளப்பாகுறிகுணங்க ளறிவதற்கு
நயமாகசொல்லுறே னறிந்துதள்ளி
வாளப்பாமலமோடு நீர்ப்பரிட்சை
வருப்பானபரிசமொடு நயனநாடி
பாளப்பா அறிவாலே சாத்தியங்கள்
பாங்கானவசாத்தியங்கள் பணிந்துபாரே. (௩)

(சதசாச அ-வியாதிக்கும்பெயர்.)

பாரப்பாவாதமது எண்பத்திநாலு
பருக்கவேபித்தமது நாற்பத்தெட்டு
தாரப்பாசேற்றிமங்கள் தொண்ணூற்றாறு
தனுர்வாய்வுமுன்னூறு சயமேழு
வேரப்பாபெருவயறு எட்டதாகும்
வெகுகுலையிருநூறு பாண்டுபத்து
நாரப்பாநேத்திரநோய் தொண்ணூற்றாறு
நறுசிலந்தியநுபதுவும் குன்மமெட்டே. (௪)

மேதமது.

எட்டப்பாசன்னிவகை எழுபத்தாறு
எழுவையுடன்பொருக்குலை தொண்ணூற்றைஞ்சி
மட்டப்பாசுரமதுவே எண்பைத்தைஞ்சி
மகோதரமோயேழுக்கும் சிரசில்வீக்கம்
முட்டப்பா அஞ்சிக்கும் உடம்பில்வீக்கம்
முதிரவேபதினறு பிளவைபத்து
குட்டப்பாபடுவனது பதினெண்ருரும்
குமிளிநோய்எழும்க்கும் பீலிபெட்டே. (௫)

இதுவுமது.

பீலியுடன் உறுவசியம் அஞ்சதாகும்
பொரிகரப்பான் தொண்ணூறு கெண்டைபத்து
காலிநோய்குட்டமது இருபதாகும்
கதிர்வீச்சுமூன்றாகும் திட்டை அஞ்சி
சேவிநோய்சோபமது பதினாறுக்கும்
சொல்லிசவு ஆறுக்கும் மூர்ச்சைஏழு
வேலிநோய்ப்படுவதிலே நாற்பத்தாறு
வெகுமூலமொன்பதாம் கழல்நோய்பத்தே. (௬)

இதுவுமது.

பத்தானபீனிசங்கடிவிஷ மெழுபத்தாறு
பிணிநாக்குப்பல்லுநோய் எழுபத்தாறு
கத்தாகுங்கிராணியது இருபத்தைஞ்சி
கண்ணுடனேமாலையது இருபதாகும்
கொத்தாகும்அதிசாரம் இருபத்தைஞ்சி
கொள்க்கட்டிபனிரெண்டு கிருமிஆறு
மூத்தாகுமுட்டுநேரம் முப்பதுக்கும்
முதிர்ந்தநோய்இருபது சத்தி அஞ்சே. (௭)

இதுவுமது.

அஞ்சாகுங்கல்லடைப்பு எண்பதாகும்
அதிர்வாய்வுதொண்ணூறு திமிர்நோய்பத்து
மஞ்சாகும்விப்புருதி பதினெட்டுக்கும்
வளர்மேகம்இருபத்தோர் நீரோவைந்து
பஞ்சாகும்விஷபாகம் பதினாறுக்கும்
பகர்காதுநோய்பத்து விக்கல்பத்து
துஞ்சாகும்அரோசியங்கள் அஞ்சதாகும்
சொல்மூக்குநோய்பத்து உலகத்தோரே. (௮)

இதுவுமது.

குத்தாகுங்கடிதோஷமோ அந்நூறுக்கும்
குறிகாயங்குத்துவெட்டு எழுநூறுக்கும்
பத்தாகுங்கிரந்தியுமே நாற்பதெட்டு
பறக்கின்றபொறிவிஷமோ எண்ணூறுக்கும்
முத்தாகும்நாள்கிட்டும் பிறநீர்க்கோர்வை
முதிரவேஇருநூறு தடிநோய்நூறு
கொத்தாகும்பிள்ளைநோய் நூறதாகும்
கூறினேன்வியாதியுட விபரந்தானே. (௯)

### லோகத்தில் மரணமறிவது.

கூறினேன்வைத்தியனை அழைக்குமுன்னே
கொல்லதுவெழுநூறு வயித்தியனையில்
மாறிநேமநோய்கள்தெரியாமல்பார்த்து
வகையாச்சாகிறது எண்ணூறுக்கும்
தேறியேபலநூலும் பார்த்தபேர்க்கு
செயமாகும்யிருபத்து வைந்துநூறு
பேறிரதுநானூற்று நாற்பத்தெட்டுப்
பெருவயதுஉள்ளமட்டும் பேங்கிடாதே. (௰)

### வயித்தியருடைய கிரமம்.

பேங்கிடாதென்றுசொன்ன சுந்திராகேள்
பெரும்பாவஞ்செய்தகுற்ற முறைமையாலே
சேங்கிடாப்பாவத்தை நிவர்த்திசெய்தால்
திருமேஅபமிருத்துச் செயிக்கலாகும்
வாங்கிடாதுமையவளுக்கு மருந்திரற்கும்
வயிரவற்கும்பூசைசெய்து அவிழ்தமீய்ந்தால்
ஏங்கிடாதுனைப்போலே வயித்தியர்களுண்டோ
யியலாகஉமையவட்கு சிவன்சொல்கேளே. (௰௧)

### வியாதித்தொகுப்பு.

கேளடாஉமையவட்கு அரனார்சொல்ல
கெடியாஜஉமையவள்தான் முருகவேட்கு
நாளடாநாற்பத்து நாலுநூறு
நயமுடனேநாற்பத்து எட்டுரோகம்
கேளடாமுருகவேளெனக்குச்சொன்னார்
குணமாகவயித்தியற்கு கூறினேன்யான்
வாளடாபெருநூலைச் சுருக்கியானும்
வகையாக அந்நூறு தொகையாய்ச்சொன்னேன். (௰௨)

### கெற்பமழிதல்.

சொல்லுகிறேன் குறிகுணங்களாதியாக
துருசாகநாதவிந்து சேரும்போது
வெல்லுகிறேன்விதிவசத்தால் கர்மத்தாலே
விசைப்புழுவால்கிருமியால் மூலத்தாலும்
மல்லுகிறேவைகிரந்தியால் கற்பமானது
மதிமேகவெட்டையா லழிந்துகெற்பம்
வல்லுகிறேன்பிதுகளுக்குத் தப்பியேதான்
வந்தபிள்ளைதனக்குமினி வகைசொல்வேனே. (௰௩)

### பிறந்தபிள்ளை வியாதியாய் இறக்கிறகுறி.

வகைசொல்வேன் கணமென்றும் கறப்பானென்றும்
மாந்தமென்றும்பேராம்பல் பிசிநோயென்றும்
துகைசொல்லீவனினிதப்பி வாதபித்தம்
சொல்லையமிதினாலே வியாதிமெத்த
நகைசொல்வேன்குருநாடி வலுமைமெத்த
நயமாகப்பெருநாடி லொளித்துவைத்த
பகைசொல்வேன் அந்நாற்றில் வெளியாய்ச்சொல்லி
பார்ப்பதற்குநூதனுடன் பனச்சைசொல்வேன். (கச)

### கர்மங்கள் செய்தவர்கள்.

சொல்லுவேன்கறுப்புடனே பழுதுரோகம்
சொல்குருடன்காதுமந்தம் பூனைக்கண்ணன்
வெல்லுவேன்ரோமங்கள் சிவந்தபேர்கள்
மெய்நடுக்கில்துடிகயர்கள் வெடிச்சசொற்கள்
பல்லுமேபழுதாகுங் கண்சிமிட்டல்
பறந்தசொல்இவர்களையும் பார்த்தபோது
கொல்லுமேயவர்களைதான் கண்டாயானால்
கும்பமுனிசொல்வசனங் குறிப்பைக்கேளே. (கரு)

### சயணமரணக்குறி-வேறு.

கேளேமுன்னே தூதன்வந்து கிளரும்வார்த்தைநீக்கலுமே
சூளேபித்தமேலேறிச் சொல்லும்வார்த்தைப்பலவிதமாய்
வாளேபறந்துபறந் நழைந்கல்வகையாய்ச்சொரீயில்நிலங்கீறல்
சாளேசாவானயிவர்சொல்லில் சடிதிபோகாதிருந்திடரே. ()

### தொடுமரணக்குறி.

இருந்நீர்முகத்தில் கையைவைத்தால் பேறும்பிணிகள்தீராது
வருந்திமார்பில்கையைவைத்தால் வாங்கும்பிணிகள்மாலறிய
பொருந்திக்கைகால்தோள்தொட்டால் போகும்பிணிகள் தீர்ந்திடுமே
பருந்திக்கோளுஞ்சுந்தரனே பாங்காயுரைத்தேன்புறையறிய. (கஎ)

### (சொல்வசனத்தில் சாத்தியமசாத்தியமறிதல்கணக்குக்குறி.)

சொல்லும்வசனமுதலெழுத்தை சூட்சமாகவே துதித்து
இல்லியிருக்கும்வியாதிகொண்டான யிவன்பேரெழுத்தையுமேகூட்டி
நல்லியிருபதமேதையுமே நாளும்பக்கத்துடன்கூட்டி
வல்லதுகையேழில்பெருக்கி வகையாயெட்டில்கழிப்பீரே. (கஅ)

### இதுவுமது.

நின்றவிலக்கந்தனைக்கண்டு நோயுஞ்செபமும்றன்றுபிணி
மண்டில்தீராரெண்டுதின்கூம வளருமூன்றுநாள்செல்லும்

என்றேநா லுவினையேழுர் மியல்ப லைந்துமரணமுமாம்
கொண்டேயாறுவெகுபிணிபாம் குறையுமேழுந்தீர்ந்திடுமே. (௧௯)

### திசைகுறி அறிந்து-வேறு.

நாற்பெருந்திசைகள்நாடி சோணுமேநான்குமெண்ணும்
நாற்பெருந்திசையில்வந்து வினவினகருமம்நன்றும்
நாற்பெருந்திசையைவிட்டு கோணமேநான்குமாகில்
நாற்பெருங்கோணம்வந்து கருமமேநாதமாமே. (௨௰)

### வைத்தியரை அழைக்கிறசகுணம்.

முன்னமேஆணுய்வந்து மொழிந்தபின்பெண்ணுய்வந்தால்
முன்னமேகருமம்தீதாம் பின்புநன்றாகுமென்ன
முன்னமேபெண்ணுய்வந்தால் முயன்றனு ஆணுய்வந்தால்
சொன்னவைமுன்புநன்றும் ரூகிடுமோமே. (௨௧)

### வழிசகுனம்-மரணக்குறி-அறிவது

தண்டுகுடுவைபிடித்தாலுந் தன்கைதயறுகண்டாலும்
முண்டுமேமாடிமூக்கிறையன் மிகவுங்குருடன்விரிதலையன்
கொண்டவிறகுகட்டுலுப்பைக் கொள்ளிக்கையில்கொடியிடமும்
மிண்டுமிவரைக்கண்டாக்கால் மிகவேமரணமியம்பீரே. (௨௨)

### வழிசகுணம் பார்த்தல்.

தலைவிரிமொட்டைசட்டை தவசிசந்நாசிபார்ப்பான்
முலையினில்வெறியகும்பல் மூக்கறைவிறகுகட்டு
கலையிலாச்செக்கான்தட்டான கதிரொற்றைப் பார்ப்பான்சேர்வை
எலையினிலிவரைக்கண்டா லேத்திழைக்கருமந்தீதே. (௨௩)

கன்னியர்தாசிவேசி கடிமணல்ரெட்டைப்பார்ப்பான்
மன்னியமுரசுசங்கு மங்கிலியகழுத்தியோடு
தன்னியநெய்பாலசெற்றோர் தோன்றியேயெதிரேகண்டால்
வன்னியவசவனம்நன்று மகிழ்ந்தவர்முனிவர்சொன்னுர். (௨௪)

### பட்சிசகுணம்.

சொன்னதோர்நாரைக்காகம் பொத்துடன்வலமேயாகில்
இன்னமேகருமம்நன்று மியல்பெறக்காடைவால
முன்னமேகெருடன்கோழி முதுகுடனிடமேநன்றும்
வன்னமாய்முனிவன்சொன்ன வைத்தியமார்க்கமாமே. (௨௫)

### வாதக்குறிப்பு-வேறு.

மார்க்கமடாவப்படியே யோடுமாகில்
மயிலினுடகால்போலே சாட்சியாகும்
மூர்க்கமுள்ளகுணங்சேளு நடக்கும்போது
முழங்காலும்பிடரியெல்லாம் கடுப்புக்காணும்

பார்க்கையிலேமேகத்தைச் சுத்திவிட்டு
பாங்கானசீழொழுகி விதனமாகி
நாக்கெல்லாம்வரண்டுவிடும் தாகமேத்த
வழிந்தெரிவும் சாந்தலுண்டாம் வரிசைமாறே. (உசு)

பித்தம்-க-வாதம்-உ-குறிப்பு

சாந்தலுண்டாம்பித்தமொன்று வாதங்காலாய்
கதித்தெழுந்தால்நாடியடா அட்டைபோல்குன்னும்
வாந்தியுண்டாமந்திக்கு வயறெரிப்பு
வளமாகசுரங்காணும் கண்ணுங்காந்தும்
ஊர்ந்துவிடும்பாண்டாகு மாசனத்தில்
உற்றதோர்மூலமாம புண்ணுமாகும்
தீர்ந்துவிடும்அனுபானம் அறிந்துபோடு
திசைக்கொன்றாய்ஓடிவிடும் தெளிவுதானே. (உஎ)

தெளிவானபித்தமே தெளிந்துதானே
செவியடைக்கும்கண்ணொளியைத் திகைத்துக்காட்டும்
ஒளியாதேஉடல்வெதுப்பும உயிரும்போகும்
ஒருவருடன்பேசாது பிச்சுபோலாம்
களியாதுமேனியெங்கும் நடுக்கல்காணும்
நாடாதுநீர்ப்பாய்ச்சல் நவின்றேயோடும்
அளியாகுமிதுகண்டால் மருந்தியவேண்டாம்
ஆச்சரியசுரமென்றே அறிந்துபாரே. (உஅ)

வாதம்-தனிக்குறி.

அறிந்துபார்வாதமே தனித்துதானால்
அன்னம்போல்நடக்குமப்பா நாடிபாரு
சரிந்திடவேகால்முடக்கும போதுக்கட்டும்
தரியாதுஅன்னத்தை யுண்ணொட்டாது
எரியாதுதாகமுண்டாம் சந்தியாகும்
ஈயாதுசிவன்பற்பம் அஞ்சவேண்டாம்
குறிவாகாளெட்டில் குணமுமாகும்
கூகூவென்றலையாதே கொடுத்துப்பாரே. (உகூ)

(வாதம்-முக்கால்-பித்தம-அரை-சிலேத்துமம்-வகுறிப்பு.)

பாரடாவாதமுக்கால் பித்தம்பாதி
பரிவாகசிலேற்றுமத்தில் காலதான்கூடில்
மார்படாபாம்பதுபோல் புரண்டுவிழும்
வகையறிபவதினுடைய குணத்தைக்கேளு
வேறாகுப்வியாதியெல்லாம் வெவ்வேறாகும்
மேற்குயதுசீதமுண்டாம் மேகமாகும்

தேரூதுடல்தடிக்கும் கால்வெடிக்கும்
  தெரிந்துகொண்டு அனுபானம் செய்துகொள்ளே. (௯௰)

(பித்தம்-அரை-சிலேத்துமம்-அரை-வாதம்-வ)

செய்யடாபித்தத்தில் பாதியாகில்
  சிலேத்துமதில் சரிபாதி வாதங்காலாம்
உய்யடாநாடிதான் சுருண்டுவிழும்
  உரைக்கின்றேன் உலகிலுள்ளோர் அறிந்துகொள்வீர்
பையவேவாய்காந்தும் வாய்நீறூரும்
  பரிவாகக்கண்ணுழட்டும் இரும்பல்காணும்
கையடாகால்களெல்லாம் வெடிப்புகாணும்
  கருங்குட்டம்புகுமடா கண்ணுஞ்சாவே. (௯௧)

வாதம்-க-சிலேத்துமம்-க-பித்தம்-க-குறிப்பு.

சாவில்லைசாகாத நாடிகேளு
  தனியானவாதமொன்று தேமொன்று
சாவில்லைபித்தமப்பா அதுவுமொன்றாய்
  சடுதியிலேகாட்டாது கூடினுக்கால்
சாவில்லைசாகாம லிருக்கலாகும்
  சாத்தியத்தில்குணங்களப்பா இதுகளெல்லாம்
சாவில்லைநோயில்லை வறுமையில்லை
  சடுதியிலேநாடியிலே யடங்குவாரே. (௯௨)

சிலேத்துமம்-க-பித்தம்-வ-வாதம்-வ.

அடங்குகின்ற சிலேட்டுமந்தா னென்றேயாகில்
  அப்பனேபித்தமடா காலுமானால்
திடம்பெறவேயதினுடைய குணத்தைக்கேளு
  செவியடைக்குமிரும்பலுண்டாஞ் சிரசுவேர்க்கும்
வடம்பெறவேவிழிமூக்குஞ் சலந்தானூறும்
  வருக்கவொருமயக்கமுண்டா முடனேதீரும்
விடங்குணங்கள்கண்டாக்கா லவிழ்தம்வேண்டாம்
  விபரமாய்ச்சொல்லிவிட்டேன் விரும்புவீரே. (௯௩)

வாதம்-வ-பித்தம்-க.

விரும்புவாய்வாய்வுசெய்யங் கூத்தைக்கேளு
  வேறேயொருகூத்துமில்லை விபரஞ்சொல்வேன்
உரம்புடனேவாதமப்பா காலுமாகில்
  உற்றதொருபித்தமே கதிப்புமானால்
திரும்பியேவாய்வப்பா நிற்குங்கூற்று
  தீயிலேபாய்ந்துவிடுந் திறமாய்ச்சொன்னேன்
மரும்பியேதிறந்துவிட்டேன் வெளியதாக

மானிடவரறியாமல் தூஷிப்பார்கள்
திரும்பியேவாதமடா கதிப்பதானல்
மேன்மையுள்ளவாய்வப்பா அப்புவிபிலேபாயும்
தெரும்பியேபிரித்துவிட்டேன் சித்தனனல்
சிவகுருசூக்ஷமறிந்துகொண்டு தேறுவானே. (௬௪)

தேறுவாய்சிலேத்துமந்தான் கதிப்பதானல்
திறமாசபித்தமங்கே அரைதான்சேரில
மாறுவாய்வாதமப்பா கால்தான்கூடில்
வகையாகவாசியுட பாய்ச்சல்கேளு
கூறுவேன் அப்புவுக்கும் விண்ணுக்குந்தான்
குதிக்குமப்பா வாசுவிடநடனம்பாரு
காறநீசதாநித்தங் கண்டுபார்த்தால்
கை ரசலுக்குதடங் சாணும்பாரே. (௬௫)

(வாதம்-க-பித்தம்-முக்கால்-சிலேற்றுமம்-க-அசாத்தியம்.)

தடமானவாதத்தி லொன்றநாகில்
தனித்துநின்றபித்தமப்பா முக்கால்கூடில்
இடமானசிலேற்றுமங்கா னென்றதானல்
எலிபதுபோலோடுமப்பா நாடிபாரு
விடமானவுந்திக்குவுண் ணுவுக்குமேல்
மூச்சதாயிழுக்குமப்பா விதங்கள்சொன்னேன்
படமானெஞ்சடைக்கும் ச வ ங்கநோவும்
பரிவாகச்சொல்லுகிறேன் பாருபாரே. (௬௬)

பாரப்பாகண்டநாள் மரணமாகும்
பரிதாகயில்லாவிட்டால் மூன்றிற்கொல்லும்
சோரமதில்தணிந்துநின்றால் புத்தியெல்லாஞ்
செயலாகமங்கிவிடும் கோபங்காணும்
காரடாகண்டாக்கால் நாடிதானுங்
கமூனிடதலைபோலே காட்டிகுண்ணும்
கூறடாவெட்டாநாள் கொல்லுங்கொல்லும்
குணமாகஒன்பதிலே கூடுபோமே. (௬௭)

பூதநாடி.

போகுமப்பாவாகமென்ற நாடியொன்றாய்
புகழ்கதனித்துநின்றால் பூதநாடி
ஆகுமப்பா அரணைவால்போல் துடித்துகாணும்
அகன்றுவிடும்வாய்வப்பா திரேகங்குத்தும்
தாகுமடாசுகஜக்னி மார்க்கமாகும்
தானவனும்நோக்கிநின்றால் சாகான்பாரும

பாகுமடாசிலேற்றுமந்தான்சிதரித்தாக்கில்
யதையாமல்தானிருப்பான்பரிந்துகேளே. (௩௮)

கேளப்பாயிப்படியேகணித்துச்சொன்னேன்
கிருபையுள்ளமைந்தனென்றுலறிந்துகொள்வான்
ஆரப்பாஎனைப்போலேசொன்னார்சித்தர்
ஆருமில்லைசொல்லுகிறேன்சடுதிசொல்வேன்
வாளப்பாகாயசித்திமாயசித்திகாண்பார்
வளமாகயென்னுடையநூல்கண்டோர்கள்
தேளப்பாயென்மாய்கைவைத்ததெல்லாம்
தெளிந்துநின்றறிந்தவனேசித்தர்தானே. (௩௯)

இரத்தினகிரிகிட்டம்-முற்றிற்று-ஆக செய்யுள் ௯௯.

---

## திரட்டுநாடி

ஓதுநாடித்துறையையகத்திலும்
வாதபித்தசிலேத்துமவன்மையும்
பேதமானவியாதியின்பேர்களும்
ஆதியானவருந்தவரோதினர். (௧)

அட்டதானக்குறிப்பு.

திருமறைமுனிவர்கூறுமவர்கடச் சய்கைதன்னில்
வரும்பலவியாதியானவகையறிகுவதேதென்னில்
உருவதுநாடியாலுமொண்முகமலநீராலுந்
தெருவிழிநாவினாலுந்தேர்ந்தவங்கணத்தினாலும். (௨)

உரைத்திடுந்தானமெட்டினுருகுறியுரைக்குங்காலை
வருத்தியநாடிசெய்கையுடம்பினில்வகுக்கக்கேளாய்
யுரைத்தெழுவுந்திக்கீழேவோமெனும்பிரணவத்தில்
பருத்தகுண்டலியேமூலமாயெழுநாடிபத்தே. (௩)

தசவாய்வுகளின்பேர்.

பத்தின்பேரிடையினோடுபின்கலைசுழிணைபாற்கில்
அத்திசிங்ஙவைகாந்தாரியலம்புணைபுநடனோடு
வைத்திடுகுகுதன்மைத்தசங்கினிவகுத்தநாடி
நெத்திலேயெழுபத்தீராயிரம்நரம்பென்றுசெப்பே. (௪)

செப்பியவெழுபத்தீராயிரம்நரம்புடலிற்சேர்தல்
எப்படியெண்ணவேண்டாமெழுவுடல்விழுதுபோல
மைப்பெருக்குழலின்மானேவளர்சிரமடியீராக
ஒப்பொருநாடிநிற்குமடவினையுணர்ந்துகொள்ளே. (௫)

உந்தி டமூலமாகவுயயென்றுங்கிழுமேலும்
வந்திடும்நாடிதன்னைவுடம்பினில்வகுக்கக்கேளாய்
அந்தமாஞ்சென்னிமீதேழாயிரமாகுமுண்மை
பைந்தொடிசெயிரண்டிற்பத்துமுன்னூறதாமே. (சு)

நாடித்தொகை.

வருவிழியிரண்டில்நாலாயிரமதாமானேமூக்கில்
அருவிமூவாயிரத்துமுன்னூற்றுமுப்பதாகும்
பொருவியவல்குல்கன்னம்பொருந்துமையாயிரந்தான்
முருவுருபிட ரிக்கீழ்தோள்மேலுமாயிரமதன்றே. (எ)

கண்டத்தாயிரமதாகுங்கையின்மூவாயிரந்தான்
தொண்டைக்கிழாகத்தானேசுழிதொப்புள்மேலதாக
ஒண்டொடிகேளாயொன்பதாயிரத்தொருபத்தாராம்
அண்டத்துள்முனிவர்கூறுமாயுறுவேதமாமே. (அ)

குருகின்மொப்பிடரிக்கீழேகூரெண்ணுயிரமதாகும்
மருத்திருவில விநாடிவளருமூவாயிரந்தான்
முருப்பிடைலிங்கம்யோனிஅடிவயிருதித்துநாடி
திருத்தவேல்விழியாளேழாயிரமதாமென்றுசெப்பே. (கூ)

பேசியமூலநாடிபேருமூவாயிரந்தான்
காசினிமுனையாள்சந்திலிரண்டாயிரநரம்புகாணும்
வீசியபாதந்தன்னில்விளம்புமாயிரத்திேனாடு
ஓசைசேர்நூற்றென்பாரேயென்னவேயோதுநூலே (ய)

மொய்குழன்மானேநாடிமுடிச்சுடன்தவங்கள்கூறின்
வெய்தியகோசமூந்தியிலைதயமோடின்னங்கேளாய்
பையநவல்குல்மூலம்பகர்பிடர்முடிச்சோடுச்சி
வைகுருமெழுபத்திராயிரமதாய்வகுக்கலாமே. (கக)

இப்படியெழுபத்திராயிரநரம்பல்லைக்கண்டு
ஒப்பிடநாடிபார்க்குமடவினையுரைக்கக்கேளாய்
வெப்புறுவாதபித்தசிலேத்துமமிக்கமூன்றுந்
தப்பிலாதறிந்துகொள்ளுங்குறிகுணஞ்சாற்றுவோமே. (கஉ)

இயம்பியபுருடருக்குவலக்கரநாடியேல்கை
வயங்கினமின்னார்தங்களிடக்கரமானேகேளாய்
நயம்பெறகெட்டிவாங்கிகல்குமங்குட்டமூலங்
தவங்கிடுபசைவைத்தள்ளிப்பார்ப்பதுநாடிதானே. (கங)

செந்திருவனையாய்சேளாய்சிலேத்துமவாதபித்தம்
வந்திடும்நாடிமூன்றுமடவிலேவைத்தபோது

மூன் தர்ச்சனைசெய்வாதமொழியந்தமத்திமையேதத்தம்
பைந்தொடிவனையாய்சேஷ மென்றுதான்பகரலாமே. (கச)

தந்திரமாகமூன்றுதானமுமறிந்துகொண்டால்
முந்தியவாதகாடிகுணந்தனைமொழியக்கேளாய்
கொந்தருகுயிலேபன்னல்கொக்குடன்மயிற்போலே
உந்தியநாடிகண்டால்வாதமென்றுரைக்கலாமே. (கரு)

தாக்கியபிடித்தநாடிதான்செயுங்குறிகுணங்கேள்
விக்குவார்முலைபாரட்டையாமைபோனடக்குமென்க
ஆக்கமாஞ்சிலேற்பநாடியதிர்ந்திடுந்தவளைபாம்பு
போக்குமனடையதாகுமெனமுனிபுகன்றவாறே. (கசு)

வாள்விழிமானேரெண்டுவாதமும்பித்தமொன்று
மேளுநடக்குவன்மைகொடுஞ்சினஞ்சிரமேற்கொண்டு
நாளுநடைப்போனுகநடுவிரற்சேர்ந்துதோன்று
மூளுபித்தம்ரெண்டுஞ்சிலேற்பமொன்றுரைக்கக்கேளே. (கஎ)

கடுவிழிமானேபிள்ளைகண்டமுழ்தொட்டில்போலே
நடுவிரலசையலாகும்நாடிசிலேற்பமிரண்டு
மிடையுறுவாதமொன்றுமெழும்பிடிற்பிணையல்நாகங்
கடுகியபுணர்ச்சிபோலேநடப்பதுகண்டுகொள்ளே. (கஅ)

கொள்ளுகவாதம்ரெண்டுமொன்றுசேற்பனமுங்கூடில்
வள்ளுநடுவேட்கண்ணுள்ளவனைவாஸ்முறிந்துவீழ்ந்து
அள்ளியேசுழற்றல்போலாஞ்சோர்வுருபித்தம்ரெண்டு
மொள்ளிபவாதமொன்றுமகூடிடிலுரைக்கக்கேளே. (ககூ)

துடிமீனையடித்தாப்போலே துடித்திடுஞ்சேஷபம்ரெண்டுங்
கடிகியபித்தமொன்றும்நடப்பதுகாணவேண்டி
வடிவரவல்குல்மானேமஞ்ஞையாமென்னவோடும்
மடவிலேபறிந்துகொள்ளுமாயுருவேதமாமே. (உ௰)

வேதமேவுரைத்தவுண்மைவாதத்தின்வீடுதொப்புள்
ஓதுபித்ததின்வீடுகண்டத்தாஞ்சிலேத்துமத்துக்
காதியாயிதையமுச்சிவாகுமீபிதன்னந்தானே
நீதிலாமுன்னோர்பேசும்வாகடச்செய்கைதானே. (உக)

மேவியவாதஞ்செய்யுங்குணந்தனைவிளம்பக்கேளாய்
தாவியவயிறுமந்தஞ்சந்துகால்பொருந்துநோவாஞ்
சேவியதாதுநாசஞ்சிறுநீருடன்சிறுநீர்வீழும்
காவியங்கண்ணினுள்ளேமலமதுகரிக்கானும். (உஉ)

ஏவலாய்குழலாய்த்தத்தீய்செய்குணம்விளம்பக்கேளாய்
கோலவேல்விழிசிவந்துகுளிர்ந்திடிருக்குமல்லால்

சிலைநீர்கடுத்துநோந்துசுறுக்கெனச்சிவந்துவீழும்
ஞாலமேமிகுசிறென்றுநாவுலர்ந்திருக்குங்காணே. (உ௩)

சேத்துமஞ்செய்குணங்கேள்சில்லெனவுடம்புவேற்கும்
ஏத்தமாய்விஷநீருறிசுழித்துநாவழுவழுக்கும்
நாத்தநீர்மாய்ந்துவீழும்நலம்பெறவெளுக்குமேனி
தோத்துமுக்குணங்கள்கண்டால்சிலேற்பனத்தொகுதியாமே. (உ௪)

முந்தியவாதம்ரெண்டுமபித்தமொன்றெழுந்ததாகில்
வந்துதான்வயறுவிம்மும்வலித்திடுதாகமோகஞ்
சிந்தனைமிகவுண்டாக்கும்பொசிப்பையும்பிறியதாக்கும்
பைந்தொடிவாதபித்தமென்றுதான்பகலாமே. (உ௫)

ஏய்ந்ததோர்பித்தரெண்டும்சிலேற்பமொன்றெழுந்ததாகில்
ஆய்ந்ததோர்பசியுமில்லைபடிக்கடிவயறுவிம்மூந்
தோய்ந்ததோர்நயனநீருஞ்சுத்தமாய்மஞ்சள்போலாம்
பேய்ந்ததோர்பித்தமாகில்பித்தசிலேற்பனமதாமே. (உ௬)

செப்பியசிலேற்பம்ரெண்டும்வாதமொன்றெழுந்ததாகில்
வெப்புறங்கபமேலிட்டு யினிப்பையேமிகவும்வேண்டுந்
தப்பிலாப்பசியுமுண்டுவேணமேபற்றிநிற்கும்
இப்படிகுணங்கள்கண்டால்சிலேத்துமவாதமென்னே. (உ௭)

எண்ணியவாதம்ரெண்டும்பித்தமென்றெழுந்ததாகில்
புண்ணெனவுடம்புநோவாம்புகையெனயெரியும்நெஞ்சு
திண்ணமாய்நாவரண்டுசிவந்தநீர்கடுத்துவீழும்
அண்ணலார்வுரைத்தவுண்மையாயுருவேதமாமே. (உ௮)

தூங்கியசிலேற்பம்ரெண்டும்பித்தமொன்றெழுந்துதாகில்
ஓங்கியசன்னியுண்டாம்உச்சிநோஞ்செவியுங்கேளாய்
பரங்குடநாவினித்துப்பததிபஞ்செரியாதாகும்
பூங்கொடியணையாய்பித்தசிலேற்பனம்புகலுங்காலே. (உ௯)

மானநோய்வாதம்ரெண்டுஞ்சிலேற்பமொன்றெழுந்ததாகில்
ஆனதோர்சரீரநாவுமங்கைகால்திமிர்த்துக்காட்டும்
மூனமாம்வழூர்தத்துள்ளேயூத்தையுமிகுந்துவிம்மும்
பானலங்கண்ணாள்வாதசிலேற்பனம்பரிந்துகாணே. (௩௰)

பார்த்திடில்வாதபித்தம்பரிந்தசிலேற்பனங்கள்மூன்றுந்
தோர்த்திடுமரணைவால்போல்துடித்திடுவசவுநோவாம்
வேத்துடல்பட்டுதானேமெய்யெலாங்குளிர்ந்ததாகில்
கோத்தொடிவளக்கைநல்லாய்மரணமாங்குறியிதாமே. (௩௧)

மேவியவசக்கையானே மிக்கதோராக்கைகாவும்
ஆவலாய்மனிதர்தம்பா லவன்புகழ்பேசினேற்கும்
பூவையேபெருமூச்செய்தும் போனகந்தேடுமென்றும்
காவியங்கண்ணினளே மரணமாங்காலந்தானே. (௩௨)

எடுபிடியென்றுவிழு மெழுவுடல்மயங்கிக்காட்டும்
புடையுருமூக்கில்நீறும் பொசிந்துளிவேர்வையுண்டாம்
வடிவிழிசிவப்பதாகும் வாங்கிடுவிலாவிரண்டும்
கடுருமிக்குணங்கள்கண்டால் மரணமாங்காலந்தானே. (௩௩)

கொண்டிடுமவத்தைகேளாய் கூர்விழிமூக்குங்காதுந்
திண்டிரலுந்திமார்பு செய்யுந்தான்குளிர்ந்துகாணில்
மண்டையிலனல்போல்காந்தி மயக்கமுங்சபமுங்காணில்
அண்டருமறியச்சொன்னே மரணமாங்காலந்தானே. (௩௪)

இயம்பியவிலாவிரண்டும் மூச்சதுவெடுத்துக்காட்டித்
தயங்கியதொண்டைக்குள்ளே சலதிபோற்றிரையுங்கண்டு
வயங்கினமின்னேகண்ணில் மாற்றருநீருமோடில்
தியங்கிடவேண்டாமின்னஞ் செய்குணமரணமாமே. (௩௫)

உண்மையாய்வாதபித்த நாடிகளுடனேமாய்ந்து
வண்மையாய்சிலேற்பனந்தான் வளர்ந்ததுதிடியேபோலாய்
திண்மையாயுடல்வெளுத்து மார்பதுகுளிர்ந்துதோன்றில்
அண்ணலாரன்றேசாவு கடிகைதொணூறதாமே. (௩௬)

மேதினியுள்ளோர்க்கெல்லாம் மெய்யுடனுரைக்கலுற்றேன்
மூதியவுழலைதாக முலர்ந்துநாவரண்டுகாணுந்
தீதுறுசிலேற்பநாடி சேர்ந்திடுமெழுந்துவீழும்
ஆதியானுரைத்தவுண்மை படுத்தநாளிரண்டில்சாவே. (௩௭)

வெய்யதோர்பித்தம்நீங்கி வாயுவுமிருந்துகாட்டில்
ஐயமேலிட்டுகண்ட மடைத்திடுமசைவைநோவாம்
துய்யசெய்விழியுந்தாழ்ந்து சொரியுநீரிடமேசுத்தும்
ஐயனுருரைத்தவுண்மை யஞ்சுநாளைவிற்சாவே. (௩௮)

சாக்கிறவவத்தைதானும் பிணவெடிசார்ந்துநாறும்
மேக்குறுஞ்சிலேற்பனந்தான் பெழும்பிடுமூச்சிவீழும்
நோக்குறுஞ்சூழ்த்திதானே நுவன்றிடும்பலபேச்சாக
தாக்கியதுரியந்தானே தப்பிதானமயங்குஞ்சீவன். (௩௯)

சாவுருமுதலவத்தை தர்க்கங்கள்பேசுமிரெண்டில்
மேவிடவடம்புறூறு மிக்கமூன்றுமவத்தை
பாலகத்தெளிவுநீங்கிப் பத்தும்நாலாமவத்தை
வாவலாய்வெற்றிபேசி யசாத்தியசித்தமாமே. (௪௰)

சிதமஞ்சாமவத்தை தெளிவுறமுகபோர்க்கும்
மோதரமாராம்வத்தை யுடலதுகுளிர்ந்தமாட்டும்
பேதமேழாமவத்தை பேதித்துப்பொசிப்புவீவண்டும்
மந்திபானுரைத்தவெட்டி காண்பஞ்சாம்வத்தையேன்பான். (சக)

நிதிலாதுடல்வெளுக்கும் சிதமாக்கீதாம்பத்தில்
வோதிவாயுள்வேகத் துரைவிதிப்படியேமுன்னோர்
பேதமாய்ப்புகலும்நீதி பெருமையையறிந்துகோண்டு
ஓதுவர்கடத்தினோர்க்கு முறையிதென்றேநூனாலே. (சஉ)

முன்னேருரைத்தார்மானிடற்கு மோழிந்தவயதுநூறென்றே
இன்னமூன்றுபங்காக வியம்புமிளமைசிலேத்பனமே
வன்னகடுவித்பித்தமதா மப்பால்வாதமதுவாரும்
பொன்னேயிந்தகாலத்தில் மற்றபரோகமபொல்லாதே. (சங)

வாதபித்தசிலேற்பவேவிதானம்.

உதைபத்தில்வாதம்பத்தா முச்சியில்பித்தம்பத்தாம்
பதனியில்சர்வகாலம் பத்துமேசேத்துமமாகும்
விதிபெருரோகிக்கேல்கை வியாதிகண்டேடையோர்கண்டு
மதியுடவயித்தியற்கே யுரைத்தவர்கடங்கடாமே. (சச)

வாதமேதளிப்புவேண்டும் வன்பித்தன்கசப்புவேண்டும்
நிதிலாசிலேற்பனத்தான் சேர்ந்திடுமினிப்புவேண்டும்
மோதியவாதபித்த சிலேற்பனதொந்தத்தோற்கே
காதலாய்துவர்த்தல்கார லுவர்ப்பொடுகருதுங்காணே. (சரு)

வேறு.

வாதரோகி மனிதர்கள்மாமுகம்
மோதினேங்கறுப் பாயிடுமுண்மையே
வேதநீதி விளம்பியபித்தத்தோற்
கேதுவாய்முக மஞ்சளுமெய்துமே. (சசு)

எய்துசேத்தும மெழுந்தவர்மாமுகம்
மெய்யதாகக் கரிகிவெளுத்திடும்
வையகாருறை செய்தவரும்பொருள்
செய்தியான வைத்தியசிரேட்டரே, (சஎ)

மலக்குறி.

மேவுவாத முடையவர்மெய்மலம்
சிவிதாகக் கருத்திடுஞ்செம்மியே
பாவையேபித்தத் தோர்மலம்பார்த்திடில்
ஆவியேபெழு மன்னிறமஞ்சளே, (சஅ)

மன்னுஞ்சேற்பனத்தார்மலம்வீழ்குறி
வின்னலீரவிழும்வெளுட்பொங்கியே
சொன்னவிக்குணமன்றிமுததொந்தத்தே
நின்னில்மூன்றுநிறமலமெய்துமே. (௪௯)

## நீர்க்குணக்குறி.

ஓங்கியவாதத்தோற்குநீர்விழுங்குணமுறைக்கிற்
பூங்கொடிகடுத்தநொந்துசிறுத்துடன்பெருமிவிழும்
பாங்குடன்பித்தத்தோற்குப்பசியநீர்சிவந்துகாட்டி
எங்கவேசுருக்கதாகயெரித்துடன்கடுத்துவிழும். (௫௦)

வீளுமேசிலேற்பனத்தோர்நீர்க்குணம்விளம்பக்கேளாய்
நாளுமேவெளுத்துநுரைந்துநலம்பெறவிழுங்கண்டாய்
வாள்விழிமானேதொந்தரோகமானிடற்குத்தானே
தாளுநீர்பலநிறந்தானென்னவேசாற்றினேமே. (௫௧)

## கண்ணின்குறி.

வாதத்தோர்விழிகறுத்துவன்றிமைதாழ்ந்திருக்கும்
தீதுத்தபித்தத்தோற்குசேல்விழிமஞ்சனிக்கும்
கோதுத்தசிலேற்பத்தோற்குகூர்விழிவெளுத்திருக்கும்
மீதுத்ததொந்தத்தோற்குவிருபலநிறமதென்னே. (௫௨)

## நாவுக்குறி.

ஊத்தமிருக்தவாவநாவுயாம்போலுமுன்னமதாம்
நாத்தமீரும்பித்தத்தோர்நாவுகசந்துமஞ்சளிக்கும்
கோதல்சேஷ்மரோகிக்கும்குணங்கேள்நாவுவெளுப்பாசி
வோதவரிதாய்வழுவழுத்துநொய்தாயிருக்குமென்றுவலே. (௫௩)

## தேகக்குறி.

சேரும்வாதரோகிகுணந்தேனேசீதமிருந்திருக்கும்
பாரும்பித்தரோகமதைபார்க்கில்சிவச்சென்றேயிருக்கும்
கூறுஞ்சேற்பசடம்வேர்வைகொண்டேயிருக்குமிக்குணங்கள்
சேருந்தொந்தரோகருடஞ்செப்புங்குணத்திலாழ்வீரே. (௫௪)

## தந்தக்குறி.

விளம்பியவாதரோகித்தந்தமேவெளுத்திருக்கும்
பளபடுப்பித்தரோகிபல்லுமஞ்சனித்திருக்கும்
முளங்கொளசிலேற்பன்றேசிப்பதிவெளுப்பாகுமுண்மை
தொளங்கிடுந்தொந்தரோகிக்கிதுவகைதொகுத்துச்சொல்லே. (௫௫)

திரட்டுநாடி-முற்றியது-அ௲ செய்யுள்-௬௫௪.

---

## குணவாகடத்தின் வைத்தியசாரம்.

### கணபதிதோத்திரம்.

சொற்பவைத்தியசார சுருக்கமுப்பத்தாறும்
அல்லும்பகலு மறிவுணர - நல்ல
குணபதியாம்பூரணத்திற் கூடியேவாழுங்
கணபதியின்பாதமலர் காப்பு.

### மருந்துகொடுக்கக்கூடாதபேர்கள்.

அன்னியதாரத் தாசைகொள்வோன் வஞ்சனுன - கைஞ்சர்களுலொட்பினுண்போன்றீமை-துன்னியகுனியக்காரன் சண்டைக்காரன், றுருப்புகிள்ளியிருந்துண்பான் டிருடன் துஷ்டன்-துன்னியநித்திரைமிகுத்தோன் கொடாதலோபி, குணமில்லான்மகிமையில்லான் மானமில்லான், பன்னியபண்டிதர் பகைஞன்செவிடனூமை-பாசுபதமறியாளைப் பார்க்கொண்ணதே. (௧)

### முன்னே பணம்வாங்கிக்கொண்டு பின்னே வைத்தியஞ்செய்யவும்.

கைச்சளிகையொப்புக் களவின்கூலி-கபடனை மூலமாதர்வேசிகூலி, பெய்க்கூலிகண்கூலி வித்தைக்கூலி-வியாபாரக்கூலிமிக வுடையான்கூலி, ஒப்பரியபிணிதீர்க்கு மொருவன்கூலி-யோதுவிக்குமுபாத்தியாயன்றனகூலி, அப்போதைக்கப்போதே வாங்காராகில் ஆர்பெறுவாரார்தருவா ரவனிமீதே. (௨)

### துஷ்டர்களுக்கிம்மூன்றுஞ் சொல்லக்கூடாது.

மந்திரமும்வாகடமும் பழையநூலும் வருவிக்கும்பெரியோரே வளமைகேளீர், தந்திரமாய்க்காய்ந்தமுக மூகிபற்றுடிதன்மெய்துபோற்றொடர்ந்து தரிப்பாராகில், சுந்தரமாம்புகழுடைய குலமானுலுந் துஷ்டர்களுக்கிம்மூன்றுஞ் சொன்னாராகில், அந்தரமாயெழுநரகிலழுந்திப்பின்னு மறிவிலாச்சண்டாள ராவார்பாரே. (௩)

### இந்நான்குவகைகளும் அறியாமல் வைத்தியஞ்செய்பவர்களுக்கு நரகம்வரும்.

பார்க்கின்றசோதிட பிராயகாலம் பகரும்விபகாரமொடு பிராயச்சித்தம், எற்கும்வைத்தியம் இவைகள் நான்கும்வல்லோர் இதன்வழியே சிகச்சைசெய்கைஞ் செய்வாராகில், ஆர்க்குமேதோஷமில்லை இவைகளையா யறியாதார் சாஸ்திரவல்லவர்கள்போல, தீர்க்கமடிபிடியாகச்செய்வாராகில் சிவபிரமத்திவதை சேர்வாரன்றே. (௪)

கண்கள்-௩-தலைகள்-௪-முகங்கள்-௫-கைகள்-௬-சரீரங்கள்-௮

கால்கள்-௰-இந்த ஆறுவித குணங்களறியார் ரோகிகளைக்

கொன்றதினால் நரகமடைவார்.

வாதகுறிவைத்தியரேசொல்லக்கேளீர்வாதாகக்கண்மூன்றுதலைகள்நான்கு, நீசமுடன்முகங்களைந்துகைகளாறுநிலைசரீரங்களெட்டுக்கால்கள்பத்து, வீதப் இதன்பயனறிந்தார்வியாதிதீர்ப்பார் விதம்அறியார் மானிடரைப்பழியேசெய்வார், சேதமாஞ்செய்மருந்து பவித்திடாது செத்தபின்புநிரகிற்சேருவாரே (௫)

கண்-தலை-கை-சரீரம்-கால்-பிண்டநிலை-விபரங்கள்.

மருந்துசுத்திகுணம்நிகண்டு கண்கள்மூன்றும் வாதபித்தசிலேட்டுமதொந்தந் தலைகள்நான்காம், அருந்தும்அறுசுவையறிதல்கைகளாறும் அஷ்டவிதக்குறியறிதல்சரீரமெட்டாம். இருந்ததசநாடிதசவாய்விரண்டும் இதமாகப்பார்த்திடிற்கால்கள்பத்தாம், பொருந்தியகோர்பிண்டநிலைமுகங்களைந்தாம் பொதிகைமலையகஸ்தியனார்புகன்றவாறே.()

வாதடத்தின்பயனறியார் நாடிகாணார் வளர்கையைப்பிடித்திழுத்துவார்த்தைசொல்வார், ஆசடியமாகவேநல்லோர்தம்மை அசாத்தியநோயோரென்று அறைந்துபோவார், பேர்கிடக்கப்பேர்சொல்வார்வியாதிகட்கு பிணிதீர்ப்போமென்றுசொல்வார் தீர்க்கமாட்டார், ஓகோகோவைத்தியர்தாமென்றுசொல்வார்க் கொருக்காலும்மோட்சமில்லை நரகந்தானே. (௭)

அச்சமறவைத்தியரேநோயுள்ளோர்க்கு அசாத்தியமுமறிந்தநன்றாய், பட்சமறக்குறிக்குணமெய்ப்பரிக்ஷைபார்த்து பரிகாரமாய்மருந்துபகராராகில், தச்சமறக்கிளைக்குலங்கள்வேறோடற்று தாரணிதனில் வெகுபாவந்தலைமேற்கொண்டு,இச்சைபெறவெழுநரகிலமூழ்ந்திப்பின்னும் ஈடேற்றமில்லாமலிருப்பார்தானே. (௮)

தரணிதனிலவுஷதத்தின்சுத்திகண்டுதகமைபெறநோயாளின்சரீரம்பார்த்து, கரநியாசனவகையுங்கண்டுபின்னுங் கைப்பரிக்ஷைமெய்ப்பரிக்ஷைகருதும்நாடி, திடநிகரில்குருமுகமாய்ப்புத்தியாகித்தெளிந்தோர்கள்யோசனையும்செய்திகேட்டு, முரணினுளிந்தவகை செய்யாராகில் மூவேழுசுற்றமும்வேரற்றுப்போமே. (௯)

கருத்துறவேவாதிமகன்வைத்தியஞ்செய்யில் கசடறவேநோயாளிகுருவாயெண்ணி, கருத்துறவேமருந்துக்குப்பத்தியேனும் கைக்கண்டவைத்தியரையறிந்துநன்றாய், கருத்துறவேமனதுட னவரக்கவேனும் கழுதையைப்போலிருந்தவர்க்குப்பலியாதொன்றும், கறுத்துற

வேயிலைவ யறியச்சித்தர்தா னுங் காட்டினுரவர்மனம்போல்நடந்துக்கொ ள்ளே. (ய)

நடந்துக்கொள்ளும்கோயாளிராஜாவாக காட்டினுலவர்க்கங்கேம ருந்துணுது, தொடர்ந்துமேயவரிடத்திற்பத்திவைத்தால் தரும்பாக ப்போகுமடாநோய்களேது, அடர்ந்துபோயவர்வாசற் கார்த்தாருனல் அக்கினியிற்பஞ்சதுபோல் நோய்கள்போகும், சடந்தனக்குநோய்வந் தால்குருவேயென்பார் சாத்ரியமாய்த்திரிந்தால்தம்பியாமே. (௧௧)

தம்பியென்பார்நோயெல்லாந்தீர்ந்தபின்பு தாய்தந்தைகுருவென் பார்திருமுன்னே, வெம்பியநோருரோகங்கள்தீர்ந்தபின்பு வேணவுப சாரம்பின்னுகட்டென்பார், கும்பியேகொதித்துமிகவுள்ளம்வாடி குரு வானவைத்தியர்தன்மனதுநொந்தால், சம்பியேமுகம்வாடித் தான்வா ரார்கள் சாற்றினேனிவையறிந்துமருந்தவாங்கே. (௧௨)

வஞ்சமற்றுரொன்றபிணியாளர்தம்மை மகவதினும்பதின்மடங்கு மருந்துசெய்யில், நெஞ்சில்நோயாளியின்பிணிநிதானம் நிறுத்துமங்க வைத்தியற்குநிதிகொடாமல், பஞ்சைமொழிபகருமரும்பாவியோரை ப் பாழ்நரகிலழுந்தியெமன்பாசத்தாலே, அஞ்சவிழுத்தேயடித்துத்தள் வானென்று அகஸ்தியரும்முந்நூலிலருள்செய்தாரே. (௧௩)

பிண்டவுர்ப்பத்தி.

கேளப்பாமனமானவாயுகூடி கெடியானசித்த மாகாயம்பொங்கி, வேளப்பா ஆங்காரசிகாரமிஞ்சிமேவுதற்குப்பெண்மேலேமோகம்அகு ம், நாளப்பாஜந்துக்கும்பலமேதென்றால் நலம்பெறமேசொல்லுகிறே ன்நன்ருய்க்கேளு, தாளப்பாமனதோடேவியானன்கூடுந் தனியானநா தத்திலபானன்தானே. (௧௪)

தானென்றவிந்துவினிற்சமானங்கூடும் தனியானசித்தத்தில்வியா னங்கூடும், காளென்றஆங்காரம்கர்ச்சிப்போடே கலந்துநிற்கும்உதா னனப்பாகண்டுகொள்ளு, வேனென்றபத்தும்ஒன்ருய்மனதுங்கூடிமே வியவன்சலந்தவந்துவிழும்போது, மானென்றமௌனபரவசமேயா வன் மருவுகின்றபெண்ணுக்கம்முறைதான்கேளே. (௧௫)

கருதரிக்கும்விதம்.

முறையானபெண்ணுணும்மௌனமுற்றுல் மோசம்இல்லேகருவ ங்கேதரிக்கும்பாரு, நிறையானவலத்தேடிலாணேயாகும்நோரசஇட க்தோடிற்பெண்ணேயாகும், உறையானசருப்பையில்சுக்கிலம்பாயவுத் தமனேசுரோணிதந்தானுறைநதுக்கொள்ளும், கறையாகப்பாய்ந்தவெ ளிதமருபோலக் கழற்கொடிக்காய்ப்போற்றிரண்டுசிரசும்ஆமே. (௧௬)

ஆமப்பாசிரசோடேகையுங்காலும் அப்பனேதத்துவங்கள்நரம்பு மூலை, ஓமப்பா அஸ்திமுதலுரோமமதமோடுவுந்தானேபதினொருவாகு லுமேமகானுர, காமப்பால்விழுந்தவழிசிரசிருந்தில கைமுறையாய்த்தா யுண்ட அன்னஞ்செல்லும், சேமப்பாகடுமையத்தொப்புளாலே சென் றதெலாமலமாகக்கழியுந்தானே. (௧௭)

நானென்றபதினொன்றுற்சடந்தன்முன்னே சாதகமாயெடுத்து வரும்மலமெவ்வாறு, ஊனென்றப்பெண்ணுக்குமனதுவேறாய் உருக் கமுற்றுமௌனம்உண்ணும்பாவத்தாலே, கானென்றமலடாவள்விருஷ னுக்குங் கைமுறையாயிப்படிதான்கண்டுகொள்ளு, தேனென்றமொழி யாட்குபரனுர்சொன்னார் செகமெலாம்இப்படிதானசெனித்தவாறே

### தசவாயுகளின்பெயர் பிராணவாயுவிரு பிடம்.

பிலத்துநிற்கும்பிராணனோடபானனெனும்வியானன் பிரியாவிதா னஞ்சமானனொடுகூர்மன், தலத்துகின்றநாகனெழிற்கிருகரன்றனொகு ம் நற்றேவதத்தனொடுதனஞ்செயனும்பத்தாகும், இலக்கமுடனபிராண நிலைமூலமதிற்றேனறி யெழுந்துசிரசளவுமுட்டியிருவிழியின்கிழாய், கலக்கமறநாசிவழியோடும்ஈராறிற் கடிகியெட்டுவுட்புகுந்துக் கழியும் ஓர்நான்கே. (௧௯)

### அபானன் வியானன் உதானன் சமானவாயுகள்.

உந்தியெனுந்தலத்தின்கீழபானன்நின்று உறுமிமலசலங்களையுங் கழலச்செய்யும், விந்தைபெழில்வியானன்தோளதனில்நின்று மிகச்ச ளையுக்கவனமும்உண்டாகச்செய்யும், பிந்தஉதானன்செபலுண்டசனந் தன்னைப் பெருநாடிநாம்புவழியூட்டல்செய்யும், இந்தவுடல்தனைவர்க் குஞ்சமானன்தானு மியாவையுமேமிஞ்சவொட்டாதிருக்குமென்றே.

### (கூர்மன் நாகன் கிருகரன் தேவதத்தன் தனஞ்செயன் வாயுகள்.)

கூர்மனிருவிழியில்நிமைத்திடுமேநாகன் கொட்டாவிவிக்கலெனு ங்கொடுமைசெய்யும், தீர்மைகிருகானீட்டிமுடக்கிவைக்குந் தேவதத் தன்விழித்துமேவசனஞ்செய்யும், பேர்மனனுந்தனஞ்செயன்மேற்சிர சிரண்டாய்ப் பிளந்திடும்போததுவோடிப்போவதாகும், நேர்மையறிந் திடுவையினிநாடிபத்தின் நிலைமைதெரிந்திடவிபரம்உரைசெய்வோமே.

### தசநாடிகளின் பெயர்கள் சுழிமுனைநாடி இடகலை பிங்கலை.

சுழிமுனையாம்இடகலைபிங்கலைகாந்தாரி அயத்திசிகுவையலம்பு டைபுருடன்றனைம், நெழுகுருவன்சங்கினியோமடைரந்தாக நின்றதச நாடிபததும்நில்லததநாமம், மொழிவதுகேள்சுழிமுனையென்பதுமூலத் தில் முளைந்துநடுவெழுந்துசிரசளவுநிற்கும், பிரிவழியச்சுழிமுனையி த்தலைகள்தோன்றிப் பிறந்துயிருநாசிபிடமஓடிநிற்கும். (௨௨)

காந்தாரி அத்தி சிகுவை அலம்புடை புருடன் குருநாடிகள்.

கண்டமதில்நின் றுகாந்தாரிநாவில் கரைந்தநீர்பொசியவுபாயங்கள் செய்யும், அண்டசெவிதனிலத்திசிகுவைநின் று அவத்தையோர்நான் கினுக்குமலைனைன்னும், விண்ட அலம்புடைபுருமன் இருவிழியில்நி ன்று மெய்மறந்தபோது அசைவாகிநிற்கும், கொண்ட குருநாடிதானீர ல்பற்றிக் குடல்புரட்டிவாயினீர்சுழற்றிநிற்கும். (௨௩)

சங்கினிநாடி விடையம் ஐந்தின்பெயர்கள் வர்னவிடையம்.

சங்கினியென்பதுநாடிகுய்யம் பற்றித்தானிருக்கும் ஒன்றையுமை மிஞ்சொட்டாமல், அங்கும் அதிகாரியனேடைம்பத்தொன்றும் அறி வித்தோம்வசனுநியைக்துங்கேளாய், இஙகுவசனங்கமனந்தானத்தோ டு இருந்தளழில்விசர்க்கமஆனந்தம்ஐந்தில், பொங்குவசனுநியவன்வா க்கில்நின்று பொருந்தவசனத்தையவன்பிறப்பிப்பானே. (௨௪)

வியாதிகளை அஷ்டவிதப்பரிக்ஷைகளாலும் நிச்சயித்தல்.

தரணியுள்ளவியாதிதன்னையஷ்டாங்கத்தால் தானறியவேண்டும தனதேதென்னில், திரணிபதோர்நாடிகண்கள்சத்தத்தோடுதேகத்தி னதுபரிசம்வரனம்நாக்கு, இரணமலம்மூத்திரமாம் இவைகளெட்டும் இதம்படவேதான்பார்த்துக்குறிப்புங்கண்டு, பரனருளாற்பெரியோர்க ளபாதம்போற்றிப் பண்புதவறுமற்பண்டிதஞ்செய்வீரே. (௨௫)

(நாடிகள் நிற்கும் இடங்களும் வாதநாடி நடையும் வருதலறிக.)

செய்கின்றநாடிபெருவிரலின்மேலாய் திருந்திழைமூன்றங்குலத் தினடுவதாக, தைகின்றகோதும்பையரிசிபோல சர்வம்வியாபித்திரு க்கும் அதுதான்கூறில, கைபடியுங்காலடியுமநாடிநிற்குங்கன்னியருக்கி டப்புறமாங்கணவர்க்கங்கே, மைகின்றவாய்புறமாம்வாதநாடிவந்துமு ன்னேநடக்குமப்பால்வகைசொல்வேனே. (௨௬)

பித்தம் சிலேட்டுமம் வாதம் நாடி நடைகள்.

சொல்லுகிறேன்பித்தநாடிதோன்றும்அப்பால் தொடர்ந்துசிலே ட்டுமநாடிதோன்றும்அப்பால், அல்லுநிறக்குழலாளேநாடிநின்றால் ஆ ச்சரியநாடியென்றறிந்துசொல்லு, மல்லுகின்றவாதத்தில் நாடியங்கே வக்கிரகதியாய்நடக்குந்தவளைபோல, நல்லுகின்றதவளையட்டை தொட் டிலாட்டல் நல்லாயிப்படிநாடிநடக்குந்தானே. (௨௭)

பைத்தியநாடிநடை சிலேட்டுமநாடி நடைவாதமும் பித்தமும் தொந்திக்கநாடிநடை.

நடக்கும்பைத்தியஞ்சவலைப் பிள்ளைப்போலும் நடனமயில் அன் னம்போற்காகம்போலும், திடக்கும்சிலேட்டுமநாடிஇலங்கும்பக்ஷிசெ ய்யபுறுவூர்க்குருவிகோழிபோல, அடக்கமாய்நடக்குமதுமயிலேசொ

ன்னேன் அவ்வளவேவாதனபத்தியத்தின்தோற்றம், மடக்கின்றகா
டைபோல்நடந்துப்பின்னை மஞ்சையெனநடக்குமதுமதித்துக்கூறே.

வாதசிலேட்டுமந் தொந்தித்தநாடி

அசிரணநாடி மந்ரிதயநாடி ஸ்திரீசங்கைநாடி பலபந்தநாடி.

சன்னிவாதநாடிகளின் வருகை.

கூறுகின்றவாதசிலேட்டுமமுங்கூடில் கோழியட்டையெனநடக்கு
ம்அசிரணநாடி, தூறுகின்றமந்திரிதயந்திநாடி தூங்குகின்றகாகநடை
யென்றுசொல்வார், தேறுகின்றஸ்ரீசங்கைஇப்படியாய்நின்று நீபரமா
ய்நடக்குமலபந்தநாடி, ஊறுமன்னம்போல்நடக்குஞ்சன்னிவாதம்உய
ர்ந்தநாடிவிதிகளையுமஉரைக்கக்கேளே. (௨௧)

குடிலைசூக்ஷமவாயு சன்னிவாதம் சங்கினிகாந்தாரி நாடிகளின்

நடைகளறிக.

உரைத்தவிறகின்கட்டுக்குள்மூஞ்சூறுஉலவுதல்போலேநடக்கும்
குடிலைவாயு, விரைத்தெழுந்தேமந்தமாயிருந்துப்பின்னும் விதமாகநட
க்குமதுசூக்ஷவாயு, புரைத்தருமையிவ்வகையின்சன்னிவாதம் பொ
ரு பாகக்குவிந்தமுலைபோலுங்கொங்கை,முறைத்தெழுந்தச்சங்கினி
காந்தாரிப்பின்னே முறமையதாம்நாடியென்முனிவர்தாமே. (௩௰)

(தேகங்களின் பரிசங்களும் நிறங்களும் வருங்குறியறிதல்.)

முனைகின்றதேகபரிசத்தைப்பார்க்கில் முன்வாதத்தேகிக்குச்சரீ
ரஞ்சற்றே, அனைகின்றஉக்ஷணமாம்பைத்தியதேகிக் கதிகமுண்டாம்
அப்பால்சீதளமாய்நிற்கும், சுனைகின்றசிலேட்டுமந்தான்சூழ்தேகிக்கு
தொந்தகுணநால்விதமாம்நிறந்தான்கூறில், பனைவாததேகநிறங்கறுத்
துநிற்கும் பைத்தியதேகநிறமஞ்சள்சிவப்பதாமே. (௩௧)

சப்தலக்ஷணம்.

தாமேசிலேட்டுமதேகநிறம்வெளுப்பு தான்தொந்தேகம்இந்நால்
விதமாய்நிற்கும், மாமயிலேசத்தமது அறியவேண்டில் வாதரோகிசம
தொனியாம்வார்த்தைபேசும், ஈமமுள்ளபித்தந்தான்உறக்கக்கூறும்இ
யம்பிடும்சிலேட்டுமரோகிக்கினச்சத்தம்,நாமுரைத்தோம்தொந்தரோ
கிக்குத்தானிந்த நால்விதமாம்மொழிந்தசத்தம்நயந்துகாணே. (௩௨)

காணுகின்றவாதரோகிக்குக்கண்கள் கருநிறமாய்நொந்துமிகத்த
ண்ணீர்பாயும், பூணுகின்றபித்தரோகிக்குமஞ்சள் போலிருக்கும்சிவ
ப்புநிறப்பொலிவுதோன்றும், பேணுகின்றசிலேட்டுமரோகிக்குககண்க
ள்பீளைகட்டிவெளுத்திருக்குமசன்னிவாதம், வாணுகின்றசிவப்புடைத்
தாய்வந்துவிங்கி வந்திடுங்காமாலையெனவகுத்துச்சொல்லே. (௩௩)

வாதமலம் பித்தமலம் கபமலம் தொந்தமலம் வாதச்சிறுநீர் நிறங்கள்.

வந்தமாவாதரோகிக்குந்தானும் மலமிறுகக்கட்டுபட்டுக்கறுத்து த்தோன்றும், சிந்துபித்தரோகிமலம்மஞ்சளாகில் சிவப்பாகில்சேர்ந்தி ருக்குஞ்சிலேட்மருக்கு, தொந்தமலம்வெளுத்திருக்கும்மலக்கட்டான ந்தொந்தமலம்பலவிதமாய்த்தோற்றிக்காணும், விந்தமுளவாதரோகிக் கிச்சிறுநீர்தானும்வெளுத்திருக்கும்வைத்தியர்நீர்விதஞ்சொல்வேனே.

வைத்தியர் சிறுநீர் கபநீர் தொந்தநீர் வாதரோகநாவு

பித்தரோகநாவு நிறங்கள்.

விதமுள்ளவைத்தியர்தன்சிறுநீர்மஞ்சள் விதமுடைத்தாயிருக்கு மல்லால்சிவப்புந்தோன்றும், நுரையுள்ளசிலேட்மெத்தோர்நீர்தான மெத்த நுரைகலக்குந்தொந்தநீர்நால்விதமாய்க்காணும், சுதையுள்ள நாவிநிறஞ்சொல்லில்வாதந்தோன்றினர்க்குவெடித்துமுட்போற்கறுத் திருக்கும், கதையல்லச்சிவந்தாலும்பகித்தாலுந்தான்கனமுள்ளப்பை த்தியர்நாகணக்குத்தானே. (௩௫)

கபரோகநாவு ஜன்னிரோகநாவு தொந்தரோகநாவு.

தானமொடுவாய்வெளுத்துநீருண்டாகிற் றுன்சிலேட்மாவாகும் ஈரம்அற்றே, ஆனமுற்போற்கருக்கில்சன்னிரோகநாவாம்அதமதொ ந்தநாநிறம்நால்விதமாய்த்தோன்றும், ஆன இவ்வகையெட்டும்அறிந்த பேரை அவனிதனிற்பண்டிதராய்ச்சொல்வார், ஈனம்இலாப்பொதிய டக்கும்பெரியோரன்றி பெய்தாதுபாவருக்கும்இயம்புங்காலே. ()

குணவாகடத்தின் வைத்தியசாரம் முற்றிற்று ஆக செய்யுள் ௩௬.

---

குணவாகடத்தின் நோயின்சாரம்.

கரிமுகக்கடவுளைகௌரிமைந்தனை
விரிகடல்வாயனைவேதவேதாந்தனை
அரிதருமருகனையாதிசோதியை
பரிவொடுதொழுவர்பாதம்போற்றுவாம்.

மாதங்களில்நாடிபார்க்குங்காலங்களறிதல்.

சித்திரைவைகாசிக்குஞ்செழுங்கதிருதையம்பார்க்க
அத்வமாம்ஆனியாடியைப்பசிகார்த்திகைக்கும்

மத்தியானத்தியானத்திற்பார்க்கமார்கழிதைமாசிக்கும்
வித்தகக்கதிரோன்மேற்கேவீழ்கும்வேளையிற்றான்பாரே. (௨)

தானதுபங்குனிக்குந்தனதுநல்லாவணிக்கும்
வானமாம்புரட்டாசிக்கும்வர்க்தராத்திரியிற்பார்க்க
தேனெனமூன்றுநாடிதெளியவேகாணுமென்று
கானமாமுனிவர்சொன்னகாரிகைவேதநூலே. (௩)

நாடிபார்க்கிற்பலித்திடாகாலமறிதல்.

எண்ணெயின்தலையின்போதும்ஈரமாய்நின்றபோதும்
உண்ணும்கல்லுணவின்போதும்உண்டாம்வெம்பசியின்போதும்
திண்ணமாய்நடக்கும்போதுஞ்சிற்றின்பமூட்டும்போதும்
பண்ணியநாடிபார்க்கிற்பலித்திடாதென்றுசெப்பே. (௪)

நோய்நாடிபார்க்கும்விபரமறிதல்.

மருவிடுநோயிநாடிமதித்திடில்வலக்கைமைந்தர்க்
கரிவைபர்க்கிடக்கைதன்னிலழுத்தியேசுட்டிக்காட்டும்
விரலதில்வாதமாகும்நடுவிரலிற்பித்தம்
தருமணிவிரலில்ஐயந்தானியல்பறிந்துபாரே. (௫)

வாதமும்பித்தப் ஐயம்மருவியகுணபாடத்தை
தீதறமுனிவர்நூலைத்தேர்ந்தபின்திரட்டதாக
ஓதியசுருக்கநூலையொழுங்கொடுவுணர்ந்துகொள்ள
வாதுதிர்வைத்தியர்க்குவல்லிருள்விளக்கமாமே. (௬)

மந்தசுரக்குணம்.

வாதந்தான்தனித்துநின்றுவந்திடும்பர்துபோலத்
தீதறவெழிப்பிநின்றூற்சிச்சியேமந்தம்பற்றும்
ஏதுவாற்சுரங்கள்கண்டதிடைவிடாநிற்குமல்லாற்
தாதுவுங்குறைந்துநின்றுரக்ஷையுமறக்கச்செய்யும். (௭)

மத்தியசுரம்மலைச்சுரங்களறிதல்.

உற்றிடும்வாதநாடிஒருவிரலுள்ளேநின்று
பற்றியேசிலும்பிநின்றுபைபவேநடக்குமாயின்
மத்தியசுரமேயாகும்மலைச்சுரமதுதானாயின்
அத்தியேமற்றியோடியடங்கிடாதெழும்பிநிற்கும் (௮)

### சகலசுரங்களும் பாஷாணத்தாற்றீரும்.

இப்படிசுரங்கள்கண்டாலெளிதல்லவேகமுண்டாம்
அப்புரகாவரண்டாநாவினிற்பிளப்புகாணும்
வெப்புறுமிச்சுரங்கள்மேவிடாததனில்வேண்டில்
மெய்ப்படிபாஷாணத்தால்மீள்வதுகின்னந்தானே. (௯)

### வனமூலிகஷாயம்மாத்திரைகற்பம் இவைகளாற்றீரும்.

நாட்டினிற்சுரங்கள்கண்டுகலப்படாதிருக்குமாயிற்
காட்டினில்மூட்டியாலுங்கஷாயத்தின்வலிமையாலும்
மூட்டியகுளிகையாலும்முடிகியகற்பத்தாலும்
வாட்டமாமென்றறாலோர்வழுத்தியகுணமீதாமே. (௰)

### மலபந்தநாடி.

வந்திடும்வாதநாடிமடக்கியேதுடித்துநிற்கில்
முந்தியபழமலங்கள்முடிகியேயிருக்குமென்க
அந்தமாய்வாதம்பித்தமிழுத்துநின்றரைக்குமாகில்
பந்தியாய்வாயிற்றெரிப்பும்பரப்பும்வந்தடுத்ததென்னே. (௧௧)

### மந்தசன்னி.

நீருறும்வாதநாடிநின்றதிற்கோபமானாற்
பாரினிலெவர்க்குமவாயுபற்றிடும்மந்தமாகும்
வேரிசேர்குழலாய்வாதம்விரிப்பொடுகெடுத்துநின்றால்
கூருறுசன்னிவந்துகூடிடுமூன்றுநாளில். (௧௨)

### ஷைசன்னிதீர அண்டத்தயிலம்.

வந்திடுமூன்றுநாளில்வாதமாஞ்சன்னிகூடிற்
புந்தியைமறந்துவாயாற்புலம்பலோடலம்பற்பண்ணும்
பிந்தியாநாலாநாளிற்பிடரியிற்பின்னல்செய்யும்
அந்தமாகியவண்டத்தின்றைலமேபுகற்றிடாயே. (௧௩)

### ஷைதோஷக்குறியறிதல்.

பாவியவாதநாடிபக்கமேதுடியாவண்ணம்
புரவியபுழுப்போலூர்ந்துபுலன்கெடவமர்ந்தேயோடில்
சுரமுறுபவராநாளிற்றோஷம்வந்தணுகினாவை
யுரமுறப்பேசவொட்டாதுளரியேகுளறிநிற்கும். (௧௪)

### தோஷந்தீரமிளிநெய்.

பேச்சதுகுளறிநின்றுபெருகவுள்மூச்சுமுண்டாம்
ஆச்சுபனிரண்டுநாள்தானப்படிகிடக்கிற்பின்பு

கூற்சுறமயிலிநெய்யிற் குலவிபவசம்புகூட்டித்
தேய்ச்சுமேனுள்ளுக்கொள்ளத் தோஷமுஞ்சிதைந்துபோமே. ()

வாதமெலிவுதோஷம்.

வாதமேமெலிந்துவிம்மி வறண்டதுபுரண்டுதத்தி
சேதமாபரணேவால்போல் சிக்கியேதுடித்துநிற்கில்
வாதையேபெருகிமேலில் வந்திடுந்தோஷந்தானென்
றோதினோர்முன்னோரிந்த வுகமையைக்கண்டுசொல்லே (கசு)

சர்வாங்கவாத சன்னிக்குணம்.

கூறிட்டவாதநாடி கோழிபோறகிண்டிநின்றால்
வாரிட்டமுலைநல்லாளே வாதமாஞ்சன்னியாகும்
பேரிட்டெடுத்தெடுத்துப் பிரட்டத்திபக்குமாகில்
ஆரிட்டதேகந்துண்டாம் அதுசருவாங்கமாமே. (கஎ)

ஷை ரோய்க்கிர மருந்து.

பதறிபவாதநாடிப் பாய்பரிபோலவோடிற்
சிதறியமூன்றும்நாளிற் சேர்ந்திடுங்குதிரைவாலி
மதறியாய்த்தொண்ணூற்று நாழியில்பரிக்காவிட்டால்
விதறியாய்வேம்பினெண்ணெய் விஷமுஷ்டித்தைலங்கூட்டே. ()

வாதக்கதிப்பால்வருநோய்கள்.

வாதமேகதித்தபோது வாயுவுமெழும்புங்கண்டீர்
வாதமேகதித்தபோது வந்திடுஞ்சன்னிதோஷம்
வாதமேகதித்தபோது வந்திடும்வியாதிமேலும்
வாதமேகதித்தபோது வல்லுடல்மெலிந்துகொல்லும். (கக)

இருநாழிகையிலும் ஒருநாழிகையிலும் சாகுங்குறி.

மந்தமாய்வாதநாடி மயில்ருபம்பேன்பேலோடில்
இந்தமானிடர்க்கிரண்டு நாழிகையிருப்புமில்லை
வந்தவன்முகமும்வேர்த்து மஞ்சளிநிறமெய்யாகில்
முந்தவோர்நாழிகைக்குள் முடிவதுதிண்ணந்தானே. (உ0)

வானியம்-நோயும்-வலிகுன்மமும்-மரணமும்வருகுறி.

வாதந்தான்தனித்துநிற்க வாயுநந்தனித்துநிற்கும்
வாதந்தானுதறிநிற்கில் வலிகுன்மம்வந்துசேரும்
வாதந்தானற்றுநிற்கில் மரணமும்வந்துசேரும்
வானத்தின்திரட்டதெல்லாம் இவ்வகைவடிவுதானே. (உக)

கர்ப்பந்தரித்த நாடிக்குணம்.

காரிகைதமக்குப்பிள்ளை கருப்பையைப்பற்றிநின்றார்
கூறியவாதநாடி குண்டலப்புழுப்போலூறும்
வீரியமூன்றுதிங்கள் வீட்டில்போற்பதைத்துநிற்கும்
பாரியவெட்டாந்திங்கள் பையவேயுதப்போலூறும். (உஉ)

மாதர்ஊசுப்பிடித்தபோது வந்திடும்வாதநாடி
தீதுறவெடித்துப்பாய்ந்து சிதறியேகிலுப்பிநின்றார்
பேதைதன்வயிற்றினுள்ளே பெருகுசுரோணிதமேதங்கி
வாதைகள்பண்ணிமாத விடைகாலம்வருத்தஞ்செய்யும். (௨௩)

கர்ப்பந்தரிக்கக்குழம்பு.

இடுப்பொடுகெடுத்துநோந்து இடைவிடாக்குத்தலுண்டாய்
தடுத்திடாக்கர்ப்பந்தன்னைத் தங்கடாவண்ணஞ்செய்யும்
அடுத்ததோராவின்னெய்யி லனதோர்திருகுகள்ளி
கொடுத்திடாத்தும்மட்டிக்காயின் குழம்பதுகொடுக்கத்தங்கும். ()

சூதகத்தில் வாயுதங்கிய குணம்.

மாதர்கைபிடித்தபோது வந்திடும்நாடிமூன்றும்
சேதமாயிற்றுநின்று சேரவேபதிந்துநிற்கில்
ஓதுமேசூதகத்தி லோங்கியவாய்வேநின்று
பேதமாய்வாதைபண்ணி பிணிகளைவிளைக்குந்தானே. (௨௫)

எரிகுன்மவரலாறு திருமருந்து.

வாதமும்பித்தங்கூடி வன்பெலத்துடனேயோடித்
தீதறுவயிற்றினுள்ளே திரண்டதோர்மங்கம்பற்றி
வேதனையெரிப்புக்கூடி விரண்டிடுமெரித்தகுன்மம்
ஆதிசேர்சினிகூட்டி அஷ்-சூரணந்தானகொள்ளே. (௨௬)

சூலைநோய் வரலாறு.

திருத்தமாம்வாதத்தோடே திங்கொடுபித்தஞ்சேரிற்
பொருட்புகள்தோறுநொங்க போதமேபிடிக்குஞ்சூலை
பெருத்திடவாயுகொள்ளும் பேசியவயிறேபோகுங்
கருத்தினாலறிந்துநன்றாய்க் கண்டிடாய்மனிதர்க்கெல்லாம். (௨௭)

காலன்பிடிக்கும் நாடி.

அரவின்றன்நாவைப்போல அடிக்கடியுதறிவாதம்
உரம்பெறநின்றுபித்தம் ஓடியேயொளிக்குமாகிற்
றிரும்பிடாக்காலன்றானே திங்குடன்பிடித்தானென்று
வரம்பெருமுனிவர்தானும் வாகொடுசொன்னார்தேர்ந்தே. (௨௮)

மூலாதாரவாதையார் சாதலும் பைத்தியம்பிடித்தலுமறிக.

பிறந்திடும்பித்தநாடி பிரண்டுமேநிற்குமாகில்
வறண்டிடுமூலாதாரம் வாதையால்மடிவுசெய்யும்
கறண்டதுபித்தநாடி கதிப்பொடுதுடித்துநின்றால்
அறண்டிடும்பைத்தியந்தான் அடைவொடுவெந்துகூடும் (௨௯)

பேச்செழும்பலும் அங்கலும் குளறலும்வருகை.

உந்திடும்பித்தநாடி வொழுங்கொடுமெழும்பிநின்றால்
வற்றிடாப்பேசுகின்ற வசனமுமெழும்பிநிற்கும்

மத்திமப்பித்தநாடி மடங்கியேதுடித்துநின்றால்
உத்தமப்பேச்சுதானும் ஒடுங்கவாங்குளறிப்போகும். (௫௦)

பைத்தியநோய் வறலாறும் திருமருந்தும்.

பித்தமாய்நாடிதானே பெலத்தொடுதனித்துநிற்கில்
மத்திமப்பைத்தியத்தை வளர்க்கிடும்வராக்ஷிசேரும்
உத்தமமூளைதன்னில் உருகியேகுறைந்துநிற்கும்
சிற்றாமுத்தாடும்எண்ணெய் சிரசிற்றேய்த்துவப்போமே. (௫௧)

கிறுகிறுப்புத்திரக் கஷாயம்.

உதறியேபித்தநாடி உழுவைப்போற்றுடித்துநிற்கிற்
பதறியேயுடம்பழுத்துப் பாய்ந்திடுஞ்சிறுநீர்வற்றும்
முதலியபுத்திமாறி கிறுகிறுத்துழலையுண்டாம்
நிதலியபயறும்பச்சை நெல்லிக்காய்கஷாயங்கூட்டே. (௫௨)

சுரத்தோடு கபாலக்குத்து வரலாறுந் திரும்புகையும்.

நடுவிரற்பித்தமற்றும் மந்தமாய்நடக்குமாகில்
வடிவுளவுடம்பழுத்தி மந்தித்துச்சுரமுந்தோன்றி
இடியிடித்ததுபோலோடிச் சிரசினிலிடித்துக்குத்தும்
படியவேசாதிலிங்கப் புகையுண்ணப்பறந்துபோமே. (௫௩)

வ்ராக்ஷிசுரம் பிரதேகம் வரலாறு.

வளர்ந்திடும்பித்தநாடி வலமிடம்பிசகாவண்ணம்
பிளந்ததுதனித்துப்பச்சை புழுனுடங்கதுபோலோடில்
உளந்தனில்வராக்ஷி தங்கி யுடம்புலர்ந்தஸ்திதன்னில்
வளைந்திடுஞ்சுரங்கள்வந்து வளர்பிரமேகமாமே. (௫௪)

மஞ்சள்நிற நீர்க்கடுப்பு உடல்தளர்ச்சிதீர வங்கபற்பம்.

சலநிறம்மஞ்சள்போலாய்க் கடுத்திடுந்தளர்ச்சிசெய்யும்
உலவியமூன்றுமாதம் பற்கிற்பின்னுடம்புதன்னிற்
குலவியவங்கபற்பங் கொடுக்காமலாறுமாகில்
விலகிடாச்சூலைவந்து வெடித்துப்புண்ணாகுமென்னே. (௫௫)

பித்தத்தாலுண்டாகும் நோய்கள் வருதலறிக.

பித்தமேமேனிக்காற்சூடு பெலந்துடலுலரச்செய்யும்
பித்தமேமிகுந்தலீளை யிருமலும்பெலுத்துநிற்கும்
பித்தமேமிகுந்துதானாற் பெலன்குறைந்துடம்பழுத்தும்
பித்தமேதிரட்டிநூலிற் பேசினார்பெரியோர்தாமே. (௫௬)

பெருவாதம் உதரவாயு பைத்தியமுதலான பிணிகளுற்பவித்தல்.

பித்தமேகதித்தபோது பெருத்திடும்வாதமுண்டாம்
பித்தமேகதித்தபோது பெருத்திடும்வயிற்றுவாயு
பித்தமேகதித்தபோது பிதற்றிடும்பித்தேசனு
பித்தமேகதித்தபோது பிறந்திடும்பிணியனேகம். (௫௭)

சன்னிவாதம் பினற்றல்பிச்தல் நினைவிழப்பு வருகை.

பித்தந்தான்வாதத்தோடு பிணைந்துநேர்தோன்றுமாகில்
மத்திபசன்னிவாதம் வந்திடுப்பினற்றலுண்டாம்
உற்றிடு வாதத்தோடு வுறவதாய்ப்பித்தம்மீறில்
நித்தமும்பிதற்றி பேசி நினைவிழந்திருப்பரென்னே. (௩அ)

நோய்கள்தீரமருந்தும் க்ஷயரோகமும் வரலாறும்.

முற்றுமிச்குணங்கள்கண்டால் முயிறதன்முட்டைதன்னை
கத்தபப்பா வினோடுங் கலந்தருந்திதமானபின்பு
பித்தந்தானையத்தோடு பெருமுகந்திரும்பிநிற்கில்
மத்திபக்ஷயரோகத்தை வாவெனவழைக்குந்தானே. (௩௯)

சீழும்விடாதசுரமுங்காணும் க்ஷயரோகந்தீர
குக்கிலாதி நெய்யுஞ்சாறும்.

இருமிசீழும்விழ்ந்து இடைவிடாச்சுரமுங்காயும்
பருவமாய்நெஞ்சில்பற்றி பதறியேயிரத்தம்வீழும்
குருநிலைக்குக்கிலாதி கிருகத்தாற்குடிபோம்பின்பு
வருநெரிகண்டந்தோடை வனையதனீரைக்கொள்ளே. (௪௦)

அசாத்தியசுர நாடிக்குறியறிதல்.

அய்யமாம்நாடிதானே யமணை வாலாற்றுநேர்ந்து
பய்யவேமந்தம்பறறிப் பதறிடாதிருக்குமாகிற்
செய்வதொன்றில்லாக்காலன் தேடுவதுண்மையென்று
கையினைப்பிடிக்கவேண்டாங் சுழற்றிக்கொண்டப்பாற்சொல்லே. ()

இருமலினை இளைப்பு கோழைதீர.

உற்றிடுப் ஐயநாடி யோங்கியே தடித்துநின்றாற்
பற்றிடும்இருமலினை பதறியேயிளைப்புண்டாகி
கொத்தவேகோழைவாயு மிகுத்திடில்கற்கத்தோடு
சுத்தமாய்தூதுவேளை தோடகைகண்டங்கூட்டே. (௪௨)

தொண்டையும் நெஞ்சுங்கட்டி மழைகாலத்திலுபாதித்தல்
தீரக்குக்கிலாதிநெய்.

இதமொடுயிறுதிநாடி இளகிடாதிருகிநின்றாற்
பதமொடுதொண்டைகட்டும் பழுத்துநெஞ்சதனிற்கட்டும்
விதமொடுமழைநேரத்தில் மிகுதியாய்வாதைபண்ணும்
நிதியெனக்குக்கிலாதி நெய்யினால்மாறுந்தானே. (௪௩)

பீசனமூக்கு நீர்ப்பாய்ச்சல் மண்டலச்சிலை
தலைகணப்புத்திர நண்டுநெய்.

ஒடுக்கமாஞ்சிலேட்டுமநாடி யொழுங்கொடுபதறிநின்றால்
நடுக்கமாய்ப்பீனசங்கள் நாசிநீர்ப்பாச்சலாகும்
பிடித்திடும்மண்டைச்சூலை பெருத்திடுந்தலைகணப்பு
தடுத்திடும்நண்டுநெய்யைத் தலையினித்தப்பத்தீரும். (௪௪)

### ஓர்பகலுக்குள்ளிறக்கு நாடிக்குறி.

மத்தியஐயநாடி மந்தித்தூ-மூன்றுநின்று
முத்திபாசசல்போல முடுகியேபதறுமாகில்
நித்தமோர்பயலுக்குள்ளே நில்லாதுமரணம்வந்து
சுத்தியேமரிப்பரென்னச் சொல்லுவார்நல்லோர்தானே. (௪௫)

### குத்தங்கோழை-வாயு-மரணநிச்சயக்குறி.

சிலேட்டுமநாடிதானே தெளிவோடுநிற்கிற்றிதாம்
சிலேட்டுமமந்தம்பத்தில் சேர்த்திடும்கோழைவாயு
சிலேட்டுமமிருந்துநின்றால் செப்பிடுமரணந்திண்ணம்
சிலேட்டுமத்திரட்டதெல்லாந் தெளிவொடுகண்டுகொள்ளே. (௪௬)

### சாசக் குறியறிதல்.

ஐயந்தான்பித்தந்தன்னை யணைத்தெதுத்தேறுமாகில்
கையவோர்நாளிற்காலன் நாடியேவருவதுண்மை
பையவேஐயம்பாய்ந்து வாதத்தைபற்றிநின்றால்
செய்யும்வாறென்னசாவோர் நாழிகைதிண்ணந்தானே (௪௭)

### வியாதிதோஷம்-ஐயசன்னிமரணங்கள்வருகை.

ஐயமேகதித்தல்போது அணுகியேவியாதியுண்டாம்
ஐயமேகதித்தபோது யறிந்திடுமதோஷமாகும்
ஐயமேகதித்தபோது வையமாஞ்சன்னியாகும்
ஐயமேகதித்தபோதவ் வையமேமெலிந்துகொல்லும். (௪௮)

### சரீரகுத்தலும் நெஞ்சுநோக்காடுமாய்க்காணும் மேகமறிக.

பார்த்திடுமூன்றும் பதிந்ததுமெலிந்துநிற்கில்
தோர்த்திடுமேகம்வுள்ளே தோன்றியேபொருந்திமெய்யில்
ஆர்த்திடாக்குத்தலுண்டா யதனோடுநெஞ்சும்போகும்
தோர்த்தமாயுர்குணங்கள் தெளியவேயறிந்திடாயே. (௪௯)

### பிணிவாரரமையும்-வருகையுமறிக.

வாதபித்தையமூன்றும் வன்பலத்துடனேதத்தம்
பேதமொன்றில்லாவண்ணம் பேசியதானந்தன்னில்
நீதியாய்நிலைத்துநின்றால் நெடும்பிணிசிக்கலில்லை
தாதுவுமொன்றோடொன்று தாவிடிற்பிணிகள்தானே (௫௰)

### கழல்வாதம் மூலம் சாவு வாழ்வுருகை.

மூவருமூரத்துநின்றும் முதிர்ந்திடுங்கழல்வாதங்கள்
மூவருமந்தமானால் மூளைத்திடுமூலமெல்லாம்
மூவரும்பதுங்கிநின்றால் முடிவதுதிண்ணங்கண்டாய்
மூவருந்தன்தன்காலங் துதித்திடில்வாழலாமே. (௫௧)

### ஆறுமாதத்திற் சாகுங்குறியறிதல்.

காலையில்மூன்றுநாடி கதிப்பொடுகெடக்குமாகில்
வாலையாமுச்சிசாலம வன்பித்தமழுத்தமாகில்

மாலையில்வாதந்தானு மையத்திலுறையுமாகில்
நீலகண்டத்தாராணை நிலைச்சாவுமாதமாறே. (௩௨)

மலசலவடைப்பும் விடுப்பும் வருதலறிக.

பெருவிரலிரண்டுபக்கம் நாடிதாஞ்சிசகியோடில்
மருவியஜலமலங்கள் மந்தித்தேயடைத்துக்கொள்ளும்
பெருகலையடிவயிற்றிற் பிடித்துமேலெழும்புமாகில்
தடையில்லைமலஜலங்கள் தானதுகழன்றுபோமே. (௩௩)

தொப்புளில் மலஜலம் வாயு இடதுசர்து
இடமுதுகு இருத்தலறிக.

நடுவிரலிடதுபக்கம் நாடிதானடக்கும்போது
மடைட்டாமுக்திதன்னில மலசலம்வாயுஞ்சேரும்
வடநில்லமூலையின்மாதே வாகொடியிடதுசந்து
இடமுதுகழுத்துநிற்ப தென்பதுமுன்சொன்னேமே. (௩௪)

தொப்புளின்கீழே ஐயமும் பித்தமும் சேருங்குணமறிக.

நடுவி ல்வலதுபக்கம் நாடிதானடக்கும்போது
அடை வொடுவுந்தியின்கீ ழையொடுபித்தஞ்சேரும்
கடகரியுரித்தோன் றன்னைக் கருத்தினிலிருத்திக்கொண்டு
வடிவறநாடிபார்த்து வந்தநோயறிந்துசொல்லே. (௩௫)

கால்கைவலிப்பும் உடல்நோக்காடுமாய்வருஞ் சூலைநோய்க்குறி.

சிறுவிரலிரண்டுபக்கம் நாடிதான்சிதறியோடில்
மருவிபகாலுங்கையும் வலித்துடல்மிகவேநோகும்
ஒருபொருளாகிநின்ற உமையொருபாகம்வைத்த
திருசடைச்சிவனைநோக்கி செப்பினேன்சூலையாமே. (௩௬)

சூலைநோய் சகத்தவாய் நீர்மயக்கம் வாந்தி
அடிவயிற்றுச் சூலைவருகை.

மோதிரவிரல்வலத்தே முடிகியேநாடியோடில்
காதியுங்குலைநோயுண்டாய் கைத்திடும்வாய்நீரூறும்
வ திபானருளினாலே மயக்கமும்வாந்தியுண்டாம்
ஆதியேயடிவயிறறிற் சூலையுமமர்ந்துநிற்கும். (௩௭)

கால்கைகடுப்பு சோபம் உந்திநோய் தலைவலிவருகையும்
சிகிச்சையுமறிதல்.

மோதிரவிரலிடத்தே முடிகியேநாடியோடில்
கால்களுங்கைகளுந்தான் கடுத்துப்பின்சோபமாகி
ஓதியேயுந்திநொந்து வுறுதியாய்த்தலைவலிக்கில்
ஆதியானருளினாலே யவர்கட்குநசியம்பண்ணே. (௩௮)

இரண்டாம்நாளிலும் எட்டாம்நாளிலும் சாகுங்குறி.

வெள்ளநீரோடும்போல கிலேட்டுமமீறியோடில்
வள்ளல்தானறியச்சொன்னோ மறிப்பதுமற்றுனளில்

தெள்ளியவாதந்தானுஞ் சிதறியேயோடுமாகில்
எள்ளியநாளோரெட்டி லுறுதியாய்ச்சாவாரென்னே. (௫௯)

௩-நாள்-௧௫-நாள்-௪௰-நாளிற்சாருங்குறி.

பித்தமிப்படியேயோடிற் பிதற்றிநாள்மூன்றிற்கொல்லும்
மூத்தியவாதபித்தம் முயங்கியப்படியோடில்
பற்றறச்சொன்னேங்கண்டீர் பதினைந்துநாளிற்கொல்லும்
நற்றியஐயங்கூடில் நாற்பதுநாளிற்கொல்லும். (௬௰)

உடனேயும் ௩-மாதத்திலும் சாரும் நாடிக்குறி

அரணைவாற்றுடிபோலாடி லாங்கவன்பிழைப்பதில்லை
பரவுதேட்கொடுக்குப்போலும் பதைத்திடிற்சாவுதிண்ணங்
கரையெறும்பதுபோலோடிற் கண்டிடாய்திங்கள்மூன்றில்
வரையணிமுலைகம்மாதே மரணமென்றறிந்துகொள்ளே. (௬௧)

மரணநாடிக்குறியறிதல்.

ஐயமாஞ்சிலேட்டுமத்தி லாகியநாடிதானும்
தொய்யவேதவளைபோலத் தொங்கியேகுதித்திட்டாலும்
பையவேபுரண்டுபுத்துப் பாம்பெனநடைகொண்டாலும்
மைசெறிகுழலினளே மரணமென்றறிந்துகொள்ளே. (௬௨)

ஒருமாதத்திற்குச்சாரும் நாடிக்குறி.

தேளெனத்தெரிந்துச்சற்றே திரிநாடிசெய்யுமாகில்
மாளவேமரணவாதை வந்திடுஞ்சன்னியண்டாம்
மீளுவதில்லைமுன்னாள் விதிப்படிவந்ததீது
நாளறிதிங்கட்குள்ளே நாசமாய்க்கொல்லுந்தானே. (௩௪)

ஏற்றியதீபந்தன்னி லெரிசுடர்த்திரியைப்போல
போற்றியநாடிதானும் பொலிவரததோன்றுமாகில்
மாற்றரும்வாழ்வுநாளு மாளுமோர்மாதத்தென்று
நாற்றிசையுள்ளோர்க்கெல்லாம் நாடிநேயந்துசொல்லே. (௬௫)

இரண்டரைநாளிலும் எட்டுநாளிலுஞ்சாரும் ஐயநாடிக்குறி

பாண்டதுவுருண்டுமேலே பொருந்துநீர்நடக்குமாகில்
இரண்டரைநாளினிற்று னியல்பதாமரணமென்க
சுருண்டமென்குழலினளே சொல்லுநாளெட்டினிற்றன்
மரணமேவருகுமென்று வாகொடுவழங்குவேனே. (௬௬)

### பிராணன்விடும் நாடிக்குறியறிதல்,

நிறைபுரவட்டம்பூண்டு நின்றிடுமோரணைவால்போற்
குறைபடாபித்தமொன்றுங் குறைந்துமேநிற்குமாகில்
உரைவிடும்பிராணனென்று உண்மைசொல்வாகடத்திற்
பறையதுகட்டிச்சாற்றும் பண்டிதர்க்கெல்லாம்பாரே. (௬௭)
குணவாகடத்தின் நோயின்சாரம் முற்றிற்று ஆகசெய்யுள் - ௨௫௭.

---

### காவியத்தின்நாடி.

காப்பு.

யாருடன்கணேசன்பாதம் பணிந்துமுக்குணங்கள்வாய்ந்த
வாகடத்தொகுதியெல்லாம் வகுத்தசூத்திரமதாக்கி
யாகமவிதியின்ஞாலத் தடர்ந்திடும்நோய்களெல்லாம்
போகநல்மருந்துசொல்வோம் புலத்தியாபொருந்திக்கேளே. (௧)

### நூல்-நாடிவகை.

பொருந்திக்கேள்பொருந்திக்கீழே புகன்றேறுஞ்சுழியைப்பற்றி
எழுந்ததோர்நாடிதானு மெழுபத்திரூயிரந்தான்
தெரிந்ததோரிவற்றில்பத்துத் தெசநாடியிவற்றில்மூன்றும்
மரிந்ததோர்வாதபித்தம் படரையுமறிந்துபாரே. (௨)

அறிந்துநானிதற்குநாம மறைந்தனரறிவுள்ளோர்கள்
தெரிந்ததோரிடைதான்வாத மியன்றபின்கலைதான்பித்தஞ்
செடுந்துகொள்சுழிதானையஞ் சேர்விடமெங்கேயென்னில
பிரிந்துகொள்மலவாம்வாதம் பேர்பெறுநீராம்பித்தம். (௩)

பித்தத்தின்கீழேஐயம் பெரியதோர்விந்திற்சேருங்
குத்தமேசேருமையங் குறிதனைக்குறித்துக்காணும்
பித்தத்தைபிரித்துநன்றாய் பேசுவோம்பேதம்போக்கிப்
பத்தத்தைக்குறியாயெண்ணிப் பரிவுடனறிந்துபாரே. (௪)

பாரப்பாயிடையிடைக்கால் மாறியேகபாலஞ்சூடி
சாரப்பாவலக்கரத்திற் சார்ந்திடும்பின்கலைதான
சேரப்பாயிடதுகாலிற் சென்றுதான்கபாலந்தேறிப்
போரப்பாவிடக்கரத்திற் பொருந்திப்போஞ்சுழினைகேளே. (௫)

கேளப்பாபுருவமத்திச் சுழினையாமிடைபின்மூன்றில்
நாளப்பாநவதாதாகி நடந்திடும்நாடிபாரு
தேளப்பாநாடிபதுந் தசவாயுவுடனேசேரும்
சூளப்பாதசதானங்கள் சொல்லுமேன்சொல்லுவேனே. (௬)

### வேறு நாடிஸ்தானம்.

சொல்லுகிறேன் காமியந்தான் குதிகால்சந்து சொற்பெரியவுந் திகா மார்புகண்டஞ், சொல்லுகிறேன் புருவமத்தி காதுமூக்கு தொகைபத்தில் 'வாழ்ந்திருக்குந் தாதுமூன்றுஞ், சொல்லுகிறேன்கரத் தெழுந்தநாடிமாறில் சோதிக்கில்தசதானஞ் சுடிப்புச்சாணில், சொல்லுகிறேன் சாகான்காண் பிணிதான்திருந் துஞ்சுகிறவிபரமதைச் சூட்டுரேனே. (அ)

துஞ்சியெழும் வாதபித்த முயிர்தானப்பா சூக்ஷமாய்த்தன்றிய து சுழன்றுதேய்ந்து, மிஞ்சியேயஸ்திபற்றிக் குறுகித்தம்மில் மேவியேமார்புள்ளே வாங்குமாகில், அஞ்சியேபட்சமொன்றி லடங்குஞ்சிவன் அரகரா அவத்தையிது அறிந்துயிர்த்தப், பஞ்சியேசூஸ்திரமாய்வா தபித்தம் பக்குவத்தை நன்றாய்ப்பார்த் தறிதல்நன்றே. (கூ)

### வேறு சமதாது.

அறிவதுவாதந்தானு மாத்திரையரைதானேடில்
செறிவதுபித்தமப்பா சேர்சமனென்றுபின்னும்
பிறிவதுஅய்யந்தானும் பிரண்டதகால்தானேடி
மறிவதுசமனதாகில் மயக்கமுமில்லைகாணே. (சா)

### வாதகுணம்.

காணப்பாவாதமீறில் கால்கைகள்பொருந்திநோகும்
பூணப்பாகுடல்புரட்டும் மலஞ்சலம்பொருமிக்கட்டும்
ஊணப்பாகுளிருங்காச்ச லுடம்பெல்லாம்குத்துவாய்வு
வீணப்பாகுதமிறுக்கும் வேர்வையும்வேர்க்குந்தானே. (கo)

### பித்தகுணம்.

தானென்றபித்தமீறில் சடமெல்லாங்காந்தல்கானு
மூனென்றவாந்திவாய்நீ ரூறியேவொழுங்குஞ்சாவான்
வானென்றமட்டில்வேகும் மண்டையில்குத்துண்டாகும்
தேனென்றவிக்கல்மூர்ச்சை செவியடைப்புண்டாம்பாரே. (கக)

### சேத்துமகுணம்.

பாரப்பாஅய்யமீறில் பாசத்தினனல்தான்மீறும்
நேரப்பாயிளைக்குந்தேகம் நெஞ்சுடன்விலாவுநோவார்
தாரப்பாசுரமுங்காயும் சாதமுமொருக்குகாளில்
ஓரப்பாடுத்தங்கக்கு முடல்வற்றுஞ்சுரம்பெருமே. (கஉ)

### நாடிநடை.

ஆமப்பாவாதந்தானு மன்னநடைகோழியாமை
தாமப்பாபித்தந்தானும் தவளையைப்போலேபாயும்

போமப்பா அய்யந்தானும் சர்ப்பம்போலோடுமோடும்
நாமப்பாகண்டுசொன்னோம் நாம்பெனகுடிமூன்றே. (௧௩)

நாடிநிறம்.

மூன்றுபேர்நிறமுஞ்சொல்வேன் முதல்வாதங்கறுப்புச்செம்மை
மான்றியபசுமைபச்சை மஞ்சளாயிருக்கும்பித்தம்
தோன்றியவெண்மையப்பா சோர்வில்லாவையமாகும்
ஊன்றியநிறங்கள்சொன்னேன் உத்தமரறிவார்தானே. (௧௪)

பஞ்சபூதவகை.

தானென்றவஞ்சபூதஞ் சதையெல்லாம்பிருதிவாகு
மானென்றரெத்தந்தண்ணீர் மைந்தனேயப்புவாகும்
தேனென்றவெதுப்புத்தானும் தேயுவின்கூறேயாகும்
மானென்றவாசிதன்னில் வருகெந்தமறிதல்வாய்வே. (௧௫)

அறிந்திடுமெல்லாமொன்றாயலிக்குந்திறவானந்தான், பிறிந்திடும்
பூமிதானும் பேரெழுநாசிதன்னில், செறிந்திடுமப்புத்தானுஞ் சேர்ந்தி
டும்நாவிலேதான், மூறிந்திடுவன்னிதானு மூன்றிடுங்கண்ணிலேதான்,
அறிந்திடும்வாய்வுதானும்பரிசிக்குமெங்கும்பாரே. (௧௬)

பாரப்பாகாதிலேதான் பரிசிக்கும்வானமைந்தா
யோரப்பாவஞ்சுபேர்க்குள் பொல்லாதபேர்தான்மூவ
ராரப்பாவாதம்வாயுவு அப்பனேபித்தம்வன்னி
நேரப்பாவையமப்பு நிறைக்கவைவிதுமூன்றுமே. (௧௭)

ஆமப்பாமூன்றுபேர்க்குள் ஆதாரம்வாய்வேயாகும்
ஏமப்பாவாய்வுசேரி லெண்பிலமுடைத்தாய்நிற்கும்
வேமப்பாவன்னிகூடில் வெந்துநீறுகபாளும்
நோமப்பாசிக்கின்ற நோயெல்லாங்கணிக்குந்தானே. (௧௮)

தோஷகுணம்.

தானென்றவன்னிவாய்வு தாண்டிமேற்கொண்டுதானல்
தானென்றசுரத்தாற்றேடங் கனதாபமிகுதியாகுந்
தானென்றவன்னியோடு அப்புவுஞ்சாறுமாகில்
தானென்றசீததோஷஞ் சார்ந்திடுந்தப்பில்லாதே. (௧௯)

தப்பில்லாத்தோஷந்தானுஞ் சார்ந்திடும்வாறுகேளாய்
கப்பில்லாவன்னிதானங் கடுக்கோஷஞ்சாத்தியமாகும்
செப்பில்லப்பிக்கத்தோடு சோனல்வெண்மையாச்ச
செப்பில்லாவையதூடுஞ் சிவப்பெனும்வாயுவாமே. (௨௦)

வாய்வுதானடங்கிற்றானல் மைந்தனேதோஷம்போகும்
வாய்வுதான்பெருத்ததானல் மண்ணொடுநீருமொன்றும்

வாயுவுஞ்சலந்தான்ரெண்டால் மைந்தனேவன்னிமாளும்
வாய்வுதானண்டஞ்சிரசில் மண்டலவோசையதே. (௨௧)

### தோஷக்குறி.

ஆமப்பாவோசையேழு மலரொளிவிழிபஞ்சாகும்
நாமப்பாகாடிமூன்றும் நாவினிலிரண்டதாகும்
ஓமப்பாவிந்நீர்மை யுணர்ந்தவர்யோகியாகும்
வேமப்பாந சிதன்னில் விழுகுறிவிளம்பக்கேளே (௨௨)

### மரணக்குறி.

கேளப்பாதினந்தான்மூன்று கெடியிடைகலைதான்பாயில்
வாளப்பாவருடம்ரெண்டில் மறலியூர்புகுவான்பண்பாய்
நீளப்பாதினமிரண்டும் பின்கலைதானேபாயில்
மூளப்பாதேகந்தானு மூவாண்டில்மரணமாமே (௨௩)

மரணமாந்தினமாம்பத்து வுபபத்தில் வாங்குமாகில், மரணமாந்திங்களொன்றில் மைந்தனே கண்டுகொள்வாய், மரணமாமூக்குவிட்டு வாய்வழிவாய்வுபாயில், மரணமாந் தினந்தான்மூன்றில் வளம்பெறவறிந்துபாரு, மரணமாமலங்கள் மூன்றும் வற்றினல்பட்சமொன்றே. (௨௪)

### வேறு.

ஒன்றாகவாய்நீரூறிரவிமேலுமியத்
தன்றாகத்தானுமிரவி மறைந்திருந்தக்கால்
ஒன்றாமூன்றுதிங்கள் பொறுத்தவுடன்பொன்றிடுவார்
நன்றாகநிழலலையில் வீழ்வர்காண்பட்சம்ரெண்டே. (௨௫)

### வேறுதோஷவகை.

காணப்பா தோஷங்கள் பிறக்கும்போது காணுநீ குறிசொல்வோம் கருதிப்பாரு, தோணப்பாவுன்னுக்கு வுதடுகஞ்சு, சுகமான காதுபல் குறிகுமாகில், வீணப்பா தினம்மூன்றில் மரணமாகும் மேலானவன்னிக்குத் தோஷமென்பார், ஊணப்பாவற்றிநின்ற பித்தத் தோர்க்கு உடம்புபருத்தூதினு லுரைக்கக்கேளே. (௨௬)

கேளப்பா மதிபாறில் சாவுண்டாகும் கேடிலைபத் தால்விளைந்த தேகமானல், நாளப்பா திங்களொன்றில சாவார்சாவர் நலமான சிவகலை நாட்டங்கேளு, வேளப்பாமேலேறி நடந்துதானல்மேன்மை யுடன் சிவகலைவிடுபடாது, தாளப்பாகீழ்நோக்கிநடந்துதானல் தவறு வருஞ்சிவகலை நாடிதானே. (௨௭)

### வேறு.

தானென்றநாடிகீழ தாண்டியேவாங்குமாகில், தானென்றவுயிர் தான்மாளும் சாதகமின்னங்கேளு, தானென்றமூன்றநாடி தன்வசங் குறைந்துபின்னார், தானென்றவாதபித்தம் பித்து அய்யமீறில், தானென்ற திடங்கொண்டாலுஞ் சாவதுதிண்ணமாமே. (௨௮)

### தோஷநிவர்த்தியறிய.

ஆமப்பாவாதபித்தத் தாண்மையையறிந்துக்கொண்டு
நாமப்பாமருந்துசெய்ய நலமுறுதோஷந்தீரும்
வேமப்பாபித்தமானால் வெம்பிடுமுயிர்தான்காணும்
போமப்பாவாதநிற்கில் பொருந்தியமருந்துநல்கே. (௨௯)

நல்கியமூன்றுநாடி நரம்பெலாங்குதித்துப்பொங்கி
இல்கியமேனின்மேலே யேறித்தானோடுமாகில்
மல்கியமரணமில்லை மறிந்ததுகீழேநாடி
னல்கியவுயிருக்கின மூற்றுநீயறிந்துகொள்ளே. (௩0)

அறிந்திடவுந்திக்கீழே யமனியாய்க்குதிக்குமாகில்
எறிந்திடவுயிரையுண்ணு மெய்யுமாதோஷமப்பா
செறிந்திடாதுந்திதானுஞ் சேறிடம்வாய்வுக்கப்பால்
மறிந்திடாதசநாடிக்கு மகத்தானவீடாம்பாரே. (௩௧)

பாரப்பாநோயுள்ளோர்கள் பக்குவம்பார்த்துநீயும்
வாரப்பாவுமிந்திட்டாக்கால் மைந்தனே தூரப்போகில்
காரப்பாதாக்கித்தானால் குறைந்தவன்சாகான்கேளு
சாரப்பாகிட்டவீழிற சாவதுசடுதிகாணே. (௩௨)

### மந்தம் வருமாறு.

காணப்பாமுறைபாடெல்லாங் காண்பதுமந்தத்தாலே
பூணப்பாமந்தமானால் புகுந்திடும்வாய்வுதானும்
வாணப்பாநோய்களெல்லாம் வாயுவால்வளரும்பாரு
மூணப்பாவப்புவன்னி முத்தோஷம்மூன்றும்பாரே. (௩௩)

பாரப்பாமந்தமுண்டாம் பரிசனமுரைக்கக்கேளு
காரப்பாமிகுந்துமெத்தக் கபளிகருமன்னத்தாலே
வாநப்பாவிறைச்சியாலும் மாப்பண்டத்தாலுந்தானுஞ்
சேரப்பாமேதிப்பாலால் சேர்ந்திடுமந்தந்தானே. (௩௪)

தானென்றவன்னத்தாலே தலைபட்டவுடம்பிதப்பா
தானென்றவன்னமப்பா தனிப்பழிகொண்டுமீறில்
தானென்றவன்னமெல்லாஞ் சகலவித்தாகும்பாரு
தானென்றதானுக்கெல்லாந் தத்துவமுரைக்கக்கேளே. (௩௫)

கேளப்பாவெட்டைபித்தங் கெடியானவாதம்வாய்வு
வாளப்பாஅய்யஞ்சீதம் வாழ்ந்திடுமன்னத்தாலே
பாளப்பாவன்னந்தானும் பகையுடன்பழியுங்கொள்ளும்
வேளப்பாஅன்னத்தாலே மேகங்கள்பிறப்பைக்கேளே. (௩௬)

## மேகம்பிறக்கும் வகை.

மேகங்கள்பிறந்துநின்ற விதங்களைவிளம்பக்கேளு
ஆகங்களிழந்தபோதும் அப்பனேதினமுஞ்சென்று
போகங்கள்செய்யும்போதும் புகழ்மந்தங்கூடும்போதும்
பாகங்கள்பசியினோடும் பருகுஞ்சையோகத்தாலே. (௩௭)

சையோகஞ்செய்யும்போதுர் தனிநின்றசுழியேயோடும்
ஐயனே அமுதந்தன்னை அடக்கியேஆனல்தான்சொன்ளு
மெய்யடரவிந்துகாணில் விழவிழப்புண்ணுங்காணும்
மையடாமேகத்தாலே வளர்ந்ததுகிரந்திபாரே. (௩௮)

கிரந்தியால்விரணமுண்டாம் கெடியதிற்சியாமேகம்
முரந்தியவிரண்டினாலே யகிலவாயில்சூலைகாணும்
பரந்தியமூன்றினாலே பலபலமேகங்காணும்
துரந்தியலிங்கந்தாலே தொல்லைநோயெய்துங்காணே. (௩௯)

தொல்லையாஞ்சுரத்திலைனுஞ் சூழ்கின்றவாயுவாலு
மல்லையேசெய்யுமாகி லன்னதகதைக்காட்டிடாதே
வல்லையேயவனிராஜன் வழிபதுசெய்வேயானல்
தொல்லையேதில்லையப்பா சூழ்நோயும்வாய்வுகாணே. (௪௦)

வாயுவேமிகுந்ததானல் மைந்தனேமேல்மூச்சேறும்
வாயுவேமிகுத்துதானல் மலர்ந்திடும்விரணமெல்லாம்
வாயுவேமிகுந்துதானல் மலஞ்சலடரண்டுக்கட்டும்
வாயுவினாலேயப்பா வளருத்திரரோகமாமே. (௪௧)

## ருத்திரரோகம்.

ஆமப்பாருத்திரரோகத் தாண்மையையுரைக்கக்கேளு
வேமப்பாவெண்பிற்பாய்ந்து மிகநெஞ்சிகிருத்துண்டாகி
போமப்பாபித்தகதனைத் தப்பித்துப்போகொட்டாமல்
பாமப்பாபேசும்போது பதையாமற்சாவார்பாரே. (௪௨)

## வேறு சுகசன்னி.

பதையாமல்செய்கின்ற சன்னிமார்க்கம் பாய்கின்றவிதங்கேளு பண்பாய்நீயும், நிதையாமலெண்ணெயுடன் தீர்த்தமாடி நிறம்பவே தயிர்கூட்டிப் பொசித்துப்பின்னுங், குதையாதமந்தமுடன் புணர்ச்சி கூடில் கூட்டியேவாயுவுதான் கபாலத்தேறி, அதையாமல்போக்கு மோகஞ்செய்யும் அப்பனேயசதியொடு சன்னியாமே. (௪௩)

## வேறு.

சன்னிதான்றோன்றும்போதுஞ் சடமெல்லாம்வேர்வைகாணும்
சன்னிதன்சுரத்தால்மைந்தா கண்கள்தான்சிவப்பேயாகும்

மின்னிகான்காற்றலையா மகத்தானதோஷமாகு
வன்னிதான்சுகந்தில்நன்றாய் விழுந்திடுங்காயந்தானே. (சச)

மூலரோகம்.

காயத்தில்மூலரோகங் கண்டிடும்விதங்கள்கேளாய்
பாயோத்தபசியில்லாமல் பட்சிக்கிலடக்கில்வாய்வு
மாயத்திலிருத்திக்கொண்டு மலமதையடக்கும்போதும்
ஓயத்தகுண்டலிக்கு ளூட்புகும்வாய்வுதானே. (சரு)

காணப்பாவாயுவாலுங் கனத்தவபானன்றன்னைப்
பூணப்பாமலத்தைக்கட்டிப் புகையெனக்கருக்கினாளுந்
தோணப்பாமுளையைப்போலச் சுருக்கிமுன்மலந்தான்விழில்
ஆணப்பாவபானந்தன்னை அழுந்தவேயிறுக்கும்பாரே. (சசு)

இறுக்கியமூலமொன்று எழுமண்டலமுமொன்று
வறுக்கியேபுண்ணாய்சீழ்தான் வடிகின்றமூலமொன்று
உறுக்கியேவாயுவாலே யுதிரந்தான்கட்டிநின்று
தருக்கியகிறுச்சினங்கள் தான்ரத்தமூலமாமே. (சஎ)

மூலமேயெழுந்தபோது மூலத்தில்கனல்தான்மாளும்
மூலமேயெழுந்தபோது முளைவிந்துநாசமாகும்
மூலமேயெழுந்தபோது முழங்கவேயிரைச்சலாகும்
மூலமேயெழுந்தபோது முகிலில்லாக்கழிச்சல்தானே. (சஅ)

வேறு.

கழிச்சலென்ற கிராணியிலே விதமாரப்பா கண்டபித்தமனல் வாதம்வாயுவாகும், அழிச்சலென்ற ஐயநீர்மூன்றுங்கூடி அப்பனே பேதிக்கும் பிலந்தான்போகும், தெழிச்சலென்ற வாய்வுதான்மேக பேதி திறமானமூலத்தின் தோஷபேதி, பழிச்சலென்றசங்கான பேதியொன்று பாரப்பாவாயுவொன்று ஆறுமாச்சே. (சகு)

வேறு மேகத்தின்குணம்.

ஆச்சப்பாமேகங்கேளு அப்பனேமூன்றதாகும்
நீச்சப்பாமேகந்தன்னை நிசஞ்சொன்னேன்காணுகாணு
காச்சப்பாமஞ்சள்போலக் கசிசனர்தன்னிற்கண்டால்
வீச்சப்பாபித்தமேகம் விளாபினூர்விரும்பிக்காணே. (டுo)

விரும்பியேபசியில்லாதானும் வெளுத்திடில்வாதமேகம்
மருவிபகசிசனந்தான மயிலதினிறமேயானால்
திரும்பியஐயத்தாலே சேர்ந்திடுமேகமாகும்
சுரும்பியமூன்றலப்பா தோன்றிடுங்குணங்கள்கேளே. (டுக)

கேளப்பாபித்தம்வாய்வு கெடியுடன்சேருமாகில்
தாளப்பாளுளமான தமரிலேயெரித்துவேகும்

விழப்பாநீரைக்கட்டும் விஷம்போலக்கசியும்பாரு
பாரப்பாசிலநேரந்தான் பளிச்செனப்பிறக்குந்தானே. (௫௨)

தானென்றவாய்வோதங்கில் தண்டினில்நோவுகாணும்
வானென்றமந்தத்தாலே வாயுவுட்புகுந்தேசாடும்
கானென்றவெரிச்சல்காணுங் கல்லடைப்பாகும்பின்னே
மானென்றவாதம்வாய்வு மருவிடில்வெள்ளைகாணே. (௫௩)

வெள்ளைதான்மெத்தவீழில் மேனியும்பொருமிக்காணும்
கள்ளமேசரீரமெல்லாங் கறுப்புடன்றழும்புமோடுந்
தள்ளவேதாதுநட்டந் தாகமுமிகுதியுண்டா
முள்ளதுசொன்னோம்நாமு முற்றுணர்ந்தறிந்துகொள்ளே. (௫௪)

அறிந்திட வாயுவோடே ஐயம்வந்தெய்துமாகில்
பிறிந்துநீர்பொசிந்தியாது பிறவெள்ளைவீழ்ந்திடாது
எறிந்திடுந்தீயேபோலே இளைப்புடனிருமலுண்டாம்
மறிந்திடும்புகைச்சல்காணும் வலிந்திடுமேகந்தானே. (௫௫)

வலித்திடும்வாதந்தானும் வளரையம்பித்தந்தானு
மொலித்திடுமசுத்தமேகம் மொழுங்கிடுஞ்சரந்தான்மாறி
சலித்திடுதாகமீறுஞ் சாப்பிட்டாலுடனேகாந்தும்
வலித்திடும்வாய்நீரோடி மழுங்கிவாயினிக்கும்பாரே. (௫௬)

இனித்திடும்வாதமேகத் தியல்புகல்லெண்ணெய்போலும்
பனித்திடுங்கள்ளுப்போலும் பதியில்நீர்போல்தானுடும்
கனித்திடுமேனியெல்லாங் காய்ந்திடும்வெளுத்துபோகும்
தனித்திடுமேகந்தானும் சாத்தியமையந்தானே. (௫௭)

ஐயமும்பித்தமுந்தா னணைந்திடுங்காலந்தன்னில்
கொய்யுறுரெத்தந்தானும் கொப்பளித்தோடுந்தண்டில்
மையுறுங்கண்ணினுட்கு மகோதரம்பெரும்பாடாகும்
தொய்யுறுமேகமுண்டாந் துடர்ச்சியைமுறையாய்க்கேளே. (௫௮)

முறைகேளுவொன்பதப்பா முயற்சியால்வந்தமேகந்
துறைகேளுகெற்பத்தாலுஞ் சூழ்கின்றமேகமொன்று
நறைபூக்தகூந்தல்நல்ல நாயகன்மோகத்தாலு
மறைபோற்றுங்கெற்பத்தாலும் வளர்ந்ததுமேகந்தானே. (௫௯)

வளர்ந்திடுங்கெற்பத்தாலு மருவியமேகமஞ்சு
முளந்திடுதந்தியாகு முள்ளத்தில்மேகந்தானே
யளந்திடும்வெள்ளைகொட்டு மாகாதமாமேகந்தான்
தளர்ந்திடுமத்திமீறித் தணலெரும்புறுக்கியாமே. (௬௰)

தணம்போலக்காயுமேகந் தண்ணீர்தான்பசையாமேகம்
முணக்கவேமுழுகுமாறி முருக்குமாமேகந்தானும்

பிணங்கவேபசிதான்கெட்டு பேரேழுமேகந்தானும்
வணக்கவேல சயோகத்தை வர்ச்சிக்குமேகமாமே. (சுக)

ஆமப்பாகடுவல்துண்டா லாகியமேகம்பின்னு
மோமப்பாபாஷாணத்தா லுற்றிடுஞ்சிலமேகங்கள்
நாமப்பாசொன்னேயிந்த நாடியாஞ்சுக்கிரந்தன்னில்
ஓமப்பாவிதுதானேழு மஞ்சுமுன்னொன்பதாமே. (சுஉ)

குன்மவரலாறு.

ஆகியமேகந்தானு மப்பனேயிருபத்தொன்று
மேகியகுன்மந்தானு மெழுந்தபேர்விதங்கள்சொல்வோம்
பாகியபித்ததோடு வாதமும்பரிந்துசேரில்
வாகியவாய்நீரூறும் வாந்தியுமாகும்பாரே. (சுங)

பாரப்பாவாய்வுவாதம் பரிவுடன் அபானத்தேங்கில்
ஓரப்பாகும்பிசன்னி லுருண்டுதான் மிகவேநோகும்
கோரப்பாநெஞ்சிருத்துங் குடலையுமுருக்கிக்கொண்டு
வாரப்பாவலிக்குமெத்த வாதமாய்வழங்கும்வாய்வே. (சுச)

வழங்கிய அப்புவோடு வாதமுபொன்றேயானால்
தழங்கிய அன்னசாரம் சந்திக்கவொட்டாதப்பா
புழங்கியநிதானந்தப்பிப் பிடியன்னமேறில்குத்து
முழங்கியமுறுக்குமேறில் உயிரையும்வதைக்கும்பாரே. (சுரு)

வதையுறுவாயுவோடு மேகமுமருவுமாகில்
பதையுறுமலஞ்சலங்கள் பரிவுடன்கட்டிக்கொள்ளு
மதையுறுமிடதுபக்க மைந்தனேவலதுபக்கம்
பிதையுறுமுறுக்கிக்குத்தும் பெருஞ்சூலைகன்மமாமே (சுசு)

சூலைவருமாறு.

குன்மமோரிதுதானுவில் கூறிலெண்விதமாம்பாரு
வன்மமாம்நோய்கட்கெல்லா மகாநோய்தான்பொல்லாதாகும்
கன்மமாஞ்சடத்துக்கெல்லாங் காணுங்காணித்தரோகம
நன்மையாந்தன்மத்தோர்க்கு நடந்தாலும்காட்டிடாதே. (சுஎ)

நாட்டியபித்தசூலை நடத்தியவுறவைக்கேளும்
ஊட்டியவன்னமுண்ண ருசிதப்பிவாந்தியாகும்
மாட்டியகைகால்சந்து வலையுந்தன்மேலும்நோக்கு
நீட்டியவங்கங்கேதான் நின்றெரிந்தூறுங்காணே. (சுஅ)

காணப்பாவாதசூலை காட்டுந்தான்குறியேதென்னில்
காணப்பாகைகால்சந்து குளைச்செலாங்கடுத்துநோகும்
காணப்பாவயிறுவிம்மிக் கனத்துடன்சுரப்புங்காணும்
காணப்பாதேகமெத்தக் கனத்திடுமிளைப்பதன்றே. (சுகூ)

இளைத்திடும்வாதசூலைக் கெய்தியகுணங்கள்செப்வோம்
குளைத்திடுங்கைகால் நெஞ்சு குத்தடன்வாண்டிருக்கும்
தளைத்திடுமார்பில்சென்று தாக்கிமேலேறிவெட்டு
மளைத்திடுமெய்தான்கக்கு மாகாதவையமாமே. (௭௰)

ஆகாதவாதபித்த மணைத்திடுஞ்சூலைசேளு
வாகானகால்கன்னாபில் வளமுடன்காடுகட்டும்
காகானமேனியெல்லாந் தடிப்புடன்வெடிப்புண்ணாகி
போகாதவசாத்தியமாகிப் புணர்ச்சியாற்சொல்லுந்தானே. (௭௧)

சொல்லியேவையத்தோடு பித்தமுங்கூடிற்றானல்
வல்லியம்போலக்குத்து மைந்தனேயெலும்புதோறும்
மல்லியசரீரம்நோகும் வரிசையாய்சரமுங்காணும்
மெல்லியதனுந்தான்வற்றும் விடங்கக்குமிருமுந்தானே. (௭௨)

தானென்றவைத்தோடு சமவாதசூலைசேளு
கானென்றகாலிலாணி யெலும்பெலாங்கறுத்துக்கெட்டு
கோனென்றகழிச்சல்வாங்காக் குளிர்சுரமாறலாகி
மானென்றதாதுகட்ட மறுசூலையாறும்பாரே. (௭௩)

ஆறாகஞ்சூலையப்பா வதிலொன்றில்மூன்றுசூலை
வேறாகும்பதினெட்டாகும் வெவ்வேறுசூலையில்லை
கூறுகவிதனைப்பா குணங்கள்தான்கோடியாகும்
பேறாகுமிவர்கள்பேரைப் பிரித்துரைசெய்வோம்பாரே. (௭௪)

பாரப்பாகெர்ப்பகாரம் பரிவுடன்வாய்வுதேய்வு
சேரப்பாபுந்தியோடு சென்றிடிற்கருத்தான்மாளும்
வாரப்பாபுழுத்தானுண் ரின் மலடெனச்சொல்வாரப்பா
ஆரப்பாவிதனைப்போக்கி லாண்பிள்ளைஜெனிக்குந்தானே. (௭௫)

ஜெனிக்கின்றகுழவிதானுந் திடத்துடன்பிறக்கும்போது
கனிக்கின்றசெய்நீர்போலே கலந்துள்ளேசட்டிநிற்கும்
பனிக்கின்றவிடுப்புக்கைகால் பரவியேகொர்த்துருக்குந்
தனிக்கின்றபசிதான்போகுந் தடித்திடுமுதம்பாரே. (௭௬)

பாரியவாய்வுதானும் பரிவுடன்குழிதான்தேரில்
தாரியகழிச்சலாகிச் சதாநித்தமுறுமிச்சாடும்
வாரியதேகமெல்லாம் வலியேழுமிடைதாநோகும்
மாரியனெனக்குச்சொன்னவுயர்ந்தவர்சித்தர்தானே. (௭௭)

தானென்றகெற்பத்தோடு தரித்திடுஞ்சோணைகட்டில்
வானென்றமத்துப்போலே வாயுவுமுருளும்பாரு

வெனென்றபசிதான்போகு முளைந்துதானிரைச்சலுண்டாம்
மாமெனென்றகழிச்சல்மீறும் வாருஞ்சூலவாயுவாமே. (௭௮)

சூதானகெர்ப்பகாலஞ் சுற்றிபேவிந்துகொள்ளில்
வாதானமேகமீறி லழுங்கியேசெனிப்புங்காண
போதானவுடம்பதெல்லாம் புண்போலேமிகவும்நோகும்
நீதானமயக்கமாகி நிற்சிவனுருவானே. (௭௯)

ஆகின்றவாறுசூலை கெர்ப்பத்திலடர்ந்தநோய்காண்
பாகின்றவகைதான்சூழில் பலித்திடாக்கருவுமப்பா
வாகின்றதிதுதான்போக்கில் மலடிதான்பெறுவாள்பிள்ளை
யாகின்றநோய்கட்கெல்லா மறைந்திடுமுறைபாடாமே. (௮௰)

## கெர்ப்பசன்னி.

முறையானகெர்ப்பந்தன்னில் மூபன்றதோர்சன்னிகேளு
முறையானசிப்பீர்க்குள்ளே யுரைத்திடில்வாய்வுமீறில்
விறையானதேகம்வேர்க்கு மெய்யெலாமயக்கமாகும்
துறையானமலந்தான்கட்டுஞ் சோபிக்குந்துணிந்துபாரே. (௮௧)

பாரப்பாமாதர்க்கெல்லாம் பச்சுடம்பாகுங்காலம்
தாரப்பாவனுபோகிப்பள் தனிப்பழங்காடியுண்பாள்
ஆரப்பாமாங்காய்தின்பா ளப்பனேமாவுதின்பாள்
கூரப்பாசன்னியெய்துங் கொண்டிடுஞ்சன்னிகேளே. (௮௨)

கொண்டிடுமலடிக்கப்பா கூடிடுமெட்டுசன்னி
வண்டிதான்ருதுகாலத்தில் மாத்தின்பாள்மோர்தானுண்பாள்
தண்டியேயணைவாள்பின்னுந் தனிச்சூகக்காயுந்தின்பாள்
ஒண்டியேபெண்களுக்கு ஓரெட்டுச்சன்னியாமே. (௮௩)

ஓரெட்டுச்சன்னியப்பா யுற்றதோர்பெண்களுக்கு
வாரெட்டுப்புருடனுக்கு மகத்தானசுகசன்னிதான்
நேரெட்டுப்பார்க்கும்போது நெகிழ்ந்ததுவெவ்வேறாகும்
பாரெட்டுமெச்சவேதான் பகர்ந்திடுங்கண்ணோய்கேளே. (௮௪)

## கண்ணோய்வகை.

கேளப்பாபொடிச்சூடாலுங் கிளர்வெய்யிலதுகாய்ந்தாலும்
வாளப்பாமின்னார்தம்மை மருவியேநித்தநித்தம்
காளப்பாமுழுக்கிலாதால் கண்ணினால்கனல்தான்பார்த்தால்
தாளப்பாபாஷாணத்தால் தானெழுங்கண்ணோய்பாரே. (௮௫)

கண்ணினோய்தானுண்டாகுங் காரணமின்னஞ்சொல்வோம்
பண்ணானமேகத்தாலும் பகர்வெட்டைவாயுவாலும்

தண்ணையப்புவா லுந் தனிமலக்கட்டினாலும்
புண்ணனபிரணத்தா லும் பொருந்தினகாரத்தாலே　　　(அசு)

காரமாஞ்சாரத்தா லுங் கடுரசத்தூமத்தா லும்
நீரமாஞ்சலக்குகட்ட நிலையுறுபகையினாலும்
பாரொத்தமேதியா லும் பலபலதண்ணீரா லும்
வீரமாமிவற்றில்கண்ணில் செழித்திடும்வியாதிதானே.　　　(அஎ)

குஷ்டவகை.

வியாதிகள்மூவாறுக்கும் விளங்கிபகுட்டங்கேளு
சுயாதியாமேகத்தா லும் சூழ்கினறகிரந்தியா லும்
பயாதியாமாறதாகும் பலவண்டினாலேபட்டாம்
மயாதியாம்புழுவானாலும் ஐயமாம்பதினெட்டாமே.　　　(அஅ)

ஆமப்பாரோய்கட்கெல்லா மரசிதான்மூன்றுநாடி
காமப்பால்வளர்ந்தென்னளுங் கருவியேகலந்துசேர்ந்து
வேமப்பாவெந்துநீறி விடமெல்லாம்பிளந்துபின்னும்
சாமப்பாபிறக்குமந்தத் தாதுவின்விளக்கங்காணே.　　　(அகூ)

காணப்பாநாடிசொன்னேன் மலந்திடுங்கருவுஞ்சொன்னேன்
தோணப்பாரோயுஞ்சொன்னேன் சூட்சமும்வகுத்தச்சொன்னேன்
பூணப்பாயவத்தைசெய்யும் பூட்டையும்விரித்துசொன்னேன்
வீணப்பாசொல்லவில்லை விதிமுறைவணங்கிக்கேளே.　　　(கூ0)

கேட்டிடும்நாடிபத்தில் கெடியேழுநாடிதள்ளி
நாட்டிடுநாடிமூன்றில் நயம்படமிடையேவாதம்
மாடுடுபின்கலைதான்பித்த மையதுசுழிதானுகும்
வாட்டிடுமவமேவாத மருவிடும்பித்தநீரே.　　　(கூக)

பித்துற்றஐயம்விந்து பிரிந்தநற்பூதங்கேளு
உத்தநல்வாதம்வாய்வு ஓங்கிபபித்தந்தேய்வு
சுத்துற்றஐயந்தண்ணீர் சோர்வில்லைபின்னல்வாதம்
பதுற்றபிராணன்பித்தம் பகையுறுசமானனேயே.　　　(கூஉ)

ஐயமாநாடிமூன்று லழிக்கவுமாக்கலாகும்
மையயேயொன்றில்மூன்று நாடியாம்நல்லநாகி
மையுறுங்கருவிற்றெல்லாம் வாசல்காப்பவரேயாகிச்
செய்யுறுதொழில்கட்கெல்லாஞ் சித்துடன்சித்துமாமே.　　　(கூஙு)

ஆமப்பாயெழுபத்திரா யிரநாடிபத்தில்மூன்றாய்
சோமப்பாவுகநிக்கிழே சுழிதனைப்பற்றிநிற்கும்
காமப்பால்வினைந்தென்னளுங் கருவியவத்துப்பின்னும்
சாமப்பாவிளைகுமந்தத் தாதுவின்விளக்கந்தானே.　　　(கூச)

வளர்ந்திடுந்தாதுதன்னை வகையதில்துகைகளேசொன்னேன்
வளர்ந்திடும்வியாதிக்கெல்லாம் மணிவெய்யமருந்தைச்செப்ப
வளர்ந்திடுஞ்சரக்குக்கெல்லாம் வகைவகைசுத்திகேளு
வளர்ந்திடும்நோய்களெல்லா மருந்தினாலொழியுங்காணே. (௯௫)

காசியபத்தின்நாடிமூற்றிற்று-ஆக-செய்யுள்-௯௫௨.

---

## வல்லாதியின் வைத்தியநாடிப்பரிட்சை.

### நோய்வரும் வரலாறு.

நாடுவாய்நோய்வருவதேதென்றுக்கால்நவிலுவோமதிபோகச்சை யோகத்தால், கூடுவாய்மேகமுண்டாய்வாய்வுசேர்ந்துசேரவேநோயா ச்சிதிடமும்பாச்சு, கூடுவாகெற்பத்திற்புணர்ச்சிமீற கொல்லுமடா நோய்ப்பாகங்கூறக்கேளு, தேடுவார்தேசமதுயெண்சாணிளம் செப்பு வோமங்குலந்தான்தொண்ணூற்றாறே. (௧)

### நாடிநிதானம்.

தொண்ணூற்றாறங்குலத்தின்மூலந்தன்னிற் சொல்நாடியெழுபத் திரண்டாயிரந்தான், தண்ணூறதுமிதில்நாடிபத்துமாகுந் தப்பாதுயிதுமூன் றுந்தூக்கிப்பாரு, விண்ணூற்றியெழுபத்தீராயிரந்தான மிகுத்தநோய் தனிற்சுருக்கமவிரைந்துபாரு, எண்ணூற்றித்தொண்ணூறு ஐயஞ்சி லேற்றும மிதுதுகையிற்றசைநாடிப்பகுத்துக்காணே. (௨)

### தசநாடி.

காணுவாயிடைசுழினைபின்கலையினோடு காந்தாரிசிங்குசக்கினிய சனியினோடு, பூணுவாயலம்புருடன்சிங்குவையுமல்லாற் புகழூமிவர் செய்தொழிலும்பொருந்துமிடங்கேளு, காணுவாயிடதுகாலங்குட்ட த்திருந்துகத்திரிமாறியிடதுநாசிதனிலபாயும், பேணுவாய்பின்கலைதா னிடதுகாலின் பெருவிரலிலிருந்துநத்திரிமாறலரமே. (௩)

ஆறானவலதுநாசியினிற்காரு மப்பனேசுழிமுனைமூலத்திருந்து மேலே, வீறானஆக்கினையுமட்டுமேபாய்ந்து விதுதானுமுச்சிலஞ்சிறுவா ணியாகும், பேரானசிங்குவையுண்ணாக்கிலநின்றும பேணியுண்ணும ன்னத்தைக்கீழேபாச்சுஞ், சோறானபுருடனதுவலதுகண்ணிற் சோ தியுடன்பார்வைகொடுந்தொழிலகண்டீரே. (௪)

தொழிலானகாந்தாரியிடதுகண்ணிற் சோதியுடன்பார்வைதரு ஞ்சூட்சமாகும், நெழிலானஅசனையதுவலதுகாதில் நிற்குமடா அலம் புருடனிடதுகாதில், குழலானசங்குனிலிங்கத்தில்நின்றுகொடிபோல சுற்றுமடாகூறினேனுன், எழிலானகுகுதன்பானத்தைக்கொள்ளு மி ரும்பவேதிசைவாய்வையிசைந்துகேளே. (௫)

### தசவாய்வு.

இசைந்துகேள்பிராணனுடனபானந்தானு மெழிலானவியானனு முதானன்கூர்மன், அசைந்துகேள்தேவதத்தின்சமானநாகன் ஆனதி ரிகரனைக் றனஞ்செயனிவர்களபத்தாம், பிசைந்துகேள்பிராணன்மூல த்திருந்து பின்கலையோடிடைகடவாய்கையில்மட்டும், பிசைந்துகேள்மு டியாதுநாசியூடு பன்னிரண்டங்குலம்பாயும்பாழாம்நாலே. (௬)

### சுவாசத்தொகை

நாலேதுபத்தெட்டுவெள்ளேபாயும் நாழிகைக்குமுன்னூற்றியிரு பதாகும், ஏலேதுநாளொன்றிசுவாசந்தானு மிருபத்தோராயிரத்திய றுநூறப்பா, மேலேகுப்பிராணநெஞ்சில்நின்றுபோகும் விளங்குமே திரிகன்றும்பலையுண்டாக்கும், காலேகுங்குகுதனுடன்கான்பான்றுக் கழிக்குமேமலசலத்தைக்கருதிப்பாரே. (௭)

பாரடாநாடிதனிற்சமானநின்றும் பருகியதோரன்னத்தைச்செ ரிக்கப்பண்ணு, ஊரடாவதானகண்டத்தில்நின்று உண்டவன்னபான த்தைக்கீழ்பாய்ச்சும், வீரடாநாகன்விக்கலையுண்டாக்கும் வியானமே லோங்கிவந்ததைலமல்லால், வாரடாவிருத்திதனை யுறுப்புக்கெல்லாம் வளமாகப்பாய்ந்துமேயிறுகும்பாரே. (௮)

பார்க்குமேகூர்மனதுகண்ணைமூடி பணதிறக்கச்சிமிட்டலுடன்ப ண்ணுவானபார், ஊர்க்குமேதேவதத்திலசெயுங்கோட்டாவி யுடம்பு முறுக்குண்டாகுமுண்மையாக, கார்க்குமேதனஞ்செயந்தானுயிர்போ னுக்சாற கபாலத்தில்நின்றுடம்பையூதப்பண்ணும், ஆர்க்குமேமண் டைதனைச்சிறிப்போவானப்பனேசொல்லிவிட்டேனறிந்துகொள்ளே.

### திரிநாடி.

கொள்ளடாதிசைநாடிதன்னில்மூன்று கூறுவேனிடைசுழினைப் பின்கலைதானெனறும், விளளடாதிடகலைதானிமிரமாறி மிருந்தாக்கா லங்குட்டத்திருந்துயேறி, கள்ளடாகண்டத்தில்மாறியோட்டி கபால வரைதனில்மூடிமார்பிற்பாய்ந்து, தள்ளடாவலதுகரம்பின்கலைதானோ டுந் தனித்தயிடையிடதுகரஞ்சாருந்தானே. (௰)

சாருமடாசுழிமுனைதானடுமெய்யத்தில் நாதுயிதமூன்றுலேதாக் கிப்பாரு, பேருமடாயிடையதுதான்வாதமாச்சு பின்கலைதானபித்தம டாபேணிப்பாரு, சேருமடாசுழிமுனை தானையமாகுஞ் செப்புவேன்தி சைவாய்வில்மூனறுவாய்வு, ஊருமடாவாதபித்தஞ்சேத்துமத்திலோடு வொன்றுகச்சேர்ந்திருக்கவுறைகிறேனே. (௧௧)

### திரிநாடிவிபரம்.

உவரக்கிறேன் அபானனதுவாதஞ்சேரு முற்றுப்பார்பிராணன துபித்தஞ்சேரும், நிறைக்கிறேன்சமானனதுஐயஞ்சேரும்சேர்வாதம்

வாய்வுபித்தம்நெருப்பதாகும், தரைக்கிறேன்சிலேட்டுமமதுதண்ணீராகுஞ் சாணுமுதலுந்திமட்டும்வாதமவீடு, விரைக்கிறேன்வுந்தியின்மேல்மார்புமட்டும் மிக்கபித்தமிருப்பிடமாய்விளங்குந்தானே. (௪௨)

தானென்றமார்பின்மேலுச்சிமட்டுந் தான்கபமேயிருக்குமடாசல்லிபோலே, வானென்றவாதமது துவக்கிற்சேதி மயிலோனுங்கோழியன்னமாதுபோலுங், தேனென்றபித்தத்தைநோக்கிமேலே சென்றேறிசாயலன்றித்தெளிவாய்நிற்கும், நானென்றபித்தநடையாமையட்டை நல்லபுருபோற்சாயல்நாடிப்பாரே. (௪௩)

நாடிநடை.

நாடிப்பார்வாதத்தைநோக்கிப்பாயும் நன்றாகசிலேட்டுமந்தானுகம்போலுஞ், சூடிப்பார்மண்டூகம்போலேயேறிச் சுருக்கில்லைகனமில்லைமெலிந்துநிற்கும், ஆடிப்பார்வாதமொன்றுபித்தம்பாதி ஐயங்கால் பங்கானல்சடமோயில்லை, தேடிப்பார்மூவிரலுஞ்சமனாயோடிற் தீராதுயிவைசன்னிவாதந்தானே. (௪௪)

வாதநிதானம்.

தானென்றவாதமதுகோழிபோலே சாவலைப்போல்பித்தமதுதாண்டுமாகில், கோனென்றவாதபித்தந்தொந்திப்பாகுங் குறுதியாம்வாதமதுவோணான்போலுங், கானென்றஐயமதுசர்ப்பம்போலுஞ் சதித்திடுமேவர்த்தப்யாம்தொந்திப்பாகும், ஊனென்றபித்தமதுஆமைபோலு மோடுமேஐயமண்டூகமெண்ணே. (௪௫)

பித்தநிதானம்.

என்னுமேபித்தமையந்தொந்திப்பென்று மிருக்குமேயளவிடைதானின்னங்கேளு, பின்னுமேமணிகட்டின்கீழதாகப் பெருவிரலங்குரத்திலப்பாமூவிரலைவைத்து, மன்னுமேமூவிரலில்யிடையில்நெல்லைவைக்குமிடம்விட்டுநீயோடிப்பாரு, முன்னுமேமணிக்கட்டுதனக்குமேலே மூன்றுவிரற்கடையளவில்துடித்தாற்காணே. (௪௬)

ஐயநிதானம்.

காணுவேவாதத்தின்கோபமாகக் கருதநால்விரற்கடைதான்பித்தக்கோபம், ஆணுமேஐந்துவிரற்கிடையில்தாண்டி ஐயத்தின்கோபமெனவறிந்துகொள்ளு, பேணுமேமயிலதுபோல்வாதமோடில் பெருஞ்சாரைப்பாம்பதுபோலையமேறில், ஊணுமேபித்தமதுஅட்டைபோலுமுட்சுருங்கற்சாவாமென்றுரைத்திடாயே. (௪௭)

மரணக்குறிப்பு.

உரைத்திடவேவாதமது பித்தத்தைநோக்கி யோடவேபித்தமந்த ஐயத்தேறில், நிரைத்திடுமேஐயமது கண்டதேறில் நின்றுமேயுண்

ணுக்கின்வழியைமூடி, விரைத்திடுமே வாசலேந்து மடைந்துகொள்ளு மேலானசிவகலைமெலிந்துபோகு, மறைத்திடவேகடிகைஐந்தில்மரணுவார் மழுவெடுத்தானுனமக்குரைத்தவசனந்தானே. (௧௮)

வசனமென்னவாதமொடு சிலேட்டுமமிரண்டும் வலுவ:றிப்பித்த மதுமாய்ந்துபோகும், அசனமென்னதொண்ணூறு கடிகைதன்னில்லவர்மரணமாவதுண்மை யறிந்துகொள்ளு, பிசனமென்னபாவமொடு ஐயம்பாய்ந்து, பித்தந்தான்புருவென்ன தணிந்துநின்றால் விசனமென்னநாலு நாழிகையிற்சாவார், மெய்யென்று புலத்தியனேவறிந்துகேளே. (௰௯)

கேளடாவாதபித்தங் கிழேநோக்கிற் கெடியானதுடிநாதம்வீணைநாதம், நாளடாபாம்பரணைவாலுபோலு நடுங்கினும்நாபெலும்புகளைக்கவ்வியோடிற், குளடாகிழிட்டுக்கடிக்கும்போதுஞ் சுத்திவரும்போலவுமேசுழன்றிட்டாலுங், கேளடாபித்தஞ்சேத்துமத்தினுலேறி சினத்திட்டால்மெய்குளிர்ந்துதெரிக்குந்தானே. (௨௰)

தெரிக்குமேவயற்றுவலிநெஞ்சுவீக்கஞ் சிவந்திருக்குமஞ்சள்நிற்குங்கருகும்நாக்கு, எரிக்குமேமுகங்கோணு மிரவுக்கப்பா எரிச்சலுண்டாலப்பகல்குளிருந்திரோகந்தானு, முருக்குமேயடிக்கடிதான்பெருமூச்செய்து முழிபிரட்டுந்தாறுமாறுகப்பார்க்கும், குரிக்கையுள்ளங்கையுள்ளங்காலுங் குளிர்ந்திருக்குமுண்ணுச்குங்குறியைப்பாரே.

குறிகேளுமேற்சுவாசந்தானும்பாயுங் குளிர்ச்சிகண்டுமூக்கன்றிவாயிற்பாயும், மறிகேளுமுடல்நடுக்குமறிவழிக்குமையா மைந்தனேவாடாதிருக்கிலசைவுண்டாகும், வெறிகேளுவுச்சிதனிற்சூடுண்டாகுமீள்வதில்லைவீழ்ந்திடுதல்மெய்யென்றெண்ணுநறிகேளுபெரியதவந்தரித்தவீசன் சுந்தரிக்குஞ்சொன்னதிந்தசுருதிதானே. (௨௨)

நாடி-மாத்திரை-நிதானம்.

தானென்றவாதமாத்திரைதான் ரெண்டு தப்பாதுபித்தமது தானென்றேறில், வேனென்றவாதபித்தந்தொந்திப்பாருமிருவாதமிரண்டுஞ் சிலேட்டுமமொன்றாகில், ஊனென்றவாதமையந் தொந்திப்பாகுமுற்றபித்தம் ரெட்டிக்குரைகமொன்றுசேரில், கோனென்றபித்தமுடன்வாதஞ்சேர்த்து கொண்டதிந்தரோகமெனக்கூறுவாரே. (௨௩)

கூறுவேன் பித்தமாத் திரைரண்டாகில் கொடிய சிலேற்பனமொன்றுகுதிக்குமாகில், தூறுவேன்பித்த சிலேட்டுமந்தானென்றுந்

றலங்குசிலேட்டுமமிரண்டுவாதமொன்றுந், தேறுவேன்சிலேட்டுமவா
தந்தானென்றுஞ் சிலேட்டுமமோடிபித்தமொன்றுசேரில், வேறுநீநி
னைபாதே செலுத்தும்பித்த மிருக்கிடுமேசுரம்பேதி மிருதிதானே.

மிருதியென்றஐபத்தில்வாதஞ்சேரில், மேலெலும்புகாகத்தின்பி
லேச்சல்போலே. தருதியென்றவாதமுடனையஞ்சேரில்தாரணியில்மயி
லிறகுபோலேயாகுந்திருதியென்றபித்தமுடனையஞ்சேரிலசெற்றிலூ
ர்தவனையோடுஅட்டைபோலாம், திருதியென்றஐயத்தில்பித்தஞ்சேரி
ல் நீரடவுவாயில்பட்டளவியுமாமே. (௨௫)

ஆமப்பாவாதமது தனித்தபோது. அப்பனேமயிற்சாய லாசிநிற்
கும், தாமப்பாபித்தகடைபெருகவோடுந், தனித்துநின்றஐயமதுஅமர்
ந்துமீளும், ஓமப்பாமூவிலுஞ்சரியேயாகிலுபர்ந்துநின்றவாதபித்தமு
ற்றுப்பாரு, வேறப்பாமலசலங்கள் கட்டேயானல் மிச்ரடா வாதமது
விளங்கக்கேளே. (௨௬)

மேளாகுஞுடெமூம்பிற்பிக்கமிச்சங், கெடியாகக்குளிர்ச்சிகண்டா
லேபமிச்சங். தாளடாவாதமதுபிக்கஞ்சரில் தப்பாதுசிலேட்டுமத்திற்பி
த்தஞ்சாரும், வேளடாஐயமது மேலேபேறில், மேல வத்தைக்கடை
யாளமார்புமூக்கு, கோடபுறங்கைகள் செவிகளோடு குளிர்ந்துமே
லெதுப்பிஐயமிருந்தானே. (௨௭)

மீறிலோகடிகையைந்தில் மரணமாவார் வெடிவெடித்தபித்தமது
மீறினக்கால், கூறுவேன்வாதமையங்குளிர்ந்ததானல் கொளுமடா
பித்தசன்னி அறிவுபோகும், வாறுகேள்வாதமையமீற்றானல் வகு
த்தபித்தமுந்ததானல் மரணசன்னி, சிறிபேயுட்புகுந்துபிறவிச்சாகி
சணத்திலேயிசவுவருந் திண்ணந்தானே. (௨௮)

திண்ணமுடினையத்தில் வாதஞ்சேரில் செப்புவேன்சன்னிபொடு
தோஷமுண்டாம், எண்ணமுடன் மெய்ப்பிக்குஞ் சோபமுண்டா மெ
ழில்மூர்ச்சை சோகையுடன்பாண்டுகாணும், வண்ணமுடன் பித்தத்
தில்வாதம்வந்தால் வரும்வாறுபீனிசங்கள் மண்டைக்குத்து, சண்ணு
மடாபவித்திரங்களரையப்புண்டாம் தப்பாதுகவமூலஞ்சாருந்தானே.

சாருமடாபித்தமந்த வாதத்தேறில் களஞ்செய்யும்பாண்டுகாமா
லைதானுஞ், சேருமடாநீராம்சல் மகோதரங்கள்கவுசிசெப்பரியமகவை
வெப்புப்பார்வைதானும், சாருமடாஐயமது கத்தஞ்சேரில் வாயூறல்
காம்பேதிவாந்திகானுஞ், சேருமடாஐயமது பித்தற்றானல் தோன்று
மடாசயகாசம் சுருக்குந்தானே. (௩௰)

## அவஸ்தைபத்து.

சுருக்கான அவஸ்தைபத்துஞ் சொல்லக்கேளு துடபான முதலவஸ்தைபின மேனாறு, முருக்கான பிரண்டுகலம் வேற்றுமைபோலவே மூன்றுநாகுவெளிப்ரகாசமற்றமாகும், அருக்காநாலிலேமே விளைப்புநாலுமைந்துக்குமுகமேவேற்றுமாறுக்கப்பா, சுருக்கானயுடம்பதுவுங் குளிர மேதில் நன்றான அன்னந்தைநாடிப்பாரே. ௫௧

நாடுமேபிறுநான்கில் கண்பஞ்சரடும் நலமாகவொன்பதிலேயுடம்புவேர்க்கும், ஒபிமேபத்துக்குமரணமாவார் உத்தமனே அவஸ்தைபத்துமுரைத்தேன்பாரு, தேடுமேபலநூலுமறிந்துகொண்டு தேசத்தில்வைத்தியந்தான்செய்யவேண்டும், கூடுமே அசாத்திய மசாத்தியத்தின் குணக்குறியுங்கண்டுமேகூறினேனே ௫௨

## கற்பகருவுற்பத்தி.

ஆண்மையென்று மங்கையர்கள் பூர்க்குவ்வால மன்றுமுதல்பதினறுநாளுமந்த, தாண்மையன்றிப் பதினறுபிதழாய்நின்ற காமமறைபோல் மலர்ந்திருக்குஞ் சமற்றக்கேளு, காண்மை யன்றிதினமொன்றுயிதழ்கனெளன்று கருவானகருக்குழிதான்மின்னுட்குள்ளே, பாண்மைபென்றமிழ்த்தக்கே பூறும்போது பரயுமடாவன்னியொடு வாய்வுதானே. ௫௩

வித்துமிகவும்வுள்ளடங்கிவேர்க்குங்கற்பமிகவுமுண்டாம்
பத்திவெகுவாய்யெதிர்தள்ளும்பசியுமிகவும்பலபூட்டும்
எத்துப்பிரவிச்சென்றுமிகஎண்ணிமிகவேஎண்ணலாமே. (௮௭)

உள்விச்சுகுணம்.

அடுத்தடுத்தெடுத்துக்குத்தி அதிகமாய்விறைத்துவேர்த்துப்
படுத்துமேருக்கிபேசிப்பல்லுக்தான்கிட்டிநெஞ்சு
அடிக்கடிக்கிரியங்குன்றியசனமுமற்பமாகி
திடுக்கமாமுனிவர்சொன்னூர்திறமுடன்செப்பலாமே. (௮௮)

சுவாசகாசத்தின்குணம்.

பிள்ளைபெற்றதாயார்க்குபெருஞ்சுரமுந்தலைவலியும்
உள்ளுமுமலைதவளமுடன்உதிரமுரப்புங்கழிச்சலுமாய்
மௌனத்ததடித்துகனைமூர்ச்சம்விழியாள்தெளிவுங்கெட்டிருக்கும்
துள்ளித்துடித்துசுவாசமதுதுணிதாயயிரைப்பதைத்திடுமே. (௮௯)

சன்னி.

கத்துறுசன்னிதன்னைக்கசடங்களறியவேண்டி
உகதிருகூடிக்கைதநோக்கிஉறைத்துநாவதனிலூட்ட
கத்திருசறுத்துக்கண்டால்கதிர்முறுசன்னியாகும்
பெத்ததில்வெளுப்பதாகில்பின்னையதல்லதாமே. (௯௰)

குணங்குறிபிருத்தத்தோன்றிக்குற்றமேமெலிர்த்ததென்றால்
இணைக்குமந்திரமத்தாகுமிவைகளால்மீதிலன்னம்
குணங்கொள்ளாக்குற்றமேதிருணமிதருதைக்குநின்றால்
குணங்கெடாதகன்றுசிவன்வுறுதியாய்ப்பேசலாமே. (௬௧)

வேறு முகவாதசன்னியின்குணம்.

கண்டூர்த்தலையில்புருவமத்தில்வருநம்பல்லுக்குத்துண்டாய்
பண்ணப்பதைக்குமுகத்தன்னைப்பக்கம்பற்றிபிழுத்திடிலோர்
நண்ணிப்பகரவிதிதானும்காடுங்குணங்களதுகண்டால்
எண்ணிச்சொல்லுமுகவாதமிடறுஞ்சன்னிபிதுவென்றே. (௬௨)

பித்தத்தின்குணம் வேறு.

காலொடுவயற்றிலுற்றுக்கரமொடுகண்கள்தானும்
சாலவேசிரசில்நின்றுதானுடல்வெறித்துக்காட்டும்
மேலதருத்திரொத்துமின்மினிபெரியுங்கண்கள்
ஆலவேகுழலினுள்ளே அனுத்துகொள்பித்தந்தானே. (௬௩)

வேறு பித்தகுணம்.

பித்தமேசிரசிலுற்றால்பின்வருங்குணங்கள்கேளீர்
உத்தநேர்நயனந்தானுமொளிவதுமறிநிற்கும
மைத்திடும்நாவும்பல்லுங்காரிடுஞ்சரீரந்தானும
நித்திரைதானுமவாராகெட்டிகொட்டாவியாமே. (௬௪)

வரட்சிபித்தத்தின்குணம் வேறு.

தலையும்வலித்துடலுலர்ந்துதானுங்கெட்டித்துயரமுண்டாம்
அலையுநரம்புஞ்சேடமதுஅடுத்துமிகவேசிறுசிறுக்கும்
உலையுமிகவேமனந்துடிக்கும்ஒடியடங்குவரட்சிபித்தம
சலையுமிகவேகறுணர்த்துகண்டேமுனிவர்கழறினரே. (௬௫)

காமாலையின்குணம்.

கைகாலெரிப்புக்கண்வெளுறல்காமத்தாதுகெட்டதுவும்
மையகுழலாள்விடைமாமல்வயறுமலபெருமல்தலைநோயும்
பையப்பறந்துயேகிவிடும்பதிவாய்சித்தர்மானிடர்க்கு
துய்யவேதன்சொற்படிக்குச்சொன்னார்முனிவர்முனிவோரே (௬௬)

பித்தபாண்டுவின்குணம் வேறு.

இரும்பலுமிளைப்புங்கெஞ்சில்பிடிபதுமிகவுண்டாகும்
வெகுஉருகிறுகிறுப்புமேனியும்வெளிறிப்போகும்
பெருகியபித்தபாண்டுவென்னவேபேசலாமே
கருகிபபல்லுமநாவுங்காய்ச்சலுமிளைப்புமுண்டாம். (௬௭)

வேறு சுரக்காய்ச்சல்.

வச்திரேல்வெளுத்துப்பித்தமயங்கிடுஞ்சோபமாகும்
பத்தியேதலைநோயுண்டாம்பகலிராவென்னகாயும

உத்ததோர்தேகந்தானும்வெளிவடன்ளலும்புகுன்றி
முத்திபஅனலேபிதமுழுதமுக்கயச்சலாமே. (௯௮)

அந்திரபித்தம் வேறு.

பரபரத்துடல்கனத்துப்பறந்தநாடித்திரைந்து
கரகரத்துளைந்துநெஞ்சகணைப்புனலிளைப்புமூர்ச்சம்
சரசரச்சோர்ந்திமிர்த்துதங்கும்நீர்செய்யுமவெப்பும்
வரவரயிருமல்கோபம்வந்திடபித்தமென்றே. (௯௯)

வேறு.

ஈதலாலுடலந்தன்னிலாமெனபிசைந்துகாட்டும்
வாதுநமுகம்பெருக்கும்வலஞ்செலங்கழிந்தெந்நாளும்
போதமும்விரும்பிடாதுபுந்தியில்லடியுந்தோன்றும்
நாதனுர்சொன்னூரிதாலங்கிபசேத்துமந்தானே. (௱)

இவ்வகைக்கிணங்கிநிற்குமிருமியசிலேத்மமெட்டும்
தவ்வியகாசத்தோடுதயங்கியசிலேத்மமெட்டும்
ஒவ்வியபித்தத்தோடுஉன்னியசிலேத்மமாண்டும்
கவ்வியபித்தத்தோடுகலந்திடுமிரண்டதாமே. (௱௧)

வேறு வாதசுரத்தின்குணம்.

கேளாமயிருஞ்சிலுத்துந்தலைநோந்துபோதாகொடுக்கில்
ளாமுதுகுப்பொருந்துந்தோள்கைகாலுளையுமிளைப்புமுண்டாம்
காளாபெருத்ததண்ணீரில்கருதுந்தலைபோடடிக்கவலிக்கும்
மீளாபெருத்தவலஞ்செலமும்மிகவுங்கடுக்குஞ்செருக்குமதே. (௱௨)

வாதசுரத்தின்குணங்கேளீர்வருந்தவஞ்ஞானோதைத்திடவே
சிதசுரமும்வந்திட்டுச்சிந்தைகலங்கிமேயிருகிச்
சேதித்திட்டபுண்போலேசிதையுங்கைசக்தவிழுமதுபோல்
பேதித்துலர்ந்துகழியும்மலம்பெருக்கப்பசியுந்தோன்றுதே. (௱௩)

வேறு.

நடுக்கித்திடபக்கிமயிர்க்கூச்சிட்டயர்ந்துந்தலையுமிகநொந்து
கடுக்குங்கைகால்முறிந்துமருள்கண்ணுந்தேளுபிக்கரிசி
இடுக்கிட்டுதடும்வாய்வுற்றிற்செல்லவரியசுவாசமது
தடுக்கன்வந்துபொதுவாகசொல்லீர்வாதசுரமென்றே. (௱௪)

வாதசுரத்தின்குணங்கேளீர்வன்னிக்குளிப்பபப்படுதல்
சிதமிகுந்துதுறைகருதல்செனித்தேகமன்னன்நின்டாதல்
சேதங்கண்டுதலைநோதல்இருக்குந்தொப்பின்சலந்தடுத்தல்
பாதமுலைந்துநீர்குடிலம்பசைப்புவிடாதுஇதுவாமே. (௱௫)

விடாதேகைகால்மேற்முதுகும்மெய்பிரண்டுவிலாப்புறமும்
தொடாதேநோவுங்குறையாதுதொடுகில்புண்போல்நோவுண்டாம்
கொடாதேகஞ்சிபெழுதினமுங்கொடுக்கிலதிகசுரமுண்டாம்
அடாதேமிகவுருமிடுருண்டுஅண்டுக்கடுதுருமிச்வாமே. (ஈகு)

ஆமேயேழுநாளளவுஅசனந்தொடாதேபட்டினியாய்
தேமேகஞ்சித்தண்ணீருஞ்சொன்னபடியேதானதுவும்
ஆமேயேழுநாள்கழித்தால்அருண்டேவந்தசிரமதுவும்
போமேயேழுநாள்கழித்தால்பொருந்துமசனங்கொடுப்பதுவே. (ஈஏ)

விஷசுரத்தின்குணம்.

சொன்னேமறுபத்துநான்குசுரந்தோன்றவெடுத்தவிஷசுரங்கேள்
பின்னேகாலுங்கையசைவும்பிரவிச்சானவிக்கல்களும்
கன்னேமாதேகட்டிகொள்ளுங்கனத்தேவுளைவுமிகவுண்டாம்
மன்னேயசாத்தியசுரமென்றுவகுத்தார்முனிவோரிருடிகளே. (ஈஅ)

பித்தசுரத்தின்குணம்.

பித்தசுரத்தின்குணங்கேளீர்பித்தம்வெதுப்பும்உடலுழற்றும்
மெத்தத்தண்ணீர்தாகிக்கும்மிகவாய்க்கசக்கும்நாவுலரும்
ஒத்தநீரும்மலந்தானும்வெளிசேர்நயனஞ்சிவப்பாகும்
சுத்திலடக்குமுகமறுக்கஞ்சொல்வாய்மிடறும்புண்ணாமே. (ஈகூ)

பித்தசுரத்தின்குணங்கேளீர்பெருக்கத்தண்ணீர்தான்வாங்கும்
முத்தக்காசுஅறத்தோலும்முதிரக்காய்ச்சித்தானருந்த
மெத்தப்பகருமதுதானும்வேண்டும்போதுமிகக்கொண்டால்
பித்தசுரமும்வர்தழிவும்பேணித்திருங்கண்டீரே. (ஈய)

பித்தசுரங்கள்பிலஞ்செய்யும்பெருக்கவயருஞ்சிக்கழியும்
மெத்தநாறும்மலந்தானும்மேனிக்குளிருமிகவேண்டும்
ஒத்தவென்னவுவேண்டாமுந்தர்தண்ணீர்மிகப்பெருகும்
சுத்தபடனர்கைவிரலுஞ்சொல்லும்பித்தசுரந்தானே. (ஈகக)

வேறு.

வஞ்சமித்தவாயும்பல்லும்வலமுடன்சலமுமெய்யும்
குஞ்சனித்திருக்குவாயுங்கசக்கும்நீர்வாங்கும்போது
வஞ்சவேவுடல்வெதும்பியயிர்க்குச்சியுடன்தான்சேர்ந்து
மிஞ்சியவலமுந்தியல்துவெருண்டதோர்பித்தந்தானே. (ஈகஉ)

வாய்தந்தகுணம்.

கையைக்கொட்டிப்பாடுவதுங்கண்ணைமிமையாமலொளிப்பதுவும்
மெய்யேமுழுதும்விழிப்பதுவும்வேண்டாதெல்லாமுரைப்பதுவும்
பையச்சிரித்துநொடிப்பதுவும்பகர்ந்தேவரக்குபகருவதும்
மையாபொருந்தக்கண்மடவாய்வாய்தந்தத்துக்கிதுவென்னே. (ஈகங)

குறிபடையாளநாடிமுற்றியது அஆ செய்யுள் கூஅ.

---

## குருநாடி.

சீர்பெறுமுனிவர்பாதந் தெளிந்துபின்னுலகத்தோர்கள்
பேர்பெருகுருவினுற்ற பிணிபலத்துணர்ந்துதேர்ந்து
ணர்பலநாடிக்கெல்லா முயர்குருவுற்றநாடி
சேர்குருநாடிநேர்மை சியலுடன்கூறலுற்றும். (௧)

கூறுவர்வேதநான்கு குருநாடிநேர்மையெல்லாம்
வீறுசெய்யுடலில்வாதம் பித்தமேசிலேற்பமூன்று
நேர்மைகண்டறியும்வண்ணம் வலுவாதநாடியொன்று
பேர்கொண்டெழுந்தநேர்மை பிரித்துடனுரைக்கலாமே. (௨)

ஒருயரசர்ந்துபேதா னுடலிடைநரம்புதோன்றித்
திரெழுபத்திராயிர நாடியேயிசைந்துபின்னும்
கார்செறிமேகம்போலே கதித்திடும்வியாதிக்கெல்லாம்
பேர்குருவாகவந்த நாடியின்புகழைச்சொல்வாம். (௩)

சொல்வதோர்குருவேசிஷன் தொழுதபின்வணங்கிநின்று
செல்வனையடியன்கேழ்க்கத் திருவுளத்தருளைச்செப்பி
நல்வினைபாவமன்றி நலம்பெறுவியாதிவந்தால்
தெல்லையேயடியேனென்று தொகுப்பறக்கேழ்ப்பதன்றேன். (௪)

### சந்தவிருத்தம்.

நல்குவதோர்பிணியாளர்வந்தவகையேது நாடிகுறியசாத்தியங்களறிந்தவர்களேது, நல்குவதோர்புவியிலுள்ளோர்வந்தவகையேது நாதாக்கள்சிகரம்வரைகண்டவர்களேது, நல்குவதோர்யடிமுடியை யறிந்தவர்களேது நமனுர்க்குயுயிர்கொடுக்கா திருந்தவர்களேது, நல்குவதோர்பாசபந்தமற்றவர்களேது நாதரடிதாள்பணியைக்கண்டவர்களாரோ. (௫)

நாடிகுறிதிசையறிந்தநாதாக்களேது நாட்டமுடன்பின்கலையுமறிந்தவர்களேது, நாடிகுறிசுழிமுனையையறிந்தவர்களேது நடேப்புனலில்தீவினையையற்றவர்களேது, நாடிகலைக்யானங்களறிந்தவர்களேது நாதாக்கள்மௌனநிலைகண்டவர்களேது, நாடிநிலைதொட்டறிந்துதேர்ந்தவர்களேது நாதரடிதாளிணையைக்கண்டவர்களெவரோ. (௬)

மூலமுதலாதாரமாறுஞ்சுத்தி மூர்க்கிநின்றபரவெளியின் முதன்மையாகி, பாலமதுமீதேறிசுழியிலேறிடு பாதாளநாடியெங்கேயதுங்கும் பாரு, காலமதுவரும்போதுகவறுவீசுங் காத்தறிக்கைபோலிருக்கும் காலைப்பற்றி, சிலமுடனெடுக்கவருங்காலந்தன்னை திசைவாங்வுபாரித்துயலைகுவாரே. (௭)

அசாத்தியசேத்துமக்குறிப்பு.

நெஞ்சுலர்ந்து நெருக்குங்கபமீளை
பஞ்சுபோல்மேனி பதைத்துப்பேயூதிடில்
மிஞ்சவோர்பகல் மீரொருதிங்களில்
வஞ்சன்தாலன் வருக்குமரணமே. (௮)

திரிதோஷக்குறிப்பு.

சொன்னார்தோஷமூன்றதனில் தோன்றுவாதக்கதித்திடிலோ
மன்னேசேத்மபித்தமது மருவிபுறக்கைதுடித்திடில்
பொன்னேயமனார்புரம்போவார் போற்றுமாயுள்வேதமிது
அன்னேயுமைக்கித்தான்மகிழ்ந்து அரனாருரைத்ததிசயமே. (௯)

அப்பாறுமாறுமங்கேயசலைச்சார்ந்து அண்டபகிரண்டமெல்லா நிறைந்துசாய்ந்து, மெய்யாறுதட்டுமங்கேயிடிந்துவீழ்ந்து வேரழிகிவாய்போகும்பிராணன்போகும், பையாறுபரவெளியில்மிரண்டுபோகும் பரமனாரங்கிருந்துபார்க்கும்போது, வெவ்வேறுபுரவியும்போமிருளுமாகும் வேறிருந்தலைகையிதென்றவிளம்பலாமே. (௰)

விளம்பலாம்வேறிருந்ததலத்தினூடே மேவிநின்றபரவெளியில் சமானமாக, தளம்பெறவேகட்டிவைத்தமுடிப்புமங்கே சற்குருவின் வைப்படுத்ததலமுமங்கே, வளம்பெறவேவேறிருந்தவிடத்தைக்கண்டால் மார்க்கண்டனுகவென்றுவாழலாமே, உளம்பெறவேஆதாரமூலமங்கே வுற்பவித்தகேசரமுமவுனமங்கே. (௧௧)

கண்ணிலொளிமறந்தவகைசொல்லக்கேளீர் காற்றேறுதீயெழும்பிநீர்தானேற்றி, எண்ணியொருகர்சுதனையுமறிந்துநீதான் ஏகமாயடைத்ததினாலொளியேபோச்சு, அண்ணலருள்பெருமையினால் காற்றைமேவி அவரொளிகள்மயங்காமல்அவனிதன்னில், திண்ணமிது மாமுனிவனுரைத்தநூலை செகதலத்தோரறிந்துபொருள் தெளிந்து கொள்ளே. (௧௨)

வாதமிருந்தெழுந்துவரும்வகைதானேது வகையுடனேதாதுநிலைமதிதானேது, சீதமிருந்தெழுந்துவரும்நிலைதானேது சிலேற்பனநீரெழுந்தவகைசிர்தானேது, பேதமுடன்பயித்தியங்களெழுந்ததேது பிரமேகம்சீர்க்கடுப்புபொருள்தானேது, ஓதிவைத்தசாஸ்திரங்கள்படித்தபேரை உறுதியுடனிப்பொருளைபறைந்தான்சொல்லே. (௧௩)

வன்னியொடுகோல்கூடி மண்ணைச்சார்ந்தால் வாலைமிகுமணமிசையால்வாய்வுமீறும், திண்ணமுடன்வானதிலேகாச்றுந்தியுஞ் சேர்ந்திடில்பித்தமிகுஞ்சீரைப்பாரு, உன்னியொருசோபனந்தானனந்தங்காற்று உறுதியுடன்சுழிமுனையினுறைத்துவாங்கும், சென்னியருள்புகழ்படைத்தமுனிவனசொன்ன சித்தாந்தமதுரகவிதெளிந்துகொள்ளே.

## வேறு.

சுழுனையும்பிருணன்தானுஞ் சூழ்ந்துஎன்கலையைச்சேரில்
நளினமாய்த்தாதுவிம்மி நார்க்கயிராகவீசி
கொழுமுனிபோலேகப்ப முகந்தலையுச்சியேறி
வழினைபாந்தாதுநின்ற மார்க்கமென்றறிந்திடாயே. (கரு)

இருகாலப்போலுமுற்று வுறுப்புகள்தன்னில்நின்ற
பருவமாய்ப்பிருணவாய்வு பற்றியேயிடையுங்கூடி
குருவென்னும்பதிந்தபாணி தன்னையுமேற்கொண்டேற்றில்
மருவியசிலேற்பனசிதம் வருமெனவருக்கலாமே. (கசு)

அக்கினிமிதந்துதானு மத்தியிலூடுசென்று
புக்கியமலசலாதி போக்கியமாகநின்று
சிக்கியேயுதரம்விம்மி செறிந்திடும்பித்தந்தானும்
வெக்கியமந்தத்தாலு மிருந்திடும்பசியினாலே. (கஎ)

அக்கியேயுள்ளநாடி யபானனோடாறுவாங்கி
புக்கியதியுங்காற்றும் பொருந்தியவாய்வுவுற்று
கக்கியகூடுகொண்டு காலின்மேல்மூலஞ்சேரில்
தொக்கியகடுப்புஞ்சீயுங் கடுத்துளிர்மேகமாமே. (கஅ)

## வேறு சன்னிவருதல்.

சன்னிபிருந்தெழுந்துவருந்தலந்தானேது தாதுவிளைந்திருந்தெழுந்ததன்மையேது, உன்னியொருதரமிகு தவகைதானேது உட்காச்சல்பிரமேகமூனைமையேது, பௌனவியொடுபெருப்பிளவைபடைத்ததேது புரையிருந்துசலமிதந்தபொருள்தானேது, இன்னதெனப்பண்டிதரேவகையிதென்று இயம்பிடுவீர்பொருளையியம்புவீரே. (ககூ)

சன்னிபிருந்தெழுந்தவகைவிபரமென்னில் ;சாரமுடன்சிங்கலைதான்மூலஞ்சேரில், வன்னியொடுதண்ணீரும்வாய்வுங்கூடி வழுவாதசிங்கலையோடிறுகச்சார்ந்து, பின்னியெழுச்சிலதுசன்னி யாகும்பாருபிரிவுடனேகாந்தாரிசுழினைபற்றி, தன்னிலதுவனலெழும்பிதாதுவிம்முஞ் சடத்துக்குப்பிலக்குறைக்குந்தாதுதானே. (உ௦)

ஏற்றமுள்ளவிடைநாடி கலையுஞ்சேர்ந்து ஈடாகவிசைநரம்புதன்னைச்சாரில், மாற்றமுடன்மாக்கிஷத்திலெலும்புதோன்றில் வகையானவிசைநாம்புமடங்கும்போது, சீற்றமுடனபெரும்பிளவை புடைத்துமேதுந் திறமாகவிசைநரம்புமூருமுண்டாய், சாற்றமுறச்சிழிரத்தஞ்சலமுமேவுஞ் சங்கையில்லாவாசுமுதல்தானுண்டாமே, (உக)

பொன்னிபொருபரும்பிளவைகாலோடங்கு பொருந்தியரோகவி வைமூன்றுங்கூட்டிப், பின்னியேயெழுந்திடுசிலபிளவைசீமாதும் புகைத்தெழுந்தவிஷகரம்பில்தமருமுண்டாய், வன்னியொடுதெண்ணீரும்வாய்வுங்கூடிவஜ்ஜபாஜவிஷகரமடைபமடக்கிக்கொன்று, சன்னியொடுபொருந்திடுகில்கொல்லுமந்த தருதிபெறமாமுனிவன்சாற்றுநூலே (௨௨)

வேறு.

நாளிலேசெறியபாமாந்தம் நலமுடனுதரஞ்சேர்ந்து
கோளிலேமைந்தம்பற்றிக் குடலுறுகனலேவெம்பி
மீளுமேவன்னியோடு வாயுவுங்கூடச்சேரில்
பாழிலேசுரங்கள்மேவி பயித்தியம்விளையும்வாறே. (௨௩)

வேறு.

கூடியதோர்சுரங்கள்வந்தவாறுரைக்கிக் குறிப்புடனேதசைகளுடமார்க்கங்களுகு, நாடியசந்திந்தவிதந்தசைநீர்கூடி நாட்டமிடைபிங்கலையுஞ்சுழிணைபற்றித், தேடியதோர்புனற்றீயுங்காற்றுங்கூடிச் சேத்மபித்தம்பித்தவாதமெனச்சேருமூவ, ராடியதோர்மாலையனுமானுமாகிமாகைபிளவைநாடிநீபறிந்துகொள்ளே. (௨௪)

மயமாகச்சயரோகம்வரலாறேதுமற்றுமொருபீனிசங்கள்மதிதானேது, விபனுகருதையிருந்செழுந்தசேது விறடணேநீர்சுறுக்குவிதனமேது, பயமாகக்கனவுநினையுறித்ததேது பார்த்திருக்கச்குணமெழுப்புமபதந்தானேது, நபமாகப்பொருளிதெனவகையிதென்று நன்மையுடன்பண்டிதரைநடுத்தான்சொல்லே. (௨௫)

சயரோகமெழுந்தவகைக சொல்லக்கேளீர் சலைதனிலேகனலெழும்பிநீர்தானேற்றும், டயமாகயிருபுரமுந்தமருண்டாகி மதுரமெனுருசிபிறந்துவாய்நீருறி, சுயமாகமண்டையிலநீர்கழிறங்கி சுவாசமகநெஞ்சில்வந்துசுவரியேங்கும், நயமானசரோகம்நாடுங்காலை நன்மையுடன்பண்டிதரைநாடிப்பாரே. (௨௬)

பீனிசத்தின்குணம்.

பீனிசந்தான்வரலாறுசொல்லக்கேண்மின் பேதமுமற்கனலெழும்பிவாய்வுஞ்சேர்ந்து, ஊனுருவிமண்டையிலே தொக்குப்பட்டு யுறுதியுடன்வாய்வுவங்கேயுறுததுப்பின்னும், மீனமுடனேறுநீச்சிழுரத்தம்பிடித்துவருவருங்காதமுக்கனேடு, தேனுருவிவந்ததுபோல்செங்கல்சிறுயுஞ் சூலைவிழும் பீனிசத்தினசெய்கையாமே. (௨௭)

சூலையின்குணம்.

சூலைவரலாறுதனைச்சொல்லக்கேண்மோ சுற்றியதோர்விசகரம்பில்மேவுகொண்டு, காலையுமோயூடுருவித்தமருவிம்மிக்களிப்பதுபோ

ல்பாசுபற்றி ரத்தஞ்செத்து, மாலைபதுபோற்கொடுத்து நரம்பின்மீ
தே வகையானவிஷரமபை மடக்கிக்கொள்ளும், கோலையிட்ட குரு
டமரப்போல்தட்டமிழ்ந்தக் குடிகெடுக்குஞ்சூலைபதுகுறிவண்மடரே.

## குன்மக்குறிகுணம்.

குன்மமதுதானெழும்பும் விபரமென்னில் ஞுடல்தனிலேகல்லு
மியுமெல்லுமூக்கு, பின்னமுடன்வரும்பித்தன்கோரைச்சார்ந்தால்பி
ளுமதுகுடலோடேபாசுபற்றி, அன்னமதுசேரிபாதமயிரினுலே அச
னமுஞ்செல்லாதுகிருமிதுக்கம், வன்னமயில்குழலாளே குன்மரோக
மாசற்றூல்குன்மமறவகைதான்பாரே. (௨௯)

## நீரிழிவுக்குநிதானக்குறிப்பு.

சீர்பெறவேநீரழிந்திறந்தானேது சேற்கையுடன் தொந்தத்தில்
விபரிதியேது, பாரறியக்கிருமியினுல் புழுக்களேது பண்புடனேவாத
ங்களபழக்கத்தேது, பீர்பெறவேமூலத்தின் கடுப்புமேது பிலமாகக்
காமாலைபாண்டுமேது, பேர்பெறவேயிதுமுறையைப் பொருளைத்தே
ர்ந்துப் பிணக்கறவேயின்னதென்றுபிரித்துச்சொல்லே. (௩௰)

சங்கையில்லாத்திரிபோகஞ் சாந்தவேற்கைத் தானுருவியகதியி
தாக்கிப்பின்னே, பொங்கியேயூனுருவி தசையைச்சார்ந்து புளகித்து
நரம்பெல்லாம் பொன்மைகெட்டு, சங்கில்வந்த புழுப்போலே தே
கமெல்லாங் கருகியங்கே உள்ளுளார்ந்துங் கார்போல்நீரை, பங்கிலங்
கேபருகிட்டநீரையெல்லாம்பாழானவிசநரம்பைப்பற்றிசாயும். (௩௧)

ஆதாரமாதுக்கும்நடுவேநின்ற அலம்புருடநாடியங்கே அசவைச்
சார்ந்து, கேதாரமூலத்தேநோக்கும்போது கிறிச்சனமாம்வாய்வுமங்
கேகீழ்நோக்குஞ், சூதானவுதாரத்தில் வேவுகொன்று சுழினையுடன்
மலங்கழிந்துஉளளேவெந்து, பாதாரமூலத்தில்கடுக்கும்பின்னைப் பல
விதமாய்ச்சிழிரத்தஞ்சலமும்விழும். (௩௨)

அந்திரமாயிடைநாடிச் சிரத்திலேறி அப்புறத்தி னூடுசென்று
சபத்தைப்பற்றி, சுந்திரமாம்வாய்வுமங்கே சிறந்தினூடேச் சுறுக்கெ
னவேயிடையினொடு சூழ்ந்துகொண்டால், தந்திரமாய்திரேகத்தில்ப
தியுநோய்கள் சலமுடனேசிழிரத்தந் தொந்தத்தோடே, குந்தரமாய்
யுளவுகுந்துகொடுபேஞ்செய்யுங் குறிப்பறிவீர்சிரசூலைக் குணமதென்
னே. (௩௩)

சீர்பெரியநாகமென்ற வாயுதானே திறமான அஸ்திபென்ற நாடி
யோடே, பாரறியக்கடினமுறுவன்னியோடு பண்புடைய சிரத்திலங்
கேபதிந்துமோதும், வார்பெரியவாயுவங்கே பாலந்தன்னில் வகையா
னவிசைநரம்பைவளைந்துபற்றி, கார்பெருகிவருவதுபோ லுருகிச்சாய்
ந்து காதுதன்னில்வந்தடைக்குங்கருதிப்பாரே. (௩௪)

நாடியென்றால்திசைநாடி பத்துண்டாகும் நலமுடனே ஓர்விரலி
லிரண்டுநாடி, கூடிபங்கேஜவிரலுங் குவிந்துநிற்குங் குறிப்பறிவீர்கு
ருநாடிக்குறிகளெல்லாம், ஆடிநிற்கும் விரலஞ்சும் ஒன்றுக்குள்ளே
அதினுடையகுட்சநிலை வாதவீட்டில், நாடிநிற்கும்விரல்மூன்றும் உ
குவிப்பாய்க்கு சாதகமாய்நிற்கும்நிலைதன்னைப்பாரே. (௩௫)

பாரொன்றாலஞ்சுக்குநடுவதாகும் பற்றிநிற்கும்வரலாறுதன்னைப்
பார்க்கில், தீரென்றேபித்தத்தின் பின்னேநிற்குந் திசைநாடிபித்தமது
தானாய்நிற்கும், தேனலேவாதமென்று சொல்வர்மூடர் இருத்தியங்
கேபாற்வளவில் வெருத்திக்கேகுந், தார்கொண்டகுருநாடி தன்னைபா
ய்ந்தால்தன்மந்திரிபவனென்றுசாற்றலாமே. (௩௬)

சாற்றுகின்றபெருவிரலில் பூதநாடி சங்கையுடனுள்தூண்டிவா
தமென்க, ஏற்காமநடுவிரலில்பித்தமாகும் இசைந்ததிருவிரலதுவே
ஐயநாடி, கோர்த்தசிறுவிரலதுவே மரணநாடி குறிப்புடனேபாற்பள
வில்செகுடதாகு, மாற்கமில்லாக்குருநாடி பஞ்சநாகும் வளர்ந்துநிற்
கும்நேர்மைதன்னை மதித்துப்பாரே. (௩௭)

பேர்பெரியகுருநாடி குணமேதென்னில் பிரண்டுவரும்வாதத்தி
லட்டைபோலச், சிரறியமாயுமிகு இருமாய்த்தோன்றுந் தினவுசொறி
மிகுதிவருந்திரேகம்வாடுஞ், சூரறிபபித்தத்திலாமைபோலத்தோன்றி
டுகில்பித்தமதுசுழன்றுவானீர், கார்பெருகிவருவதுபோல் வேவுதோ
ன்றுங் சுதித்திடுகில்நீர்சுடுக்குங் கைகாலோயும். (௩௮)

சொற்பனத்தின்குருநாடிசிலம்போலாய்ச் சீறிநிற்குமாகில்சன்
னிதோன்றும், ஆற்பனத்தையூடுருவித்தமருமாகில் அசாத்தியமாமர
ணகுறிதப்பாதப்பா, காற்பனமேவகுருநாடி மின்னல்போலக் கழியும்
வயிர்ககடுப்பெடுக்குங் கைகால்வீங்கும், ஏற்பனவுமில்லையில்லை திட்
டஞ்சொன்னேன் இசைந்தகுருநாடிநிலைஇறங்கிப்போமே. (௩௯)

பாற்பளவில்குருநாடிப் பக்கம்பாயில் பாரித்துச்சிலேற்பனந்தா
னெதிரேமோதுங், கூற்பறவேகுருநாடிநேரேநிற்கில்குற்றமில்லாத
பித்தமிரண்டுஞ்சேருங், காப்புறவேகுருநாடிபின்னேவாங்கில் தப்பா
துவசாத்தியங்கள்தன்னைச்சாருங், காற்பளவேகுருநாடி சமனாய்நின்
றால் கல்லுடலில்வல்லுயிராய்க்கருதலாமே. (௪௰)

ஏற்றகுருநாடிதன்னை யிசைந்துபார்க்கி லிடையும்பிங்கலையுமே
யிசைந்துமாறி, மாற்றமில்லாச் சுழிமுனையைத்தானேபற்றி மாறிநிற்
குங் கத்தரிக்கைமாறல்போலச், சீற்றமுடன்வாதபித்தஞ் சிலேற்பன
மொன்றே திசைநாடிதிரிநாடி தானாய்நின்று, கோற்றசிறுகுருநாடிநி
லையைப்பார்க்கில் கோமான்றன்திருக்கூற்றைக்கூறலாமே. (௪௧)

அகாரமுதல்பத்தோறெழுத்துந்தானும் அஞ்செழுத்துமெட்டெழுத்தும்அதுவேயாகும், விகாரமுடன்நினவிலொளி யதுவேயாகும்விதர்ப்பமுடனாதார மாறுமாகும், ஒகாரமுடன்தத்துவங்கள் தொண்ணூற்றாறும் ஒந்துநிற்குங்குருநாடி யொன்றுபோல, சிகாரமெனுமஞ்சவத்தேமூலநாடிசிவசிவாயெனறநிலைதெளிந்துகொள்ளே. (௪௨)

ஒன்றுக்குமெட்டாதநாடிநேர்மை ஊடுருவித்தமரநிற்கும் உண்மைகேளீர், வன்றுதான்மதுவருந்துநேர்மைபோல வாதபித்தசிலேற்றுமத்தில்மதவுண்டாற்போல், என்றைக்கும்வாதபித்தம்நடுவேநிற்கும் மேறுவதுங்குறைவதுவுமில்லைசொன்னேன், கன்றுக்குப்பாலிறக்கும்பசுவைப்போலக் காத்துநிற்குங்குருநாடி காலைப்பாரே. (௪௩)

குருநாடிநிலையறியார் குருடரெல்லாங் கூட்டமிட்டுச் சாத்திரப்பேய்க்குரல்கள்சொல்வார், மருள்நாடிவாதபித்தஞ் சிலேற்பனமூன்று மற்றிசமேயென்றறியார்வார்த்தைசொல்வார், குருநாடிகுருநாடியாகக்காணும் கைமுறையாய்க்குருதொட்டுக்காட்டக்காணும், பெருநாடிசாத்திரத்தில்மயங்கிப்போவார் பித்தரேகுருநாடிபின்னல்பாரே.

வாதபித்தம்ரெண்டிற்கு நடுவேபாற்கில் மதவுண்ணும்வண்டதுபோல்மத்திசத்தில், போதமொருமூவிரலும் மூருவித்தாண்டிப் பூரணமாய்மூலமுதலுருவிப்பாய்ந்து, சாதமுற்றவிசகரம்பின் ஊடுசார்ந்து சந்திரமண்டலமேவிச்சாய்ந்துபின்னும், நாதமுற்றதுருநாடி யெங்குஞ்சுத்தி நடுவில்வரும்நேர்மைதனைநாடிப்பாரே. (௪௫)

நூலொன்றுந்தப்பாதுதொகையைக்கண்டால் நூதனமாய்ப்படித்தவர்கள்வறியமாட்டார், வாலென்றுந்தலையென்று மறியார்மூடர்வார்த்தையினால்மருட்டிவிப்பார்மற்றப்பேரை, சேலொன்றுமறியாத பொஸ்தகப்பேய் சிங்கத்தைநரியெதிர்த்தசெய்கைபோல, மால்கண்ட குருநாடியாசாண்சொல்லில் மற்றொருவரெதிரில்லைவழுத்துங்காலே.()

குருமுறையாய்க்குருநாடிதொட்டுக்காட்டி கூறுகக்குருநாடிக்கு சலுஞ்சொல்லி, திருமுறைபாய்மூவிரலில் செய்கைசெப்பிச் சித்தாந்தம்வேதாந்தமிடத்திற்காட்டி, மருள்நாடிவிரல்நாடியிரண்டுந்தாண்டி மாற்றமில்லாக்குருநாடிமதியுங்காட்டி, ஒருநாடிமூவிரலுமுருவிநின்ற உண்மையறிந்தவர்க்குநிகருரைக்கொண்ணாதே. (௪௭)

பார்பரமாய்க்குருநாடிபன்னிப்பாற்கில் பகருமிடைகீழ்மேலும் பஞ்சநேர்மை, தார்தரமாய்விரல்மூன்றுந்தன்னைப்பார்க்கில் சாதகமா

ய்ஒருவிரலுக்கஞ்சகாணும், நீர்மயமாய்விரல்மூனையும் இடமும்வாத
ம் நின்றநடுப்பித்தமெனநிறைந்துகாணுங், தீர்பதமேசிலேற்பனமது
வலமும்பின்னுஞ் சேர்பாற்கில்மூவிரலுமுச்சிரைப்பாரே. (௪௮)

ஓர்விரலில்முனையிடமும்வாதம்போலாம் உற்றநடுவிரலதுவுமது
போலாகும், சேர்பெறவேமூவிரலுமதுபோலென்னச் சிறப்பரமாய்நடுநி
லேயேபித்தந்தானும், வார்பெரியசிலேற்பனத்தான் வலமும்பின்னும்
வழுவாமல்மூவிரலுமப்படியேகாணும், பேர்பெரியகுருநாடி யெங்குந்
தானே பின்முன்னுய்நாடியத்தும்பொருளிதாமே. (௪௯)

வேறு.

உற்றதோர்குடலிற்கூறுஉறுப்புடன்விரவிநின்ற
முற்றுமேநோய்களெல்லாமுதிரவேதோன்றும்போது
வற்றுவாம்வாதபித்தஞ்சிலேற்றுமந்தன்னிலொன்றை
பற்றியேதோன்றுமென்றுபகர்ந்தனன்முனிவர்தானே. (௫௰)

மன்னியமுழங்கைபுக்கிமணிக்கடைதான்பிரண்டு
பின்னியேபிரிமுறுக்காய்ப்பிலத்துமுக்குணமுந்தோன்றி
சென்னியும்பிடருஞ்சுத்திதிசைதோறுங்கவர்போல்விசி
உன்னியேஒன்றநிற்குமெழுபத்திராயிரமுந்தானே. (௫௧)

உத்ததோர்வாதந்தன்னிலுறுதியாய்க்கீழுமேலும்
பத்தியேமுன்னும்பின்னும்பதிநறுவசைசவைச்சார்ந்து
சுத்தியேவிசையினூடேசுழிமுனைதன்னைநோக்கிந்
குத்தியதம்பூர்வீணைகுறியெனக்கொள்கையாமே. (௫௨)

நாடிடும்தம்பூர்தன்னில்நரம்பிசைநாலுதந்தி
கூடிடுந்தன்னைப்பற்றிக்குறியெனத்தெரிக்குமாபோல்
ஓடிடுமசைதநாடியுன்னியேபதியுமொத்துச்
சாடிடும்நாடிதானுந்தான்குருநாடிதானே. (௫௩)

நந்திக்குவெவ்வேறென்னநாதமும்பலமும்போலக்
குந்திக்கும்வாதபித்தமையமுங்கொள்கையொக்கும்
வந்திக்கும்விதங்களெல்லாம்வகையெழுதம்பூர்நாதம்
விந்தைக்குள்விதங்கள்நாடிவிபரந்தானறிந்துபாரே. (௫௪)

மந்தமுஞ்சுரக்குச்சாய்ந்தமதித்தெழுகோபமோகம்
இந்நிலைவநாதம்போலயிசைக்குமஃனுடிகண்டாய்
முந்தியவாதநாடிமழுதுமேசாந்தமாகும்
மந்தமாம்பித்தநாடியதிர்ந்திடுஞ்சேற்பனமதாமே. (௫௫)

மந்தமுஞ்சுரக்குத்தானேவகையுடன்வாதபித்தம்
முந்தவேசாந்தமோகமுற்றிடில்வாதசிலேற்பம்

பந்தமாம்பதமுஞ்சார்ந்தம்பகிர்ந்திடில்சிலேற்பனபித்தம்
விந்தமாங்கோபமோகம்விளங்கிடில்பித்தசிலேற்பம். (௫௬)

ஈளினமாஞ்சார்ந்தகோபம்நாடியில்சிலேற்பனவாதம்
விளினமாமதிர்ந்தசார்ந்தம்மேவிடில்பித்தவாதங்
குளினவேகூடிமேவுங்குணங்களைப்பிரித்துப்பார்க்கில்
தெளினமாம்நரப்பிரேணுசைசென்னியுங்கூர்ந்துபாரே. (௫௭)

இப்படி ஒன்றுமூன்று அஞ்சுடன் ஏழுமாகில்
செப்பினோர்திசையில்நாடிசெயல்பெருங்குணங்களெல்லா
மொப்புடனுரைகள்செய்தோர்மூலகினிலறியவேண்டி
தப்பிலாபொதிகைவாழும்அருள்முனியுரைசெய்தாரே. (௫௮)

குருநாடி ஒன்றுந்தானேகுறிப்புடன்பதிதானுகுந்
திருநாடிசொல்லக்கேளீர்சிவனயன்மாலுமாகும்
வருமோடில்பஞ்சநாடிவகையுடைந்தெழுத்தஞ்சாகுந்
தருமோடிதாணிசத்தநாடியிலுரைத்தவாறே. (௫௯)

இப்படி திசையில்நாடியெழும்பி யயிமையினூடு
சொற்படிகலையுமாறிசுழினையுஞ்சுத்திமாறி
முற்படிவினையினோடேமண்டலமுட்டியெங்கும்
அத்திசிங்கலைவகாந்தாரிஆகியபுருடனுமே. (௬௰)

ஆகியநாடிதானுமருங்கொடுமிரண்டுமாகில்
ஏகியேமெழுபத்திராயிரமெனும்நரம்பைச்சார்ந்து
மூகியேவினையோகாக்குமுடிமண்டலமுமேவி
கூவியேபம்பரம்போல்குறிகியேயிசைலைப்பாரே. (௬௧)

வேறு.

குருநாடிதிரிநாடிகுறியைமேலுங் கொண்டபஞ்சநாடியென்றுஞ் சத்தநாடி, பெருமோடியானதொரு திசையாகநாடிப் பிரிவுடனேஐவகையும்பேணிப்பார்த்து, திருநாடியானதுவேதிறமாய்த்தேர்ந்துச் சித்தாந்தக்குருநாடிசீரைப்பார்க்கில், கருநாடிகுருநாடியாகக்காணுங் கண்டவர்க்குமெய்ஞ்ஞானங்கருதலாமே. (௬௨)

பம்பரம்போல்குருநாடிசுிறுகிறென்ன பற்றிநிற்கும்வாதபித்தம் நடுவில்தானே, அம்பாம்போல்குமிறியெழும்வாதபித்தம் ஐயமெனும் நாடிமுதலாடியோடி, கம்பமுதல்மண்டலங்கள் மூணுஞ்சுத்திக் கத்தரிகைமாறலெனக்கட்டச்சேர்ந்து, தம்பமுடன்வாதபித்தப்நடுவில்வந்துசமரசம்போலாடிநிற்குந்தன்மைதானே. (௬௩)

தொண்டையிலேகோழிநங்குங்குரலைப்போலச் சூட்சமுடன்சயமற்றுச்சுகமாய்ப்பார்க்கில், கொண்டெனவேவாதமது நாடிதானது குறிக்குரலைப்பார்த்தாலுமதுவேவாதம், மண்டையிடிக்காரதலைகளை

த்தாக் ல் வகையுடனேதெறிப்பதுதான்பித்தமாகும், கண்டையிலே வேலைதனைபாம்புசென்று கருதியுடன்நின்றுப்போல்தோன்றுஞ்சேட்பம். (௬௪)

முன்னூரைத்தனுகளெல்லா மறிந்துசொன்னேம் முதுமொழிதான்கற்றவர்களறியலாகும், நன்னூலாங்குருநாடிதோய்ந்தபேற்குருடுவெளிபோல்திறந்துசொன்னேம் நாடியெல்லாம், பின்னூலாய்வொருகோடிபிரித்துச்சொன்னேம்பெருநூலையாருய்ந்துபேசப்போகா, பென்னூலைகுருநாடிதேர்ந்துசொன்னேம் பொருளதனையேயறிந்துபோற்றிக்கொள்ளே. (௬௫)

குருநாடிவாதத்தில்நிற்கும்போது கோழிநடையன்னமயில்குறியமென்ன, வருநாடிபித்தத்தில்சுற்றிநிற்கும் வளராமையட்டைபெனவகுக்கலாகும், திருநாடிசிலேற்பனத்தில்சேரும்போது தெறித்துவிழும்விட்டிலைப்போல் தெளிந்துகாணும், பெருநாடிசாத்திரத்தில்அலையவேண்டாம்பிரித்துடனேயறிந்துபொருள்பேணிப்பாரே. (௬௬)

மரணமதுஅறிவதற்குக்குறியைச்சொன்னேம் வழுவாதவிஷநாரம்புகுளிர்ந்துதானே, விரணமெனும்பொறிகளெல்லாந்தளர்ந்துமெத்தவிசநாம்புதான்குளிர்ந்துவிரைத்துவாங்கி, நாணமெனப்பல்கடித்துமணியும்கட்டுநாவுலர்ந்துமூச்சடர்ந்துவிங்கிக்காணுங், தூரணமெனவந்தபித்தஞ்சிலேற்பமெல்லாந்துடித்துவிழும்விட்டிலைப்போல் துடிக்குந்தானே. (௬௭)

சன்னிபெழும்போதிலந்நாடிமூன்றுஞ் சாதகமாச்சுழல்வண்டுதண்ணீர்மீதே, உன்னியதுபாபரத்துச்சத்தம்போல ஓடிநிற்கும்வாதபித்தச்சிலேற்பனமெல்லாங், சன்னியதுசாதகமாய்வருமேயாகில் கதிப்பாகும்பம்பரம்போல் வாதபித்தம், பின்னியதுவிட்டிலைப்போல்தெறித்துவிழில்பேசிலகில்மரணமென்றுபிரித்துச்சொல்லே (௬௮)

நீர்மேகமானவற்கு நாடிதானும் நிண்ணயமாய் நாடியெல்லாம் பொன்மைகெட்டு, கார்மேகம்போலவந்தபொறியின்மீதே காண்டுவிழுப்புழுப்போலேயோடிக்காணுஞ், சீர்மேகஞ்செனித்ததென்றால்சுருதிநூல்போல் சிறிநிற்குங்குருநாடி சேர்ந்துதானும், போமேகம்ஞெருடுத்திடுகில்வாதபித்தம்பின்னியதுதுடித்துவரும்பிறிவுதானே. ()

கெற்பிணிக்குவாதபித்தங் கிளர்ந்துகாணும் கிருணியதிசாரமென்கல்தளர்ந்துகாணும், மூற்பவித்தசடமீனைகாசரோகம் உற்றிடில்சி

லேற்பனத்தன்மீருக்காணும், அற்பமென்றுநினையாமல் நாடிக்கோர்வை அகமகிழ்ந்துபார்த்திடிலோ அறிவுதோன்றும், சொற்பமுள்ள நாடிநிசைபறியவல்லார் செகதலத்திலமெத்தவுண்டு தெளிந்துபாரே.

சீழ்ரோகமானாலும்வாதபித்தம் செரிந்துநிற்கும்நாடிபலசிரித்தானே, விரோகங்கிரந்திருட்டமானபேற்கு மீறிநிற்கும்பிக்கமென்றுவாதமென்று, தாரமொடுவாதரோகமஞ்சதாகும் சாற்றிடுகில்வாதபித்தர்தளர்ந்தானும், பாரோகம்வாயுவென்றல்வாதங்காணும் படிப்படியினின்னதென்றுபகுத்துபாரே. (௭௧)

உற்றதொருகபந்தனக்குச்சேரப்பித்தம் உறுதிபெருமிக்கலுக்குசிலேற்பனவாதம், மற்றதொருசாந்தனக்குவாதபித்தம் வகையான கணைதனக்குபித்தவாதஞ், சித்தமுறுபதரிக்கும்பித்தமாகுஞ் சிராகவிரேசனமாந்தனக்குபித்தம், குற்றமிலலைபிதுமுறையைப் பகுந்துசொன்னோம் கும்பமுனிஅருள்தனையேகூர்ந்துபாரே. (௭௨)

கரணிகத்தின்வாதமென்றால் சிலேற்பனவாதம் சுறனஞ்சூலையானுஞ்சிலேற்பனபித்தம், விரணமுடன்மனமுரைக்கும் வாதபித்தம் வெச்சனவாம்பீனிசத்தில்சிலேற்பனபித்தம், தூரணமுடன்நீர்ப்பாடுகொளப்பாடானல் சொல்லுமதுநாடியெல்லாந்தளர்ந்துகாணும், தரணமதுபாம்புவிஷங்கொண்டபேர்க்கு நாதுவெல்லாங்காணமல் தளர்ந்துபோமே. (௭௩)

கரணிதத்திற்சுரோணிதத்தின் வாதமாகில் கதித்துநிற்கும்பித்தமதுசேற்பமாகும், விரணமொடுவெடிசூலைமண்டசூலை விருப்பமுடன்விஷநீர்கள்வறட்சிகாத்தல், சரணமுடனமூக்கடைப்பு தொந்தரோகஞ் சதையடைப்புச்செவிப்புத்துபற்பரோகம, மரணவரும்போதளவில்போகாதென்று வயித்தியரேயிந்நூலைமகிழ்வித்தோமே. (௭௪)

முன்னாளில்செய்தகுறை கடினத்தாலே முறையானதொகுப்புவாதமுறைறமைகேளாய், நன்னாளில்சிலஇரும்புமுற்பாவந்தான் நாடிவந்தகாமத்தால்சிலந்திவண்டு, இன்னாளில்விஷமூச்சி சேரத்தானும் இசைந்தவிஷஅட்டையுடஎரும்புதானுந், தன்னாளில்மிகுந்தபுழுவிருந்தசெங்கோன் தான்கடித்தவிஷதோஷம்சாற்றக்கேளே. (௭௫)

கால்தனிலேகடித்தாக்கால் திமிருண்டாகுங் கைதனிலேகடித்தாக்கால்விரல்குறுகும், மேல்தனிலேகடித்தாக்கால் தடித்துக்காணுமெய்கழுத்தில்கடித்திடுகில்பொரிந்துகாணுஞ், சேல்பெரியதலைதனில்கடிக்கப்புண்ணாம் சிறந்தவிருதுடைதொடுகில் பொரிந்துகாணும், தோல்பெரியவிஷப்பூச்சிகடித்ததோஷஞ் சொல்லிடுகில்குறைநோவுதொகுக்கலாமே. (௭௬)

பழவினையால்குறைமூக்கவந்ததோஷம் பாரிலுள்ளோர்பரிகாரஞ்செய்வதேது, உள்வினையாலூடாடிச்சொல்லவந்த உகமையதுபதியாமல்லைக்கஞ்செய்தால், எளவினையூட்டறிவதில்லை கூட்டிமனமாகுங்கறறிந்தபெரியோர்கள்கண்டுசொன்ன, ஆளவினையால்நீயறிந்துமென்னகண்டு அரனருளை ஆராலுமறியதாமே. (எஎ)

விரல்குறுகும்கால்திமிரா விஷம்போலேறும் மெய்யருந்ததலைமுழுவெளுக்குமேனி, பரபரெனத்தேகமெல்லாந் தடித்துக்காணும் பதகரிப்போல்வெடித்துமிகப்புண்ணுமாகுஞ், சாசமுடன்சொறிகரப்பான்போலேதோன்றுஞ் சந்தையரும்விந்துகெடுத் தடித்துவீங்கும், நாருலகிலிச்சைசெய்யவேண்டாஞ்சொன்னேன் நாடிவந்தகுன்மநோயுநவிலலாமே. (எஅ)

கற்புடையமங்கையரை விருப்பமுற்றுக் காயமறுந்திட்டுமிகக்காரஞ்செய்த, முற்பிறழயாக்குறைசெய்தகருமத்தாலே முழுதுமதுபாவந்தாஞ்சிலந்திபோல, தப்புடனே தொடர்ந்துவந்தூடித்ததோஷந்தொல்லுலகிலாராலுந் தலைக்கப்போமோ, நற்புடனேயிதுவறிந்துபரிகாரங்கள் நன்மையுடன்வந்திறங்குந்தவங்கள்செய்யே. (எகூ)

காசுபோல்திரேகமெல்லாந் தடித்துக்காணுங் கணத்துநடுவுளக்குளித்தடித்துச்சுற்றும், ஆசுபோல்நரம்பெல்லாம்வெந்துபோகும் ஆக்கையுறுப்பதுவுநிலவசந்துபோகும், கூசமதுகால்கரங்கள் நடக்கில்மெத்தக் கொடியநிறவிஷகரப்பன்கொள்கைபோல, பேசுவதுமுற்பூனையால்மிகுந்தபாவம் பெரியோரைத்தூஷணித்தபேதந்தானே. (அ௦)

நல்லோர்கள்பெரியோர்கள் நடக்குஞ்செய்கை நாட்டிலுள்ளதுற்சனர்கள்நகைத்ததாலே, பொல்லாதவிஷகடிநீர்புக்கும்பொன்போல் புதுமையுள்ளதிரேகமெல்லாங் குட்டம்போல, செல்லாதகடிவிஷங்கள் குன்மப்பாண்டு தீராதகற்மவினையாகும்பாரு, எல்லாருங்காணவிதுபுவியின்மீதே இணங்கிவந்தசடிவிஷங்களியம்பலாமே. (அக)

ஆறிவார்பெரியோர்கள்செய்கையெல்லாம் அபுரூபமானபொருளறிந்ததாலே, வைரமியபேரறியவுலகமெல்லா முடல்நகைத்துசிதக்கவென்று அவரையேப்பார், சிரறியார்சிறியோர்கள் பெரியோர்தம்மைச் சிரித்துநகைத்திட்டவிந்தக்கர்மந்தானே, நேரறியாவிஷகடிநீராகவந்து சேர்ந்தபலவிதமானநேசந்தானே. (அஉ)

உலகுதனில்செவிடூமை குருடுதானும் ஒழுக்கமில்லாசப்பாணிமூக்கில்லாதான், நலகுமதுவிஷசடிநீர்குன்மப்பாண்டு நாற்றிவரும்பெத்தயருகவுசியீலை, பிலகுமதுபெரியோரைகற்புள்ளோரைப் பேதமில்லாசிவஞானம்வழியுள்ளோரை, துலகுமிவர்தம்மைமிகத் தூஷணித்தாக்கால் துற்சனர்க்குஇந்நோயைத்தொகுக்கலாமே. (அங)

வன்னியேமிகுந்ததானும்வாயுவைநெருக்கும்போது
உன்னியேவுதரவிம்மியுறுகுடல்வெந்துபின்னும்
பின்னியேயங்கசூலைபெருந்தடனுதரஞ்சாய்ந்து
துன்னியேவாய்வுமோதஞ்சரோணிதங்கெடுதியாமே. (௮௪)

கண்டத்திவ்வாய்வுபுக்குக்கபாலத்திற்சூழ்ந்துகட்டி
துண்டத்திற்பித்தவாய்வுதள்ளியேசாய்ந்துநின்றால்
விண்டித்தகாலம்பற்றிவின்னியேசிரசுமுற்றும்
கொண்டுற்றசரோணிதவாதம்கூறினேன்குறிபிதாமே. (௮௫)

நல்லதோர்நாடிதானுமிடைவெட்டுசுழியும்பற்றிச்
சொல்லியகுய்யத்தினூடுஞ்சூட்சமாம்வீணையோடு
வல்லபச்செந்துவன்னிவாய்வொடுகெபமுஞ்சேரில்
சொல்லியேமருந்துஞ்சொன்னேன்சேர்த்திடும்தங்குரோகம் (௮௬)

அக்கியேயெரிந்துசூடுமோதாரமாறும்பத்தி
புக்கியேபுறம்புதானும்பொன்மயக்கெட்டுதாது
தொக்கியகபாலமுட்டிதுண்டமும்பறந்துமேவி
சக்குமாஞ்சனிரோகங்கள்கருத்துள்ளோர்கண்டுகொள்ளே. (௮௭)

தாக்கிய அன்னந்தன்னிலசற்றிபவாய்வுனூடே
நோக்கியவன்னிதானும்துவளவேனுநாஞ்சார்ந்து
திக்குமாமலமுங்கட்டிச்சிறுத்தநீர்சுவரவாகில்
வாக்கியவேதஞ்சொன்னேமயக்கமாம்லட்சையாமே. (௮௮)

வேறு.

சங்கையில்விஷகாரப்பன்வருமாறேது சாரமுடன்கிறமியுமுந்த ன்மையேது, பொங்கியங்கேயூனுருகுங்கிறுணியேதுபூராயமானதொருபவுத்திரமேது, தங்குமுளமூலமதுதளர்வதேது தாராளமாய்மலமுந்தளர்வதேது, கங்குலதுபோல்வருத்துங்காந்தலேதுகருத்துடனேயிந்தவகைக்கருமங்கூறே. (௮௯)

உட்டினமேஅதிகம்வரு மிந்திரிபோகத்தா லானுருகியத்திபிலே வேவுகொண்டு, நட்டணமாய்வெந்ததொருமச்சைதன்னில் நாட்டமிட்டகிருமியதயனுருப்போது, மட்டுடனேகிருமியெல்லாம்பறந்தங்கே றிவகையுடனேமாங்கிஷத்தைதுளைத்துமேவும், திட்டமுடன்விஷகாரப்பான் பறந்துமேலே தினவுடனே பரபரத்துச் சொரியுண்டாமே. ()

சுக்கிலந்தானுஷ்டினத்தால் வேவுகொண்டு சுதமானவலமதுதான்கட்டுபெட்டால், அக்குலத்தில்மலமதிலே நாற்றமுண்டாம் அழியவ்

கேவெந்துரிவரும்போது, சிக்கிமலந்தான்புழுத்துக் கிரிமியுண்டா ந்திவணங்கள்சென்றதினால் கிரிமியெல்லாம், புக்கி அங்கேபார்த்ததிரி ச்சரீரமெல்லாம் பரபரத்துணத்தோருப்பசனையாமே. (௬௧)

வபல்தனிலேபூனை மண்ணைத்தானே வருந்திபதுபுத்துப்போல வத்தையாகும், பயல்மொழியீர் நிரோகத்தில்கிரிமிதானேபரந்துரிகு ட்டப்போல்பள்ளிக்காணும், மயலறவும் கிரிமியுந்தா கடந்துபுக்கில் மேனிபதுசாசகிரன வெடித்துப்புண்ணும், கயல்பெருகுங்குழல்பட வீர்சொல்லக்கேளீர் கரகரத்துசொரிபெருகும்கரப்பன்தானே. (௬௨)

கிரிமியால்வந்ததோஷம் பெருகவுண்டு சேட்கிலதின்பிரிவுதனை கிரமமாகப், பொருமிலரும் வாய்வெல்லாம் சிரிமியாலே புழுக்கடிப் போல்காணுமதுகிரிமியாலே, செரிமிவரும்பவுத்திரங்கள்கிரிமியாலே நிரேகமதில்சொரிச்சுட்டம் கிரிமியாலே, துரிமிவரும் சரோணிதங் கிரிமியாலே குட்சமுடன் கிரிசைப்பால் தொழில்செய்வீரே. (௬௩)

பவித்திரந்தான் வருங்குறியைப்பகரக்கேளீர் பாரிலுள்ளஉஷ்டி னத்தால்மலந்தான்சிக்கி, குவிந்துநின்றுகிரடக்கிக் கொளிகையாலே நொண்டிறங்கி சிருநாதன் கிருமியாலே, தவிர்ந்திருக்குங்கிருமிசென் றுமூலந்தன்னில் தட்டகத்தின்தணைமுதல் குத்திருகும், குவிந்திரு க்குமுதரமட்டு மலர்ந்துநின்று குழங்குழலாயரிகுமதன்குறியதாமே.

பத்திநின்றகிரிமிசென்று அறிந்ததாலே பவுத்திரந்தான்பிலக்கா யின்முள்ளுப்போலே, குத்தடமே நொந்துளைத்து கிரிமியுண்டாங் கொப்பளிததுச்சிழுரத்தஞ் சலமுண்டாகும், தத்துவமுமமர்சிறுது நாளிலேதான்தவழுமதுகிரிமியெலலாந்தட்டில்புக்குஞ், சுத்திநின்றமூ லத்தில்முளையேபோலத்தோன்றிநிறமிருத்தியினால்சலமுண்டாமே.

குட்டமது விஷகரப்பான் விஷநீர்குலே சரோணிதத்தால் தாது கெட்டுதுடிப்புண்டாகும், மட்டறவேகிருமிசென்று மருவும்போது வ கையாய்கிருமியுடவிஷநீர்சென்று, குட்டமுடன் நிரேகமெல்லாம்பற க்கும்போதகுழிகுழிபாய்க்கிரிமியினிற்கொள்ளும்புள்ளி, சட்டறவே கிரிமியுடநீருல்வந்த சகலகுஷ்டம்விஷகரப்பான்சாற்றலாமே. (௬௬)

கேளுமினிகிரிமிவந்த கிருணிலைத்தான் கிறுபையுடன் மூலத் தில் வேவுகொண்டு, நாளுமதுகிரிமியதின்குடலைசுற்றி ரத்தமுண்டா

ஞ்சுரோணிதத்தால்வலமுங்கட்டி, மீளுவதுவாய்வுசென்றுவிரவித்தா னும் விரவியங்கேகலந்திருக்கில்கிரிமியெல்லாங், கோளுமதுபலவித மாய்க்கழியும்பாலக் குடிகெடுத்தகிரிமிசெய்தகிருணிதானே. (௬௭)

சுக்கிலத்தைத்தானரிக்குங்கிரிமிசென்று துமச்சையுடன்பரபர த்துச்சொரிந்தலூறும், சிக்கிமலஞ்செரித்துவிழுங்கிரிமியாலே சீரான மூலமெலாமழுக்கிப்போகும், தொக்குநின்றவிஷநரம்புவீணர்தண்டு சூழ்திருககுங்கிருமிசென்று துன்னித்துன்னி, எக்கிநின்றபிரமேக மெழும்புந்தானே. (௬௮)

விதமுடையவன்னியொடுகொலுங்கூடி வீரானபிடைநாடிகலையுஞ் சுத்திப், பதமுடனேசுழிமுனையில்நியுங்காற்றும் பற்றிடிக்கில்தங்கத் தில்பதிக்கும்நோய்கள், இதமுடனேசிழிரத்தம்சலமும்வீழு மிருகண் ணில்பூனையிலைசந்திருக்கும்நோய்கள், குதமுடனேகுடோரியதுசெய் யுஞ்சிலே குதரியிதுகாமன்மிகைகூறினேமே. (௬௯)

தானுறுஞ்சிலையைப்போன்றுதயங்கியசிலையைப்போல
ஊனுறுவுடம்புக்கெல்லாம்வொத்திடநரம்புசிர்க்கும்
கானமாமாராதரங்கலந்துமேபவனிதன்னில்
தானமாமேகநீரைமலங்கெடத்தணிப்பதாமே. (௭௰)

மலங்கிடக்குடலைச்சுற்றிமண்ணுமுச்சந்துளேக்கிப்
புலமரக்குடிலைகமேலேதாக்கியேயபானம்நோக்கும்
நலம்பெறநரம்புதானும்நரம்புக்கீழ்நரம்புபற்றிச்
சலம்பயிலூறிவீழுந்தன்மையில்விழுகும்பாரே. (௭௧)

குருநாடிமுற்றியது.

ஆ செய்யுள் - ௭௱௬.

---

அகத்தியமுனிவர்

## சூடாமணி கயறு சூஸ்திரம்.

காப்பு.

கமலக்கைகமணிக்கையில்கயறுசூஸ்திரம்
விமலனேநோக்கியேவேடமாமுனி
திமிலமாய்பிணியதுசேரச்செப்பியே
அமலனுமுனிக்குமுன்னருளிச்செய்ததே. (௧)

வாசவன்றேவருமாமுனிவோர்களுந்
தேசமதிந்திடச்செப்பிடுஞ்சூஸ்திரம்

ஈசனேகரிமுகாயிக்கயர்நூலுக்கு
மோசமில்லாமலேமுன்வந்துகாப்பதே. (௨)

## நோயின்சாரம்.

மணிக்கடைநால்விரல்தள்ளிவன்மையாய்
தணிக்கிடைகயறுபோட்டளந்துபார்க்கையில்
கணித்திடும்விரல்களைகண்டுசொல்லவே
பிணித்திடுநோய்களைபிரித்துரைக்குமே. (௩)

குறைந்துவிரக்கிடையிசைந்துகாண்கிடில்
உரைந்துவெண்பிணிவுடப்பிற்சார்ந்திடும்
நிறைந்தகாலுங்கையுடல்நெருஞ்சிடும்
நிரைந்தவபற்றினில்திரளுங்குன்மமே. (௪)

(௯¾)

ஒன்பதுமுக்காலுகந்துகாண்கையில்
என்பதுபுரையபரையாப்பேயெய்திடும்
வன்பொடியிருமலும்வறட்சிதோன்றிடும்
பின்பதோர்வருஷத்தில்பிளவைதோன்றுமே. (௫)

(௯½)

ஒன்பதுஅரையதுஉகந்துகாணகையாம்
வெண்பெடுஉடம்பெல்லாம்வெளுத்துச்சூடதாம்
துன்படும்யிருவிழிகாய்ந்துமுள்சுரம்
நன்பதுமசனம்விட்டேலுவத்துமே. (௬)

(௯¼)

நீட்டியஒன்பதுகாலுகந்துதிண்ணமாம்
ஈட்டிலசிருசரீரித்துவிழ்ந்திடும்
சூட்டியகண்விழிதுயிலுமில்லையே
வாட்டியபிணிசம்வந்துதோன்றுமே. (௭)

(௯)

கழிந்திடும்ஒன்பதுவிறக்கடைகாண்கையால்
வழிந்திடுஞ்செவிலுள்ளகுத்துமந்தமாம்
குழிந்திடுங்குருக்கினில்நேரைவாயவே
அழிந்திடுமிருதலையயர்ந்துவிழுமே. (௮)

(௮¾)

எட்டினில்முக்கால்காணில்யிலக்கிபவுடம்புகாயும்
நொட்டியகுட்டம்போலேசிலவிஷம்வவுந்தோன்று
முட்டியவயத்தினுள்ளேமுளைபோலவாய்வுகுத்தும்
வெற்றியகண்வாய்கைகள்வெளுத்திடும்பித்தரோகம். (௯)

விட்டேனிருமலும்வெதுப்புமேலெலாம்
சிட்டிடுஞ்சிலேயுக்கிரர்திகாணுமே. (௰)

அவ

காட்டியயெட்டொடுகொல்விரற்கடைக்
கூட்டியபித்தவாய்குரைசுரமெயில்
நாட்டியபிரமியம்நவிலுங்காமியம்
வாட்டியசிரசில்நோய்வருமோரூண்டிலே. (கக)

அ

எட்டெனுர்விரக்கடைவயதமாறிடில்
கற்றெனும்வயற்றினில்கனைத்துடலவிக்கமார்
துட்டியபீனிசந்தொண்டைனோதலால்
தொட்டியவயற்றினில்குணமிதுவாமே. (கஉ)

எஒ

வழிசில்முக்கால்காணில்எழும்பிடும்கீழேமூலம்
தாழ்வதுரெண்டுக்காலுந்தலைபாடிமதத்துநிற்கும்
தோளதுவருஷமாண்டாய்தோன்றிடுங்கண்டமாலை
நாளதுசெல்லச்செல்லநாசியில்ரத்தங்காணும். (கங)

எஉ

வற்றமேழுமையுங்கண்டால்ளலும்பதுஉருகிக்காணும்
காற்றதுவயற்றில்விம்மு முகமெலாமெரிவுகாணும்
மூற்றவளூற்றுக்கண்ணுமுடம்பெல்லாங்காச்சலுண்டாம்
அற்றியகாலில்நோவுத்துடையில்விப்புறதியாமே. (கச)

எவ

வழுதுகாலுங்கண்ணுநீடேப்பினில்வலியுமுண்டாம்
பிளவுஞ்சிரசில்பித்தமிகுதிகொண்டிருக்குங்கண்டாய்
குனிதுவிணையிலுமேலதுடறவேபாண்டுமுண்டு
ஆளதுகாலுங்கையும்அசந்துநித்திரையும்பாழாம். (கரு)

எ

நிட்டமாஎழுகண்டால்சிரசிலேபித்தமேலு
நட்டமாம்வாயில்ரத்தம்நவிலுறச்சயமுமாகும்
மட்டவிழ்காலுங்கையும்வந்திடுஞ்சிலந்திதோணும்
உட்டிணமிகுதியுண்டாய உலர்ந்திடுமலம்விழாதே. (கசு)

சுஒ

ஆறுடன்முக்கால்கண்டால்அண்டத்தில்வாய்வுண்டாகும்
தெருமேகங்கள்ரெண்டுஞ்சிவந்திடுமேபக்கமுண்டாம்
கூறிடும்வருஷமுன்றில்குருக்தரீரடைப்புண்டாகும்
வீறிட்டகைகால்நோவாம்விரைத்திடுமுகத்தில்தானே. (கஎ)

சுஉ

அன்புடனுறினிலரையுங்காணவே
வெங்பியவுடம்பெலாம்வெதுப்புத்தாகுமாங்
கும்பியும்பொருந்திடுங்குத்தல்மேலெல்லாங்
வம்பினிலரைத்திடுமரணதேகமே. (௧௮)

அவ

அன்னமேஆறுடனமர்ந்துகால்கண்டால்
முன்னமேமூலமாமித்திரகிருணியாம்
பன்னமேதுயிசில்லாப்படுங்கழிச்சலாய்
வன்னமும்வேரறலாம்வலதுடைவினையே. (௧௯)

சு

ஆறதாமங்குலமானதில்கண்டிடில்
தேறுதலன்றிபேசிலேற்பனம்நெஞ்சினில்
ஊறவேஅடைத்திடும்புள்ளமயங்கிடும்
மாறும்வேறுகவேமரணம்வந்திடும். (௨௰)

ருஞ

அஞ்சுடன்மூக்காலளந்துபார்க்கையால்
மிஞ்சியேசன்னிகோப்மிகுதியாகிடும்
அஞ்சவேமயக்கமும்அஸ்தியாகிடும்
கஞ்சியேகுடித்திடில்காலன்போலுமே. (௨௧)

ருஉ

அஞ்சரைகாண்கையாலமர்ந்ததோர்ஞெயெலாம்
மிஞ்சியேபிரசினில்விஷமதாகிடும்
பஞ்சிபோல்மூக்கும்வெண்பல்கரிகிடுந்
தஞ்சமாம்பத்துனுள்சாவதின்னமே. (௨௨)

ருவ

அஞ்சினில்கால்விரலதிகங்கண்டிடில்
மிஞ்சிபொற்பாதமும்மெய்யெலாங்குண்ணியே
தஞ்சவர்போலவேதுயிலும்பொருந்திடும்
வஞ்சமும்ஆறுனுள்மரணமுங்கிட்டுமே. (௨௩)

ரு

அஞ்சதான்விரலதுஅளந்துகாண்கையால்
மிஞ்சியேஉடலதுவெளுத்துகுளிர்ந்திடும்
தஞ்சியசிலேற்பனந்தடுத்துத்தொண்டையில்
நஞ்சிபோலடைத்துடல்பதரியேசாவதே. (௨௪)

சஞ

பால்விரல்மேலேமுக்கால்நவின்றிடக்கண்டிடில்
ஆவுடல்தன்னையாமறிவதுக்கெட்டிடும்

நாவுடன்வறண்டிடும்நடுநெடுங்கிடும்
சாவதுபேழுநாள்தன்னிபல்பாருமே (௨௫)

சறு

கன்னதிலுரைநாடிகாண்கையால்
பன்னதிபோலுடல்பத்திவீங்கிடும்
வன்னெதிகண்களும்வளைந்துமுள்விழும்
அன்னதினன்பதிலாகுஞ்சாவதே. (௨௬)

சவ

நாவுடன்கால்கண்டால்நடுக்கமுமாயுல
காலுங்கைஅசந்திடுகெருக்குமேன்முகம்
சாலவேவெடுமூச்சதுதாண்டிவாங்கிடும்
ஏலவேசாவதுரெண்டினில்சாவதே. (௨௭)

ச

தேட்டியனுலதுதிட்டமாக்கண்டிடில்
வாட்டிபேழுகத்தினில்மயங்கிடுங்கண்களும்
மீட்டியகாலுடன்விக்கமுமுற்றிடும்
தேட்டிபசாவதுதின்னமுமஞ்சிலே. (௨௮)

கக

நண்ணிப்பதிரென்றநாடிக்காண்கையால்
எண்ணியமருந்துடவியம்பவில்லையே
அண்ணல்செய்விதியன்றிஅளவதில்லையா
நண்ணியகாலனுநமனுமில்லையே. (௨௯)

வெண்பா.

இந்தமுறைமுனிவனியம்பினுரெந்தனுக்கு
சுந்தரம்சாஸ்திரத்தில்சூக்ஷமா—மிந்த
தாரணியுள்ளோர்நோய்குணங்கள்தானறியவேண்டி
அானுரைத்ததென்றேஅறி.

சூடாமணிகபருசூஸ்திரம் முற்றியது.

ஆக செய்யுள் ௩௱௩௯.

அகத்தியமுனிவர்நாடிச்சோர்வை முற்றிற்று முற்றும்.

இரண்டாவது

# திருமூலநாயனார்

## நாடிகூறுகின்றார்.

மூலநாடி-எ௨ ௲-த்தில் தசநாடி.

உற்றவிவர முறுதிபாமெங்கந்தி, பற்றியமூலம் பகர்ந்திடுகோடிநான், எற்றியேஎண்ணிடி லெழுபத்திருயிரம், மற்றதிற்பத்து வன்மைநாடியே (௧௮)

தசநாடியின் தசவாயும் திருநாடியும்

௩ சக்கரமும் ௩-மண்டலமும்.

வளமானபத்தில் வழங்குதசவாயு, உளமாயிடையின் சுழிவென மூன்றுண்டு, களமானசக்கரங்காட்டியதாறுண்டு, தளமானமண்டலந் தான்மூன்றுபாருமே. (௧௯)

பாருமிடைகலை பிங்கலைமாரியே, தாரும்பெருவிரற்காலொடுநோனேறி, காருங்கழுத்திற்கபாலவரைநின்று, வாருமிடமாய் வலக்காஞ் சாருமே. (௨௰)

வலக்கரந்தன்னில் வளமானபிங்கலை,நிலைக்கவிடக்கரநின்றதிடைகலை, துலக்கநடுமையஞ் சுழுமுனையோடுமே, பிலக்கவிவைமூன்றுற்பிறந்ததுதாதுவே. (௨௧)

மூவகைநாடியில் மூவகைத்தாது.

தாதுமுறையே தனியிடைவாதமாம், போதுறுபிங்கலைபுகன்றது பித்தமாம், மாதுசுழுமுனைவழங்கிடுமையமாம், ஓதுமுறைபார்த்துணர்ந்தவர்சித்தரே. (௨௨)

மூலவகைவாயுநாடி.

உணர்ந்தவபான னுறுமந்தவாதத்தில், புணர்ந்தபிராணன் புருவந்தப்பித்தத்தில், அணைந்தசமான னடக்குங்கபத்தோ, டிணைந்திவை மூன்றுக்கொடுத்தகுறியொன்றே. (௨௩)

மூவகைநாடியறியும்விவரம்.

குறியாய்வலக்கரங் குவிந்தபெருவிரல், மறியாவதன்கீழ் வைத்திடுமூவிரல், பிரிவாய்மேலேறிப்பிலததுவாதமாம், அறிவாய்நடுவிரலமர்ந்ததுபித்தமே. (௨௪)

பித்தத்திற்கீழே புரண்டதைவமாம், உற்றுத்துப்பார்க்கவோர் நரம்பேபோலே, பத்தித்தமூன்றும் பாய்கின்றவேகத்தால், மத்தித்த தாளம்போல்வழங்குமாபிதே. (அ)

மூவகைநாடியறியுமாத்திரை.

வழங்கியவாத மாத்திரையொன்றுமில், தழங்கியபித்தந் தன்னிலரைவாசி, அழுங்குக்கபந்தா னடங்கியேகாலோடில், பிறங்கியமூவற்குப் பிசகொன்றுமில்லையே. (கூ)

மூவகைநாடிநடப்பு.

இல்லையேவாத மெழினடைகோழியாம், எல்லையேபித்த மெழும்புக்நவலைபோல், ஒல்லையேஙயப மூயர்ந்திடும்பாம்புபோல், அல்லையே கண்டறிந்தவர்கள்சித்தரே. (௰)

வாதபித்தசிலேத்தும மிருப்பிடம்.

அறிந்திடும்வாதமடங்குமலத்தினில், பிறிந்திடும்பித்தம்போஞ் சலத்தினில், மறிந்திமையம் வாசிக்கும்விந்துவில், வுறைந்திடுமூன்றுக்குறவாந்தலமிதே. (கக)

வாதபித்தகபவர்ணம்.

உறவாங்கறுப்புஞ் சிவப்புநல்வாதம், திறைவானபச்சைப் பசுமைகொடும்பித்தம், திறைவாடவெண்மையாய் நின்றதுநல்லையம், அறைவானவர்ணம தாகுந்தலமதே. (கஉ)

தேகபஞ்சபூதம்.

சலங்காட்டிபிந்தச் சடமானவைம்பூதம், நிலங்காட்டிநீர்காட்டி நின்றிடுந்தீகாட்டி, வலங்காட்வாயுவால் வளர்ந்ததேயிருந்தது, குலங்காட்டிவானிற்குடியாயிருந்ததே. (கங)

இருந்தவிவ்வைந்தா லெடுத்தசடமிது, பிரிந்திடுமாமிசம் பிருதுவின்மயமாகும், சொரிந்திடுமயிர்தநீர் சொற்குறியப்புவாம், வருந்திய வன்னி வளமாய்வெதுப்புமே. (கச)

வெதுப்பதுடனே விடுபட்டுநாசியில், எதுப்புற்றுநிற்குமிதுகாணும்வாயுவாம், கதுப்பொத்தேயெல்லாங் கவளத்திடமிட்டு, மதுப்போத்துநிற்கும வானின்வளப்பமே. (கரு)

வளப்பங்கேள்பூமி வாசிக்குகாசியில், களப்பமாம்மன்னி நாளுது ம்கண்ணினில், அளப்பமாமப்போவடக்கிகோவினிச், பளப்பகல்வாயு ப்பரிசிக்குமென்குமே. (கசு)

எக்கியபாதி லிருக்குதுமாகாசம், பொங்கிபலைரக்குக்குட்பொல் லாம்மூன்றுதான், தங்கியவாயுச்சமர்த்தன்மகாவாதம், பங்கிலவன்னி யூறப்பருக்குதுபித்தமே. (கஎ)

பருக்குசலத்திற் பரிசிக்குங்லேபம், வருக்கவிம்மூன்றால் வளர்ந் ததுரோபெல்லாம், அகந்தனைறிந்தளவிடபோகிகள், மகிழ்ந்தேயிதினி ன்ற மயக்கமறிவரே. (கஅ)

வாதகுணம்.

அறிபவிம்மூன்றின தாண்மைசொன்னார்க்கி, எறியகல்வாதமெ றிற்குணங்கேளு, குறிபெனக்கைகால்குளிச்சவிலாச்சந்து, பறிபென கொந்தடற்பச்சைப்புண்ணாகுமே. (கக)

புண்ணாகவலிக்கும் பொருமிக்குடலோடித், தண்ணுமலத்தைத் தம்பிக்கும்போக்கா, தொண்ணனவாசனகுதலேசுறுக்கிடும், பண்ணார் குளிர்சிதம் படுத்திடும்வாதமே. (உ0)

பித்தகுணம்.

பருத்திடும்பித்தம் பலபலசிந்தைபாம், வருத்திடும்வாந்தியும் வா ய்நீர்மிகவூறும், மருத்திடுமேனியின் மாட்டிபெரிப்பேறும், பிருத்துத் தவனிக்கு மிகவிடங்கைக்குமே. (உக)

ஐயக்குணம்.

விடங்கியவையமேவிரைப்பேற்றிடும், தடங்கியிருமிடுந்தனிவிலா விரண்டுநோவும், அடங்கிச்சுரங்காயு மளவற்றகோழைநீர், இடங்கிட ல்வற்றிவிரத்தமுங்கக்குமே. (உஉ)

கங்கியமூவா களிற்பெலன்கேளு, ஓத்தியவாயு வுடல்கூடிடிற்பெ லன், தக்கியவாயுசகலத்துக்காதாரம், சிக்கியகோவைச் சிறக்கவிளக்கு மே. (உங)

தாபச்சுரமும் சீதச்சுரமும்.

விளக்கியவன்னியும் வாயுவுமேற்கொண்டால், தளக்கிபதாபச்சு ரங்காணுந்தோஷமாம், வளக்கியவப்புவும் வன்னியும்மேற்கொண்டா ல், இளக்கியசீதச்சுரங்காணிதன்பேரே. (உச)

## தோஷசிறக்குறி.

யோனதோஷம் பிறக்குமுறைகேளு, வாறுனவாதமும் வன்னிகருந்தோஷம், தாறுனபித்தமூர் தழலூடில்வெண்மையாம், சேறுனவையமுஞ் சிவப்பேறும்வாய்விலே. (௨௫)

வாயுவடங்கிறைல் வலுவானதோஷம்போம், வாயுவெழும்பினல் மண்ணுநீறென்றாகும், வாயுவுநீரால் வழங்கியவன்னியாம், வாயுமாகாச மண்டலவோசையே. (௨௬)

ஓசையிலேழு மொளியினிலோரைந்தும், நாசியின்மூன்று நாவினிலிரண்டும், தேசியுந்தேசனுஞ் சேர்த்துபிரித்திடம், மாசிலாதந்திமகிழ்ந்துரைத்தாரே. (௨௭)

## ஒருண்டிலுமீருண்டிலும் சாகுங்குறி.

உரைத்தநாசி யுறுதிக்குறிகேள், விரைத்திடப்பிங்கலை விடாதோடில்மூன்றுநாள், இரைத்தசடமாண்டி லெய்திமோகாசம், பாத்திரண்டுநாட் பாசிலீராண்டென்னே. (௨௮)

## மூவாண்டிலும் ஆறுதிங்களிலும் சாகுங்குறி.

எண்ணியொருநா ளியங்கிடிற்பிங்கலை, தண்ணியமூவாண்டிற் றப்பாதுமரணம், ஒன்றியபுயத்தி லோடிடிற்பத்துநாள், மண்ணின்மறியாறின் மரிப்பான்குறிபிதே. (௨௯)

## நான்மூன்றிலும் பதினைந்திலும் சாகுங்குறி.

குறிகேளுமூச்சன்றிக் குலவிவாய்வழியோடில், மறிகேளுமூன்றுநாள் மரித்திடுவன்றப்பாது, தெரிகேளுமும்மலமூன் றிரண்டுமிகக் குறைந்துவரில், பரிவாகப்பட்சத்திற் பாருயிர்தான்றப்பாதே. (௩௰)

## ஆறுதிங்களிலும் உடனேயும்சாகுங்குறி.

தப்பாதுவாய்நீர்தான் றுக்கெற்றனிமேல்விழிலே, ஒப்பாகத்தனுமறைய வெழுந்திடுவன்மதியாறில், செப்பாகத்தானிருக்கச் சேர்ந்தநிழலிலைந்திடினும், அப்பாகேள்சாவுநிச மறிந்துகற்பங்கொண்டிடே. ()

கொண்டிடுந்தோஷக் குறிசொன்னரெங்கந்தி, கண்டிமுதபேர்ந்தனிப்பல்லுநாக்கொன்றும், மண்டிடேந்தாது வளமாய்க்கதுப்பேறில், ஒண்டிமொருநா ளுறுதியாய்ச்சாவானே. (௩௨)

உறுதியாம்பித்த முடம்பினைப்பதாகும், பொறையாகத்துலுக்கிபோவான்மதியொன்றில், அறுதியாமைய நல்லத்தியுலர்ந்ததே, உறுதியோர்மதியி லொடுங்குஞ்சிவனே. (௩௩)

### சாகாக்குறியும் சாவுக்குறி.

சிவகலையாய்ச் சேர்த்திடுநாடியில், ஆவகமாம்வைத் தமுந்தேடின் மேலேறும், தாவொத்துமேனோக்கிற் சாகாளொருநாளும், பாவொத் துக்கீழ்நோக்கிற் பதையாமறச்சாவனே. (கூச)

### அமிர்தமுண்டும் சாகுதல்.

பதைக்கின்றமூவரிற் பக்குவந்தப்பியே, நிதைக்கின்றவாதமும்பி த்தமுநீங்கிடில், வதைகொண்டிருந்தாலுந் தோற்றியவுயிர்விடும்,பிதை க்கொண்டவாத பித்தப்பெலனுமே. (கூரு)

### கைவிடுக்குறிமுதலியன.

பித்தமடக்கினுற் பேசாதேபோய்விடும், எத்தியவைய மெழும் பிடிற்கிட்டாசே, எத்தியவாத மெழும்பின்மருக்துசெய், எத்தியிம்மூ ன்றி னியல்பையறிந்திடே. (கூசு)

### சாகாக்குறி சாகுங்குறி.

அறிந்திடிம்மூன்று மடங்கியேமுட்டிலும், எறிந்துமிகவோடிலு மெய்தாதசாவுதான், பறிந்தூதற்றூதப் பற்றற்றுக்கீழ்நோக்கில், வறிந் தேயுயிர்சென்று மறலிகைப்புக்குமே. (கூஎ)

### மகாதோஷக்குறி.

புக்கியந்திலக பொருந்தவொருவிறல், எக்கியுய வெழும்பின்ம காதோஷம், அக்கியவுந்திதா னுதாரம்வாயுவிற்கு, வைக்குந்தலபென வருத்தனர்தாதிதே. (கூஅ)

### தசநாடிகளிருப்பிடம்.

தாதுமுறைசே டனித்தகுநிச்சத்தோ, டோதறுகாபிய மூக்கி லெடுமார்பு, காதுநெடுமூக்குக் கண் ஞரம்புருவம், போதறுமூச்சி புகம்பத்தும்பார்த்திடே. (கூக)

### சாகாக்குறி சாகுங்குறி.

பார்க்கின்றதசநாடிப் பதைப்புண்டாய்நின்றிடில், வற்கிற்சிலகாளி ருப்பானிறந்திடான், காக்கிடுக்கமிலங் கழன்றுசுழித்தோடில், ஆர் க்கிலெமனுல கடை வதுவுண்மையே. (சம)

உண்மைமசேனின்ன முமிந்திடநோயுள்ளோன், தண்மையாய்த் தூரம்போய்த் தாக்கிடிற்சாவில்லை, கண்மையாம்வாயுக் கழன்றிடிற்கி ட்டிடும், வண்மையாய்ப்பார்க்க வருத்தனர்கற்றியே. (சக)

### வாயுநோய்சுரம் திரிதோஷம்.

வகுத்தமுறைப்படி மக்தத்தால்வாயுவாம், மிகுத்தநல்வாயுவா ன்விகேந்திடுநோயெல்லாம், பகுத்திலைவயிரண்டாற் பாரச்சுரமுறும், முகுத்திவைமூன்றுன் முத்தோஷங்காணுமே. (சஉ)

### மந்தம்வருதல்.

காணுமேமந்தங் கவளிக்குமன்னத்தால் காணுமேமந்தங் கடு மாமிசமீறில் காணுமேமந்தங்கலந்த மாப்பண்டத்தால் காணுமேமந் தங்கருமேதிப்பாலுக்கே. (சங)

மேவியவன்னத்தால் விளங்கியநிச்சடம் பாவியேகொன்று ப ழியுருடன்னத்தான் - ஆவின்மிதந்தப் பிலேயுற்றநோயாகும் காவிவி வைபெலாங்கண்டுகொள்ளன்னமே. (சச)

அன்னம்பிறந்த தனைத்துவிதையிலும் ரின்னியவெட்டை மகா சிதமிரண்டினல் பன்னியநிர்நிதைப் பார்ப்பார்பெரியோர்கள் கன்னி மயக்கத்தாற்கண்டுமேகமே. (சரு)

### மேகம்பிறக்கும் விதம்.

மேகம்பிறக்கும் விதஞ்சொன்னரெங்கசி ஆகமிளங்கைப்பாருவ மதில்மேகித்தும் போகந்தினஞ் செய்யிற்புகழ்மந்தத்தேகூடில் வாக ப்பசியால்லழங்குசையோகமே. (சகு)

சையோகஞ்செய்யத் தனித்தசுழியேபடும் ஐயாவமிர்தமடக்கி க்கனலேறும் மெய்யாகவிந்து விழப்புண்ணாகும் மையானமேகம்வள ருங்கிரந்தியே. (சஎ)

### ஒிமேகம்வாயுச்சூலே பலமேகம்பலநோய்.

கிரந்திரணங் கிளர்ந்திடுஞ்சிமேகம் குரைந்திவை யிரண்டாலு றுவாய்வுசூலேயாம் பரந்தநிவைமூன்றாற் பலபலமேகங்கள் துரந்தி வைதொட்டுச்சூழ்நோய்களுற்றதே. (சஅ)

### இலங்கனமிடுதல்.

குற்றசரத்துக்குமறுதியாம் வாயுவுக்கும் அற்றேவருமட்டுமேன் னத்தைக்காட்டாதேமுற்றக்கனலரசுமுன்வருயேவரில் ஒத்தேநிறை ந்தோடிலோன்றுக்குமஞ்சாதே. (சகூ)

### காயசித்தி.

அஞ்சியுகத்திலழியாமற் காயந்தான்-மிஞ்சியங்கம் விளம்பினே நூற்றெட்டுத் தஞ்சமுறவே தான்நின்னவல்லேர்க்குப் பஞ்சநாை பேர்ப்பதிந்தோங்கிவாழ்வரே (ருய)

வளமானபித்தத்தின் பருவிக்கபங்கூடில் தளமானவாயுவற்று வேவெதுப்பேறிக் களமானகன்னற்றிற்கட்டியே மூலமாம் குளமாஞ் சுரத்திலுறுகின்றவாயுவே. (ருக)

ரோகக்க பத்தினுழைக் தேறிவாயுதான்வாகுற்றகெஞ்சில்வலித் தேமயங்கிபிர் பேருற்றபித்தத்தைப் போகமற்றம்பித்துப் பாகுற்று ப்பேசையிற்பதையாமற்கொல்லுமே. (ருஉ)

சுகசன்னி.

பதமாஞ்சுக சன்னியாயுங்விதங்கேளு நிதமாசமூழ்கிநிறையவே சாப்பிட்டுக் குதமாகமந்தத்திற் கூடிடில்வாருவால் அதமாமனுபோக மணேந்திடிற்சன்னியே. (ருக)

வியர்வைகண்சிவப்புமாகதோஷம் காயமழிதல்.

சன்னிசுதத்தினுற்றுனே நம்வியர்வைதான்-கன்னிசுகத்தினுற்க ண்கள்சிவப்பேறும் வன்னிசுகத்தினுல் வழங்குமகாதோஷம் அன்ன சுகத்தினுலழிந்திடுகாயமே. (ருச)

மூலம்.

காயத்தின்மூலங்கண்ட விதங்கேளு-பாயொத்ததீபனம் மரித்தே யடக்கினு-மாயைமயக்க மலத்தையடக்கினும் ஓயுற்ற குண்டலிக்குப் புகுமவாயுவே. (ருரு)

முளைமூலம்.

வாயுபுகுந்துமலத் தோடபானத்தைத் - தெசிலைக்கூட்டித்திரட் டிக்கருக்கிடும்-தோயும்மலமவரிற் சுருக்கிமுன்னேகின் ருயுமுளைபோ லபான்னிறுக்குமே. (ருசு)

இரத்தமூலம்.

இறுக்குஞ்சிலமூலமெழு மண்டலம்போலமறுக்காணங் கொண் கெருகுஞ்சிலமூலம் உறுக்கியவாயுவா லுதிரமுந்தான்கூடி தறுக்கி விழுக்காட்டும்தான்ரத்தமூலமே. (ருஎ)

பசிகெடும்விந்துநாசம் இரைச்சல்கழிச்சலாம்.

மூலமெழுந்திடின்முன்னபசி போகும்-மூலமெழுந்திடின் முளை விந்துநாசமாம் மூலமெழுந்திடின் முழுங்குமிரைச்சலந்தான் மூலமெ ழுந்திடின்முசியாக்கழிச்சலே. (ருஅ)

கிறுணிக்கழிச்சலில்ஆறுவிதம்.

கழிச்சல்கிறுணிக்கழியும் விதங்கேளு, அழிக்கியபித்தமனல்வத மையமாம், செழுச்சியவாயு சேர்ந்திவைமூன்றால் - யழிச்செனம்பே திக்கும்பார்பெலம்போகுமே. (ருகூ)

பெலமானமேகத்திற் பிரந்ததொருபேதி குலமான மூலத்திற கொடியதொருபேதி சலமானவாயு வாற்பங்சித்தொருபேதிவளமான் வாறும்வருதமூறையாமே. (சும)

பித்தமேகநிற்குறி.

முறையானமேக முழங்குமிருபதும் நறையானதெல்லாஞ் சொ ன்னூறெரங்கி தறையாருஞ்சிலையி ற்கண்டின்மஞ்சள்போல பறையா னபித்தத்தா ற்படுகின்றமேகமே. (சுக)

வாதமேசவைய மேசநிற்குறி.

படுகின்றசிலைநான் பாக்காவெளுப்பாகில் அடுகின்றவாதத்கா லாகுங்கணம்மேசம் மடுருக்கபீனத்தின்மயினிறம் போர்பட்டால்வி ளேன்றவைபத்தால்விழுகின்றமேகமே. (சுஉ)

தமரேசிமேகம் சீர்த்துளிமேகம்.

மேகமேமுன்றிலவெவ்வேறுகுணச்சளும் வாரியபித்தமும் வாயுவுங்கூடிடில், தாவியகாளத்தமசிலெரிந்திடு போருசீர்கட்டிப்பொசிந்து துளிந்தேவிழும். (௬௩)

சிக்காசீர்மேகம்கல்லெரிப்புமேகம்.

விழுருஞ்சிலகோரம்விட்டசீரோடும் ஒழுகியவாயுவுமோதல்லிருனேகாது, வழுதியமர்த்தத்தால் வாயுவங்கேபுகில், கழுவிமுதிர்ந்திடுங்கல்லெரிப்பாருமே (௬௪)

மேகமிரும்மேகிகரும் தாதுகஷ்டமாம்.

ஆகியவாதமும்வாயுவுங்கூடிடில் தாவியவெள்ளை தடைபற்றுமெத்தவாம், போகியமேனி பொருமிக்கதுப்பேறும், வாகியதாதுவழுங்காதுகஷ்டமே. (௬௫)

வெளிபாக்காணுதேதும்பாயிருமிடுமேகம்.

வழுவியவையமும் வாயுவுங்கூடிடில் பிழைச்சகிப்பொசிவாது பிறவெள்ளைகாணுது தழங்கியினைத்துத்தா னஸ்திபோலாவான், இழங்கிப்புகந்தேயிருமிடும்மேகமே. (௬௬)

இருமியபித்தமும்வாதமுங்கூடிடில் மருவச்சலமேகம்வாரிதிபோலாடும், உளவம்வேருக்கு மூண்டவுடற்காயந்திடும், உருகதேயூனோடிஞ்சியினிக்குமே. (௬௭)

மதுமேககுணம்.

இனிக்கின்றவாதத்திடைசேரிலையந்தான், பனிக்கின்றள்ளுப்பதனிபோனீரோடும், கனிக்கின்றமேனிகரைந்துவெளுப்பேறும் தனிக்குமதுமேகந்தப்பாதேயையமே. (௬௮)

இரத்தமேகம்.

ஐயமும்பித்தமுமணைந்திடுங்காலத்தில் கொய்யுறுமிரத்தங்கொப்புளிக்குந்தண்டில், மையுறுங்கண்ணுட்கு மகத்தாம்பெறும்பாடம், வையுறும்மேகமவரிசைமுறைகேளே. (௬௯)

முறைகேட்கவொன்பது முபற்சியாய்வந்து, துறைகேட்கிற்சம்பத்திற்றுவக்கியமேகங்கேள், நறைபூத்தகொங்கையாணுபகணமோகத்தால் மறைபோற்றுங்கற்பத்தில்வளர்ந்ததுமேகமே. (௭0)

வளர்ந்ததுகற்பத்திவருத்தமுறையஞ்சாம் உளர்ந்தியவுற்பத்தியாமேகம், அழுந்திப்படும்வெள்ளையாகாச்சுரமேகம் தளர்த்திட்டவஸ்தியைத்தணலாயுருக்குமே. (௭௧)

தணற்காயுமேகந்தண்ணீர்ப்பகைமேகம், உணத்தான்முழுக்கற்றூலுருகுஞ்சிலமேகம பிணககாற்பசிகெட்டாற் பெற்றபெருமேகம் வணக்காற்சையோகத்தால்வருங்கடுமேகமே. (௭௨)

கடும்பசிதோன்றிடிற் காணுஞ்சிலமேகம் அடுவுற்றபாஷாணத் தாலாஞ்சிலமேகம், அடுவற்திறைமேழு மஞ்சம்முன்னென்பதும் எடுவுற்றிருபததொனமேற்றினர்மேகமே. (௭௩)

ஏற்றியகுன்மம் எழுர்தவிதங்கேளு, தேற்றிபபித்தமும்வாயுவுந் தொந்திக்கில், சேற்றியவன்னஞ் செருக்கில்வலிப்பேறும், மாற்றியநீரும்வாந்தியாம்பாருமே. (௭௪)

வாதகுன்மம்.

பாருமேவாதமும்வாயு வுங்கூடிடில் ஒருமேகும்பிபிலுழன்றுமிக நோகும் கோருமேகுத்தங்குடலைமுறுக்கிடும்வாறு மேவாதத்தில்வழங்கியகுன்மமே. (௭௫)

ஐயகுன்மம்.

வழங்கியவையமும் வாயுவுங்கூடிடில் - தழங்கியவன்னத்தைச்சந் திக்கவொட்டாது-யுழங்கியவன்னம் புளிப்புக்கொடுத்தேறிஉழங்கிமுறுக்கியுடலைவலிக்குமே. (௭௬)

மேககுன்மம்.

வலிக்கியமேகமும்வாயுவுங்கூடிடில், பலிக்கியமலசலம்பதையாமந்கட்டிடும் இலிக்கியவிடப்புறமியலபாம்வலப்புறம் வலிக்கும்முறுக்குமவருஞ்சூலைக்குன்மமே. (௭௭)

குன்மமிவைநாலில்கூறினுரென்னிதம் வன்மையபாநோய்க்குமகாநோய்காண்பொல்லாது கன்மமேசெய்தகடததுக்கிதுவெய்தும், நன்மையாந்தர்மஞ்செய்நாட்டோர்க்கும்வாராதே. (௭௮)

பித்தசூலை.

நாட்டியபித்தமாஞ்சூலை முறைகேளுமாட்டியவன்ன ருசிகெட்டு வாந்தியாம் ஆட்டியகைகாலதன்சந்துபிணறண்டு நீட்டிவலித்ததுநிலையாவெரியுமே. (௭௯)

வாதசூலை.

நிலையானவாதத்தினின்றிடுஞ்சூலைதான் சூலையானகைகாற்குணைச்செல்லாம்புண்போல கலையாய்வலித்ததுத்தனததிடுங்கீல்வயறு தலையானமேனிதானிளைத்திடுமே. (௮௰)

கொல்லைபவையமுட்பித்தமுங்கூடிடில் மல்லியெலும்பில்வளமாய்த்தொளைத்துநோய் அலலிச்சுரவகாயுமதிகதாபமுமாகும் எல்லியிருமிடுமீதுகாணுஞ்சூலையே. (௮௧)

மலசலங்கட்டி மேல்மூச்சு இரண்டும் உருத்தரவாயு.

வாயுவினுலேமலசலங்கட்டிடும் வாயுவினுலேவாங்கிடுமேல்மூச்சு வாயுவினுலேமலருமிரணங்கள் வாயுவினுலேவரும்ருத்திரரோகமே.

ஐயச்சூலை.

இளைத்திடுமேனியிருமிவறண்டிடும் சூளைத்திடுகைகால்குத்துமிக
நோகுமதத்திடும்மார்பிற்சளிமிகத்தாக்கிடும் அளைத்திடுமையததாலா
காதசூலையே. (அங)

வாதபித்தசூலை.

ஆகாதவாதமும்பித்தமுஞ்சூலையாம் வாகானகைகால்வளமாய்க்
காடேறும் தாதானமேனிதனில்வெடிப் புண்ணாகும் போகாமணின்
றுபுணர்ச்சியாய்க்கொல்லுமே. (அச)

ஐயபித்தசூலை.

காணுமேயைபத்திற்கனவாதசூலைகேள் ஈனுங்கபாலம் படை
த்துவெடித்திடும் ஆணிமுலைபரமடங்காக்குளிர்சுரம் பேணியெலும்
பெலாம்பெலன்கெட்டுநோமாறே. (அரு)

ஆறுவகைச்சூலையிலறுமூன்றுபேர்சொல்வார் வேறுமிதையல்
லால்வெவ்வேறுமொன்றில்லை கூறுமிசனுமங் கோடிகுணஞ்சொல்
வார் பேறுமறுசூலைப் பேர்சொன்னரொக்கநியே. (அசு)

ஆறுவிதகர்ப்பநோயால்ஸ்ரீமலடு.

நந்தியுரைத்ததலமானசுற்பத்தில் அந்தியநோய்தான் அறுவ
கைகேளு புந்தியில்வாயுவுந்தேயுவுங்கூடில் மந்திமலடாவாள் மரண
வரைக்நென்னே. (அஎ)

மலட்டுபுழுவால்மலடு.

வரையானகர்ப்பத்தின் மலட்டுப்புழுவிலிருந்து விரைபாஞ்சுக்
கிலத்தைவிரைந்ததுவுண்டிடும் கரையாமலடியாக் காணதைப்போக்கி
டில் துரையானபிள்ளைசுகமாய்ச்செனிக்குமே. (அஅ)

செனிக்கின்றபிள்ளைத்திறமாய்ப்பிறக்கையில் கனிக்கின்றசிரேக
க்குள்ளேசிக்கிடில் பனிக்கின்றகைகால் பரவியெனைத்திடுமதனிக்கும்
பசிபோகுந்தான்வயிறும்பாரிப்பே. (அகூ)

பாரிவாய்வுபரிக்குழிப்புகில் காரிக்கழிந்துசதநித்தங்கூப்பிடும்
வாரியுடம்பெலாமவலிக்குமிடைநோகும் ஆரியன்சொன்னுனறிந்தவர்
சித்தரே. (கூ௰)

சித்தானகர்ப்பத்திற் சேர்ந்திடுமிரத்தந்தான் மத்தாயுருண்டுவா
யுபோம்லாடிடும் உற்றபசிபோகு முழனதேறபிரைக்குமே வற்றக்கழி
ச்சலாம்வனசூககவாய்வே. (கூக)

ஞாதானமாமிசஞ் சுழித்திடிற்கற்பத்தில் வாதானமேகத்தால்வழு
ங்மெச்செனிப்பிக்கும் போதாமுடம்பெலாம்புண்போன்மிகரோகும் நீ
தாமயக்கமாய்கிரச்சிவருனவளே. (கூஉ)

ஆமின்றனேனுப்களதவிதங்கான் கற்பத்தில் பாகொன்றிரின்ற
பலியாதவர்ப்பந்தான் வாமின்றதைப்போக்கில் மலடிபெரும்பிள்ளை ஆ
மின்றநோய்க்கெளமறைத்தமூலைபாரே. (கூ௩)

கர்ப்பசன்னிகுணம்.

அறைந்திடச்சன்னிகளாகாதகர்ப்பத்தில் இகரத்திறேஞ்சிபிறட்
புருடும்வாயுவால் விரைந்தமிகவியர்க்குமெய்பின்மயக்கமாம் அறந்திடு
பற்பிட்டுஞ்சோம்பிக்கும்பாருமே. (கூ௪)

பாருமேபெண்டானபச்சடம்பாங்காலம் தாருமதுபோகர்தனிக்
காடியுண்ணுதல் ஆருக்குமாப்பண்ட மாகாதமாங்கனி கோருமேகொ
ண்டிடிற்கொண்டிடுஞ்சன்னியே. (கூ௫)

கொண்டமலடிக்கும் கூடிடுஞ்சன்னிதான் மண்டியிருக்கையின்
மாத்தின்பாள் மோருண்பாள் தண்டிபணிவானிச் ஞாதக்காய்தான்தி
ன்பாள் ஒண்டியபெண்களுக்கோரெட்டுச்சன்னியே. (கூ௬)

ஒரெட்டுச்சன்னியுமுண்டது பெண்ணுக்கும் வாரெட்டுமோனுக்கு
மகத்தாஞ்சுகசன்னி நேரிட்டுப்பார்க்கினிசழ்ந்ததுவெவ்வேறு பாரெ
ட்டுமெச்சப்பகுத்ததூறைபாரே. (கூ௭)

கண்ணோய்.

பாரேபொடிச்சுடல் பருவெயிலேமேற்கடல் வாரேறுகொங்கை
யாள்மாலைமிகச்செய்பல் காரேமுழுக்கறல்கண்ணு லனல்பார்த்தல்
சீரேறுபாஷாணந்தின்றதாற்கண்ணோயே. (கூ௮)

கண்ணோய்வருகின்றகாரணமின் னுங்கேள் பன்னுணமேகத்தாற்
பருவெட்டைவாயுவால் கண்ணுமலக்கட்டால் தண்மலக்கட்டினால் பு
ண்ணுபிரணத்திற்போடுங்காதத்தாலே. (கூகூ)

காரச்சுறுக்காற்கடுமிரசத்தூமத்தால் நேரொத்தசாரநின்ற மூ
க்கின்வாசத்தால் பாரொத்தபேதியாற பலபலதண்ணீரால் சீரொத்த
கண்ணிற்சிறக்கும்வியாதியே. (௱)

குட்டநோய் பதினெட்டான காரணம்.

வியாதியுண்மூவாறுவிளங்கியகுட்டங்கேள் சுயாதிக்கிரந்திசுழ
ன்மேகத்தாலாதும பயாதியமண்ணுணிப் பல்வண்டினாலெட்டு நியா
திப்பழூநாலாய்கிவறிந்தக்குஷ்டமே. (௱க)

திருமூலநாயனார் நாடிக்கோர்வை-முற்றிற்று.

ஆக செய்யுள் ௱க.

மூன்றாவது

# தன்வந்திரிபகவான்

## நாடிகூறுகின்றார்.

---

நந்தீஸ்வரர் தன்மந்திரிக் குபதேசித்தது.

சென்னமாம்மனிதர்தாமுஞ் சென்மிக்குப் வரலாறுந்தான்
பின்னுமாம்சுக்கிலத்திற் பிராணவாயுவுந்தான்சென்று
தின்னமாமபானவாய்வுசென்றதுகெற்பமுத்தி
உன்னுமாம்ரெத்தஞ்சூழ்ந்துவுதானவாயுவளர்க்கும். (க)

முதல்மாதக்குறிப்பு.

சூழ்ந்ததுசுக்கிலத்திற் சுரோணிதங்கலக்குமென்று
பூந்திடும்வியாதிமுண்டும் பொருந்திபருமிழிபோல
வந்திடுந்திரளுமேனி ஈனுந்தனிலுவர்க்கும்
மாய்ந்தாரவிருவத்தைஞ்சில் அருகுருமுளைப்போல்தோன்றும். (உ)

உ-௩-௪-வது-மாதக்குறிப்பு.

முந்தியதிங்கள்தன்னில்முளைத்ததுகட்டியாகும்
பிந்தியதிங்கள்தன்னில்பிடரிதோள்முதுகுமாகும்
உந்தக்குமூன்றாந்திங்கள்வுடல்விரல்அறைக்கலாகும்
முந்திக்குநாலாந்திங்களுந்தலைதோர்மூக்குண்டாமே. (௩)

௫-௬-௭-வது-மாதக்குறிப்பு.

அஞ்சேனுந்திங்கள்தன்னிலாகிடுஞ்செவிநரம்பும்
பொஞ்சிடுமாறாந்திங்கள்போதிந்திரியமேயெய்து
உஞ்சியமலசலங்கள்ஓத்ததோர்நரம்புமுண்டாம்
தஞ்சமாந்திங்களேழில் தாங்வருங்குணங்கள்கேளே. (௪)

௮-வது-மாதக்குறிப்பு

நரம்பு முடிசைந்தாண்ணியருடல்கள்தொப்புள்
பரந்தகால்சுரங்களுண்டாய் பத்திவெட்டாந்திங்கள்
சிரந்தனில்மயிருமுண்டாய்சிக்கெனப்பிலமுமுண்டாய்
துரந்தர அன்னசாரம் தொப்புளில்சலம்பெருக்கும். (௫)

௯-வது மாதக்குறிப்பு.

ஒன்பதாந்திங்கள்தன்னில் வுணர்த்தியுமறிவுமுண்டாய்
வன்புறுகெற்பந்த னில் வருந்தநோய்பிலமுமுண்டாம்

தன்பிரான்தனைநினைந்து தவமுறுநிலையாய்நின்று
அன்புடன்கையெடுத்தே அரும்பதமருள்வாயென்னும். (௬)

௰-வது மாதக்குறிப்பு.

ஆரவேபத்துமாதப் ஆதித்தன் அருளினாலே
சீர்பெறுமபானவாய்வுசிரமதுகீழதாக
பார்தனிற்கொணர்ந்துதள்ளும்பயின்றமுன்னறிவதெல்லாம்
சேரவேமறதியாகிதிகைத்துகொந்தமருமென்றே. (௭)

ஆண்-பெண் அறிகிறசரக்குறிப்பு.

கெர்ப்பஸ்தானங்கள்செய்யகெணந்தனிற்சரங்கள்நாசி
விற்பெனப்பிராணவாய்வுவலத்திலேயோடிலாணாம்
சற்பெனயிடத்திலோடிச்சிறந்ததுபெண்ணேயாகும்
உற்கரவுதையமாகில்அலியிலாக்குருடுஊமை. (௮)

பிள்ளைவளரும்குறிப்பு.

இப்படிச்சடலமானதிதில்விடுமன்னந்தண்ணீர்
முப்பதுநாழிகைத்தான்மூன்றுகூறாய்பிரியும்
மெய்ப்படியிரண்டுகூறும்மோச்சலமலங்களாகி
செப்புமோர்கதிரின்ரத்தம்சேர்ந்துடல்தனைவளர்க்கும். (௯)

சரீர எடைக்குறிப்பு.

முயன்றெழுரத்தந்தன்னிற் மூன்றரைக்கோடிரோமம்
தயங்கெழுந்துவாரந்தானுஞ் சொல்லுமும்பண்டதென்ன
நயந்ததோர்சடலந்தன்னில் எப்பிருபலமதென்ன
துயன்றெழும்பித்தத்துக்குச்சிரேட்டமுரியதாமே. (௰)

அங்காதிபாதம்.

செப்பதாமரையுள்வேதாசெப்பியவியாதிக்கெல்லாம்
பையவேபடைத்தமெய்யிற்பத்தயநாப்புசேறி
துய்யவெண்பிறைச்சிமற்றுந்தொகுத்தனர்தெரிந்துமுன்னோர்
ஐம்மதக்கலசஞ்சொன்னார்ஐங்காதிபாதமென்றே. (௧௧)

அங்குலந்தொண்ணூற்றாம் அவரவர்கையால்மெய்தான்
இங்கதிற்குரையாதாமும இறைச்சிநூற்றறுபதைந்து
பங்குகள்பலமாமெனபார்பாவைசேர்வேண்டுகண்ணுங்
கங்குல்போலழகுமாதேசளஞ்சிரண்டாகுங்கண்டாய். (௧௨)

கண்ணுறுநாசிமூக்குகழஞ்சிநாற்கழஞ்சிநாக்கு
நண்ணுறுகன்னஞ்சேரநாற்களஞ்சாகுமென்க

எட்டினோடரைவிரல்பிசைந்தகான்கையால்
நுண்ணிறையெலும்பெல்லாம்நூற்றிருபத்தைம்பலமாமென்பர்
எண்ணுறுமீரலானதெண்பலமெண்ணலாமே. (கங)

எண்ணுமுப்பலமேமூளையினிற்சிறுகுடலினீளம்
மூண்ணுமுப்பத்திரண்டுமுழமெனச்சொல்லலாகும்
பண்ணுமுன்தாமரைக்காய்பலம்அஞ்சுஎண்ணலாகும்
பண்ணுகாற்களஞ்சிபித்துபைப்புறம்பார்வைகண்டாய். (கச)

பாய்ந்தமுக்கைமுன்னாழிபத்துமூவுழக்கிரத்தம்
ஆய்ந்தநானாழினாறும்அறிவிநோய்குறியாமாண்பர்
ஏய்ந்ததோரெழுபத்திராயிரமவைளலும்பைப்பின்னி
தேய்ந்தனவியாதியாகதிறமுடன்விளங்குந்தானே. (கரு)

வைத்தியசாஸ்திரம்.

செந்தமிழ்நூலையாய்ந்துசெப்புவேன்புவியிலிந்த
மந்திரமருந்துஞானமகாமுனிமகிழ்ந்தயீசன்
தந்தனம்பதத்தைநாடித்தவருமாமுனிவர்கூற
அந்தரத்தீசர்போற்ற அருளியவடநூலாமே. (கசு)

வேறு.

வடநூலதனைமிகவாய்ந்துமகிழ்ந்தேமுனிவரிஷிகளுடன்
திடமாயிதனைக்கலைபகுத்துச்செய்யும்புவியிலுலகோர்க்கு
அடவாய்நாளும்பிணிமுறையும்அங்கக்குறியும்சாத்தியமும்
மடமாகயனவிதிநூலைவகையாய்வழுத்தவாரிதுவே. (கஎ)

அறிவு வேறு.

வாரிதுஆறதென்றும்வகையிதுதன்னையிந்தப்
பேருமெஞ்ஞானநீதிப்பெருகியவுலகுள்ளோர்க்கு
கூறிடவாரிலொன்றுக்குணவிதிகானநூலை
மீரிடவிதனைநீயும்வியம்பிட்டுயிருந்துகேளே. (கஅ)

நாடிக்குறிப்பு.

அறிந்தேகொள்நாடிதானும்ஆண்பாலின்வலப்பக்கந்தான்
செறிந்தேமாதர்க்கிடக்கைஜென்மித்துவிட்டபின்னம்
குறிந்தேவுந்தனிடக்கையாற்கூடமூன்றுவிரலில்வைத்து
தெறிந்தேவாதமருள்பித்தம்சேட்பக்குணமும்பாரீரே. (ககூ)

அஷ்டவிதக்குறிப்பு.

பாரேநாடியறிந்துணர்ந்துபரமன்செயலும்பிணிமுறையும்
நீரோடும்சலமலமும்நிறமுங்குணமும்மூகக்குறியும்

காரேயிளாகுங்குழல்மடவீர்காலதிரேகம்வயதிளமை
நேரேயறியுமூநாடிநெறிவும்தெளிவும்செலவாமே. (௨௰)

நாடிநிதானம்.

சொல்லியவுந்திதன்னில்செருத்ததோரெழுத்தைப்பற்றி
எல்லையிலெழுந்தநாடியெழுபத்தீராயிரத்தில்
வல்லவர்வழுத்துச்சொன்னவளம்பெறுநாடிபத்து
நல்லதோர்நாடிமூன்றுநயந்துநீயறிவாய்பாரே. (௨௧)

நாடிசொற்குறிப்பு.

கைதனைப்பிடித்துநீயுங்கடவுளைக்கருத்திலுன்னி
உய்வதோரல்லவென்றுவுத்தறிநாடிபார்க்க
பையவேதொட்டுதொட்டுபதைப்பதுகண்டபோதே
மெய்தனிற்குணங்கள்கண்டுமேவிநீவிளம்புவாயே. (௨௨)

மூவகைநாடிசொற்குறிப்பு.

விளம்பியவாகடத்தில்விரித்தனவிதங்களெல்லாம்
தெளிந்ததில்வாதபித்தம்சேஷ்பனங்கொள்கையோடு
களம்பவில்ஜன்னிதோஷந்தானுதுவாரதெல்லாம்
வளம்பெறததெளிந்துயிர்த்துமனதினுற்கருதுவாயே. (௨௩)

கரிமுகனடியைவாழ்த்திக்கைதனில்நாடிகாண்கில்
பெருவிரலிடையேதொட்டுப்பிடித்தடிநடுவேதொட்டால்
ஒருவிரல்ஓடில்வாதமிருவிரல்பித்தமோடும்
திருவிரல்மூன்றுமோடில்சிலேட்டுமநாடிதானே. (௨௪)

வாதக்குறிப்பு.

அங்கையைமுறிக்கிகெட்டிஅடவுடன்மேலேவாங்கி
செங்கையாற்பிடித்துநாடித்திறத்துடனுரைக்கக்கேளும்
முங்கையிற்பகுத்துநாடிமெள்ளவேயோடுமாகில்
மங்கையேவாதமென்றபனத்தினுளுரைத்திடாயே. (௨௫)

பித்தக்குறிப்பு.

உத்தறிநாடிநொந்துவியக்கதும்பதரியோடும்
பித்தமாம்நாடியென்றேபிசகறலறிந்துகொள்மின்
மெத்தவேபிரண்டொழுங்கிவிரகெனதெறிக்குமாகில்
சத்தமாஞ்சிலேற்பமென்றுசொல்லுமெஞ்ஞாலமீதே. (௨௬)

சிலேற்பனக்குறிப்பு.

ஞானமேயுடலந்தன்னில்கபல்பிணியில்லைநாற்கு
காலமேவாதமோடுங்கடும்பகல்பித்தமோடும்
மாலையிலையமோடுமென்னவேமகிழ்ந்தநாளும்
சாலவேவைத்தியோர்கள்தாமிதுதெளிவர்தாமே. (௨௭)

பதார்த்தநாடிக் குறிப்பு.

தெளிந்தவர்கைக்குள்நாடிசெய்யவெள்ளரிக்காய்தின்ன
குளிர்ந்திடில்வாதமாகுங்குலவிபவறைபோடென்ன
விளங்கியமேனிதானும்வெச்சனில்பித்தமாகும்
வளம்பெறத்தவரைப்பூண்டுவழுததிடுஞ்சேஷ்பமொன்றே (௨௮)

சேஷ்பமுமுநித்தபோதுதித்திப்பிளாவிற்றேனும்
மேஷ்டியாய்க்கசப்புமீறபெருத்ததுபித்தமாகும்
ஏஷ்டியபுளிப்புமீறாழுந்ததுவாதமென்க
நாஷ்-முத்திதனையெல்லாம்நயம்பெறநாடிசெப்பே. (௨௯)

நாடிநிற்குங்குறிப்பு.

செப்புவாய்தன்னில்வாததிபதுகாற்றைப்போல
பித்தமாமுற்பவித்துச்சிவனதுஜடலந்தன்னில்
ஒத்தபல்லீலமொத்துவடற்கரிவுப்பதாகும்
நெற்புறயிதனையெல்லாமநிலையறயறிவர்தாமே. (௩௰)

நாடிபார்க்கின்றமாதக்குறிப்பு.

சித்திரைவைகாசிக்குஞ்செழுங்கதிருதையந்தன்னில்
அத்தமாஆனிஆடிஅற்பசிக்கார்த்திகைக்கும்
மத்தியானத்திற்மற்கமார்கழிதைமந்திக்கும்
வித்தகன்கிழக்குமேற்குவிழிக்கின்றநேரந்தானே. (௩௧)

தானதுபங்குனிக்குந்தனதால்லாவணிக்கும்
மீனமாம்புரட்டாசிக்கும்அர்த்தராத்திரியிற்பார்க்க
மேதெனமூன்றுநாடித்தெளியவேகாணுமென்று
கானமாமுனிவர்சொன்னார்கருதியேகண்டுபாரே. (௩௨)

நாடிநிலை அறிவு வேறு.

செப்பமாதுக்கிறைமுனிசெப்பிய
துய்யவாவுமறைந்துதுலங்கிய
மெய்மையமாதருக்கோதியமெய்ப்பொருள்
அய்யன்றன்வந்திரிக்கருளாயினன். (௩௩)

ஓதுநாடித்தசையுமதிலுறும்
வாதபித்தசிலேற்பனவண்மையும்
பேதமானவியாதியின்பெயர்களும்
நீதியானநெறிகுணமோதினன். (௩௰௪)

## விருத்தம் வேறு.

திருவுறைமுனிவன்கூறும்வாகடச்செய்கைதன்னில்
வரும்பலவியாதிமீட்கும்வகைப்படியாகுமென்னில்
உறுவுறுநாடியாலு வுஞ்முகமலநீராலும்
தெரிவுளதாவுநாசிதிக்கபஞ்செய்கவெட்டே. (௩௰௫)

## நாடிமூலக்குறிப்பு.

உரைத்திடுந்தாரமெட்டுஞ்செய்குறியுரைக்குங்காலை
வருத்தியநாடிசெய்கைமங்கையேவழுத்தக்கேளாய்
உருத்தெழுங்கருவின்மீதேஓமெனுமுந்தியாலே
பருத்தகுண்டடியேமூலம்பரந்தெழுமநாடிபத்தே. (௩௰௬)

## எழுபது நாடிநரம்புக்குறிப்பு.

பத்தும்பேரிடையிலோடுபின்கலைசுழினைபாரில்
அத்திசிங்குவைகாந்தாரியலம்புருடகமேசங்கி
உத்தெழுநாடிப்பத்துக்கப்பதாய்வந்திக்கிழ்மேல்
தத்தியவெழுபத்திராயிரநாயென்றுசெப்பே. (௩௰௭)

செப்பியவெழுபத்திராயிரசென்மமுடலிற்சேர்தல்
எப்படியெண்ணவென்றால்எழும்வாலம்விழுதுபோல
மைப்பெறுகுழல்நன்மாதேவளர்சிரமடியீறாக
ஒப்புடநாடிநிற்குமுந்தியினுணர்ந்துசொன்னேன். (௩௰௮)

உந்தியேமூலமாகவுறிவொன்றுகிழுமேலாய்
வந்திடும்நாடிதானேவுடம்பினில்வகுக்கக்கேளாய்
முந்தியஜன்னிமீதேழாயிரமாகுமுண்மை
பைந்தொடிசெவியிரண்டும்பத்துமுந்நூறுதானே. (௩௰௯)

வரிவிழிரண்டும்நாலாயிரமதாய்மானேமூக்கில்
உரியமூவாயிரத்துமுந்நூற்றுமுப்பதாகும்
ஒறுவுறுபிடரிதோள்மேலுறையாயிரமதென்னக்
கருவினில்மூளைத்தநாடிக்கண்டதைக்கருதுவேனே. (௪௰)

## வேறு.

கண்டத்திலாயிரமதாகும்கையிரண்டில்மூவாயிரந்தோள்
உண்டகக்கிழதாகதொப்புளின்மேலதாக
ஒண்டொடிகேளாயெண்பத்தாயிரத்தொருபத்தாரில்
அண்டத்துள்முனிவன்கூறுமாயுறுவேதமாமே. (சக)

குறித்திடிற்பிடரியின்கீழ்கூரெண்ணூயிரமதாகும்
கறுத்திடில்விலாவில்நாடிவளர்மூவாயிரமதாகும்
ஒறுத்திடிலிங்கமீதில் அடிவயறாத்தநாடி
சிறுத்திடுங்கிரிமியேழாயிரமதாமென்றுசெப்பே. (சஉ)

பேசியமூலநாடிபேர்முன்னூயிரமதாகும்
காசியமூலமாஞ்சந்திக்கருதிரண்டாயிரமாகும்
வீசியபாதந்தன்னில்விளம்புமாயிரத்திருடு
ஓசைசேரந்நூற்றம்பாம்நவிலவென்றோதுநூலே. (ச௩)

மெய்குழல்மானேகேளாய்முடிக்களதடங்கல்கைகால்
எய்தியகோசமுந்தியிதையமோடின்னுங்கேளாய்
பையர அல்குல்மூலம்பகர்பிடர்முடிச்சோடிச்சி
வையுறுமெழுபத்தீராயிரமதாய்வகுச்குங்காலே. (சச)

இப்படியெழுபத்தீராயிரநரம்பெலும்பைக்கண்டு
ஒப்புடநாடிநிற்குமிடந்தன்னையுரைக்கக்கேளாய்
வெப்புறுவாதபித்தசிலேத்துமமென்னுமூன்றில்
தப்பிலாதறிந்துகொள்ளுங்குறிகுணஞ்சாற்றலாமே. (ச௫)

## வேறு.

இபம்பியபுருஷர்க்கெல்லாம்வலக்கரம்நாடியாகும்
தயம்பியமின்னுளுக்குஇடக்கரமநாடியெனக
நயம்பெறகெட்டிவாங்கிநல்குலங்குஷ்டமூலம்
பயங்கியவசைவைத்தள்ளிபார்ப்பதுநாடியாமே. (ச௬)

### நாடிநிற்குமிநிலை.

செந்திருவுமையேகேளாய் செழுநரம்பினிலேமுந்தி
வந்துறுநாடிமூன்றுவணிக்கரம்பிடித்தபோது
முந்தியவாதநாடிமொழிந்தவத்திகையிற்பித்தம்
பைந்தொடிநரம்பிறசேஷ்பமென்றெனப்பகரலாமே. (ச௭)

### வாதக்குறிப்பு.

தந்திரிபோலமூன்றுதானமுமறிந்துகொண்டால்
மூந்தியவாதகாடிகுணக்குறிவுரைக்கக்கேளாய்
கொந்துசேர்குயிலேயன்னம்குக்கிடமயிலேலஓணன்
வந்ததேநடக்கக்கண்டால்வாதத்தின்குறிப்பதாமே. (௪௮)

### பித்தசிலேற்பனக்குறிப்பு.

தாக்கியபித்தகாடிதான்செய்யுங்குறிகுணங்கள்
விக் வார்மூலேயேயட்டையாமைபோல்நடக்குமென்ன
ஊக்கமாய்சிலேற்பநாடிவுகர்ந்திடும்தவளைபாம்பு
போக்குறுநடையதாகமென்முனியுரைத்தவாறே. (௪௯)

### சிலேற்பனக்குறிப்பு.

வாளுசேர்மானேகேளாய்வாதமும்பித்தமொன்றாய்க்
கோளுறநடக்கும்வண்ணங்கொடுஞ்சுமைதலேமேற்கொண்டு
நாளுறநடப்போனுகநடுவெனச்சளியாமே நாடும்
மூளுறப்பித்தம்ரண்டுமொழியக்கேள்சிலேற்பமொன்றே. (௫௦)

### வாதபித்தசிலேற்பனக்குறி.

வடிவிழிமானேபின்னைவளர்தொட்டியாட்டல்போல
அடுவுறவகைதல்போலாம்ஆடுசேர்பவமிரண்டாம்
இடுவுறுவாதமொன்றும்எழும்பிடிலித்னையாற்கும்
கடுகியபுணர்ச்சிபோலநடப்பதுகண்டுகொள்ளே. (௫௧)

கொன்ளுகவாதம்ரண்டும்சிலேற்பனமொன்றாய்க்கூடில்
அள்ளிலெடுவேர்கண்ணைப் அரணைவால்முறிவுபோலும்
துள்ளிசூழ்வண்டுபோலாமசேர்வுறுபித்தமரண்டு
ஒள்ளியவாதமொன்றுங்கூடியேவுரைக்கக்கேளாய். (௫௨)

துடிபிடையடித்தாற்போலத் தாடுத்திடும்சிலேற்பம்ரண்டும்
கடிகியபித்தம்ஒன்றும்நடப்பதுகாணவேண்டி
படவரவல்குலாளேமஞ்ஞைபாமபென்னஓடும்
அடவிலேஅறிந்துகொள்ளுமாயுறுவேதந்தானே. (௫௩)

### வாகடக்குறிப்பு.

வேதமேயுரைத்தவண்மைமெய்ப்பொருள்வுந்திதொப்புள்
ஓதியபித்தந்தானுர்வு ர்கண்டசிலேற்பனந்தான்
ஆதிபமிதையததின்மேலாகுமேவாகுமென்றும்
நீதில்லாமுன்னோர்பேசும்வாகடச்செய்கையாமே. (௫௪)

### மலக்குற்றம்.

மேவியவாதஞ்செய்யுங்குணத்தினைவிளம்பக்கேளாய்
தாவியவயறுமந்தம்சந்துதாட்பொருந்திநோவாம்
சீவியதாதுகாசம்சிறுத்தடன்சிறுநீர்வீழும்
காவியங்கண்ணினுளேமலமதுகரிகிவீழும். (௫௫)

### பித்தசெய்கை.

ஏலவார்குழலாய்பித்தஞ்செய்குறியியம்பக்கேளாய்
கோலவேல்விழிகள்கண்டுகுளிர்ந்தமேநடிக்குமல்லால்
சீலநீர்க்கடுத்துநொந்துசிறுகெனவீழுமின்னம்
ஞாலமேயறியச்சொன்னேம்நவின்றிடுமுண்மைதானே. (௫௬)

### சேத்துமச்செய்கை.

சேத்துமச்செய்குணங்கள்சில்லெனவுடம்புவேற்கும்
ஏத்தமாயுமிநீருறியினித்துமேவழுவழுத்து
நாத்தநீரழிந்துவீழும்நலப்பெறவழுக்குமேனி
தோத்துமிக்குணங்கள்கண்டால்சிலேற்பனத்தொகுதியாமே. (௫௭)

### பதார்த்தக்குற்றம்.

அந்தவாதங்கள்ரண்டும்அடுத்திடுப்பித்தமொன்று
தொந்தித்துநடக்குமாகில்தோன்றிடுங்குணத்தைக்கேளாய்
வந்துமேநொந்துவிம்மிவதத்திடுமாதர்மோகம
சிந்தனைமிகவுமுண்டாய்த்தின்பதுதெரியாதென்னே. (௫௮)

### பித்தசேத்துமக்குறிப்பு.

செய்யதோர்பித்தம்ரண்டுஞ்சிலேட்டுமமெழுந்ததானல்
அய்யதோர்கசியுமில்லைஅடிக்கடிவுதரம்வீழும்
துய்யதோர்நயனநீரும்சுத்தமேமஞ்சள்போலாம்
பேய்கள்போல்பித்தம்பேசில்பித்தசேற்பனங்களாமே. (௫௯)

### சிலேற்பமும்வாதமும்.

ஒப்பியசிலேற்பமொன்றும்வாதமுமிரண்டதாகி
வெப்புருக்கனலிசிட்டுமினிப்பையேமிகவும்வேண்டும்
தப்பிலாப்பசியுமுண்டாம்தவனமேபற்றிநிற்கும்
இப்படிக்குணமேகண்டால்சிலேற்பனவாதமென்னே. (௬௰)

### பித்தமும்வாதமும்.

எண்ணியபித்தம்ரண்டும்வாதமொன்றெரிந்ததானல்
புண்ணெனவுடம்புநோவாம்புகைந்தெழுலறிக்குநெஞ்சில்

திண்ணமாய்நாவரண்டுசிருத்துநீர்க்கடுத்துவீழும்
அண்ணலாருரைத்தநுண்மைஆயநுவேதமாமே. (௬௧)

## சிலேற்பனபித்தம்.

தாங்கியசிலேற்பம்ரண்டும்தனிப்பித்தமெழுந்ததாகில்
ஓங்கியஜன்னியுண்டாம்வுச்சிநோய்செவிகேளாது
பாங்குடன்காவினித்தூப்பத்தியப்செரியாதாகும்
பூங்கொடிப்பித்தசேற்பமென்றுதான்புகலுவாரே. (௬௨)

## வாதசிலேற்பனக்குறிப்பு.

மானேகேள்வாதம்ரண்டும்வருத்தசேற்பனமுங்கூடில்
ஆனதோர்சரீரம்நோவாம்அங்கைகால்திமிர்த்துக்காட்டும்
மூனமாமுதரத்தள்ளேவூத்தையும்மிகுந்துவிம்மும்
பானலங்கண்ணினாற்கேள்வாருசேற்பனமாம்பாரே. (௬௩)

## அசாத்தியநிதானம்.

பார்த்திடில்வாதபித்தப்பதிர்ந்துசேர்ப்பனங்களங்கே
ஆர்த்திடலாணைவால்போல்துடித்திடுமசவைநோவாம்
வேர்த்துடற்பட்டுத்தானேமெய்யெலாங்குளிர்ந்ததாகில்
கோர்த்தொடிமங்கைநல்லாய்மரணமாங்குறியிதாமே. (௬௪)

## அசாத்தியமரணக்குறிப்பு

மேவியபுறங்கையாலேமிக்கதோர்முகத்தைவீங்கும்
ஆவலாய்மனிதர்தன்பாலகமுறயேங்கிநோகும்
பூவையேபெருமூச்செய்துபோனசேதேடுமென்னின்
காவியங்கண்ணினார்கேள்மரணமாங்காலந்தானே. (௬௫)

புயம்பியவிலாவிரண்டுபுருபுருரெனவகித்து
சயம்படுதொண்டைக்குள்ளேஜலமடைத்திரையுங்கண்டாய்
வயக்கிளமின்னேகண்ணீர்தங்குநீருமோட்டில்
தியங்கிடவென்றமிந்தச்செய்குறிமரணமாமே. (௬௬)

எடுபிடியென்றுவீழும்பெழுமுடல்மயங்கிக்காட்டும்
புடையுறுமூக்குநீருபொசிந்திடும்வேர்வையுண்டாம்
வடுவிழிமாந்தருக்குவாங்கிடுமவிலாவிரண்டும
கடுகவிக்குணங்கள்கண்டால்கண்டுகொள்மரணமென்றே. (௬௭)

## அசாத்தியக்குறிப்பு.

உண்மையாய்வாதபித்தம்நாடிகளுடனேமாய்ந்து
வண்மையாம்செற்பத்தாலேவளர்துடியடியேபோலத்

திண்ணமாய்வுடல்வெளுத்துமார்குளிர்ந்ததென்னில்
அண்ணலாரறியச்சொன்னோமறிகுறிதொண்ணூற்றுரே. (௬௮)

௭-வது-கிழமையில் மரணக்குறிப்பு.

ஆடியேமஞ்ஞைகோழி அன்னப்போல்நடந்துவாதம்
நீடிய அட்டைபோலநீண்டதுதியங்கியோடில்
கூடியகிழமைஏழில்கொள்வதுதிண்ணமென்ன
நாடியேமுனிவர்தாமும்நயம்பெறவறிந்துசொன்னார். (௬௯)

௩-வது நாளில் மரணம்.

சொன்னமுன்னுண்மையட்டைதுலங்கியபித்தநாடி
வன்னமாமரவுபோலவளைந்ததுபிரிந்தேயோடில்
அன்னநாளைந்துமூன்றில் அறிந்துகொள்மரணமென்ன
இன்னமும் அறிந்துசொன்னோமியம்பினர்குறிப்புள்ளோரே. (௭௰)

௧-வது மாதத்தில் மரணம்.

கூத்தடுதவளைபாம்புகுலவியநடையைப்போன்ற
தோத்தரித்துரைத்துச்சொன்னசிலேற்பனங்கொடியநாடி
போர்த்தொழில்திடமன்போலப்புடைத்ததுபிரியக்கண்டால்
தூர்த்தறித்தொழிவரென்றுதொகுத்தனர்மாதமொன்றே. (௭௧)

௨-வது நாளில் மரணம்.

மேதினிவுள்ளோர்க்கெல்லாமெய்யிதவுரைக்கலுற்றேன்
ஓதியவுடலைச்சந்துவுழன்றோடிநாவண்டு
தீதில்லாக்கற்பநாடிசெருமியேயெழுந்துவீழும்
ஆதியாமுறைத்ததன்மைஅடுத்தநாளிரண்டிற்சாவே. (௭௨)

௫-வது நாளில் மரணம்.

மெய்யதோர்பித்தம்நீங்கிவாயுவதுமிகுந்துகாட்ட
அய்யமேலிட்டகன்றுமடைந்திடுமிளப்பமாகும்
துய்யதோர்விழியுமந்தஞ்சோருநீரிடமேசத்தில்
ஐயநாருரைத்ததன்மைஅஞ்சாநாள்மரணந்தானே. (௭௩)

இறைப்புக்குறிப்பு.

துன்னியவாதபித்தஞ்சேற்பனந்துடர்ந்தஜன்னி
இன்னமுங்குணமுஞ்சொல்வேனிடல்புடனிருந்துகேளாய்
பின்னியபாம்புபோலப்பிரிந்துதானடந்தநாடி
தன்னியதவளைத்தித்தபங்கிடிற்சாவுமாமே. (௭௪)

### க-வது நாளில் சாவு.

என்னவேவித்தைதன்னையியல்புடனிணக்கச்சொல்வேன்
உன்முகமார்புஜங்கள்மூக்குடன்செவிகள்கண்டம்
சென்னகங்குளிர்ந்ததானுஞ்சேற்பனஞ்சுருக்கேசேர்ந்தால்
சொன்னநாளொன்றிற்சாவான்தொகுத்தறிந்துரைத்துசெப்பே (௭௫)

### மரணநிச்சயக்குறிப்பு.

கண்டம்நொந்துந்திவிங்கிகண்சிவந்தளர்ச்சிதோன்றி
அண்டமும்பொருமிவிம்மி அதைத்துடலிறுக்கமென்ன
மூண்டகமும்பொன்போலமூண்டுமேமூச்செறிந்து
தண்டிளங்கந்தமேவிசாவதுதிண்ணமாமே. (௭௬)

### சேத்துமபித்தக்குறிப்பு.

சில்லெனச்சேத்துமத்தில்சேற்பனமகிலேதோன்றில்
சல்லெனச்சரீரம்வேர்த்ததானுடல்குளிர்ந்துதோன்றி
சொல்வதுருகுடரிப்பேசித்துக்கமுங்கழண்டுவீழும்
செல்விதன்பித்தந்தானுந்தீர்ந்திடாரோகமென்னே. (௭௭)

### சேத்துமவாதக் குறிப்பு.

மெய்யதோர்சுகம்விரும்பிவிரவுதானுழலேபேவிச்
செய்யதோர்நாவரண்டுசிலேற்பனநாடியோடில்
துய்யவேகண்பரந்துகாண்கில்நாளிரண்டினிதான்சாவே
வெய்யகண்பரந்துகாண்கின்ற ளிரண்டினிதான்சாவே. (௭௮)

### வாதபித்த சேத்துமக்குறிப்பு.

சாலவேவாதபித்தஞ்சிலேற்பனந்தனித்தொன்றாகி
சாலவேபோஜனங்கள்சமித்திடாதாட்சிசெய்யும்
சாலவேஜன்னிசேர்ந்ததலைநொந்தவ யிதிறக்கில்
சாலவேஅசைவைதிட்டந்தன்னினைவில்லாதென்றே. (௭௯)

### அசாத்தியக்குறிப்பு.

கால்வளர்ந்தயருமூக்குங்கருவிழிசிவந்துநிற்கும்
மேல்வெளுத்தங்கந்தன்னில்மூழிதணிதொடுங்கக்கண்ணீர்
கால்பெருத்துதிருப்வாயுந்தாண்குதுத்திருக்குமிந்த
நால்வகைக்குறியுஞ்சொன்னோம்நமதுயிர்போகும்வாறே. (௮௰)

புருவமேவட்டமாகிப்புபமெலிந்திருக்குஞ்சேனை
பருகினீர்தாகம்போதப்பஞ்சிடுஞ்சன்னும்லாயும்
அருவியபேசட்பதானுமடர்ந்துகாணிருக்குமானல்
மருவுமிக்குணங்களெல்லாமரணமென்றுரைக்கலாமே. (௮௧)

### மூன்றுநாள் மரணக்குறிப்பு.

போர்விழிமருண்டுநாளும்புனல்விருந்தவர்காலஞ்சிற்
சார்விழிசெவியிலேறுந்தரித்திடாதேழுநாளில்
பார்விழிமொழியும்நாவிற்பயின்றதுசுவையுங்கூரான்
கூர்விழிநாசிவாசங்குறையுநாள்மூன்றிற்சாவே. (அஉ)

### மரண அடையாளக்குறிப்பு.

போசனம்வெறுத்தல்விக்கல்பொருமுதல்புடைத்துச்சேர்தல்
ஆசனங்குளிர்ந்தவூதல்அங்கைகாலபுறத்தேவீங்கல்
கோசமுமேறவாங்கல்குளிர்ந்திறங்குளிரவாங்கல்
நாசிவன்கருவிளண்டேநவின்றநீர்விட்டுப்போவேன். (அ௩)

### மரண அடையாள நாடிக்குறிப்பு.

விட்டநீரடைத்தல்போல விழிபிநீர்சிதறச்சித்தல்
அட்டமுங்குளிர்ந்துகாணல் அங்கைகால்புறத்தேவீங்கல்
உட்டணம்பிரவேசித்தல்வுறவுதலிறப்புச்சேர்தல்
நட்டமாஞ்சாவுதிண்ணமநாடியேகைதொடாதே. (அச)

### பஞ்சநாடிகுறிப்பு.

கைதொடிற்புண்போல்நோகல்கறுத்துடல்வழவழத்தல்
மெய்தொடிலுதிரம்நீலம்விழிதனிற்சிகப்புப்பூனை
செய்பொழிக்கமலம்புக்திசிதமுகங்குறுவேவாசித்தல்
ஐவருமொடுங்கிநிதமாடுவராடாதென்னே. (அரு)

### அசாத்தியசேஷ்டைக்குறிப்பு.

சிரமதுகனகனத்துச்செவியடைத்திருமலாகி
சுரமதுவெகுவதாகசோரைபோற்சிறுநீர்வீழும்
சரமதுசிதறிவிசித்தாகமும்வெகுவதாகி
விரயவேவிழிதியங்கிமுழியாதும்டையமென்றே. (அசு)

மருந்திடவிரும்பிடாதேமறுபிறப்பிட்டுமேலும்
தருந்தரிநிகங்கள்வீங்கித்தாளடிக்கீழகட்டி
பருந்துநீர்பெறவேவாககிப்பார்வையுமிகுதியானல்
மருந்திடவென்றேயுமரணமென்றறிந்துகொள்ளே. (அஎ)

### மரணலக்ஷணக்குறிப்பு.

மீன்றுவாய்வழவழத்துமேனியுவெளுக்குமாகில்
தான்றியபேச்சைசத்தாலும்சவண்டிடாராகமட்டும்
மீண்டியமரணமாசவிரண்டரைக்கடிகைமுன்னே
கூண்டனவிளப்புங்கூடக்குறைத்தீடுமுபிரையென்னே. (அஅ)

வந்தோர்சாமுள்ளோர்க்குயிணைக்கவேவேர்வைதோன்றி
வந்தோர்பெருமூச்சுண்டாய்வாதநாடியுமேயானால்
தெய்ந்ததுபிராணனென்றுசெப்பலாந்தெளிந்தோரெல்லாம்
கந்தமுங்கையால்தாமன்கறுகறுப்புநுவங்கண்டீர். (௮௯)

சாத்தியமரணக்குறிப்பு.

கன்னியேநாவுமெத்தக்கறுப்பதாய்காக்குமூக்கும்
தன்னியேகுணமும்மாறித்தவ்வியக்குணமுமிஞ்சல்
என்னவேகுணமிதானால்இதற்குநீரினிமைகூர்ந்து
உன்னியமருந்துசெய்தால்ஒழிகததுமரணமென்றே. (௯0)

பதார்த்த அசாத்தியமரணக்குறிப்பு.

உண்டவூன்செறியாதாகில்வூண்மிகச்செல்லாதாகில்
கொண்டதோர்வாயுவுமுத்திகுடல்வலிப்புரளுமாகில்
பண்டுசொல்மருந்துசெய்யில்பார்க்கவேபெண்ணேயென்றால்
வண்டுசேர்குழலினாரேமரணமென்றிதனைச்சாற்றே. (௯௧)

ஏ-வதுநாள் மரணக்குறிப்பு.

சாலவேஜலத்தினூடேதானமிழ்ந்துமுழுமாகில்
ஏலவார்குழலினாரேபூநாளையிலேகொல்லும்
காலமேகதிரோன்றன்னில்கருதியதிங்கள்தானும்
மாலையினிணங்கநன்றுமரணமாந்திண்ணந்தானே. (௯௨)

க-வது மாதத்தில்மரணக்குறி.

தானொருநாட்குநாள்தான்தன்பலக்குறையுமானால்
ஆணதோர்வதனந்தானுமறவெளுத்திருக்குமானால்
ஈனமாம்பெருமூச்சுண்டாயிருக்குமேமாதமொன்றில்
ஊனமாமரணமென்றுவுறுதியாயுடைக்கநன்றே. (௯௩)

கைவிடுங்குறிப்பு.

மூதுகொடுவயிறுவீங்கிமூலமூர்தாதுகெட்டு
செதுசெவிக்கண்ணும்வாயும்சோர்வறப்பறிவுகுன்றி
முதுர்தனவாறுமூன்றுமூதியவஞ்சினைப்பளாகி
விதியவள்வசமேதென்றுவிட்டுநீயகன்றிடாயே. (௯௪)

நாவுக்குறிப்பு.

இத்தியமலஜலங்கள்மற்றுளசெவிகண்ராசி
வத்ததோர்கன்னம்நாக்குவுறுதிகள்பலதுமற்று
இத்தனைக்குணமுங்கெட்டுஇருந்தனவியல்புங்கண்டால்
சித்தர்முன்புசென்றுவினுவதுவறிவதாமே. (௯௫)

(மயக்கக்குறிப்பு.)

போங்குறி அவத்தைதானேபுனலொடியசந்துநாதம்
ஏங்குறிசிலேற்பர்தானேஎய்தியமுடிச்சுவிழும்
ஓங்குகுசழிதானே துவங்கிடும்பலபேச்சாகி
தாங்கருதுரிபக்தானேதப்பிடுமயக்கந்தீர்ந்தே. (கசு)

அ-வது-நாளில்மரணக்குறிப்பு.

தீதறு அவத்தையஞ்சில்தெளிவுநமுகமேபாற்கும்
ஓதிப அவத்தைபாநிலவுடலதுகுளிந்துகாட்டும்
நீதிபோம் அவத்தைஎழில்நினைவுற்றுபொசிப்போனென்று
மாதிபாருரைத்தஎட்டில்முகமும்பஞ்சடையுமென்றே. (கஎ)

(ரு-வது-நாளில்மரணக்குறிப்பு.)

கொண்டிடுமவத்தைக்கேளாய்கூர்விழிமூக்குகாது
உண்டொடிவுச்சிவுந்திஉள்ளங்கால்கைகளெங்கும்
விண்டிடவெளுத்துக்காட்டிமிகக்குளுஞ்சேறபமென்று
அண்டருமறியச்சொன்னேம்அஞ்சாநாள்மரணமென்றே. (கஅ)

(எ-வது-நாளில் மரணக்குறிப்பு.)

தன்னுடசைகைவாளும்தனக்கதுதோன்றுமாகில்
முன்னுரை அறிதல்கேட்கல்முயன்று காப்பதற்குவந்து
என்னதுன்றபிதல்யேங்கிஇளைப்புடனதிகைப்பத்தோன்றல்
சொன்னம்போல்வரண்டுமெய்யுநகோன பிடலேழ்நாட்சாவே. (கக)

(உ) வது-நாளில்மரணக்குறிப்பு.)

பிரண்டதுமருண்டுமேலேபொருமிரோகடக்குமாகில்
இரண்டரைநாளதென்ன இயம்பினர்மரணமென்று
சாண்டமெய்குழலினுள்ளேசுரததினாட்டதாகுந்
திரண்டநாள்வந்ததென்றுசிக்கெனததெரிந்துசொல்லே. (ஏ)

(கம-நாள்கையில்மரணக்குறிப்பு.)

அரிந்திடாப்பிக்கநின்றுவாதமும்சேத்துமமங்கே
பிரிந்திடாதோடுமாகில்பொய்வனமாதேகேளாய்
இரிந்ததோர் ஆகமத்தின்நேர்படவொத்தேயோடில்
யரிந்திடாக்கடிநகைதொண்ணூராளவினில்மரணமென்றே. (ஏக)

(வேறு.)

சேருமுமிருக்கண்டோங்கும்சோங்கும்கைகள்காலுடனே
ஊருமுழன்றெநெஞ்சுழலும்வுள்ளேசேத்துமகேதண்டம்
நீருமிருக்கும்கண்சிவக்குநேரேயிருகலோடாது
பாருக்கிரிகைக்குணங்கண்டால்பரமன்மீட்கமாட்டாரே. (ாஉ)

(மரணக்குறிப்பு.)

எடுக்கும்படிக்குமெழுந்திருக்கமிளைத்தேமூச்சுதனைவாங்கும்
வடிப்பொங்கிரும்விழியிரண்டும்மலரவிழிக்கும்வழிபார்க்கும்
தொடுக்குஞ்சேத்மமிகவெழுந்தேதொண்டைதனிலேநீண்டுழலும்
அடுத்தநாளிதென்றறிந்தே அகலப்போகக்கடவீரே. (ாங)

காலுங்கையும்புறம்வீங்கிக்கண்டஞ்சோர்ந்துகாவரண்டு
மேலுங்கனத்தேயிளம்பெய்திமிகுந்தேதாகமுண்டாகி
தோலுஞ்சதையம்படபடத்துதுய்யநெஞ்சில்குலைந்திடிகில்
மாலும்பிரமர்வந்தாலும்மரிக்கும்பிழைப்பதரிதாமே. (ாச)

(வைத்தியன்கைவிடுங்குறிப்பு.)

ஊசிபோல்முகமும்கொந்துவுடம்பெலாநரம்புதோன்றி
பாசிபோல்காவுங்கண்ணும்பாண்டமும்வெளுப்பதாகில்
கூசிடவேண்டாமிந்தகுணங்களுண்டானபோது
ஊசியேமரணமென்றுவுடையநீவிட்டுநீங்கே. (ாரு)

(நாடிநீதிநூற்குறிப்பு.)

நீதில்லாவுடல்வெளுக்குந்திரவியபத்திற்சாவாம்
ஆதியவேதஞ்சொன்னவுரைவிதிப்படியேமுன்னோர்
பேதியாய்க்கண்டநீதிபெருமையாய்ஆய்ந்துகொண்டு
மூதுவர்கடைசிக்கெல்லாம்முறையிதென்றோதுநூலே. (ாசு)

ஓதியேவேதஞ்சொன்னவுரைவிதிப்படியேயாய்ந்து
மூதுவற்கடைக்குறித்தமுனிவருமருளிச்செய்த
வாதிகொள்நூலைக்கெல்லாம்வரைசிந்தாமணிவிளக்கம்
ஆதிரான்முகனுமாலுமணிமுடியளவுநின்றே. (ாஎ)

சிந்தாமணிநாடிக்குறிப்பு-முற்றிற்று.

—*—

(இதுவுமதுகாவியம்நாடிகூறுகின்றார்.)

சாத்துகிறேன் நாடியுடபுருவமோடு தாக்கானநாக்குமலமூத்திர மூமாய், காத்துகிறேன் கண்ணோடு பேச்சுத்தானுங் காரியமாமெட்டு வகைபரிட்சைதன்னில், ஆக்துகிறேன் அவைவயிலுள்ள குணங்களெல்லாம், அசாத்தியமறிந்து அவைபம்பார்த்து, நாத்துகிறேன் நாடியுடன் நன்மையெல்லாம் நலமறிந்துகுணத்தோடுநயந்துபாரே. (௱௮)

நயந்துநீநாடிதான்பார்க்கும்வாறு நல்மானபருவமுச்சி கண்டம் செஞ்சி - நயந்துகையில்காலடியில் முழங்கைதன்னில் கணுக்காலில் முழங்கால்கைக்குளிதலாகும் - நயந்துதானகங்கள்தான் பரிக்கும்நாடி சகலர்பெழுபதிராயிரமுஞ்சார்ந்து, இயந்துநிற்கும் இவ்விடங்கள்நாடிபார்க்கில் நிரோகத்தின்பரிட்சையெல்லாம்இயம்பிடாயே. (௱௯)

இயங்கிடவே அக்குட்டவிரலுக்கப்பால் யேத்தமாய்நெல்லிடைவிட்டப்பால்பார்க்கில் - மயப்பிடவே மூவிரலால்நாடிதொட்டு மும்மூர்த்திநாடியினில் முதுக்கம்பாரும் மியம்பிடவேபிறமமதவாதநாடிப் பேரானபித்தந்தான்விஷ்ணுநாடி, நியம்பிடவே சேத்துமமதுருத்திர நாடி செயலெல்லாஞ்செப்புநீதெளிந்திடாயே. (௱௰)

தெளிந்திட்டகாலமேநாழிகைபைப்பத்தாங் திறமையாய்வாதத்தின்சிறப்புமாகும் - பொளிந்திட்டஉருமத்தின் பத்துநாழிப் பித்தத்திலுடியிப்பிறஸ்தாபந்தான், கழிந்திட்ட சந்தியினிற்பத்துநாழி சேத்துமத்தின்செயலாகுங்கங்குல்போத, வழிந்திட்டவாதத்தின்நாடியாகும் வலிந்தறிந்துசிவத்தின்மேல்பித்தமாமே. (௱௰௧)

ஆமென்றவகையறியில்சேத்துமமாகும் அம்மூன்றுநாடியது அடங்கியேயெழுந்தால், நாமென்றவாதத்துக்கிருப்பிடமேகேளு நாவிக்குங்கீழென்றுநவிலலாகும், பேமென்றபித்தத்துக்கிருப்பிடமேகேளு பேரானகண்டத்தினகீழதாகும், தேமென்றசேத்துமத்துட்சிறந்திருக்குந் தனஞ்சயனேஉச்சிக்குங்கீழதாமே. (௱௰௨)

கிழானபெருவிரல்கீழ்தற்சனியாம்விரலில் ளெங்தெழுப்புப்வாதத்தின்நாடிதானே, மாளானமத்தியத்தின்விரல்தான்பித்தம் மகத்தான அனுவிரல்சேத்துமமாகும், வாளானமன்னனுக்குவலதுகைநாடி மங்கையற்குயிடதுபக்கம்வகுக்கலாகும், காளானகைகளிலேநாடிபார்க்க கருவிகள்தான்கணக்கறிந்துகருதிப்பாரே. (௱௰௩)

தருதியேநாடிகள்தான்காணுநேரம் கதிருதயஞ்சித்திரைவைகாசிக்குந்தான், அருதியேஅனியொடுஆடி ஐப்பசிய மமிர்தமாங்கார்த்திகைக்குமத்தியானம், மருதியேமார்கழியுந்தையுமாசி மாலைநேரந்தனில்பார்க்காகும், பெருதியேபுரட்டாசிஆவணிபங்குனியும் பேரானகங்குலர்த்தராத்திரியமாமே. (௩௰௪)

அத்தமாம்நாடிதெரியாதபேர்கள் அற்பிங்கனஞ்செய்தோற்குஅன்னந்தண்ணீர், குறமாமிகுதியேயுண்டபேர்கள் குதிரைகரிவெய்யில்விடாய்சிற்றின்பத்தோர், மத்திபமாமதசெஞ்சாஅபினிமாங்கிஷமச்சங்கள்மிகவுண்டோர்வாய்வுபுக்கும், பித்தமாய்நிறத்திலோரிவர்கட்கெல்லாந் திசைசலங்கிநாடியதுதெளிந்திடாதே (௩௰௫)

தெளிந்திட்டவாதத்தின் நாடியின்குணந்தான்கேளு சிறுபிள்ளைத்தூங்குதொட்டிலாட்டம்போலும், வளர்ந்திட்டுவளைந்துவளைந்தேநடக்கு மண்டூரங்காதுவசஓணான்போலும், தளிர்ந்திட்ட சர்ப்பம்போலட்டைபோலும் தவிர்ந்துமேவெயிலினிற்குருவிப்போலும், களிந்திட்ட ஆமையின் நடையைப்போலும் ஆதியாம்வாதமது நடக்குந்தானே. (௩௰௬)

நடக்குகின்றபித்தத்தின்நாடிகேளு நாகரிகமாகுமன்னநடையைப்போலும், தாராப்போலும்மாடைபுறா ஊர்குருவிதமர்போலுமாகி, மெடக்குகின்றமெத்தவாய்மீண்டுமீண்டு மேன்மையாய்மிடுக்காககிளக்கமாகி, தொடக்குகின்றகெருடன்போல் பெலத்துலங்கிக் கேசரம்போல்றோமமதுபித்தந்தானே. (௩௰௭)

தானென்றசேத்துமத்தின் நாடிகேளு தயங்கியேதொத்துவதந்தோற்றுதாகில், கோனென்றகோழியின்நடையைப்போலும் கொக்கினிடஉரக்கம்போலும்ஊர்க்குருவிபோலு, மானென்றமங்கைநல்லாள் மயக்கில்சிக்கி மருகினவன்தாதுபோல்மசகமாகி, தேனென்றசிலந்தியின்பூச்சிப்போலும் சேத்துமமாம்நாடியதுதெளிவாய்ப்பாரே. (௩௰௮)

தெளிவானவாதத்தின்நாடிசேதி செப்பவேசிறுகுருவிபோல்நடந்து, விளிவானமயில்போலேநடப்புகாணும் மருவியபின்ஓந்தியினின்மார்க்கமாகும், களிவானவாதசேத்துமத்தின்நாடி காணகத்தில்கோழியதுபோனடக்கும், அளிலான அட்டையின் மார்க்கம்கண்டால் அதிகமாய்முன்சொன்னநாடியாமே. (௩௰௯)

நாடியேபித்தஞ் சேத்துமத்தில்தாது நண்ணியே ந-க்கும்வகை நன்மைகேளீர், பாடியேபாப்புபோலலைந்துபின்னைப் பருந்தவளைகுதித்துவரும்பருவம்போலாம், மாடியேஅழ /ணமாம்நாடிதானும் அனந்தமதவானைபோலநடை நடக்கும், தேடியேதிபத்தின்னாடிதானும் சிறுகாக்கைதாங்குதல்போற் றுடிக்குந்தானே. (௱௨௰)

துடித்திட்டு வசைந்துமே நாடிநின்று துரிசானவிறகுகட்டுசுமந்தவை யாகி, :கிறுத்திட்டுகிறுகிறென்றேசத்திநாடிக் கிழேமோடிவளைந்துமேபதறிச்சுற்றி, அழித்திட்டி அன்னம்போ லட்டைபோலும் அதிகமாத்தாகவுமேமெலிந்துதானால், தடித்திட்டுக்குடிலமாய்ச் சிக்கென்றுதானால் சன்னிதனிநாடியென்றேசாத்தலாமே. (௱௨௧)

சாத்தியேமந்தமாய்நாடிதானுந் தனித்தருக்கிடம்நடைநடந்தாப்போலும், மோத்தியேமூஞ்சூறுப் போலவாகி முனையாகிசுடராகிக் கொழுந்தேயோடி, அத்தியே அடங்கினின்றமெழும்பினாற்கால் அப்பிக்கனஞ்செய்தோரிவையானுகினார்க்கு, தேர்த்தியேசுகசன்னியென்னுநாடி சூட்சாதிசூட்சமாய்த்துஞ்சம்வாறே. (௱௨௨)

துஞ்சியேவாளைமீன்போலேபாய்ந்து துடித்துமேதடித்துதான்சிக்கலாகி, அஞ்சியேசர்ப்பம்போல் அடங்கினின்று ஆனைமும்மதம்போல ஆர்ப்பரித்து, நெஞ்சிநெறிநேனென்றுன் னிமிஷந்தானும் நிலைவிட்டுநீங்கியேமீண்டுபுக்கும், வஞ்சியர்மேல்விகாரமாய்மனதேபூண்ட வாதகரநாடியென்றேவகுக்கலாமே. (௧௨௩)

வகுக்கவேவாதத்தின்னாடிதானும் வளைந்துமேபின்னேடிப்புரண்டுதாகில், தருக்கவேமந்தமதுமெத்தவாசில் மயில்தாரா அன்னநடைபூண்டுநின்றால், நிருங்கவேநின்றுநின்றுநேரோடாமல் நிலைதப்பிமுன்பாச்சல்பின்பாச்சலாகில், செருக்கவேசெடந்தானும் பெட்டானுளிற் சிவபுரத்துக்கெய்துவிடுந் திண்ணந்தானே. (௧௨௪)

திண்ணமாம்பித்தத்தின்னாடிதானுந் தேள்கொடுக்குத் தெறிப்பதுபோல்தெறிக்குமாகில், வண்ணமாம்வாதத்தின் மரணமென்னகல்லூருசர்ப்பமதுவளைந்துகாண்கில், பண்ணியேபட்சத்தில மரணமென்கப்பரு அறணைத்துடிசெய்யில் பெட்டுகாளாம், மின்னியேபித்தமதுமீண்டுமீண்டு மிரட்சியாய்மீண்டுவேர்தால்மீளாதாமே. (௧௨௫)

மீளவேஉந்தியினிற்சுழியைப்பற்றி விளங்கியதோர்வாதபித்தசேத்துமந்தான், ஆளவே ஐயமென்ற நாடிதன்னில் ஆதித்தன்சுடரொளிபோல் தோன்றுமாகில, காளவே காந்தத்தின் அனலாய்க்காண்

இல் சலந்திரோதான் கைவிட்டுநெடுகியேகில், பாளவேபம்பரம்போற் சுழலுமாகில் பரமபதமடையுமென்றேபகரலாமே. (கஉசு)

பகரவேவாதத்தின்நாடிதானும் பருகியதோர்பித்தத்தின்விடுசேர்ந்து, பிகரவேபித்தத்தின்நாடிதானும் பேரானசேத்துமத்தின்விடுசேர்ந்து, அகரவேஐயமென்றநாடிதானும் அதின்விட்டைவிட்டுமேஅப்பாலேகி, திகரவேகண்டத்தில்சேருமாகிற் றிடமலேர்ந்துசிவலோகஞ் சேருமாமே. (கஉஎ)

சேரவேவீணைபோல்தெறிக்குமாகில்சித்தமாய்தினமூன்றுளிலுய்வா, ஞரவே ஐயமாம் நாடிதன்னில் அதிர்ந்துமே தவளைபோற் குதிக்குமாகில், பேரவேபாம்புபோல் பிரண்டுளர்ந்து பொறியரவம் தன்னுடையநடைகண்டாலும், மாரமரந்தன்னில்கொடி மின்னல்போல வந்திடுமேமரணமெனவருக்கலாமே. (கஉஅ)

வருக்கவேமானிடவன் வலக்கைபத்தி வளையன்றி முடக்கன்றி நெட்டைவாங்கி, ஒருக்கவேமூவிரலால்தொட்டுப்பார்க்கில் முன்னடி வாதபித்தமென்னலாகும், சிருக்கவே ஆழிவிரல் சேத்துமமாகுஞ் செயலெல்லாமறிந்துணர்ந்து சேதிகேட்டு, நருக்கவேநோய்தன்னின்றன்மைகண்டு நாடியினின்செயலறிந்துநாடிடாயே. (கஉகூ)

நாடியேஎறும்புமுத லூர்தல்போலும் நல்லாமைஅசைவதுபோல்வாதநாடி, கூடியேகுளுக்கியாய்மெதுவும்போன்று குடிலங்களில்லாதேதோன்றுமாகில், வாடியேமங்கையற்குக்கோபமாகும் மகத்தானபஞ்சுபோல் மெதுவாயுத்துப், பீடியேகின்னரத்தின் யொலிவேபானல் பூத்தமங்கைநாடியென்றே புகலலாமே (கஙய)

புகலவேபுழுப்போல நிமிருமாகில் பொறுகாவல்வண்டினிடபொலிவைப்போலும், நிகலவேகாசமத்தின் நெய்தான்வீழ்ந்து நேர்ந்தெழும்பும்அக்கினியின்னிறமேபோல, திகலவேகிளியெழும்புஞ்செய்கைபோல திரையெழும்பிஒடுக்குதல்போல்பித்தநாடி, விகலவேபடபடத்துத்தோன்றுமாகில் விசாரத்தின்நாடியென்றேவிளம்பலாமே (கஙக)

விளம்பவேமேதினியில் கல்லெறிதல்போலும் மிகப்பாசிஆட்டுக்கிடா பாச்சல்போலுங், கிளம்பவேசெக்கினிடதிருகல்போலுஞ் சிறுகின்றமூஞ்சூறின்சிவலைப்போலும், இளம்பவேபக்ஷியின் நெழும்பல்போலும்யெத்தம்போலேறியிழுத்திடுதல்போலும், புளம்பவேபித்தத்தின்நாடிதோன்றில் பூதத்தின்நாடியென்றேபேசலாமே. (கஙஉ)

பேசவேபின்கலையின் நாடிதானும் பேணுநாள்முழுதோடிப் பிரணாமற்றான், வாசவேமூவாண்டில் மரணஞ்சொல்லும் வாதமாம்நாடியதுவலுமையாகி, பேசவேயிரண்டுநாள்முழுதுமோடில் யிராண்டில்மரணமென்றேயியம்பலாகும், நாசவேநாள்மூன்றில்வழுவாதோடில்நமனுக்குயிரையாவன்நாடிதானே. (௧௩)

தானென்றபித்தத்தின்நாடிதானுந் தரியாமல்நாளொன்றில்தயங்குமாகில், ஆனென்றஆறுதிங்கள் மரணஞ்சொல்லும் அசையாமல்யிரண்டுநாள் ஓடுமாகில், மூனென்றமுனுதிங்கள் முடிவுகாணும் முயங்கியேநான்குநாள் ஓடுமாகில், நாளென்றநாற்பத்துஅஞ்சுநாளில் நசித்துமேநமனிடத்தில் நல்குவானே. (௧௪)

நல்கவேசேத்துமத்தின்நாடிதானும் நாள்மூன்றில்கடிந்தோடில் அஞ்சுநாளாம், அல்கவேயிரண்டுநாள் ஓடுமாகில் மரித்திடுவனீரைந்துநாளில்தானும், ஒல்கவே ஒருநாளும் வோடுமாகில் ஒருசீவன் பதினைஞ்சுமட்டுநிற்கும், பல்கவேபத்துநாழிகையேநின்றால் பயமில்லைபார்தனிலேபாலிப்பாரே. (௧௫)

பாலித்தபித்தத்தின்நாடிதானும் பகட்டியேமூன்றுநாள்பிரளுமாகில், ஆலித்தஅரவின்னுக் கசைதல்போலும் ஆடியேஅமர்ந்துதானிற்குமாகில, மாலித்தமணியசைத்த வோசைபோலும் மகத்தானஉடுக்கையினின்தொனியைப்போலும், கோலித்தநாடியினின்குறிகள்போலுங் கொடுமறலின்காதகளையேகுடிகொள்வாரே. (௧௬)

தொள்ளவே வாதத்தின் திரேகந்தானுங் குளுந்துமேசிறுதிடத்தேயூஷ்ணமாகி, துள்ளவேதுடிதுடித்துஇருக்கும்பித்தன் தேகந்தானதிகவுஷ்ணமாயிநிற்குந், தெள்ளவேசேத்துமத்தின்தேகந்தானுஞ்சிக்கனவேகுளுந்திருக்குந்தொந்தேகம், பள்ளவேபலவிதந்தான்பெற்றிருக்கும் பரிந்துதொட்டுதிரேகத்தை பார்த்துச்சொல்லே. (௧௭)

தேகத்தின்னிறந்தானுஞ்செப்பக்கேளு செழுமையாய்வாதந்தான்கறுத்திருக்கும், பேகத்தின்பித்தத்தின்நிறம் மஞ்சளாகும் பெருஞ்சேத்துமந்தேகிக்குவெளுப்புமாகும், பாகத்தின தொந்தேகிக்குந்தானும் பலவர்ணமுகமாகிநிற்குமப்போ, வீகத்தின்னிறம்பார்த்துநாடிபார்த்து அஷ்டவிதபரிட்சையெல்லாம் அடவாய்ப்பாரே. (௧௮)

பார்வாததேகிக்கிவார்த்தைதானும் பக்குவமாய்சமசத்தமாயிருக்கும், பேர்பித்ததேகிக்கிவார்த்தைகானும்பேசிடிலேபித்துமேஉரைத்திருக்குஞ், சேர்சேத்துமதேகிக்கிவார்த்தைதானுஞ் சிறுத்துமேயினகுரலாயிருக்கும்பாரு, வேர்தொந்ததேகிக்கிவார்த்தைதானும் வெகுவிதமாயிருக்குமென்ற விரித்திட்டாரே. (௧௩௯)

விரித்திட்டவாதமென்றதேகிக்கித்தான் மீறியேகண்கறுத்துதாவீர்பாயம், பிரித்திட்டபைத்திய தேகிக்கித்தானும பச்சென்றுசிவந்திருக்குஞ்சேத்துமதேகிக்கி, பிரித்திட்ட பீளைசாறும் வெளுத்திருக்கும்பெருஞ்சன்னிவாததேகிக்கிக்கண்தான், தரித்திட்டேச்சிவந்திருக்கும்பச்சென்றேதான்காமாலைதேகிக்கிப்பசுமஞ்சளாமே. (௧௪௰)

மஞ்சளென்றவாததேகிக்கித்தானும் மலபந்தமாயிருக்குங்கறுத்திருக்கும், பிஞ்சலென்றபித்ததேகித்தானும்பெருகியேபச்சென்றுவந்திருக்கும். துஞ்சலென்றசேத்துமதேகிக்கித்தானுஞ் சிதறியேமலம்வெளுத்துசீதமாகும், பஞ்சலென்ற தொந்ததேகிக்குத்தானும் பலவர்ணமாயிருக்கும்பண்புமாமே (௧௪௧)

பண்பான வாததேகிக்குமூத்திரம் பாரித்தும் தெளிந்திருக்கும்வெண்மையாகும், மண்பானபித்ததேகிக்கி மூத்திரம் மார்க்கமாய்மஞ்சள்நீற்றுப் பசிந்திருக்கும், திண்பானசேத்துமதேகிக்கி மூத்திரஞ்சேறுபோல் பொருமியெனுரைத்திருக்கும், கண்பானதொந்ததேகிக்கிமூத்திரங்கண்டபலநிறமாகுங்கருதிடாயே. (௧௪௨)

கருதியேவாததேகிக்கிநாக்குக் கறுத்திருக்கும்முள்ளுபோலேயிருக்கும்பாரு, பருதியேபித்ததேகிக்குநாக்கு பச்சென்றுதானிருக்குஞ்சிவந்திருக்கும், வெருந்தியே சேத்துமதேகிக்கிநாக்கு வெளுத்துமேதண்ணீருண்டாயிருக்கும், துருதியேதொந்ததேகிக்கிநாக்குசூட்சாதிப்பலவர்ணமாகுந்தானே. (௧௪௩)

வணணமாமெட்டுவகை பரிட்சைபார்த்து வகையானநாடியுட்குணமுங்கண்டு, திண்ணமாந்திரேகத்தின்செயலும்பார்த்து தேசதேசாபேதச்செயலறிந்துகண்டு, கண்ணமாங் காலாகாலங்கள்பார்த்துக் சனமான அத்தினியின்கணக்கறிந்து, பண்ணமாம்பலபலவாம் மணலைதேர்ந்து பரிகாரப்பயனறிந்துபார்த்துசொல்லே. (௧௪௪)

தன்மந்திரிகாவியம்நாடி மூற்றிற்று-முற்றும்.

ஆகசெய்யுள் (௫௮௪)

உ

கடவுள்துணை.

நான்காவது

# சிவவாக்கியர்

## நாடிகூறுகின்றார்.

வாதமானதேவனே யாதியாகிநின்றவன்
வாதமானதேவனே யவையசமமைத்தவன்
வாதமானதேவனே யறுதொழில்வகுத்தவன்
வாதமானதேவனே வன்மைகண்டுகூறுமே. (க)

வன்னியோர்மிகுத்தவன் வரையெழுந்தமாருதி
தன்னையொத்திருக்கவே சமத்திலேமிகுத்தவன்
மின்னையொத்தகாமகாரன் தன்னிலேமிகுத்தவன்
தன்னையொப்பிமெச்சிலானசமததன்பித்தராசனே. (உ)

ஐயமானதேவனே யனாதியாகிநிற்றவன்
ஐயமானதேவனே யறிவுளர்க்கதேக்கிடும்
ஐயமானதேவனே அட்சரத்தைபோதியே
ஐயமானதேவனே யறிந்துணர்ந்துகூறுமே. (ங)

வாதபித்தசேற்றுமமருவியொக்கஒட்டியே
வாசைமிக்கசிவனாலலங்கரித்துநின்றிடும்
வாசமுற்றவாதமுமனமிகுத்தபித்தமும்
சூசியொக்கநின்றிடில்சுரோன்மிகுத்தபித்தமே. (ச)

மட்டில்லாதவாதபித்தமருவியொக்கவோடிடில்
மட்டிலாவுசிவனார்மருவியக்குலூன்றிடும்
எட்டுமெனறவிழ்ந்துபோதிருந்தவன்தனஞ்செயன்
கட்டவிழ்ந்தகாரணங்கணக்கறிந்துகூறுமே. (ரு)

மயக்கிநின்றசிவனார்வந்திடுவதெப்படி
நிறங்குளுந்தபித்தமுநீதியொத்தவாதமுந்
தலங்களிற்பொருந்திநின்றுகங்களுக்குள்கூடியே
கலந்திடில்கலந்திடாதுகண்டுகொள்ளுமுண்மையே. (சு)

உண்மையானவாதபித்தசேற்றுமமறுகுடி
லுண்மையானசிவனாரோசைகொண்டேயேகுவார்
பொண்மையாகவாழுமித்தபூதலத்திலுள்ளவர்
வெண்மையானசிவனார்விட்டிடமவிளம்புமே. (௭)

நோத்தநாடிமூன்றிலேயகஞ்சுமாறுமென்றதாய்
போற்றியேபுகழ்நிறைந்தபோதபோதனன்றன
யேற்றதீபநாடியுமெல்லையில்மதித்திட
காத்தகாண்டருள்மயக்குங்காரணங்கள்காணுமே. (௮)

விடங்கெரித்தநாடியில்விரண்டுநாடிவாதமாய்
யடங்குநின்றபித்தம்போயடுத்தமாருதத்துள்ளே
துடங்கிநின்றவாதமுஞ்சூதிரத்தையெட்டியே
மடக்கலைமறியடித்தமாவமென்னமாயமே. (௯)

அங்குலத்தடங்கியேயனலையப்புச்சிரியே
பொங்கினின்றவுதகமுமபுரளையப்படுததியே
துங்கவன்கரியமூர்த்திகழித்திடக்கொழித்ததும்
அங்கிடனின்றதேயபானவாய்வுநாடியே. (௰)

மிஞ்சுநின்றவன்னியுமிகுந்துவாதமீறியே
உஞ்சலகொண்டிரங்குராயபிலுஒங்குநடிஐயமாய்
அஞ்சுமிஞ்சதிற்றகுழலங்கலைமலைககவே
துஞ்சுவனதொடுத்தமாயந்தோற்றும்வாரதெங்கனே. (௧௧)

உதித்தகாலைமாலையில்லே:நாடிமூன்றிலே
கதித்தநாடியின்னதென்றுகண்டுகொள்ளவல்லிருய்
கெதித்தெழுந்தவாதமுங்குறைக்குழன்றபித்தமும்
சதிக்குவந்ததெவ்வைவந்தண்மையென்னதண்மையே. (௧௨)

மூண்டகா:லைஇச்சியில்முயன்றமாலைமூன்றிலே
பூண்டகங்குலிருள்மயக்கப்புக்குவாறதெங்கனே
மீண்டுமைபம்வாதபித்தமிடறியற்றபோதிலே
தாண்டிருந்தனஞ்செயன்தடங்கறுத்தகாதலே. (௧௩)

தீதுசெய்தவாதநாடிசேர்ந்துவிண்டலத்துளே
மேதியக்கெழுந்தபோதிலஓசைகொண்டவன்னியே
மாதியானநாடிகெட்டலைக்துமேயமர்ந்ததும்
தீதுசெய்தகாலநாடிதொண்டுவாறதெங்கனே. (௧௪)

நல்லவாதுபித்தமும்கலங்குகின்றவையமும்
தொல்லையுற்றுடர்வருக்தருதுசெய்தபோதிலே
கல்லையுற்றுகாணுக்துகாலணையடுக்கிடில்
எல்லையுற்றநாடிதானுமில்லையில்லையில்லையே. (கரு)

இசைந்தநாடிமூன்றுமாயெழுந்தவோசைபோன்றதாய்
அசைந்தசைந்தவாதந்தன்னைவிட்டகன்றவைடமும்
பசைந்திருந்துநின்றசெவ்வும்பக்கலத்திலுற்றுபோ
தசைந்தவன்னியேரிடிலப்புவோசையையமே. (கசு)

மாயமாலைவாதமுமரிதேவன்னிஜயமும்
காயமானவஞ்செழுக்கிற்கண்டநாடியொன்றுமாய்
ஆயன்மையன்மாலுடனடுத்தநாடிமூன்றுமாய்
ஆதியானவாதநாடியலங்கரித்துநின்றதும். (கஎ)

நீதியானகாயமும்நிரந்திலங்கிநின்றதும்
ஓதியங்குதித்தவன்னிவாதமூடுகிடியே
சூதுசெய்தகாலநாடிலெண்டுபவாறதாகுமே
காயம்விட்டகன்றபோதுகாலமென்னகாலமே. (சஅ)

அக்கரத்திலூர்தியிலடுத்தநாடிமூன்றுமாய்
கக்கரத்திலூர்தியிலமர்ந்தஓடிலகன்றென
அக்கரத்திலூர்தியில்கண்டுருண்டுகுன்றிடில்
கக்கரத்திலீசனேவலடுத்தகாளதாகுமே. (கக)

வேறு.

உறுமையானவாதநாடிஓடியங்தொடுத்ததும்
உலாவிநின்றவன்னிவிண்ணிலத்துளேமதித்ததும்
அறுமையானவிண்டிலமடுத்தமாருதத்துளே
யரைந்துமோதவப்பிணைசையற்றுளேகழிந்ததும்
குறுகிநின்றமாருதங்குலவியங்கெழுந்ததும்
குரைந்துநின்றவன்னியுங்கொதித்தெழுந்துபொங்கியே
மறுகியேகொதித்தெழுந்தமாருதப்பிணைசையால்
மாயமரணமரணம்வந்தவாரதேதுயீசனே. (உய)

வன்னிபொங்கிமாருதம்வளைந்துவிண்டலத்துளே
மருவிநின்றப்பாதுவன்னியற்றுளேசுழித்ததும்
பன்னிநின்றவாதமானபண்பதானதனஞ்சேயன்
பதரியங்கெழுந்தபோதில்பண்புவன்சிதைந்திடு

மின்னிகின்றவன்னிபோலனுபமுற்றபோதிலே
    விரிந்தெழுந்தபக்தவாய்வால்விரண்டெழுந்தசன்னியு
முன்னியுன்னிகாலனையுலாவிசெய்ததோன்றலே
    ஓதுமாதிவேதநூல் உண்மையிதுவுண்மையே. (உக)

ஆதியானநாடியேயடுத்தமாருதத்துளே
    அமுழ்ந்துநின்றவாதமுன்னடங்கியங்கெழும்பியே
ஓதுகின்றவையுமச்சலத்தினோசையால்
    மூலநாடிவாயுவுமுண்டெழுந்தபோதிலே
நீதுசெய்தவச்சலத்தில் அபானகற்கபத்துளே
    சேர்ந்திருந்தமூவரால்திரண்டெழுந்தகாலமும்
சூதுசெய்தவப்பினோசைசுக்கிலத்தைப்பற்றியே
    தொடர்ந்துகாலநாடியொன்றிசொல்லிநூலினுண்மையே. (உஉ)

உண்மையானவாதநாடி ஓர்குறுங்கெழுந்திடில்
    ஓசையத்துவன்னியேயுலாவிநின்றவையமும்
வன்மைகொண்டமும்மலத்தடாகமுற்றுபொய்கையில்
    மயங்கிநின்றமூவரால்வந்தடுத்தகாலமும்
திண்மைகொண்டவப்பினால்சேர்ந்திருந்தவையமும்
    இயக்கமுற்றடுத்தபித்தஞ்சேர்ந்திருந்தபோதிலே
எண்மைகொண்டவாருசமீறவைப்புசிரிடில்
    இசைந்தகாலநாடியொன்றியல்புகண்டுகூறுமே. (உங)

கூறுகின்றவாதவோசைகொண்டெழுந்தவன்னிபால்
    கொதித்தெழுந்தவப்பினோசைகெட்டிவிண்டலத்துளே
மாறுகின்றவன்னிலோசைமாருதத்தைசூழ்ந்தபின்
    மாலமானமூலவாய்வுவண்டிங்கெழுந்திடும்
சிரியேசினந்தெழுந்தவாய்வு அபானத்திலே
    சேர்ந்துநின்றவோசைகெட்டுசெய்தொழிலமைத்திட
மாறுகின்றவன்னிவோசைபத்திமங்கிஷத்துளே
    பதைத்தெழுந்தவப்பினால்பகைகடுத்தகாலமே. (உச)

மூன்றெழுந்தவாதமுமுடிகிநின்றவன்னியு
    முனிந்தமாருதத்துளேமுறிந்துநின்றஐயமும்
பூண்டமச்சைதோலெலும்புப்பார்வையானமூலமும்
    பொரிகள்பகதிலோசையானபுகழ்நிறைந்தவாதமு
மீன்றுமச்சுரோணிததநிசைந்தசுக்கிலங்களா
    விரததமோடுமூளைகட்டெலும்புசண்ட பூண்களே
தூண்டெழுமலத்திலதுளக்கமற்றவோசையுந்
    தொடர்ந்திருளுனின்றடர்ந்ததோதகங்கள்கூறுமே. (உரு)

கால்மையவன்னியைக்குதித்தெழுந்தமாருதம்
　கனல்புனல்நிறைந்தயோசைசண்டமோடுவுச்சியும்
சிலமானகைரினில்சிரத்தினில்மரத்தினில்
　சேர்ந்தலிங்கமோடுவண்டஞ்சேர்ந்துகழுமாத்தியில்
கூலமானவுந்திமேல்குறிக்கயோழயக்கினில்
　கொட்டிக்கொள்ளுகொள்ளிரண்டாயிரங்களானவோசையும்
தாலமாயநிற்கவேதனஞ்செயன்சலிக்கதும்
　தம்மைகொண்டவாம்வினோரைதாதுயேதுமீசனே. (௨௬)

காலமானபித்தமுங்காலனையடுத்ததுங்
　கண்டுநின்றவாதமுங்கலங்கியங்குநின்றதும்
தாலமாய்கொதித்தெழுந்ததனஞ்சயன்சலித்ததும்
　தண்மைகொண்டவாய்வினைலேசஞ்சரித்துநின்றதும்
ஞாலமென்றபோதிலேஉரவுகொண்டவையமும்
　யோங்கியங்கெழுந்தபோதுதுரவுகொண்டவாதமும்
வேலைகொண்டமுப்புரந்தகைந்தெரித்தவன்னியும்
　வினையடுக்கயேகிவந்தவீரின்கண்டுகூறுமே. (௨௭)

ஒங்குகின்றமாருதத்தொடுத்தவையமக்கியாய்
　ஓசைகொண்டபித்தமூலாவியங்கெழுந்திடில்
பாங்குகொண்டமூவரும்பதரியங்கிளம்பிடல்
　படிங்கெழுந்தவாதமும்பரிவுகண்டபோதிலே
தூங்குநின்றிருள்மயக்கந்துடர்ந்தடர்ந்தவேளையில்
　துன்பவின்பமுங்கடந்தரூழ்ந்தகாலவன்னியே
பாங்கரிந்துகொண்டிமல்வுடுத்தகாயந்தன்னிலே
　பகைக்கடுத்தவட்பினைசைபாங்குகண்டுகூறுமே. (௨௮)

உரைப்பகற்குவாதபித்தமுண்மைகண்டவையமும்
　ஓங்கிநின்றமாருதத்துலாவிநின்றவன்னியும்
நிரைப்பமாகநின்றவாய்வுநின்றவன்னியுற்றதும்
　நின்றவன்குறிகிவந்தநேர்மைகொண்டுநின்றதும்
பரைப்பதாகவேயடாபாங்குகொண்டபோரிலே
　பண்புகொண்டமூவரும்பதரியங்கெழுந்தது
மிரைப்பதாகநின்றமூவர்கொல்லையிற்சுழண்டது
　மிருவர்போகவொருவனுமிறந்தகாலமாகுமே. (௨௯)

ஓடுகின்றவாதமுதற்றபித்தமையமாம்
　ஓசைகொண்டபோதிலேயுலாவிநின்றபித்தமும்

கூடுகின்றரெத்தமாக்கிஷங்கொதித்தெழுந்தங்கே
குரைந்துநின்றநாடியின்கொள்கைகண்டபோதிலே
ஆடுகின்றபித்தமுமசைந்தபோதுவையமும்
மாதியானநாடியோடமர்ந்திடும்பரிசிலே
வாடுகின்றவாய்வினோசைடாலுமுண்டுமெண்ணதாய்
மாயமானகாலனுந்தன்வருவதானகாலமே. (௯௰)

அந்தவுந்திதன்னிலேயமர்ந்தெழுந்தமூலமா
யாதியானமூலநாடியமர்ந்திடும்பரிசிலே
வந்திடுத்தவப்புவின்வளமைகொண்டவாதமும்
வன்னியையெழும்பியேவளைந்தடுத்தபோரிலே
சந்துசந்தலுக்கியேதடம்புனல்சுழியிலே
சண்டமாருதத்திலேசடங்கறுக்கும்போதிலே
வந்துவந்துதாவியேமாருதப்புனலினு
லசைவுகொண்டகாலனுந்தன்வருவதானகாலமே. (௯௧)

சிவவாக்கியநாடி முற்றும்.

ஆ செய்யுள் ௯௧.

கடவுள் துணை ஐந்தாவது

# வியாசபகவான்

## நாடிகூறுகின்றார்.

### ஆயுருவேதத்தின்படிபண்டிதன் ஆசாரம்.

காப்பு.

ஆயுருவேதந்தன்னிலடைவுளவடநூல்தன்னைத்
தாயெனக்கண்டுகொண்டுதமிழினால்விரிப்பதற்கு
மாயன்மாமருகோன்மிக்கவல்லபையிடத்தோன்மங்கைக்
காயமாம்பானந்தக்கரிமுகக்கடவுள்காப்பு. (௧)

சீலநாசாரனுமிக்சிறந்தவிற்பன்னனுமி
வாலஞானியுமாய்மண்ணில்மக்கள்பால்வியாதிதன்னை
கோலமாரிதன்பாலுள்ளகுறைகுணந்தோஷங்கண்டு
பால்தரும்மக்களைப்போலேபண்டிதனுவான்தானே. (௨)

நேயபாமசுரர்தேவர்நிறைந்ததோர்பசாசுமற்றும்
மாயவிக்கினங்களுக்கு அவிபெலியர்ச்சித்தேத்தி
தியநற்கோடனுக்குச்சிறப்புடன்சாந்திபண்ண
சுந்தமுமார்புநோதும் தக்காதுரக்கமுண்டாம்
இந்தவாச்சிலேற்றுமத்தால் பெய்திடுஞ்சுரங்கள்தானே. (௮)

வாதமும்பித்தந்தானும் வளர்ந்திடுமிப்பால்சேவீர்
போதவேதலைவலிக்கும் புத்தியுமறதியுண்டாம்
ஆகமுங்கடுத்துநோவாம் அடிபட்டாப்போலுளைக்கும்
சாதலமறிந்துகொள்வீர் சருக்தொந்தரோகமென்றே. (௯)

மெத்தவேனுவரண்டு விக்கலும்தண்ணீர்தாகம்
பத்தியசாமுமுண்டாம் பாளையிட்டோட்டங்கொள்ளும்
உத்தமதுசொன்னோம்சேவீர் உலகுள்ளோரறியுமவாறு
மத்ததுசன்னிவாதம் வந்திட்டவியாதியாமே. (௧௦)

வாதமும்பித்தந்தன்னு ளுயர்ந்திடும்ஐயங்கூடில்
ஊதியேதலைவலிக்கும் உதித்திடுமேவக்கம்விக்கல்
போதவேயசதிதானும் பொருந்தியதுளிமயக்கும்
நாதமும்உடைத்துக்காட்டும் நடக்கும்பார்விழைச்சல்நாடி. (௧௧)

அடர்ந்திடும்கண்சிவந்து அறிவழிந்தயர்ந்துசோர்ந்து
விடர்ந்ததுகொண்டவன்போல் மெய்மறந்தசதிதானும்
மடர்ந்தைகேள்திரிதோஷங்கள வந்திடும்விபரந்தன்னை
நடர்ந்திடும்வினைவினுமேல நற்குறிகண்டுகொள்ளே. (௧௨)

வயத்தினில்வலியுமுண்டாய் வருப்பக்கமிசவுகண்டு
உயித்திடும்சுரங்களுண்டாம் உள்ளத்துள்குலேதோன்றி
சயித்தியபடைந்துவாயு தக்கதோர்பக்கமுக்கும்
எய்த்திடுங்குலையாலே பெய்திடும்தோஷந்தானே. (௧௩)

அறனைவால்துடிப்புப்போலே அதுதுடித்திட்டால்வாதம்
பறவுதேள்கொட்டுக்கும்போது பதைக்கநாழிகையிரெட்டில்

பரணையமை குமென்று மன்புடனுரைக்கும் நூலோர்
விருந்லர்க்குழலினாளே விபரமோடறிகுவீரே. (கச)

சிறுவர்தம்தொட்டிலாட்டல் செய்யப்பாவினைமுச்சால்போலும்
இளைமென்னடக்குமாகில் வியாதியுமீளாதென்று
குறிசிம்முப்பத்தைந்தில் கட்டைவிட்டேகுமென்று
நறுமலர்க்குழலினாளே நாட்டுள்ளோர்க்குரைத்திடீரே. (கரு)

பசியினைப்போலேதானும் வக்கெதிர்நடக்குமாகில்
உயிரதுவிட்டுப்போகும் உத்தமோர்மொழியாநில்
ஒயாதுவாயடைத்து பெருமூச்சமதிகமாகும்
உயிரதுவொழியுமென்று உரைத்திடர்தோகைமின்னே. (கசா)

எறும்பதுநடக்கும்போலே யியலுடன்வாதவீட்டில்
தறுமாறியேநடக்குமாகில் தையலேகேளீர்சொன்னேம்
குறிசிம்காணுளில் செய்திடுமியிரும்பிக்கும்
உறப்படிஎனவுநீக்க ளுரைத்திடுவ உலகத்தோர்க்கே. (கஎ)

பாம்புபோல்வளைந்துக்காட்டி பாய்ந்திடுந்தேரைபோலாம்
ஆம்படியாதுளில் அப்பாலுமிப்பாலில்லை
போமபடியறிந்துகொள்ளும் போய்விடும் தந்தாலும்
தேய்பிடுமடநல்லாளே செப்பினேமறிகுவீரே. (கஅ)

வாதமுந்தணிந்துமெத்த வருப்பித்தமுதாஞ்சேர்த்து
போதவேசிலேத்துமத்தில் புக்கியேயிருக்குமாகில்
காதமுங்குறைந்துபோகும் நாழிகையிரண்டிற்சாவாம்
மீதனுமுரைத்தோங்கேளீர் மியலுடனுலகத்தோரே. (ககூ)

தருணத்தில்தாதுகேளீர் சயித்தியமுட்கொண்டேகும்
அரிவைகண்மறைக்கும் ஆகமங்கைகாலேயும்
மறிதியுமசதியாகும் வாதமும்நாடாதங்கே
குளிவிடுப்சிவன்மூன்றில் குன்றிடுமென்றகூறே. (உ௰)

ஒன்றைவிட்டொன்றுநாடி உதைத்துமேகிடக்குமாகில்
நன்றிலாமறதியாகும் நாளதபிலன்குறைக்கும்
குன்றியேயஸ்திதன்னில் கூடியசுரமுதித்தால்
சென்றதுயிருபத்தஞ்சில் செத்திடுமென்றகூறே. (உக)

பித்தமேவாதவீட்டில் பெய்திமோருமிப்பால்
உத்ததுகூடிக்காட்டிர் உருமொழிமயக்கங்கண்டால்

அத்ததுமாகமென்றில் ஐயமென்றறிந்துகூறே
கத்தவருரைத்தபிரத கட்டியசூஸ்திரங்கள்தானே. (௨௨)

### நாடிநடராஜக்குறிப்பறிவது.

வருநமக்குத்தநாடி வலதுகைமானிடருக்கெல்லாம்
அருவையரிடதுகையில் ஆய்ந்தவர்பார்க்குங்காலே
பெருவிரல்வாதமாகும் பின்விரல்பித்தமாகும்
திருமணிவிரலில்நாடி சேற்றுமமென்றுசெப்பே. (௨௩)

அன்னமேகோழிமேவானான் மயிலென்னநடக்கும்வாதம்
பின்னையேயாமைபட்டை பெருத்திடும்பித்தமாகும்
சொன்னவாய்மொழிநல்லாளே சுத்தியபாம்புதேரை
அன்னமேஐயமென்று அறிந்திடுநீயாதானே, (௨௪)

கையதுநடக்குமெத்த கண்களைமுழித்துப்பார்க்கும்
மெய்யதுநடக்குப்விட்டை விட்டுவிட்டோட்டங்கொள்ளும்
மையமாய்நிலம்புரண்டு மடிக்கடியெழுந்திருக்கும்
வையகப்புலவோர்கேளீர் மரணமென்றறிந்துகொள்ளே. (௨௫)

பலபலபேச்சுப்பேசும் பாய்சீலைகிழித்துக்காட்டும்
சலமதுமுட்டிக்கேழ்க்கும் சாலவேசுவாசங்காணும்
தலைதிற்றுருபெடுத்து தாண்டியேயெழுந்திருக்கும்
பலமதுமிகுந்துக்காட்டும் பிழையாதெனறியம்பிடவே. (௨௬)

நாக்கதுயீரமுண்டாய் நயனப்பாருவைகள்நன்றாய்
மூக்கதுயீரமவத்தி முகக்களைமாறுதலில்
ஆக்கைவெசுவாசமதது அயறுமேநூக்கம்போல
தாக்கிமின்சுரமும்பெற்ற தானிருந்தாலுமிராசம். (௨௭)

வாதமுடிகித்தனக்கேள் வருஞ்சுரபகொஞ்சமாகில்
போதவேவதாகமட்டாய் போகநித்திரையுமுண்டாய்
ஏதமாய்த்தினங்களெத்திடாகாங்கள்தனும்
மாதவமுடையோர்கேளீர் வந்ததோர்வியாதிமீளும் (௨௮)

### சுரக்குறிப்பறிவது

உடம்பெலாமீரமுண்டாம் உதித்திடுசுரங்களுண்டாம்
தடங்கண்ணுஞ்செருக்கிமெத்த தாகமுங்கொஞ்சமாகும்
விலங்கடித்ததுபோல்சத்தே மேலுடம்பசதிகாணும்
மடக்கைகேள்சொன்னேமிந்தை வருஞ்சீதசுரமென்றே. (௨௯)

நாடிகள்மூன்றுமட்டில் நடந்துடனிருந்ததாகில்
பாடல்போ ளுடம்புநொந்து பற்றியசுரமுஞ்சத்தே
கூடியேயிருந்தாலே குளுந்துடல் திரிகண்டால்
காடவருரைத்தயிர்த்த கடியசூஸ்திரங்கள்தானே. (௯௰)

பக்கமேபிசுவுகண்டு பக்தியயிரைச்சலுண்டாம்
சக்கவாய்வழுத்திருக்கும் சற்றுமேசுரமுண்டாகும்
மிக்கவேகுளிருண்டாகும் விரிமலர்மங்கமாகும்
அக்கவேசொன்னேமித்தை அசீரணச்சுரமென்றேதே. (௯௧)

காலுமேநடைச்சல்கண்டு கடுத்திடும்பிடேப்பும்பக்கம்
மேலுமேசுரமுங்கண்டு விழியதுசாந்தளகாணும்
ஆலுமேகிறுக்கள்கண்டு அழுத்திடும்பிறட்டிககாட்டும்
சேலுமாவிழிநல்லாளே தொந்தமாஞ்சொரமென்றேதே. (௯௨)

காயுமேசுரங்கள்மெத்த கால்கைகளுதறிக்காட்டும்
ஒப்பிலாவயறிரைச்சல வுத்திடும்பேதியுண்டாம்
வாயதுபிரட்டல்கண்டு வழுவழுத்திருக்குமானால்
ஆயுமேயல்லோர்கேளீர் அதிசாரசுரமென்றேதே. (௯௩)

பக்கமேதுடிக்குமார்பு பதைத்திடும்முகம்வெளுக்கும்
ஒக்கவேசுரமுங்காயும் ஓயுங்கைகால்கள்மெத்த
தக்கவேவலிசளுண்டாம் கண்வெளுத்திட்டேபோகும்
அக்குலம்அஸ்தியான அநிசுரமென றகூறே. (௯௪)

நாவதுவாளுஞ்சத்தே நறுக்கென தலைவலித்து
ஆவதுசுரமுமுண்டா யடிக்கடி தண்ணீர்கேழ்க்கும்
போவதுகண்கள்ரெண்டும் போதவேயனல்படைக்கும்
காயமாய்பலங்கள்கக்கும் உள்வெக்கைசுரமென்றேதே. (௯௫)

உடம்பதுஉலருஞ்சத்தே வுறத்தசீர்புடைத்துக்காட்டும்
தடைபடாசுரமுங்காணும் தாடையும்வற்றிக்காட்டும்
நடந்திடில்கைகாலோயும் நாக்குமேயனலதாகும்
வடப்படுமூலைநல்லாளே வருமுழுக்காச்சலென்றே. (௯௬)

மூலைமார்பிலிளைப்புண்டாகும் மோதியசுரமுங்காணும்
அலையவேவாசத்துத்த அங்கங்கேவுளைப்புண்டாகும்
பலவிசைதண்ணீர்கேட்கும் படுக்கையும்கொள்ளொட்டாது
சிலைவிழியடநல்லாளே ருத்திராங்கசுரமென்றேதே. (௯௭)

குளிரும்பின்காயுமெத்த குடிலைமுமதிகமாகும்
தளர்ந்தாரவுநானே தாகமாய்வரண்டகோணும்
வெளிபவர்நசித்துமேனி மேலெல்லாந்திலவுகாட்டும்
தளிர்குழல்மொழியினுள்ள தாகளிர்சுரமென்றோதே. (௧௮)

உடம்பெல்லாம்வேர்த்து வுக்கதோர்க்காமுங்காயும்
அடைக்கிடுமிரைப்புகாணு மடிக்கடிசாம்விட்டோடும்
உடப்பதுநீர்போல்காணும் வன்றிவாயறிவித்தோன்றம்
படக்கிடுஞ்சித்தத்தோடம் பரிந்தியச்சுரங்கள்தாமே (௧௯)

பறையிட்டேனுமிற்றுங்கி பொட்டமுஞ்சாமுந்தோன்றி
வலைபுசீரல்வெக்து வருமதுதாக்கில்தாக்கி
வரையுமேயிரல்தானும் கடிகியேகாக்கும்வேகும்
இருமுலைமாதேயிந்த நாடிவாட்டிக்காச்சலாமே. (௨௰)

உத்திவேருளுந்தமெத்த உழலையும்தாகமாகி
சித்திவேகபிக்கலுண்டாய் சொல்லுமேயனேகம்போது
பித்தவேவேண்டாமிந்த படருமிச்சுரத்துக்குத்தான்
வித்தனைமடநல்லாளே யிசநடிச்சுகமென்றோதே. (௨௧)

இராஜகூட்டத்தின்விபரம்.

ஓர்சரீரத்திலே வாதராஜன் பித்தராஜன் சிலேத்துமராஜன் இம்மூவரும் அந்தசரீரத்திலே இராச்சியபாரம் பண்ணுகையில் இவர்கள்தாங்களிடம்விட்டு இடம்பேர்ந்தால் காணுங்குணங்களும் தங்களிடம்விட்டு போகாதிருந்தால் காணுங்குணங்களும் அறியும்படி உரைப்பது.

வாதராஜன்பித்தராஜன் வருகின்றசிலேற்றுமராஜன்
ஆகியமூவர்தானும் அவரவர்வீட்டில்நின்று
போதவேயுரவராகி பெருக்கியேயிருப்பாராகில்
சேதமில்லைரோகஞ் சிடமதில்நாடிடாதே. (௨௨)

உபத்திரமொன்றுமில்லை உடலிலிற்சிபாதியில்லை
மலமதாய்வாதமிஞ்சில் நல்கிடும்வியாதியுண்டு
ஏவமதாய்பித்தமிஞ்சில் ஏறிடும்பயித்தியங்கள்
அவமிருசிலேத்துமந்தான் அதுமிஞ்சிற்சன்னியலாமே (௨௩)

காலங்கள்வரும்போதன்போ கடிகியேமூவர்தானும்
கோலங்கொண்டொன்றோடொன்று கொடிய்வகையாகியப்போ

நிலைபூண்டிருக்குமிராஜன் கோபமிகுங்கோபமாகி
வேலும்பாசமுங்கொண்டு வெளிப்பட்டுமிக்கியஞ்சுவார். ()

வாதராஜன்முன்னெழும்பி வருபித்தராஜன் தன்னை
ஆதரவுதொண்ணூறுநூறு மந்திரிமார்களோடே
போதவேபிடித்துவிட்டான் பொடிபடப்பிடிக்கவென்று
காதமுமுழுங்கப்பித்தராஜனை வளைத்துக்கொண்டான். (௪௫)

எனிகள்சுவத்தம்பின்னும் சேறிவெழுந்துபின்பு
ஆனையும்படையும்வீரரனைவரையும்வெட்டிக்குத்தி
சேனைகள்மிரண்டபோது செய்மதாய்வாதராஜன்
பாணியேபித்தராஜன் தன்னையுங்கட்டினானே. (௪௬)

குத்தியேசேனையெல்லாங் கோட்டையைப்பிடித்தபின்பு
மத்துமேவாதராஜன் மகிட்சியாயிருக்கும்போது
பற்றியேசிலேற்றுமராஜன் படையெடுத்தெழும்பிவந்து
உத்திடும்வாதராஜன் தன்னையும்வளைத்துக்கொண்டான். (௪௭)

வாதராஜன்சேனையான மந்திரிமாரையெல்லாம்
கோதறவெட்டிப்பின்பு கோட்டையைப்பிடித்திடித்து
ஏதமில்சிலேற்றுமராஜன் வெய்திடும்வாதந்தன்னை
போதவேவெட்டிப்போட்டு புகட்சியாயிருக்குங்காலை. (௪௮)

அப்போதுசேற்றுமராஜன் அரசதுயாளும்போது
மெப்பானமேல்சுவாசம் வெவ்வகண்சொருகிப்போகும்
தப்பாதுஉள்ளெடுத்து சரீரமுங்குளுந்துபோகும்
ஒப்பாதுகாட்டைவாங்குமுயிரதுநீங்குந்தானே. (௪௯)

பிறிதிவும்பாம்புபோலேபயர்ந்ததுமெப்பாலேகும்
அறிதியாய்ப்புத்தந்தாளுமருகியதேய்விற்சென்று
சிறப்பெயுவுதாவாய்விறசிதறிமாகாசத்தில
உறுதியாமிவ்வாறுலேஉயிர்விட்டுவோடுந்தானே. (௫௰)

அப்பொழுதுதுடலைவிட்டு ஆத்துமம்பிறிந்துசென்று
செப்பிடுமனிதருக்குசேரிடுங்காளைலே
கெப்பனைநிந்துகண்டுகுணங்களையறிந்துகொண்டு
தப்பித்துவென்றுகூறிசடக்கெனவிட்டுப்போகே. (௫௧)

தேரையர்நாடிமுற்றிற்று.

---

ஆகசெய்யுள் (௲௧௧)

சிவமயம்.

## எட்டாவது

## புண்ணாக்கீசர் நாடிகூறுகின்றார்.

வேங்குறிஅவத்தைதானும் புணலொடியசந்தாறும்
ஏங்குறிசிலேர்ப்பனந்தான் எய்தியமுடிச்சுவிழும்
ஓங்கதசுழிநாமேனது வந்திடும்பலபேச்சாக
தாங்கதுதரியத்தானே தப்பிடமயக்கந்தீர்ந்தே (௧)

தீதறஅவத்வதஅஞ்சில் தெளிவுறுமுகடுபார்க்கில்
ஓதியஅவத்தையாறில் வுடலதுதிமிர்த்துக்காட்டும்
நீதிபோம்அவத்தைஏழில் கினைவுற்றும்பொசிப்பேனென்று
மாதியாஇரைத்தஎட்டில் முகடுபபஞ்சடையுமென்றே. (௨)

கொண்டிடுமலத்தைகேளாய் கூர்விழிமூக்குகாது
உண்டொடிவுச்சிவுந்தி வுள்ளங்கால்கைகளெங்கும்
விண்டிடவெளுத்தக்காட்டி மிகுத்திடுஞ்சேர்ப்பமென்று
அண்டர்களறியசொன்னோம் அஞ்சுநாள்மரணமென்றே. (௩)

தன்னுடசைகைதானும் தனக்கதுதோன்றுமாகில்
முன்னுரைஅரிதல்கேட்கல் மூபன்றுரையதற்குலத்து
என்னதன்றறிதல்ஏங்கி வெளப்புடன்திகைப்பத்தோன்றல்
சொன்னம்போல்வரண்டுமெய்யும் தோன்றிடலேங்காட்காலே. (௪)

பிரண்டதுமருண்டுமேலேபொருமநீர்கடக்குமாகில்
இரண்டனைநாளதென்னஇயம்பினர்மரணமென்று
சாண்டமெய்குழலினாளேசாத்திறுமெட்டதாகும்
திரண்டநாள்வந்ததென்றறிக்கெனதெரிந்துசொல்லே. (௫)

அறிந்திடாபயித்தியம்மின்றுவாதமும்சேத்துமமங்கே
பிறிந்திடாதோடுமாகில்பெய்வளைமாதேகேளாய்
இறிந்ததோர்ஆசமத்தின்சேர்படயெறந்தேயோடில்
மறிந்திடாக்கடிகைதொண்ணூர்வுலகினிலமரணமென்றே (௬)

## வேறு

சேறுமிமுருங்கண்டோங்கும்சோங்கும்கைகள்காலுடனே
வறிமுழன்றேகெஞ்சுலரும்வுடனேசேத்துமக்கோதண்டம்

நீருமிருக்கும்கண்சிவக்கும் நேரே இருக்கஓடாது
யாருங்கிரிகைக்குணங்கண்டால் பரமன்மீட்கமாட்டாரே. (எ)

காலும்கையும்புறம்வீங்கி கண்டஞ்சோர்ந்துநாவரண்டு
மேலுங்கனத்தேவிளப்பெய்தி மிகுத்தேதாகமுண்டாகி
தோலும்கசையும்படபடத்து தய்யநெஞ்சில்குளிர்ந்திடில்
மாலும்பிரமர்வந்தாலும் மரிக்கும்பிழைப்பதரிதாமே. (அ)

புண்ணுக்கீசர்நாடி-முற்றிற்று.

---

ஆக-செய்யுள்-கூஉ0எ.

உ

சிவமயம்.

## ஒ ன் ப தா வ து

## சூதமுனி நாடிகூறுகின்றார்.

---

வாதமதுமுன்னெழுந்துதாழ்ந்துசத்தே மயிலதுபோல்நடைநடந்துமயங்குமாகில், சேதமதலில்லையென்பத்தாறுமாண்டில் செப்பலாமரணமென்றேதீர்க்கமாக, நாகமதுகுளிர்ந்துவிட்டிலைப்போற்கண்டால் நாளெட்டில்மரணமென்றேநம்பலாகும், போதமதுபிழைவி தபிச்சிடாது பெரியவாளுஞ்சூதமுனிப்பேசுங்காலே. (க)

காலானபித்தமது நாடியேகொண்டு கனலெழுந்துவந்திடுகில்சிகமாச்சு, மலலாகிலும்பார்க்கமருந்துமில்லை பரணமதுமூன்றுதிங்கள் வரிசையாகும், காலானபித்தமதுதொங்கிதொங்கி நடைநடந்துபம்பரம்போல்நடக்குமாகில், மேலானபதின்மூன்றாம் திங்கள்தன்னில் வித்திருந்தகூரழியும்விரும்பிப்பாரே. (உ)

அழைத்துடனே அனுப்பிவிப்பான்பித்தராசன் அதுகேழ்ப்பாஞ்சிதமதுமப்புபோலே, களைத்துடனேவந்திருப்பான் கயருபோட்டு கண்ணெலாம்முழிபிரண்டுநரமும்வந்து, வளைத்துடனே அக்கினியும்

பந்துதன்னீர் வாகப்பண்ணுங்கரைந்துவிடும் வகைதான்பாரு, இ
ழைத்துட்டனே கூடிவிட்டுப்பேகும்பாரு பின்னமொருகுறிதனையே யிய
ம்புரேனே. (௩)

இயம்புகிறேன்பித்தமொடு வாதங்கூடில் லியல்பான கொங்கிம்
மென்றறியலாகும், நயம்பெ றவேசிலேற்பனமுங்கூடித்தானல் நாட்
டலாமென்றேதான்காட்டலாகும், நயம்பெறவேபித்தமது விழுந்து
தானல் சொல்லரிதுபேசாதேசருக்குமெத்த, இயம்புகிறேன்தாம்வி
ழுந்த ஆறுமாசம் யினிதானசடலமது வகுப்பாரே. (௪)

ஆமடாகண்சிவந்தசுழித்திவாங்கி அறிவுகெட்டுமதிமயக்கிறைசை
குன்றில், போமடா ஆளும்நாள்சிவன்போகும்போதமதுவின்றுசற்றே
பேதமாகில், நமடாபித்தமது விழ்வதில்லை நம்பரிதுவம்புவரும் நா
டாதேகேள், சாமடாமூனுறும்நாளசிவன்போகும் சக்கரமுமருந்திபே
ன்றேசாத்தலாமே (௫)

சாத்துகிறேன்வாதபித்த சிலேற்பனமென்றே சார்வான திசை
நாடிபத்துண்டென்றும், எத்துறேன் ஒருவிரலுக்கிரண்டுநாடி யியல்
பான அஞ்சுவிரல்பத்துநாடி, மாத்துகிறேன அங்குட்டவிரலிற்றனே
வகுத்தநினர்பிராணனொடு அபானன்தானும், பே த்துகிறேன்தற்சுச
னுவிரலுக்குத்தானே புகழ்பெரியஉதானனொடுவியானன்தானே, ()

அருமதுமதியமாம் விரலிற்றனே யடுத்துநின்றநாகனொடு கூர்ம
ன்தானும், போகமதுயனுபிகைவெனும் விரலிற்றனே புகழ்பெரியச
மதன்னொடுகிரிநான்கான, ஏகுமதுசனுட்டிகவிரலில்தானே இயலா
னதேவனொடு தனஞ்செயன்தான், ஏகுமதுவிப்படி யியல்பதாக விய
லானதனஞ்செயனுமாகுமாமே. (௭)

பத்தாகும்வாதபித்தசிலேற்பனமூன்றும் பருவதங்கள்தப்பியே
பதருமாகில், வத்தாதபித்தமதுவந்துதோன்றில் வரிசையொடுவிக்கலு
டன்குழிற்சைமேவும், எத்தாகயிளைப்புடனேபேச்சுமில்லை விதமான
வாதமதுவிழுந்துதானல், அந்தமாயிருபத்தோர்நாளில்சாவார் ஆதி
வாதம்பித்தமதைப்பிரித்துப்பாரே. (௮)

கேளப்பாமூன்றமிக்யசைவுநின்று கெடியானவிரல்மூன்றில்து
டிப்புகாணில், காளப்பாசாசனத்தில்சூடுகொள்ளும் நலமானமூத்தி
ரங்கடுத்துச்சிறுத்துப்போகும், தாளப்பாபிராணவலிஎலிவுகுத்து ச

ரீரத்தில்வேர்வையெழும்பிவாய்வுமாகும், குளப்பாமுலமூளை வெளி
யில்காணும் சுரங்காணும்தாக்கிவெட்டுசோபங்களே. (௯)

உரைக்குறேன் சித்தத்தில் வாதங்கூடில் உதரவலிகொண்டுமிக
வுடம்புவீங்கும், நிரைக்குறேன் பித்தமது அசைவுகண்டால் நெஞ்சி
வலிபிறவலிப்புநெற்றிக்குற்றும், மறைக்குமேனிமேற்றழில்மரணமாவார்
மண்டலத்தில் வெறியெழும்பிவழியைப்பார்க்கும், மறைக்குறமேதார்
மருந்ததனைசொல்லவொட்டி தர்க்கரித்துக்கொள்ளுமடி யதின்மே
ற்கேளே. (௧௦)

சோபமில்லாயேப்பமது கவிழ்ந்துகாணும் சேசியங்களில்லைய
துதனுக்கமைந்து, தாகமெடுவிக்கல்வந்தால்நீரைக்கட்டி சஞ்சலத்
தையுண்டாக்கும்மலமுங்கட்டும், வாதமுடன்சித்தமதுகூடும்போது வா
ந்துவிடும்பிழுப்புடனேயிருபதாம்நாள், பூதமது கூடுவிட்டுவெறிப்பாயு
ம்பொய்யல்லகுருசமுனிபுகழ்ந்திட்டேனே. (௧௧)

புகழ்ந்திட்டேன்சன்னியெல்லாமூன்றுக்குள்ளே பூட்டினேன்
சிலேற்பனத்தைப்பகுத்துப்பாரு, இகழ்ந்திட்டேன்பினிதிரேகம்பா
ர்க்கவேண்டாம் பினிதானசடலமெலாமகுளிர்ச்சிகாணும், மகிழ்ந்தி
ட்டேன்சிலேற்பனத்தைப்பிரித்துப்பார்க்கில் மகிழ்ந்தெழுந்ததுடிய
தபோல்பொங்கக்கண்டால், தனந்திட்டவிசைபோச்சுயாவிபோகும்
தப்பாதுஎழுபதுநாள்தான்சொன்னேனே. (௧௨)

சொன்னதினால்நாடியெல்லாங்காணுர்காணுர் சூட்டியமாய்வில்லை
யறிந்துசொல்லவேணும், எண்ணத்தினாலாகாதுஎன்றுசொல்லி விரு
மாந்துநின்றுக்கால்காணுர்காணுர், முள்ளிதனால்வாதகிலேபொக்கவே
ணும் மூன்றுதினங்கிழக்காசமுனையக்காணும், பின்னதினால்வேறொ
ன்றுமபார்க்கவேண்டாம் பிறந்தவரும்நாடியெல்லாமபேசக்கேளே.

கேளப்ப மூலத்திலெழுந்தவ ய்வு கெடியானவிரல்மூன்றில்து
டிப்புகாண்கில், நாளப்பாசூசனத்திற்கூடகொள்ளும் நலமுடனே
வலமிருக்கஅசனஞ்செல்லா, குளப்பாகுடல்பொருமிவலியேகாணும்
தொடராத பித்தமது கடினமாகும், கேளப்பாசேகமெல்லாம் புண்
போல்நோகும் சிக்கெனவேவலஞ்சுழியுஞ்சீரேபாரே. (௧௩)

பாரப்பாஸ்லேஷ்மமதில்எழுந்தவாய்வு பாங்குடனேதீநமதுபதினை
நாய்ணுகில், சீபெறவேவாரமதில்மருந்துசெய்தால் தீருமாம்வாதபி

த்தமதிலேவாங்கும், ஆரப்பாயிதைபதிந்துசெய்யாவிட்டால் அன்ட
பிண்டகாடென்றுமணலேமீறும், தாரப்பாகிராணியைப்போற்குண
மேகண்டு கவரிவருமன்பத்தோராம்நாளில்தானே. (கரு)

தானென்றசயமிருமல்நாடிதன்னை சாத்துகிறேன்பித்தத்தில்சே
தங்கூடில், கோவென்றசிரசுதனில் நீர்கொள்ளுமகுத்துடன்யிரு
மல்வரில்கோனேகாணும், தேனென்றபினைவரும் ரெத்தம்காணும் தீ
ராதுமத்தியமாம்செப்பலாகும், நானென்றவுடம்புதனில் தீராரோக
முரைக்குறேன்யின்னதென்றுமுந்திமுந்தி. (கசு)

முந்தினதோர்பாதமுடன்காலுதன்னில் முகத்திலேவீக்கமதுக
ண்டுதானால், முந்தியதோர்கழிச்சலுடன் கிராணியாகும் பேதிதநீ
ராதஅசாத்தியமாகும், சிந்தியதோர்வாதியுடன்விக்கங்கண்டால் தீ
ராதுதிராதுதிண்ணமாகும், அந்தியதோர்சயமிருமல்சலக்கிராணி ஆ
ராலும்தீராதுஅசாத்தியந்தானே. (கஎ)

அசாத்தியந்தான்சொல்லுகிறேன்ராசாங்கத்தில் அறிந்திடவே
யின்னதென்றுயடைவாய்க்கேளு, அசாத்தியந்தான்நீர்க்கோவைசத்
திகுன்மம் ஆனதொருவலிகுன்மம்யோனிப்புற்று, அசாத்தியந்தான்
குலைநோவும்நாக்கிற்புத்தும் அண்டத்தில் பவுந்திரமும்தொண்டை
ப்புற்றும், அசாத்தியந்தான்முசல்கிருமிவளரல்விச்சோடு ஆராலுந்
தீராதுஅழிவுதானே. (கஅ)

தானென்றசலக்கழிச்சல்மகமும்தப்பி தலைதனிலேயுதித்தெழு
ந்தபிலவைத்தானும், காணென்றதாருவலிக சிகண்டமாலை கன்னத்
திலபுத்துடனேகமாறக்கண்டன், தேனென்றமுகவாதப்சன்னிவாத
ம்சேத்பசம்சுராமாந்தைதகவிசையோடு, ஊனென்றவுயிர்நிலைக்குமிவ்
வளவும்வுள்ளபடிசொன்னேம்வாதநிலைபாரே. (ககூ)

வாதமதகீழ்நோக்காதிருந்தபித்தம் மையத்தில்சேராதேபனல்
தாழாதே, பேதமதுசெய்யாமல்பிச்கிடாமல் பிலத்திருந்தால்பிராண
னங்கேபிலத்திருக்கும் பிசகேயில்லை, நீதமதுதப்பியேஐயத்தோடே
னிழவாதமகிழ்ஞெக்கினேரேஓடில், தீராகும்வியாதியெல்லாம்செனி
ப்புத்தோடும் சிறுடையவாதநிலைநாடித்தேர். (உ௰)

நாடியுடனிதங்களெல்லாம்வாதவீட்டில் நாடலாம்மலையாதேதல
மாயப்பா, தேடிவரும்நோய்களெல்லாம் ராசாவைத்தான் சேர்ந்துயி

ன்ருல்காணுமது செப்பவேண்டாம், ஆடிவரும்பித்தமது அரசன்கீழே அமர்ந்திருப்பன்கலந்திடவேன் பித்தநல்ல, கோடிதானவற்குகுற்றஞ்செய்தாலப்பா குணமோகசிலேற்பனதனைவழைப்பான்பாரே.

அழைத்துடனேஅனுப்பிவிப்பான்பித்தராசன் அதுசேழ்ப்பான்சிதமதுமப்புபோலே, களைத்துடனேவந்திருப்பான்கயறுபோட்டு கண்ணெல்லாம் முழிபிரண்டு காமும்கொந்த, களைத்துடனே அக்கினியும்நவிலுதண்ணீர் வளமாகக்கரைந்துவிடும் வகைதான்பாரு, இழைத்துடனேகூடுவிட்டுபேகும்பாரு பின்னமொருகுறிதனையே யியம்புவானே. (உஉ)

இயம்புகிறேன்பித்தமொடு வாதக்கூடில் இயல்பானதொந்திப்பென்றறியலாகும், நயம்பெறவேசிலேற்பனமும் கூடினுக்கால் நாட்டலாம்நலமென்றேநாட்டலாகும், சயம்பெறவேபித்தமது விழுந்துதானல் சொல்லரிதுபேசாமேசருக்குமெத்த, இயம்புகிறேன்கபம்விழுந்தஆறுமாசம் யினிதானசடலமதுஎகும்பாரே. (உங)

சடலமதுயேகிவிடும்வகையைக்கேளு சாத்துகிறேன்வாத்துப்நிலையைப்பாரு, உடலமதுநீங்கிவிரைத்துதானல் ஒன்பதாமாதமதில்சாவாரென்றே, கடலுமதுகலங்கிவிடுமபித்தராசன் கதித்திருந்தவீடுவிட்டுகாதில்சென்ருல், நடலுமதுகுறைந்துவிடும் மறுபதாநாளில்நாடுவிட்டுகாடுபுகும்நடையைப்பாரே (உச)

நடையிதுதானிருந்தாக்கா லாறுநாளும் காளதனிலழிவார்கள் நாதனுவார், விடைதனிலேயேறிவரும் சிவனுர்சொன்னுர் வேந்தர்குருதமுனிவெளியில்போட்டார், கடைதனிலேசெடலமதுசேர்ந்துபுண்ணுய் கறுத்தருந்தாநாவதுவும்நீழ்தானுகில், யிடைதனிலேயேழாம்நாள்சாவாரென்றே இயல்பானகுருமுனியியம்பினேனே. (உரு)

இயம்பினுர்நாடியெல்லாம் யிதனிற்குள்ளே யிடையிலேனுடுபின்கலையுஞ்சுழிமுனையுமாகும், இயம்பினுரிதுதானேவாதபித்தமையாமியல்பானக்காலகையுமொன்றமாகும், இயம்பினுரிப்படியேநடக்குமாகில் யிடுக்கங்களொன்றுமில்லையிருக்கலாகும், இயம்பினுர்குட்டியேதோன்றிச்சிதம் பெருமயினுல்பிணிபலதுபேசுந்தானே. (உசு)

தானென்றநாடிநிலை யறிபவேண்டும் சதாகாலஞ்சாஸ்திரத்தை நோக்கவேண்டும், உறவென்றதத்துவங்கள்பரிகைக்கூறும் வுற்றுணை

ர்ந்துபஞ்சபாதகங்கள்நீக்கி, தேனென்றமனோன்மணியாள்பாதங்கள்
னை தினந்தோறுமறவாமல்சேவித்தேறி, ந வென்றஆறுவங்கள்மா
ய்கையவாறு நல்லபரிகாரஞ்செய்நாடிமுற்றே. (உஎ)

சுகமுனிநாடி-முற்றிற்று

---

ஆகசெய்யுள்-௩௨௧௪

உ

சிவமயம்.

பத்தாவது

## வால்மீகர் பூதநாடிகூறுகின்றார்.

ஐவிரலைத்தநாடி அதுசெய்யும்வகைகளைக்கேளீர்
மெய்விரலொன்றுவாதம் மொழிவிரலொன்றுபித்தம்
செய்நடுவிரலேசிலேத்மம் சேர்விரல்பூசநாடி
மைசிறுவிரலேசொன்ன வுருந்தனர்வால்மீகர்தானே. (௧)

புகழ்ந்திடும்பூதநாடி பூனைபோல்நடக்குமாகில்
நகழ்ந்திடும்பொற்செவ்வாய்போல் நடக்குமேசருக்கதாக
உகழ்ந்துதானெடுத்ததுண்டு வுண்மையாய்மனதில்கொள்வீர்
மகிழ்ந்திடுங்கழிப்பில்லாட்டல் வங்கிடமாட்டாதென்றே (௨)

வேந்தனுப்பூதநாடி வெள்ளெலிபோலேகுன்றில்
சாந்தகமாகப்பொண்பே புதனவெள்ளிதன்னில்தொட்டு
வந்தியான்தனமூண்டெட்டு பிரச்சிபோலதிங்கள்வற்றும்
காந்தழல்கையுங்கண்ணுங் காந்திடும்நெருப்பதாமே. (௩)

மூடியபூதநாடி முன்னைபதுபோலேதோன்றில்
நேடியேயுதிரன்மாடன் திங்களில்கொடுத்ததுண்டு
கூடியேபுணர்ச்சிகாணுங் கொடியநோய்நாவுங்காணும்
குடியேதிரேகம்வற்றும் துவாலையுமிலாக்குந்தானே. (௪)

மின்னியபூதநாடி மின்னிடதோடிவாங்கில்
உன்னியபிறபுருச்சிவச் சிபென்றுனிதேட்
கன்னியும்பணமுங்காணு கசேருகம்போலேவற்றும்
தன்னையுமறியொட்டாது தலைச்சுத்துமயக்கந்தானே. (௫)

மன்னியபூதநாடி வண்டதுபோலேயூர்ந்தால்
தன்னிகரில்லாமாடன் சனியதில்பாலனாம்
உன்னியேபிடித்ததுண்டு ஒருவர்க்கையகப்படாது
பன்னிப்பச்சந்தப்பும் பயமதுசாடுந்தானே. (௬)

பலம்பெரும்பூதநாடி பாம்புபோல்நெளியுமாகில்
இலம்பெருமருந்துதண்ணீர் மிருனைதீண்டிச்செய்யும்
கலம்பெரும்துவாலைசாய்க்கும் நாளிலேதிரேகம்வற்றும்
சிதம்பரசக்கரத்தால் நிருமேநிட்டந்தானே. (௭)

பவுத்துள்ளபூதநாடி வலசக்குபோலேஊர்ந்தால்
சபத்துள்ளசுடலைமாடன் தனிப்புதன்பிடித்ததுண்டு
அபத்தமேபேசிவிக்கு மாருக்குமகப்படாது
உலந்துக்குள்புவனையென்றதொன்றினால்தீருந்தானே. (௮)

சடுதியில்பூதநாடி தடதடென்றுநடக்குமாகில்
பிடரியும்வலிக்கும்நெஞ்சம் பின்பரையடித்துக்கொல்லும்
சுருதியைப்போலேதிரேகம் சுட்டிடுமுதிரங்கக்கும்
சடுதியில்போமேவயிரவன் சக்கரஞ்சிவத்தினாலே. (௯)

இருகியபூதநாடி யிழுத்திழுத்தெதிரேவாங்கில்
குருகியேபிசாசமெத்தக் கூடியபேச்சிப்பேயும்
இருகியசெவ்வாய்தன்னில யேழுசைப்பொழுதிலேதீண்டில்
மருகியவுடலுமவத்தும் வாலைமந்திரத்தால்போமே. (௧௦)

பொருந்தியபூதநாடி பிணத்தைப்போல்கிடக்குமாகில்
வருந்தியேதிரேகம்வற்றி வாய்வதுமிருத்துகாட்டும்
திருந்தியேயோகவெனருல் தீர்க்கிடும்வகையைக்கேளு
மருந்துமந்திரஞ்சுழிப்பு மணியுடன்தீருந்தானே. (௧௧)

கலங்கியேபூதநாடி கரைநண்டுபோலேஊர்ந்தால்
இலங்கியமத்தமூன்ன மெங்சயப்பசாசுபோலாம்
நயங்கியேநாடிதொட்டால் நாளிலேவத்திக்கொல்லும்
பணங்கியேயனுமன்மந்திரம் சடாக்ஷரங்கட்டப்போமே. (௧௨)

செப்பிடும்பூதநாடி தேளை யப்போலேதோன்றில்
லப்பிடுந்திரேகந்தன்னில் வலமுடன்மற்றதெல்லாம்
யப்புடன்தேங்காய்தன்னி லடைத்துவெள்ளாவில்வைத்து
செப்புமேயீசனுணை செய்வினைக்குணமிதாமே. (கக)

கருத்திடும்பூதநாடி கரைகண்டுபோலேவூர்ந்தால்
அமர்ந்திடும்பாவைபண்ணி யானியுமரைந்துகட்டி
துடர்ந்தபாழ்ங்கிணறுவெந்த சுடலையில்புதைத்துவைத்து
கடைந்திடுங்குருவில்செய்த கபடுவஞ்சனையிதாமே. (கஉ)

தோன்றியபூதநாடி செக்குபோல்சுற்றுமாகில்
வின்றிடவுருவைபண்ணி விறைத்துபொற்பதித்துசேர்த்து
மூன்றியமாமுசந்தி முகந்திடும்வீட்டில்வைத்து
தான்றுமந்திரத்தால்செய்த சூனியமெண்ணலாமே. (கங)

திரைந்திடும்பூதநாடி னெருப்பதுபோலேசுட்டால்
சிரைந்திடும்பில்லியாகும் செல்குணம்பரிட்சைகேளீர்
குரைந்திடாக்குரங்குநாயும் கூட்டமும்பயமும்நாட்டம்
மரைந்திடமயக்கஞ்செய்யும் வால்மீகர்வுரைத்தவாறே. (கச)

வால்மீகர்-பூதநாடி-முற்றிற்று.

---

ஆகசெய்யுள்-சூஉரும.

சிவமயம்.

## பதிஞூருவது
## மச்சமுனி நாடிகூறுகின்றார்.

---

அறிந்தேகொள்நாடிதானும் ஆண்பாலின்வலப்பக்கந்தான்
செறிந்தேமாதர்க்கிடக்கை சென்பித்துவிட்டபின்னும்
குறிந்தேவுந்தனிடக்கையாற் கூறுமூன்றுவிரல்வைத்து
தெரிந்தேவாதமருள்பித்தம் சேட்மகுணமும்பாரீரே. (௧)

கைதனைப்பிடித்துநீயும் கடவுளைப்பார்த்துஎண்ணி
உய்யதோரல்லவென்று வுத்தரிநாடிபார்க்க
பையவேதொடருந்தொட்டு பதைப்பதுகண்டபோதே
மெய்தனிற்குணங்கள்கண்டு மேவியேவிளம்பிடாயே. (௨)

(வாதக்குறிப்பு)

அங்கையைமுறித்துகெட்டி அடவுடன்மேலேவாங்கி
செங்கையாற்பிடித்துநாடி திரமுடனுரைக்கக்கேளும்
மூங்கையில்வாதநாடி முடுகியேயோடுமாகில்
மங்கையேமலத்தைக்கட்டும் மென்றுநீசெப்பிடாயே. (௩)

(பித்தலட்சணம்)

செப்பியபித்தந்தானும் திகைத்துமேஓடுமாகில்
அப்பியவாதனாடி அழுந்தியேநிற்குமாகில்
மெப்புடன்பிறண்டுமீறி விறகெனநளிக்குமாகில்
ஒப்புடன்மரணமென்று வுரைத்ததுவுண்மையாமே. (௪)

(சிலேற்பனலட்சணம்.)

சிலேற்பனவாதத்தோடு சிலும்பியேபிசருமாகில்
பிலேற்பன ஐபத்தோடு சீறியேதொடருமாகில்
விலேற்பன ஐயத்தோடு மீறியேதொடருமாகில்
சலேற்பனவைத்தியோர்கள் சாடையாய்ச்சொல்லலாமே. (௫)

(மரணநாடிநிலைகுறிப்புலட்சணமறிதல்.)

பித்தமேவாதந்தானும் பிலத்துடன்சடலந்தன்னில்
மத்திபவையந்தானும் வலப்புறமோடுமாகில்

ஒத்தகண்டிலமாகி விடல்தனில்வேர்வையாகும்
சத்தியமாகச்சொன்னேனும் சடுதியில்மரணந்தானே. (௬)

எவ்வுமாது மச்சமுனிசெப்பிய
துய்யமண்டல மூணாந்துதுலங்கிய
மெய்யுமானிடர்க் கோதியமெய்ப்பொருள்
அய்யனுபன் மச்சனுக்கருளினான். (௭)

திருமுறைமுனிவன்சொல்லு வாகடக்கோர்வைதன்னில்
உரும்பலவியாதிமீட்டு வுன்முகமலர்ரோலும்
வரும்பலநாடியாலும் வகைப்படிபாருமென்று
தெருவுளம்பஞ்சபூதத் திக்கயஞ்செய்கையாமே. (௮)

(பித்தவாதசிலேற்பனக்குறிப்பு.)

ஊக்கமாம்பித்தநாடி வுயர்ந்துடன்தவளைபாம்பு
நீக்கியசிலேற்பனந்தான் நீண்டது ஆமைபோல
தாக்கியபித்தந்தானும் தண்மையாய்த்துடித்துநிற்கில்
போக்குறுமரணமென்று புகல்முனிசெப்பினாரே. (௯)

(பித்தசிலேற்பனக்குறிப்பு)

அன்னமேகேளாய்பித்த சிலேற்பனநாடிதானும்
வின்னமாம்வாதநாடி குறுகியேயொன்றாய்க்கூடி
முன்னமாம்பித்தத்தோடு முடுகியேநிற்குமானால்
சொன்னசொல்தப்பாதையா சொருகியேமரணமாவான் (௧௦)

(பித்தத்தில் பித்தசிலேற்பனக்குறிப்பு.)

பித்தத்தில்பிறந்தபித்த சிலேற்பனமெதுவாய்யோடில்
சித்தத்தில்வாதந்தானும் சிதறியேயெடுக்குமாகில்
அத்தத்தில்சிலேற்பனந்தான் அடங்கியேகொதிக்குமாகில்
நித்ததோர்பகலுக்குள்ளே நேர்மையாய்மடிவர்தாமே. (௧௧)

(வாதத்தில் வாதசிலேற்பனகுறிப்பு.)

வாதத்தில்பிறந்தவாத சிலேற்பனகுறியைக்கேளும்
நீதுற்றுப்பித்தந்தானும் நெருங்கியேகொதிக்குமாகில்
தாதுற்றுவாதந்தானும் தனிப்படிஓடுமாகில்
ஆதுற்றுப்பதரிமேனி அடைவதுதிண்ணந்தானே. (௧௨)

துள்ளியவாதம்ரண்டும் சிலேற்பனமொன்றாய்க்கூடில்
அள்ளியபுருவங்கண்ணுள் அரணைவால் துண்டைப்போலும்

கொள்ளிபமித்தந்தானும் குருவிவால்துடிப்புபோலும்
முள்ளியிக்குணங்கள்கண்டால முடிவதுதிண்ணந்தானே, (௧௩)

துடியிடியடித்தாற்போல தொடுத்திடும்சிலேற்பம்ரண்டும்
கடுகியஐபம்ஒன்று கடிந்துமேகாணவேண்டி
படவரவல்குலாளே பாம்பெனவாதமோடும்
அடவினிலறிந்துகொள்ளும்! அருமுனியுரைத்தவாறே. (௧௪)

பித்தசெய்கை.

ஏலவார்குழலாய்பித்தம் செய்குறியியம்பக்கேளாய்
கோலவேல்விழிகள்ரண்டு குளிர்ந்துமேநடுக்குமல்லால்
சிலநீர்க்கடுத்துகொந்து சிறுகெனவீழுமின்னம்
ஞாலமேஅறியச்சொனனேனும் நவின்றிடுமுண்மைதானே. (௧௫)

வாதசெய்கை.

மானேகேள்வாதம்ரண்டும் வருத்தசேற்பனங்கள்ரண்டும்
ஆனதோர்சரீரம்நோவாம் அங்கைகால்திமிர்த்துக்காட்டும்
மூனமாமுதிரத்துள்ளே ஒத்தையுமிதுத்துவிழும்
பானலந்தண்ணினர்கேள் வாதத்தின்செய்கையாமே. (௧௬)

செய்யதோர்பித்தம்ரண்டும் சிலேட்டுமமெழுந்ததானல்
அய்யதோர்பசியுமில்லை அடிக்கடிவுதாய்வீழும்
துய்யதோர்நயனம்நீரும் சுத்தம்மஞ்சள்போலாம்
பேய்கள்போல்பித்தம்பேசி பிதற்றுவதுண்மைதானே. (௧௭)

மச்சமுனிநாடி-முற்றிற்று.

ஆகசெய்யுள்-௪௨௬௭.

உ

சிவமயம்.

பனிரண்டாவது

## புலிப்பாணி நாடிகூறுகின்றார்.

---

வருநமக்குற்றநாடி வலக்கைமானிடனுக்கெல்லாம்
அருவையர்க்கிடதுகையில் ஆய்ந்தவர்பார்க்குங்காலை
பெருவிரல்வாதமாகும் பின்விரல்பித்தமாகும்
திருமணிவிரலிலநாடி சிலேத்துமமென்றுசெப்பே. (௧)

அன்னமேகோழியோனும் மயிலனநடக்கும்வாதம்
பின்னையோரட்டையாமை பெருத்திடுப்பித்தமாகும்
சொன்னவாய்மொழிநம்மாளே சுத்தியபாம்புதேரை
அன்னமேஅய்யமென்று அறிந்திடீர்வாதந்தானே. (௨)

கையதுநகருமெத்த கண்களைமுழித்துப்பார்க்கும்
மெய்யதுநடிக்கும்வீட்டை விட்டுவிட்டோட்டங்கொள்ளும்
மையமாய்நிலம்புரண்டும் அடிக்கடிஎழுந்திருக்கும்
வையவேபுகல்வர்கேளீர் மரணமென்றறிந்துகொள்ளே. (௩)

பலபலபேச்சுபேசும் பாய்ச்சீலைக்கிழித்துக்காட்டும்
சலமதுவுருட்டிக்கேட்கும் சாலவேசுவாசங்கானும்
தலமதிற்றரும்பெடுத்து தாண்டியேயெழுந்திருக்கும்
பிலமேதான்மிருந்துகாட்டும்பிழைபாதென்றியம்பிடீரே. (௪)

நாக்கதுயிரமுண்டாய் நயனப்பாருவைகள்நன்றாய்
மூக்கதுயீரம்வற்றி முகக்களைமாறாதாகில்
ஆக்கவேசுவாசமென்று அமருமேதூக்கம்போல
தாக்கிடுஞ்சுரமும்பெற்றல் தானிருந்தாலுமீளும். (௫)

வாதமுமுடுகித்தேறி வருஞ்சுரங்கொஞ்சமாகில்
போதவேதாகமட்டாய் போதநித்திரையுமுண்டாய்
வாதமாய்த்தீயனங்கள் ஒத்திடச்சுரங்கள்தானும்
மாதவமுடையோர்கேளீர் வந்ததோர்வியாதிமீளும். (௬)

உடம்பெலாமீரமுண்டாய் ஒத்திடுஞ்சுரங்களுண்டாம்
தடங்கண்ணுஞ்சொருகிமெத்த தாகமுங்கொஞ்சமாகும்
விடங்கடித்ததுபோற்சற்றே மேலுடம்பசதிகாணும்
மடைந்தைகேள்சொன்னேனுமித்தை வருஞ்சுரம்மென்றேபோதே ()

காலுமேகுடைச்சல்கண்டு கடுத்திடுமிடுப்புபக்கம்
மேலுமேசுராமுங்கண்டு விழியதுகாந்தல்காணும்
ஆலுமேசனுக்கள்கண்டு அழுந்தியேபிரட்டிக்காட்டும்
சேலுமாவிழிநல்லாளே சொந்தமாப்சுரமென்றோதே. (அ)

காயுமேசரங்கள்மெத்த கால்கைகளுசரிக்காட்டும்
ஓப்பிலாவயிறெரிச்சல் உத்ததோர்பேதியுண்டாம்
வாயதுமினத்தல்கண்டு வழுவழுத்திருக்குநாவு
ஆயுதவல்லோர்கேளீர் அதிசாரசுரமென்றோதே. (௯)

பக்கமேதுடிக்குமார்பு பகைத்திடுமுகம்வெளுக்கும்
ஒக்கவேசுரமுங்காயும் ஓயுங்கைகால்கள்மெத்த
கக்கவேவலிகளுண்டாங் கண்வெளுத்திட்டேயோகும்
அக்குல அஸ்திபான அதிசாரமென்றேயோதே. (௧0)

சொல்லியநாடிதன்னைச் சுருக்குடன்பார்க்கும்போது
மெல்லியபித்தந்தானும் மீறியேதொடர்ந்துநின்றால்
வல்லியவாதந்தானும் வந்துமேயுறையுமாகில்
சொல்லவோர்ராவுக்குள்ளேசொல்வதுதிண்ணந்தானே. (௧௧)

சேத்துமநாடிதானும் திரிந்தியவாவைபோல
நாட்டியமிசல்போல நடந்துமேசெல்லுமாகில்
மீட்டவேவேண்டாமாறு நாளினில்மரணமாவான்
நிட்டவேபுலிப்பாணிசொன்னார் திறமுடனறிந்துசொல்லே. (௧௨)

புலிப்பாணிநாடி-முற்றிற்று.

---

ஆகசெய்யுள்-௧௨௭௧.

உ

சிவமயம்.

பதின்மூன்றாவது

சட்டமுனி நாடிகூறுகின்றார்

---

ஆதிசத்தியடிபணிந்தன்புடன்
நீதியாகநெருங்கும்மானிடர்க்கு

வாதியானவைத்தியர்பிழைக்கவே
சோதியாகசுறுக்கமாய்கூறுவாம். (க)

### வாதக்குறிப்பு அசாத்திலக்ஷணங்கள்.

சொல்லும்வாதக்குறிப்புபுகலுவேன்
வெல்லும்வாதம்விரவியேயோடிடில்
புல்லும்பித்தம்புகலத்துடித்திடில்
கொல்லுமேமன்கொடுபோவதுண்மையே. (உ)

### பித்தக்குறிப்பு.

உண்மையாகவுரைக்கிறேன்பித்தங்கேள்
கண்மையமுச்சிகடுகத்துடித்திடில்
வண்மையாங்கண்ணீர்வாகாய்பெருகிடும்
தண்மையாமேனிதரைதனிற்கொல்லுமே. (ங)

### சேத்துமக்குறிப்பு

கொல்லுமீளோகுறிக்குஞ்சேத்துமங்கேள்
வெல்லுமாலைவிளங்கடித்துடித்திடில்
அல்லுமேபகலொன்றரைநாளினில்
கொல்லுங்கொல்லுங்குறுமுனிதப்பாதே. (ச)

### வாதபித்தசிலேத்துமக்குறிப்பு.

தப்பாதையாதரணியில்மாந்தர்க்கு
வொப்பாந்தொந்தம்யுரைக்குறேன்யுண்மையாய்
செப்பாஞ்சேத்துமம்சிறந்தவாதபித்தம்
அப்பா துடித்திடில்லரன்பதிசேர்வாரே. (ரு)

### வாதபித்தக்குறிப்பு.

சேரும்வாதசிறந்ததோர்பித்தமும்
கூரும்நாவுக்குதிக்கும்மண்டூகம்போல்
வீருந்தானுமிளங்கப்பதைத்திடில்
சேருமெம்புரஞ்சேர்வதுமுண்மையே. (சு)

### பித்தவாதக்குறிப்பு.

உண்மைவாதமுறைக்கும்பித்தமுடன்
உண்மைமாத்திரையொன்றுமேமீறிடில்
உண்மையாமுடலொடுங்கியடங்கிடும்
உண்மையாங்காலன்வுடல்கொண்டுபோவதே. (எ)

சேத்துமவாதக்குறிப்பு

போவான்காலன்புகல்வதுநிச்சயம்
சாவான்சேத்துமஞ்சாற்றும்வாதமுறில்
நாவாற்கூறவும்நவிலவரிதுகாண்
பாவாற்சித்தர்பகருமொழிமெய்யே (அ)

சேத்துமபித்தக்குறிப்பு.

மெய்யாய்சேத்துமமேவப்பொருந்திடா
தையாபித்தமரணைவால்துடிப்புபோல்
கொய்யமாத்திரைநுவலப்பிரண்டிடில்
பையமால்பதம்பகருடல்செல்வதே (௯)

சாத்தியாசத்தயம்

பித்தமயங்கிடில்பேசாதேபோய்விடு
வெத்தியதாதுவெழும்பிடில்வாதமாம்
முத்தியமாத்திரைபொடுங்கிபெருகிடும்
சத்தியாய்வைத்தியம்தப்பாதுசெய்திடே. (௰)

செய்யமாங்கஞ்சிரல்தோர்வைத்தியம்
நய்யகாடிநவின்றிடபார்த்துமே
பெய்யமருந்துபிசகாதறிந்திடில்
உய்யுஞ்சிவனுலகழியாதிதே (௧௧)

சட்டமுனிநாடி-முற்றிற்று.

ஆகசெய்யுள்-௧௨௯0.

உ

சிவமயம்.

பதினான்காவது

## போகர் நாடிகூறுகின்றார்.

தத்துவலட்சணம்.

ஜெனனமானிடர்க்குசிறப்புடன்நாடிசொல்வேன்
சனமதுசிரசுதொண்டைகடிதோர்விலாவுமட்டும்
புணலொடுரத்தமூளைபூட்டியநரம்புநாடு
மனமுடனெழுபத்திராயிரநரம்பறிந்துசெல்வாம் (௧)

சொல்லியநாம்பினாலேதோன்றியமானிடர்க்கு
துல்லியவெலும்புமூளைதுடிபெறவலித்துகட்டி
புல்லியதசையுமரத்தம்புகழுடனெவ்வாய்க்கூடி
வல்லியதோலினாலேவகுத்ததோர்காயமாமே. (௨)

வாதசாத்தியம்.

காயமாம்மாந்தருக்குகருதியநாடிதன்னில்
தோயவேசாத்தியங்கள்தொகுப்புடன்சொல்லக்கேளீர்
மாயமாம்வாதத்தாலேமதிப்புடன்கழிச்சல்கண்டு
காயமுமழிவதில்லைகளிப்புடன்கூறினாரே. (௩)
கூறினார்முனிவர்தானுங்குறுமுனியருளினாலே
தேறினார்சித்தர்தாமுந்தெளிவறவறிந்துகற்றார்
மீறினாரிஷிகள்போகர்மேன்மையாந்தபோதனர்கள்
தூறினாரந்தநாடிதொகுந்தவோர்குறிப்புதானே. (௪)
பித்தமாம்நாடிதானும்பிசகியேயோடக்கண்டால்
நித்தமும்சுரமுந்தோன்றிநெருங்கியமலமும்வீழ்ந்தால்
உத்ததோர்காயந்தானுமுண்மையாய்த்தேறுந்தேறும்
சத்தியமாகச்சொன்னோம்தரணியில்மாந்தருக்கே. (௫)
போசனம்வெறுத்துவிக்கல்பொருமுதல்புடைத்துச்சேர்தல்
ஆசனங்குளிர்ந்தலூதல்அங்கங்கேபுறத்தேவீங்கல்
கோசமுமேறவாங்கல்குளிர்ந்திரவாங்கலேதான்
நாயியன்கருவிபெண்டேநலின்றுதான்விட்டுப்போகான் (௬)
விட்டநீர்அடைத்தல்போலவிழிபினீர்சிதரச்சிந்தல்
அட்டமுங்குளிர்ந்துகாணல்அங்குகால்புறந்ததேவீங்கல்
உட்டனம்பிரவேசித்தல்வரவுதலிற்றுச்சேர்ந்தால்
கட்டமாஞ்சாவுதிண்ணம்நாடியேகைகொடாதே. (௭)
கைதொடிபுண்போலாதல்கருத்துடல்வழுவதல்ல
மெய்தொடிலுதிரம்நீளம்விழிதனிற்சிகப்புபூணை
செய்யொழிகமலம்புந்திசிறுமுகம்குறுவோசித்தல்
அய்வருமொடுங்கிவித்தம்ஆடுவோராடாதென்னே. (௮)
சிரமதுகனகனத்துசெவியடைத்திருமலாகி
சாமதுலெகுவதாகச்சோரைபோற்சிறுநீர்வீழும்
சரமதுசிதறிவீசிதாகமும்வெகுவதாக
விரவியேவிழிதியங்கிமுழியாதுவிடையமென்றே. (௯)
பருந்திடவிரும்பிடாதேமறுபிறப்பிட்டுபேலும்
தருந்தரிசிநங்கள்வீங்கிதானடிக்கிழாட்டி

பருத்திரேர்பிறவேவாங்கி பார்வையுமிகுதியானல்
மருந்திடவென்றேநீயும் மாணமென்றறிந்துகொள்ளே. (௧0)

மாணமாம்போகர்சொன்ன வாக்கியம்பிசகதில்லை
தாணமர்மாந்தர்க்காக சாற்றினேமிந்தநூலை
காணிகானவர்க்கு காட்டாயலிந்தநூலை
திடமுடன் அறிவதற்கு செப்பினேமிந்தநூலை. (௧௧)

போகர்நாடி-முற்றிற்று.

---

ஆகசெய்யுள்-௧௬0௧

௨

சிவமயம்.

பதினெந்தாவது

வாரிஷி நாடிகூறுகின்றார்.

மேவியபுறங்கையாலே மிக்கவேநாடிபார்க்கில்
ஆவலாய்வாதநாடி ஆமைபோலிறங்குமாகில்
பாவையேபெருமூச்செய்து பரலோகமடைவதென்று
காவியங்கண்ணினர்கேள் மரணமாமென்றசெப்பே. (௧)

செப்பியநாடிதானும் சிருசிருவெனவகித்து
ஒப்பியதொண்டைக்குள்ளே சயமடைத்திரையுங்கண்டாய்
தப்பியகபந்தானங்கே தரியாமல்பிசகுமாகில்
கப்பியமாணம்வந்து காலையில்மடிவர்தானே. (௨)

மெய்யதோர்பித்தம்வந்து வாய்வதுமிகுந்தகாட்ட
அய்யமேவிட்டகன்று அடைந்திடுமிளப்புமாகும்
தய்யதோர்விழியின்மந்தம் சோருநீரிடமேசுத்தி
அப்பனுரைத்ததண்மை அஞ்சாநாள்மாணமாவான். (௩)

மீண்டுவாய்வழுவழுத்து மேனியும்வெளுக்குமாகில்
தாண்டியபேச்சுதானும் சதண்டாசாகமட்டும்
வீண்டியமரணமாக விரண்டரைக்கடிகைமுன்னே
கூண்டனமிளப்புங்கூட குறைந்திடுமுயிரைபெண்ணே. (௪)

கன்னியேயாவுமொத்தக் கறுப்பதாய்நாக்கும்மூக்கும்
தன்னிடகுணமுமாறி தவ்வியகுணமுமிஞ்சில்
என்னவேகுணமிதானால் யிதற்குநீரினிமைபூண்டு
உன்னியமருந்துசெய்தால் ஒழிந்ததுமரணமென்றே. (௫)

முதுகொடுமயிறுவீங்கி மூலமும்தாதுகெட்டு
செதுசெவிக்கண்ணும்வாயுஞ் சோவிப்பதுவர்துன்றி
முதுந்தனவாறுமூன்று முதியவஞ்சினைப்பளாகில்
விதியவள்வசம்பதென்று விட்டுநீபிரிந்திடாயே. (௬)

வற்றிபமலஜலங்கள் மற்றுளசெவிகள்நாசி
உற்றதோர்கன்னங்நாக்கு உறுதியாய்ப்பலமுமற்று
இத்தனைகுணமுங்கண்டு இருந்தனவியல்புமாறி
வித்தகர்முன்புசென்று விளம்புவதறிவதாமே. (௭)

தன்னுடைசைகைதானும் தனக்கதுதோன்றுமாகில்
முன்னுரைபறிதல்கேட்கல் மூவன்றுறைப்பதற்குவந்து
இன்னதென்றறிதல்யேங்கி இளைப்புடன்திகைப்புதோன்றில்
சொன்னம்போல்வரண்டுமெய்யும் தோனறிடவேழ்நாட்சாவே (௮)

அரிந்திடாப்பித்தம்நின்று வாதமுஞ்சேத்துமமங்கே
பிரிந்திடாதோடுமாகில் பெய்வளைமாதேகேளாய்
இரிந்ததோராகமத்தின் நேர்படவொத்தேயோடில்
பரிந்திடாகடிகைதொண்ணூற் றளவினில்மரணமென்னே. (௯)

வாரிஷிநாடி-முற்றிற்று.

---

ஆகசெய்யுள்-௧௩௰.

சிவமயம்

பதினாறவது

# இராமதேவர் நாடிகூறுகின்றார்.

பார்த்துமேவாதத்தின்செய்கைகேளுபாங்காகமானிடர்க்குசொல்லுகின்றேன், ஆர்த்துமே அணிவால்துடியைப்போலும் அடிக்கடி நாழிகைதான்பிரளுமாகில், வேர்த்துமேவுடலெங்கும்நொந்துகாணும் விரவியேமேனியெங்குங்குளிர்ச்சிகாணும், கோர்த்துமேமங்கைநல்லாள்வாதச்செய்கை கூறுகிறேன்வாதத்தின்செய்கைதானே. (௧)

காணவேபுருஷர்க்குவாதநாடி கறங்குருவிதன்வாலின்துடிப்புபோலும், ஏணவே அன்னத்தின்நடையைப்போலும் எழிலானபுறாவின்றன்நடக்கைபோலும், ஆணவேபித்தத்தின்செய்கைகேளு அழகானநடையைப்போலிருக்கும்பாரு, பேணவேசேத்துமந்தான்தவளைபோல எழிலானவிட்டில்போல்குதிக்கும்பாரே. (௨)

ஸ்திரிநாடிலட்சணம்.

சொல்லுகிறேன்ஸ்திரீகட்குயிடதுபக்கம் சொகுசாகமானிடர்க்குசொல்வேனபாரு, வெல்லுகிறேன்வாதமதுபாம்புபோலாம் விதமானபித்தமது அட்டைபோலாம், செல்லுகின்றஐயமென்றநாடிதானும் சிறியகருந்தருமானின்றெக்கைபோலும் அல்லுவதுவழங்குகின்றநாடிமூன்றும் அவனியிலேஅறிகிறது அருமைபாரே. (௩)

பஞ்சபூதநாடிலட்சணம்.

சொல்லுவேன்அய்ந்தாம்விரல்பூதநாடி சுகமுடனாலாம்விரல்வாதமென்க, எல்லுவேன்மூவிரலாம்பித்தமாகும் எழிலானயிருவிரலையமாகும், தொல்லுலகில்வழங்குகின்றசிறுவிரல்தான் சுத்தமுள்ளகுருநாடியென்றுசொல்வார், மல்லுமொருநாடிகள்தான் ஒன்றுக்கொன்றுவனர்கின்றபின்னலின்றன்வண்மைபாரே. (௪)

சொல்லியதோர்நாடியின்றன்வண்மைகேளு சொற்பெரியவாதத்தின்அணிலைப்போல, வெள்ளவேகீழ்மேலேபிரண்டுஓடல் விளக்கமேனியதுவருந்திவாடும், கொல்லவேபித்தமதுமேலேயேறி கொடிபாகல்கொடியதுபோலூருமாகில், மெல்லவேவிபர்வையது அதிகமாகிபிக்கவேசிறுநீர்தான்கட்டிப்போமே. (௫)

சிலேத்துமத்தின்பித்தமது புலியைப்போல சிறிவேகிற்குன்ற குணத்தைக்கேளு, அற்பமாய்சன்னிபிரவேசமாகி அடிக்கடிதான்தலைநோவும்மயக்கமுண்டாம், காற்பெணவேபஞ்சபூதநாடிதானும் கடுகவேமேல்வீங்கிகடுப்புகாணும்; தீர்க்கவேநாடியது திமிர்ந்துநின்றால் தீராது அசாத்தியமென்றரையலாமே. (௬)

மரணலட்சணம்.

வேறு.

மண்டலந்தன்னில்வாழும் மானிடரானவற்கு
விண்டலம்விசைநரம்பு குளுந்துமேமேவிடுமாகில்
குண்டலம்பற்கடித்து பொறியெலாந்தான்கலங்கி
துண்டெனவிருக்குமாகில் துணியவேமரணம்சொல்லும். (௭)

சொல்லவேமூச்சடர்ந்து சுகமுடனடுக்கமுண்டாய்
வெல்லவேமணியும்கட்டிவியர்வையுமதிகமானால்
எல்லவேசிலேத்துமந்தான் எழிலானதவளைபோலாய்
மெல்லவேநடக்குமாகில் மெய்யதாய்மரணமாவான். (௮)

துடிப்புடன்சேத்துமந்தான் சுருக்கெனஓடுமாகில்
அடிப்புடன்திரேகம்வற்றி அழலைகணதிகமாகி
முடிப்புடன்தலைகனத்து மூப்பவேமயக்கமாகும்
இடிப்புடன்மூன்றுநாளில் இன்பமாய்மரணஞ்சேர்வான். (௯)

நில்லவேபித்தநாடி நிலைதப்பிஓடுமானால்
மெல்லவேகாசந்தானும் மிகவுடன்தொடர்ந்துகாணும்
வெல்லவேயீளையுண்டாய் யிருமலுமதிகமாகி
செல்லவேபயணமாவான் சிறப்புடனுரைத்தோம்பாரே. (௧௰)

உரைத்தோமேவாதபித்தம் சிலேத்துமமூன்றுங்கூடி
கரைக்கதேள்கொடுக்கைப்போல காணமேதுடிக்குமாகில்
இரைக்கவேயிருமல்கண்டு யிருபதுநாளிற்கொல்லும்
முறைப்படிராமதேவ ருரைத்ததுவுண்மையாமே. (௧௧)

இராமதேவர்நாடி-முற்றிற்று.

---

ஆகசெய்யுள்-௧௩௨௧.

சிவமயம்.

## பதினேழாவது
## இடைக்காடர் நாடிகூறுகின்றார்.

சீர்பொருந்துஞ்சாஸ்திரமும்மருந்துப்பையும் தெய்வீகமானப்
போல்பலதுஞ்சொல்லி, பேர்பொருந்துமெழுத்தாணிஅம்மிஓலை விய
ல்பானகருவிமுதல்பைக்கரையுஞ்செப்பு, கூர்பொருந்துஞ்சாஸ்திரங்
கள்சொன்னானால் குருவாகும் அவருடனே யெதிர்க்கவேண்டாம்
தார்பொருந்துசாஸ்திரஞ்சொல்லாவிட்டால்சண்டாளமருந்துடனே
கூபமைவரங்கே. (௧)

பகையாதேஅவருடனே யெதிர்க்கவேண்டாம் பன்னிரண்டுபி
ழைநீக்கியிந்தநூலை, குறையாமலிருந்துநீயிருந்துவாங்கி கொள்ளன
வேஅவருடையக்ஷேத்ரம்போனால், கிரையாகசிஷனாய்வந்தானானால்நே
ர்மையாய்விருதிபந்துவாகஞ்சொல்லி, துரையாகபதிலுரைத்துவைப்
புஞ்சொல்லி சூட்சமாய் மனமகிழ்ந்துசொல்லும்சொல்லே. (௨)

நாராசம்பிடித்தகைக்குப்பேர்தான்சொல்லு நன்றாகயிடதுகை
யில்ஓலைசொல்லும், ஓயாமலுண்டியதோருண்மைசொல்லும் ஓட்டி
முடிந்தெட்டெழுத்தினுருவஞ்சொல்லும், வாராமலக்குதித்தவசன
ஞ்சொல்லிப் பார்த்தங்கேசென்றடைத்தவடிவைச்சொல்லி, கோரா
கநீண்டெழுத்தின்நிலையைச்சொல்லி நிட்சயமாய் அரியென்றும்பொ
ருளுஞ்சொல்லே. (௩)

நாராசம்பிடித்தகையோஞானமூர்த்தி நன்றாகயிடதுகையில்சி
லைசத்தி, ஓயாமலுண்டியதோ ருண்மைஞானம் ஓட்டிமுடித்தெட்
டெழுத்தேயுருவியோனி, பாராமலக்குதித்தவசனவாய்வு பாழங்கே
சென்றடைத்தவடிவுலிங்கம், கோராகநீண்டெழுத்தே அடியாதாரம்
நிச்சயமாய் அரியென்றும்பொருளும்மே. (௪)

குளிர்ந்திருக்கு அம்பிக்குபேர்தானென்ன கூடாமேன்றுழலியுட
ன்பேர்தானென்ன, தெளிந்தரைக்கும் விரலுக்கும் பேர்தானென்ன
தேகமிறுமருந்தினி_ பேர்தானென்ன, களிந்திருக்குஞ்செப்புமுதல
டைப்புதானும் நான்முகத்தோன் வகுத்தபடி நன்றாச் சொல்லும்,
மொழிந்துரையும் பண்டிதரையிந்தநூலை மோசங்கள் வாராதென்று
மொழிந்திடீரே. (௫)

குளிர்ந்திருக்கும் அம்பிபதுசக்தியாகும் கூடாமேன்றுழலியநுலி
ங்கமாகும், தெளிந்தரைக்கும்விரலஞ்சும்பஞ்சபூதம் தேகமுறும்மரு
ந்தெல்லாஞ்சிவமேயாகும், களிந்திருந்தசெப்புமுதலடைப்புதானும்

நாதருடசிகாரத்தில்கபாடமாச்சு, மெழிந்துரையும் பண்டிதரேயிந்
தநூலை புகன்றுரைத்த அம்மிதனை வாங்கிடீரே (௬)

உரைக்கிறதோர்செந்தூரம்பேர்தானென்ன உத்தரசக்கெந்திமு
தல்தாரமேது, அரைக்கின்றமண்ணுமுதல்சீலையேது அதின்றவெகு
ருப்பிமுதற்சால்லையேது, கரைக்கின்றஅடுப்புமுதல் தீபமேது கிக
ழ தமணலேதுத்தாளியேது, வரைக்கடங்காபண்டிதரே யிந்தநூலை
வகைபிரித்துயின்னதென்றுவருத்திடீரே, (௭)

உரைக்கிறதோர் செந்தூரம்சிவமுமாச்சு அரைக்கின்றமண்ணு
முதல்சிவசத்தியாகும், அடைத்தகுப்பிசலானைமுதல்வேதமாச்சு
வரைக்கடங்காதாழியதுஆழியாச்சு, வகைசொல்லிபண்டிதரேமருந்
தேவாங்கி பரைக்கடங்காசெய்பாகம்கைபாகம்பார்த்து, பண்டிதரே
யிந்நூலைப்பணிந்திடீரே. (௮)

பொற்பணியாய்ச்சமைந்தசெப்புபேர்தானேது பொரியானவெ
ள்ளியுடசெய்கைச்சொல்லும், நற்பணியாய்சமைந்தவகைசெப்புமெ
ன்ன நலம்பெரிய சாஸ்திரங்கள் நன்றாய்ச்சொல்லும், நற்பணியாய்
போகாமல்தரித்துப்பார்த்து தாரணியிலின்னதென்றுதயவாகச்சொ
ல்லும், சிற்பணியும்பண்டிதரேயிந்தநூலை திறமாகவாய்திறந்துசெப்
புவீரே. (௯)

பொற்பணியாய்சமைந்தசெப்பு யிறைவனுரும் பொரியானவெ
ள்ளியென்றல்வேதனப்பா, நற்பணியாய்சமைந்தவகையீசன்யிந்த
நலம்பெரியசாஸ்திரங்கள்பாத்திரமேதாம், நற்பணியாய்ப்போகாம
லிந்தநூலை நலமாகவிருந்துதனைவாங்கிக்கொள்வாய், சிற்பணியும்பண்
டிதரேசொல்லாவிட்டால் திறமாகசீஷனுப்பையத்திடாதே. (௧௦)

இடைக்காடர்நாடி-முற்றிற்று.

---

ஆகசெய்யுள்-௧௩௩௧.

உ

சிவமயம்.

## பதினெட்டாவது

## கொங்கணர் நாடிகூறுகின்றார்.

---

அஞ்சருவாயெடுத்ததொரு பஞ்சலோகம் அடைப்பேதுசெப்
பேது அறிந்துசொல்லும், கஞ்சமேதாபபூரலோகஞ் சேரல்லுகளிம்
பானபித்தளையின் றிருவுஞ்சொல்லும், வெஞ்சமரிஸ்சாஸ்திரங்கள்பெ
டுத்துப்பேசி வேதாந்தஞ்சித்தாந்தம்விரித்துச்சொல்லும், கஞ்சகந்த
பண்டிதரேயிந்தநூலை நயந்தநீயுன் னுடையசெப்புவாங்கே (௧)

அஞ்சருவாயெடுத்ததொரு பஞ்சலோகம் அதைத்திருந்தசெப்
புவருபேரைகேழ்க்க, கஞ்சபடா ஆகாசம்செப்பூவன்னிகருவர்னரே
சமடாவாய்வேயாகும், வெஞ்மடாபித்தளைபிறிதிவுமாகும்வேதாந்த
ந்திறவென்றால் அப்பினகூறு, கஞ்சகந்தபண்டிதரேயிந்தநூல்நாடசி
யபின்னதென் றுநவிலுவாயே. (௨)

கஞ்சமென்ற ஆகாசம் நிறந்தைச்சொல்லும்கடுஞ்செப்புவன்னி
யுடநிறத்தைச்சொல்லும், வஞ்சமென்றலோகந்தான்வாய்வேயாகும்
வரும்பித்தளைபிரிதிவுக்கு நிறத்தைச்சொல்லும், மிஞ்சவேதிருவுக்
கு அப்பின்கூறு விதமானநிறந்தையெல்லாம்விழுக்கிப்பார்த்து,ஒஞ்
சாமல்யெடுத்துரைக்கும்வயித்தியரே ஒவ்வொன்றாய் பின்னதெ
ன்றுவுரைத்திடீரே. (௩)

கஞ்மென்றால்யாகாசம்புகைபோல்மேனிகடுஞ் செப்புநிறமென்
றால்சிவப்பேயாகும், வஞ்சமென்றால்லோகந்தான்உருப்பேயாகும்வ
ரும்பித்தளையென்றால் பொன்போல்மேனி, மிஞ்சவேதிருவுக்கும்அ
ப்பின்கூறு விதமானபடிகம்போல் நிறத்தைச்சொல்லும், ஒஞ்சாம
லெடுத்துரைக்கும்பண்டிதரேஐப ஒவ்வொன்றுயபின்னதென்றி யுக
ந்துகேளே. (௪)

திடமானகஞ்சத்தின் வீட்டைசொல்லும் தேடரியதாம்பிரத்
தின்வீட்டைச்சொல்லும், உடலானபித்தளையின் வீட்டைச்சொல்
லும்,உத்தமாலோகத்தின் வீட்டைச்சொல்லு,சடமானதிராவுக்கும்
வீட்டைசொல்லும் தருவானஅஞ்சினுடசக்கிரத்தின்வீடு, திடம்
பெரியவயித்தியரேயிந்தநூலை சூட்சமாயின் னூலைதிறந்திடீரே. (௫)

திடமான ஆகாசம்வீடுவட்டப்தேடரியதாம்பூரமுக்கோணந்தா
ன்,உடலானபித்தளையின்வீடுசதிர்க்கோணந்தான்உத்தமமாலோக
த்தின் அறுகோணந்தான், சடமான திருவுக்குபிறைபோலாகும்தருவ

னஅஞ்சினிட சக்கரத்தின்விடு திடம்பெரியவயித்தியரேயிந்தநூலை
சூட்சமாய்பணிந்துநீகேளுகேளே. (௬)

தேரிட சக்கரத்தின் வெழுத்தைச்சொல்லுஞ் செகப்பானதா
ம்பிரத்தின் அட்சரத்தைச்சொலலும், யேரிடயலோகத்தின்வெழுத்
தைச்சொல்லும்மியல்பானபித்தளையின்யெழுத்தைச்சொல்லும்கோ
டரியதிராவுக்குஅட்சரங்கள்சொல்லும் குருவாகும்பண்டிதரேதொ
குத்துபார்த்து நாடரியயிந்தநூலின்பெழுத்தைச்சொல்லும்நன்றாக
மருத்துசெப்சவாங்குவாயே. (௭)

தேடரியகஞ்சங்காரம்அகாரமாச்சு தீபானதாம்பூரம்சிகாரமாச்சு
கோரநியதிராவுக்குமாகரமாச்சு குருவாகுமூறுவானபஞ்சபூதப், சிர
நியசிகாரமதுநடுவேயாச்சு சிறப்பானகருவுருவும்காணலாச்சுநாடறி
யபின்னூலைநன்றாய்சொல்வேன் நாணமில்லாவயித்தியரே வணங்கிக்
கேளே. (௮)

மாத்திறல்கடைந்தசெப்புவகைதான்சொல்லும் வளர்மூங்கில்
விரலுக்கு வகைதானென்னு, திறத்திறல்மினகுடையக் கொம்பைச்
சொலலும்திறமானமேகுதிலசெப்பச்சொல்லும், பாத்தினு லெழுந்த
பசயினத்தின்செம்பு பாங்கானகரியினுடமூலஞ்சொல்லும்திறந்தினு
ல்பெழுந்ததொரு கரியின்கொம்பை திடம்பெரியவயித்தியரேசெப்
பிடீரே, (௯)

மாத்திறல் கடைந்தசெப்புக்காங்கமூசிமாபெரியமூங்கிலுடவி
லதூமாகும், திரந்திறல்கடைந்தமினாமா லிஙோம் திரமானமேதி
குலம்காலபீடம், சிரந்திறல்கரிபென்றால்கொம்பின்செப்புசீர்பெரு
ங்கயமூகனில்மூல மாகும், வரத்திறல்நாதாக்கள் அமைத்தபேராம்
வண்மையுள்ளநாடியிதுவளமைபாரே. (௧௰)

கொங்கணர்நாடி-முற்றிற்று

ஆகசெய்புள்-௧௩௬௧.

பதினெண்சித்தர்கள் நாடிசாஸ்திரம் முற்றிற்று.